LB
N12
11158 26

கடவுள் துணை.

# அநுபோக வைத்திய நவநீதம்

## ஏழாம் பாகம்.

இஃது,

பூனாகி வைத்திய
தாருட்யவிர்த்திபோதினி முதலிய
பல வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய

ஹக்கீம்
பா-முஹம்மது அப்துல்லா சாஹிபு
அவர்களால்

சுதேசவைத்தியர்களின் உபயோகத்திற்காக
இயற்றப்பெற்று,

சென்னை
முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

FIRST EDITION.

1912 ௵

Rigistered Copyright.

கைவிலை ரூ. 1-0-0. வி-பி. ரூ. 1-2-0.

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் வருடம் 1992
செப்பனிட்டு முடித்த
மாதம் 1993 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்



## விளம்பரம்

இதனால் சகலமானவர்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில்:— "அநுபோக வைத்திய நவநீதம் ஏழாம்பாகம்" என்ற இக்கிரந்தம் ௧௮௬௭ ௵ (௨௫-வது) ஆக்டின் (௨௦-வது) பிரிவில் (௬-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மத்ராஸிலும்,

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது, அல்லது, இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது, இதில் ஏதேனும் பாகத்தையாவது, என் உத்தரவின்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

ஸ்ரீ ஹக்கீம். பா - முகம்மது அப்துல்லா.

## விசேஷ விளம்பரம்.

எம்மால் அச்சிடப்பட்டிருக்கும் கிரந்தங்களின் டைட்டில்பேஜில் அடியிற் கண்டிருக்கின்ற என்னுடைய பெயர் எழுதப்பட்டிருக்கும். அவ்விதப் பெயர் எழுதப்படாத கிரந்தங்கள் மாறுபாடானவையயிருக்கும்; ஆனதுபற்றி, அப்படிப்பட்ட கிரந்தங்களைக் கொண்டுவந்து கொடுக்குமவர்களுக்கும், அல்லது, அப்படிப்பட்ட கிரந்தங்களை வைத்து விற்பனை செய்யுமவர்களைக் காண்பிக்குமவர்களுக்கும் தக்க வெகுமதி கொடுக்கப்படும்.

☞ ஹக்கீம். பா - முகம்மது அப்துல்லா.

## புத்தக விளம்பரம்.

இதனடியிற் கண்ட புத்தகங்கள் வேண்டியவர்கள், சென்னை மாயூஸ்கான் தேவடி, அப்புமேஸ்திரி வீதி, 12-வது நெம்பர் கிரகத்தில் இருக்கும் ஹக்கீம்-பா - முகம்மது அப்துல்லா சாஹிபு அவர்களிடத்திலும் கை விலைக்கும், வாலியூ பேயபல் போஸ்ட் மூலமாகவும் இதனடியிற்கண்ட விலை விகிதப்படி பெற்றுக் கொள்ளலாம்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| யூனானி வைத்திய தாருட்ய விருத்திபோதினி முதற்பாகம் | 1—5—0 |
| டை. 2-ஆம் பாகம் | 2—0—0 |
| யூனானி தாருட்டிய விருத்திபோதினித் திறவுகோல் | 0-10—0 |



| | |
|---|---|
| பிரமேகநிவாரணபோதினி | 0-12—0 |
| சிரவக நிவாரண போதினி | 0-13—0 |
| ஆயுர்வேத சிரோமணி யென்னும் வைத்திய சிந்தாமணி முதற்பாகம் | 0-14—0 |
| சரபேந்திர மேக நிவாரணபோதினி | 1—0—0 |
| சரபேந்திர கபமருத்து மஞ்சரி | 0—8—0 |
| சிரோரோக நிவாரண போதினி யென்னும் யூனானி சிகிச்சாசார சங்கிரகம் | 1—5—0 |
| யூனானி சிகிச்சாசாரசங்கிரகமென்னும் நயனரோக நிவாரணபோதினி | 1—5—0 |
| பிளேக் சிகிச்சா போதினி | 0—8—0 |
| அநுபோகவைத்திய நவநீதம் முதற்பாகம் | 1—0—0 |
| டை இரண்டாம் பாகம் | 1—0—0 |
| டை மூன்றாம் பாகம் | 1—0—0 |
| டை நான்காம்பாகம் | 1—0—0 |
| டை ஐந்தாம்பாகம் | 1—2—0 |
| டை ஆறாம்பாகம் | 1—0—0 |
| சீரமாமுனி வாகடத்திரட்டு முதற்பாகம் | 1—0—0 |
| டை இரண்டாம்பாகம் | 1—2—0 |
| மூலரோகச் சிகிச்சா போதினி | 1—0—0 |
| வைத்தியத் திருப்புகழ் | 0-12—0 |
| விஷபேதி நிவாரணி | 0—4—0 |
| கடுக்காய்ப் பிரபாவ போதினி | 0—2—0 |
| அகத்திய மகாமுனிவர் அருளிச்செய்த பஞ்சகாவிய நிகண்டு என்னும் ... காவியம் எண்ணூறு | 1—0—0 |
| அகத்திய மகாமுனி வைத்தியப் பிள்ளைத்தமிழ் | 1—4—0 |
| அகத்தியர் மெய்ஞ்ஞானம் | 1—4—0 |
| அகஸ்தியர் பன்னு | 1—2—0 |

| | |
|---|---|
| அகத்தியமாமுனி வைத்திய அந்தாதி | 1—0—0 |
| இராஜவைத்திய மகுடமென்னும் தேரையர் காப்பியமகவெண்பா 1-ம்பாகம் | 1—5—0 |
| ஷை இரண்டாம்பாகம் | 1—5—0 |
| இராஜவைத்தியமகுடமென்னும்தேரையர் காப்பியமகவெண்பா மூலம் | 0—6—0 |
| தேரையர் வைத்திய மகாகரிசல் | 0—10—0 |
| போகரேழாயிர சூஸ்திர மெழுநூறு | 0-15—0 |
| தன்வந்திரி சூக்ஷ்ம வைத்தியம் | 0—5—0 |
| இலக்க சௌமிய சாகரம் 1-ஆம் பாகம் | 1—0—0 |
| ஷை 2 ஆம் பாகம் | 0-14—0 |
| ஷை 3 ஆம்பாகம் | 0-14—0 |
| ஷை 4 ஆம்பாகம் | 0-14—0 |
| ஷை 5 ஆம்பாகம் | 1—0—0 |
| இரசவாதசிந்தாமணி முதற்பாகம் | 1—5—0 |
| ஷை 2 ஆம் பாகம் | 1—5—0 |
| கொங்கணர் வாதகாவியம் மூவாயிரம் | 1—8—0 |
| ஞானமுனிச்சுருக்கம் | 0—2—0 |
| இரசவாத மஞ்சரி. | 1—2—0 |
| ஞாய அஷ்டாங்க தீபம் | 0—4—0 |
| அசன்பேசரித்திரம் | 0—8—0 |
| மனோவசிய தந்திரம் | 2—0—0 |
| மாணிடவசியம் | 2—8—0 |
| சந்திரகாசனைச் சாமர்த்தியத்தால் விழுங்கிய தாசி | 0—2—6 |
| பண்டிதை மெய்யாளிஸா | 1—0—0 |
| ஹிப்னாடிஸ சக்கரம் | 0—[illegible]—0 |
| ஞானதரிசனக்கண்ணாடி | 0—8—0 |

# அநுபோக வைத்திய நவநீதம்

## ஏழாம்பாகம்.

அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| அ. | |
| அங்கிலிகுபாரசெந்தூரம் ... ... | 150 |
| அஞ்சுகருப்பு ... ... | 76 |
| அமிர்தசஞ்சீவிக்குளிகை ... ... | 171 |
| அயவீரசெந்தூரம் ... ... ... | 66 |
| அஜபாண லேகியம் ... ... | 81 |
| இ. | |
| இரசமெழுகு ... ... | 83 |
| இரசவங்கப்புகை ... ... | 119 |
| இரசபாஷாண செந்தூரம் ... ... | 177 |
| இலகுஇரசப்பதங்கம் ... ... | 183 |
| இலகுசந்திரோதயசெந்தூரம் ... ... | 175 |
| இலகுவாணமெழுகு ... ... | 121 |
| இலிங்கப்பதங்கம் ... ... | 185 |
| உ. | |
| உப்புக்குரு ... ... | 178 |
| ஊ. | |
| ஊவைகைச்செந்தூரம் ... ... | 67 |
| க. | |
| கபக்குடோரி ... ... | 199 |
| கன்னிப்பற்பம் ... ... | 141 |

விஷயம். பக்கம்.

கா.

காளகண்டமேகநாராயணசெந்தூரம் ... ... 153
தை (வேறு) ... ... 156
,, (வேறுபுடம்) ... ... 157

கி.

கிராந்திப்புகை ... ... 120

கு.

குடல்வாதச்சிகிச்சை ... ... 138
குப்பிவைப்பு செந்தூரம் ... ... 152
மேற்படி (வேறு) ... ... 173
குருசஞ்சீவிமெழுகு ... ... 113
குருபதங்கம் ... ... 183
குருமுறைப்பதங்கம் ... ... 195

கோ.

கோரோசனைமெழுகு ... ... 80

கௌ.

கௌரிக்கட்டுச்சுண்ணம் ... ... 58
கௌரிச்சிந்தாமணி செந்தூரம் ... 167
கௌரிப்பாஷாணம் விஷமித்த இலட்சணம் ... 59
கௌரிப்பாஷாணம் விஷமித்ததற்குச் சிகிச்சை ... 60
கௌரிமாத்திரை ... ... 49
கௌரிமெழுகு ... ... 58

ச.

சஞ்சீவிமாத்திரை ... ... 211
சண்டமாருதக்குழம்பு ... ... 105





விஷயம். பக்கம்.

ஷண்முகமெழுகு ... ... 85
சந்தனக்கஷாயம் ... ... [illegible]
சரபராஜமாத்திரை ... ... 200
ச[illegible]சரி ... ... 143

சா.

சாதிலிங்கப்புகை ... ... 117
தை (வேறு) ... ... 118
,, (வேறு) ... 118

சி.

சிரோமணிபூபதிக்குளிகை ... 197
சிவநாமரசம் ... 111
சின்னப்பட்டிக்கருப்பு ... 75

சு.

சுத்தபூரப்பதங்கம் ... 191
சுயமக்கினிசெந்தூரம் ... 164
தை (வேறு) ... ... 165
,, (வேறு) ... 165
,, (வேறு) ... 163
சுரக்குடோரி ... 103
,, (வேறு) ... ... 104
சுரப்பதங்கம் .. 189
சுராஞ்சுக்கம் ... ... 51
சுவாசகாசக்குடோரம் ... 110

அட்டவணை.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| **சூ.** | |
| சூக்ஷமபட்டுக்கருப்பு ... ... | 73 |
| **தி.** | |
| திரிபுராதிசெந்தூரம் ... | 158 |
| **ந.** | |
| நவதாம்பிரபற்பம் | 192 |
| நவரசமெழுகு ... | 91 |
| நவலோகமெழுகு ... | 115 |
| **நீ.** | |
| நீர்க்கட்டுச்சிகிச்சை | 140 |
| நீலகண்டபாஷாணம் (கரிசல்முறை) | 145 |
| நீலகண்டபாஷாண அனுபானகுணம் ... | 147 |
| நீலாஞ்சனயோகம் ... | 142 |
| **ப.** | |
| பச்சைக்கற்பூரமெழுகு ... | 82 |
| பஞ்சசூதமாத்திரை ... | 101 |
| ,, (வேறு) ... | 102 |
| பஞ்சசூதமெழுகு ... | 79 |
| ,, (வேறு) ... | 80 |
| பஞ்சபாஷாணசெந்தூரம் | 44 |
| பஞ்சபாணரசம் ... | 169 |
| பஞ்சபூதசெந்தூரம் ... | 64 |
| ,, (வேறு) ... | 65 |
| பஞ்சபூதப்பதக்கம் ... | 76 |
| பஞ்சமுகசெந்தூரம் ... | 69 |
| பஞ்சாக்கினிசெந்தூரம் ... | 174 |





| விஷயம். | பக்கம். |
|---|---|
| **பா.** | |
| பாஷாண எண்ணெய் ... | 54 |
| ஷை (வேறு) ... | 55 |
| ,, (வேறு) ... | 55 |
| ,, (வேறு) ... | 56 |
| பாஷாணகுலாந்தகன் ... | 52 |
| பாஷாணக்கட்டு ... | 8 |
| ,, (வேறு) ... | 9 |
| ,, (வேறு) ... | 10 |
| ,, (வேறு) ... | [illegible] |
| ,, [illegible] ... | 13 |
| ,, (வேறு) | 13 |
| ,, (வேறு) | 14 |
| ,, (வேறு) ... | 15 |
| ,, (வேறு) ... | 16 |
| ,, (வேறு) ... | 16 |
| பாஷாணசூதசெந்தூரம் ... | 43 |
| பாஷாணசெந்தூரம் ... | 42 |
| பாஷாணச்சுண்ணம் ... | 11 |
| மேற்படி (வேறு) ... | 9 |
| பாஷாணத்தின்குணம் ... | 5 |
| பாஷாணத்தின்நாமங்கள் ... | 4 |
| பாஷாணத்தின்பிறப்பும் அதின்வகைகளும் ... | 3 |
| பாஷாணத்தை உபயோகிக்கப்போகுமுன் ... | 61 |
| பாஷாணபற்பம் ... | 17 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| பாஷாணபற்பம் ... ... | 81 |
| ,, (வேறு) ... ... | 19 |
| ,, (வேறு) ... ... | 20 |
| ,, (வேறு) ... ... | 20 |
| ,, (வேறு) ... ... | 21 |
| ,, (வேறு) ... ... | 22 |
| ,, (வேறு) ... ... | 22 |
| ,, (வேறு) ... ... | 23 |
| ,, (வேறு) ... ... | 24 |
| ,, (வேறு) ... ... | 24 |
| ,, (வேறு) ... ... | 25 |
| ,, (வேறு) ... ... | 26 |
| ,, (வேறு) ... ... | 26 |
| ,, (வேறு) ... ... | 27 |
| ,, (வேறு) ... ... | 29 |
| ,, (வேறு) ... ... | 31 |
| ,, (வேறு) ... ... | 32 |
| ,, (வேறு) ... ... | 33 |
| ,, (வேறு) ... ... | 34 |
| ,, (வேறு) ... ... | 34 |
| ,, (வேறு) ... ... | 34 |
| ,, (வேறு) ... ... | 36 |
| ,, (வேறு) ... ... | 36 |
| ,, (வேறு) ... ... | [illegible] |
| ,, (வேறு) ... ... | 38 |
| ,, (வேறு) ... ... | 39 |
| ... ... | 40 |





| விஷயம். | பக்கம். |
|---|---|
| பாஷாணப்பதங்கம் ... ... | 41 |
| பாஷாணப்பிரயோகம் (குஷ்டத்துக்கு) ... | 56 |
| பாஷாணப்பிரயோகம் (வேறு) .. ... | 57 |
| பாஷாணமாத்திரை ... ... | 48 |
| ஷை (வேறு) ... ... | 49 |
| பாஷாணமெழுகு ... ... | 45 |
| ஷை (வேறு) ... ... | 47 |
| ஷை (வேறு) ... ... | 51 |
| பாஷாணமேற்பூச்சுமாத்திரை ... ... | 52 |
| பாஷாணவேகம்முறியச்சிகிச்சை ... ... | 60 |
| ஷை (வேறு) ... ... | 60 |
| ஷை (வேறு) ... ... | 60 |
| ஷை (வேறு) ... ... | 61 |
| ஷை (வேறு) ... ... | 61 |
| பாண்டுநீக்கமாத்திரை ... ... | 198 |
| பார்வைப்புகை ... ... | 119 |
| பாலரசப்பதங்கம் ... ... | 179 |
| ஷை (வேறு) ... ... | 182 |
| பால்பற்பம் ... | 144 |
| **பு.** | |
| புஜண்டர்ராமபாணமாத்திரை ... ... | 106 |
| **பூ.** | |
| பூபதிமாத்திரை ... ... | 170 |
| பூரணச்சந்திரோதய செந்தூரம் ... ... | 159 |
| **பெ.** | |
| பெரியபட்டுக்கருப்பு ... ... | 72 |
| **பே.** | |
| பேய்ச்சொறிச்சிகிச்சை ... ... | 116 |

| விஷயம். | பக்கம். |
|---|---|
| **ம.** | |
| மகாசுயமக்கினிசெந்தூரம் | 161 |
| மகாரசப்பதங்கம் | 149 |
| மகாவானமாமெழுகு | 123 |
| மகாவீரியசாந்தசெந்தூரம் | 71 |
| மகாவீரியசெந்தூரம் | 70 |
| **மே.** | |
| மேகசஞ்சீவிமாத்திரை | 108 |
| **வா.** | |
| வானமாமெழுகு | 121 |
| **வி.** | |
| விஷமெழுகு | 86 |
| விஷாமிர்தமை | 83 |
| **வெ.** | |
| வெள்ளைப்பாஷாணசுத்தி | 6 |
| ஷை (வேறு) | 7 |
| ஷை (வேறு) | 7 |
| மேற்படி (வேறு) | 8 |
| வெள்ளைப்பாஷாணம்விஷமித்த இலட்சணம் | 59 |
| வெள்ளைப்பாஷாணம் விஷமித்ததற்குச்சிகிச்சை | 59 |


அட்டவணை.

முற்றுப்பெற்றது.



அநுபோக வைத்திய நவநீதம்

ஏழாம்பாகம்.

# முகவுரை.

நண்பர்களே!

இந்த அநுபோகவைத்திய நவநீதமென்னும் நூலினது அருமை பெருமைகள், இதை வெளிப்படுத்த நேர்ந்தகாரணம் ஆகியவைகளெல்லாம் இதன் முதற்பாகத்தின் முகவுரையாலும் மற்றபாகங்களின் முகவுரைகளாலும் நன்கு விளங்குமாதலின், அவற்றைப்பற்றி மீண்டும் இதில் எழுதின் கூறியது கூறலாமென விடுத்தனம்.

இதன் ஆறும்பாகம் வெளிப்பட்டு அதிக நாளாகியும் நமக்கேற்பட்ட சில அசந்தர்ப்பங்களால் இப்பாகம் இதுவரை வெளிப்படாமல் சிறிது தாமதப்பட்டிருந்தது. ஆயினும். இதன் முந்தினபாகங்களைப் பார்த்த அநுபவசாலிகளும், மற்றைய வைத்தியாபிமானிகளும் மற்றபாகங்களையும் விரைவில் வெளிப்படுத்தி இந்நூலைப் பூர்த்தியாக்கவேண்டுமென்று கடிதமூலமாகவும் நேரிலும் வற்புறுத்தி வந்தபடியால் அவர்கள் நோக்கத்தை மறுக்க வசமற்று நமது அசந்தர்ப்பங்களையும் பொருட்செலவு தேகப்பிரயாசை முதலியவற்றையும் எதிர்பாராமல் சில தினங்களுக்கு முன் இவ்வேழாம்பாகத்தை அச்சிடும் வேலையிற் பிரவேசித்து வெகு சீக்கிரமாக முடித்து இப்போது வெளிப்படுத்தியிருக்

கிறோம். இது முந்தின ஆறுபாகங்களைக்காட்டிலும் மிக்கவிசேஷம் பொருந்தியதென்பது இதனைப்படிப்போர்க்கு எவரும் எடுத்துச்சொல்லாமலே நன்கு விளங்கும்.

இதில், பாஷாணத்தின் பிறப்பு, அதின்வகைகள், நாமங்கள், பாஷாணத்தின் குணம், பாஷாணசத்திகள், மேற்படி கட்டுக்கள், பாஷாணச்சுண்ணங்கள், பாஷாணபற்பங்கள், பாஷாணப் பதங்கங்கள், பாஷாண செந்தூரங்கள், பாஷாண சூதசெந்தூரம்; பாஷாண மெழுகுகள், பாஷாணமாத்திரைகள், சுரராஜாங்கம்; பாஷாணமேற்பூச்சு மாத்திரை; பாஷாணகுலாந்தகன்; பாஷாண எண்ணெய்கள்; பாஷாணப்பிரயோகங்கள்; கௌரிக்கட்டுச்சுண்ணம்; கௌரிமெழுகு; வெள்ளைப் பாஷாணம் விஷமித்த இலட்சணம்; கௌரிப்பாஷாணம் விஷமித்த இலட்சணம்; வெள்ளைப்பாஷாணம் விஷமித்ததற்குச் சிகிச்சை; கௌரிப்பாஷாணம் விஷமித்ததற்குச் சிகிச்சை; பாஷாணம் வேகம்முறியச் சிகிச்சைகள்; பாஷாணத்தை உபயோகிக்கப்பொதுவிதி; பஞ்சபூத செந்தூரங்கள்; அபவீரச்செந்தூரம், ஐவகைசெந்தூரம், பஞ்சமுகசெந்தூரம், மகாவீரிய செந்தூரம்; மகாவீரிய சாந்தசெந்தூரம்; பெரிய பட்டுக்கருப்பு; சூக்ஷ்மபட்டுக்கருப்பு; சின்னப்பட்டுக்கருப்பு, அஞ்சுகருப்பு; பஞ்சபூதப்பதங்கம்; பஞ்சசூதமெழுகுகள், கோரோசனைமெழுகு, அஷ்டபானலேகியம்; பச்சைக்கற்பூரமெழுகு; விஷமெழுகு; சண்முகமெழுகு; விஷாமிர்தம்; இரசமெழுகு; நவரசமெழுகு; பஞ்சசூதமாத்திரை



கள், கிராக்குடோரிகள், சண்டமாருதக்குழம்பு, புஜண்டர்ராமபாணமாத்திரை; மேகசஞ்சீவிமாத்திரை, சுவாசகாசக்குடோரி, சிவகாமரசம், குருசஞ்சீவிமெழுகு, சுவாச மெழுகு, பேய்ச்சொறிச் சிகிச்சை, ஜாதிலிங்கப்புண்கள், இரசவங்கப்புகை, பார்வைப்புகை, சிரங்குப்புகை, வானமாமெழுகு; இலகுவானமாமெழுகு, மகாவானமாமெழுகு; குடல்வாதச்சிகிச்சை, நீர்க்கட்டுச்சிகிச்சை, கரிப்பற்பம், நீலாஞ்சனபோகம், ஜலமஞ்சரி, பால்பற்பம், நீலகண்டபாலை, நீலகண்டபாலை அநுபானசூரணம், மகாரசப்பதங்கம், அக்கினிகுமாரசெந்தூரம். குப்பிவைப்புச்செந்தூரம், காளகண்டமேகராக்ஷண செந்தூரங்கள், திரிபுராதிசெந்தூரம், பூரணச்சந்திரோதய செந்தூரம், மகாசுயம்க்கினி செந்தூரம், சுயமக்கினி செந்தூரங்கள், கௌரி சிந்தாமணிரசசெந்தூரம், பஞ்சபாணரசம், பூபதிமாத்திரை; அமிர்தசஞ்சீவிக்குளிகை; குப்பிவைப்பு செந்தூரம்; பஞ்சாக்கினி செந்தூரம்; இலகுசந்திரோதய செந்தூரம்; இரணபைரவிசெந்தூரம்; உப்புக்குரு; பாலரசப்பதங்கங்கள்; குருப்பதங்கம்; இலிங்கப்பதங்கம்; இலகுஇரசப்பதங்கம்; சூரப்பதங்கம்; சுத்தபூரப்பதங்கம்; நவதாம்பிரபற்பம்; குருமுறைப்பதங்கம்; சிரோமணிபூபதிக்குளிகை; சந்தனக்கஷாயம்; பாண்டுவீக்கமாத்திரை; கபக்குடோரி; சாபாரஜமாத்திரை; சஞ்சீவிமாத்திரை ஆகியவைகளும் இவற்றினுட்பிரிவாகப் பல முறைகளும் அடங்கியிருக்கின்றன.

இவைகள்யாவும் நமது பரம்பரையில் வெகுகாலமாக இரகசியமாக வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் முறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவைகள்; இவற்றி

ன்குணங்களைப்பற்றி அளவிட்டுச்சொல்லுதல் அரிதாம். மற்ற பாகங்களிலுள்ள முறைகளைக்காட்டிலும் இதிலுள்ளமுறைகள் மிகவும் சிறந்தவைகள். நமது நண்பர்களையுத்தேசித்தே நெடுங்காலமாக இரகசியமாகவைக்கப்பட்டிருந்த முறைகளையெல்லாம் இதில் பரோபகாரச் சிந்தையுடன்வெளிப்படுத்தியிருக்கிறோம். ஆகலால் வைத்தியாபிமானமுள்ள கனவான்கள் இதற்குமுன் நம்மால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்ட கிரந்தங்களையெல்லாம்வாங்கி, எமக்கு இவ்வித கிரந்தங்களை வெளிப்படுத்துவதற்காம் ஊக்கத்தை மென்மேலும் உண்டாக்கி எம்மைக்களிப்படுத்தியதுபோலவே இதனையும்வாங்கி மேன்மைப்படுத்துமாறு விரும்புகிறோம். இனி இதன் அடுத்தபாகங்களும் கூடியசீக்கிரத்தில் முறையேவெளிவரும்படி கடவுள்கிருபை செய்வாராக. சுபம்.

அக்கீம்-பா-மு.அ



بسم الله الرحمن الرحيم

பிஸ்மில்லா ஹிர்றஹுமா னிர்றஹீம்.

# அநுபோகவைத்திய நவநீதம்

## ஏழாம்பாகம்.

](:0:)[

### கடவுள் வணக்கம்.

அறபுவாக்கியம்.

الحمد لله رب العالمين

الصلوة والسلام على سيد

المرسلين وآله واصحابه

اجمعين

அல்ஹம்து லில்லாஹிறப்பில் ஆலமீன்; அஸ்ஸலாது வஸ்ஸலாமு அலாஸய்யிதில் முர்ஸலீன்; வஆலிஹி, வ அஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

### நூல்.

கடவுளினது கிருபையாலும், பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும், பற்பல பண்டித சிரோமணிகளின் அநுக்கிரகத்தினாலும் இதன் முன் ஆறுபாகங்களிலும் அநேக அபூர்வமுறைகள், குருமுறைகள், அனுபோகமுறைகள், இரகசியமுறைகள் முதலிய பற்பல அநுபவமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்முறைகளெல்லாம் பல தலைமுறைகளாகப் பலதடவைகளிலு

ம் அனுபோக சித்திபெற்றவைகள். வைத்தியர்களும், வைத்தியரல்லாதவர்களும் இலகுவாகத் தெரிந்துகொள்ளும் விதமாகச் செய்பாகமுதலியவைகளெல்லாம் வகை விபரமாக எழுதப்பட்டுள்ளன. எந்தத் தேசத்திலுள்ளவர்களும் எந்தக்காலத்திலும் செய்துகொள்ளும் விதமாக ஒவ்வொரு முறைகளிலும் ஒவ்வொருவகைகளிலும் பல முறைகள் எழுதப்பட்டுள்ளன. புத்திமான்கள் இம்முறைகளைச் செய்தனுபவித்து இவற்றின் நற்குணங்களை அடங்காமகிழ்ச்சியோடு வெகுவாய்ப்புகழ்ந்து நன்கு மதித்து வருகின்றார்கள். ஆகையால் முன்னிலும் அதிக உற்சாகமுண்டாகி இந்த எழாம் பாகத்தில் நமது பரம்பரையோர்களும், நமது அருமைச் சிநேகிதபண்டிதர்களும், நாமும் பல தடவைகளில் செய்து உபயோகித்து அனுபோக சித்திபெற்றவைகளும், கைவல்யமாய் அனுபவித்து வரப்பட்டவைகளுமான அநேக இந்து யூநாநிவைத்திய முறைகள், ஜீவகாருண்யத்துடனும், பரோபகாரச் சிந்தையுடனும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதிலடங்கியுள்ள முறைகள் முதலியவைகளெல்லாம் இதுவரையில் அச்சில் வெளிப்படுத்தப்படாத அநுபவமானவைகள். கஷ்டவியாதிகளாகிய குஷ்டவியாதிகள், மேகவியாதிகள், க்ஷயரோகம் முதலிய நாட்பட்டவியாதிகள், இன்னும் பலவகைக் கடினவியாதிகள், கஷ்டசாத்திய வியாதி முதலிய மகாரோகங்கள் ஆகியவைகளை அறத்தீர்க்கும் பற்பல அற்புதமுறைகள் இந்த எழாம்பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் சந்தேகமறத் தெரிந்துகொள்ளும் விதமாக இம்முறைகள் மிகவும் தெளிவாகவும், வெளிப்படை-



யாகவும் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் அருமை பெருமைகளெல்லாம் அங்குச்சொல்லியிருக்கிறபடி செய்து அனுபவிக்கும் அறிவாளிகளுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெள்ளியதாய் விளங்கும்.

## பாஷாணத்தின் பிறப்பும் அதின் வகைகளும்.

விஷகுணமுள்ள கல் வகைகளுக்கெல்லாம் பொதுவாகப் பாஷாணமெனப்பெயர் சொல்லப்படுகிறது. பாஷாணம் என்பதற்கு சமஸ்கிருதத்தில் கல் என அருத்தம் கொள்வதே இதற்குக் காரணம். ஆனால், தமிழ் சாஸ்திரங்களில் அறுபத்து நான்குவகையாகப் பாஷாணவகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் பொதுப்பெயர்களாம். இவையன்றி, பாஷாணம் எனத் தனியாக ஒருவகைச்சரக்கும் உண்டு. அதைப்பற்றித்தான் இங்கு விபரம் சொல்லப்படுகிறது. பாஷாணமானது பிறவிச்சரக்கு. இதில் பலவகை உண்டு. சீமைச்சுண்ணாம்பைப்போல் வெண்ணிறமாகவும், பளபளப்பில்லாமலும், வெட்டுமுள்ளதாகவும் இருப்பது சங்குப்பாஷாணமெனச் சொல்லப்படுகிறது. இதனை நெருப்பில்போட்டால் புகையாது. இதனுடன் வெடியுப்பைச் சேர்த்துப் பதங்கித்து விற்கப்படும் வகைக்குப் பளிங்குப்பாஷாணம் எனப்பெயர். இதுதான் பிரதானமாய் இப்பொழுது கடைகளில் விற்கப்படுகிறது. ஆனால், அதுவும் லைசென்ஸ் பெற்றவர்கள் விற்கவேண்டியதே தவிர மற்றவர்கள் விற்கலாகாதெனக் கவர்ன்மெண்டாரால் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தவகையில் மஞ்சள் சாயலாயுள்ள

ற்கு கௌரிப்பாஷாணமென்று பெயர். இன்னும் வெள்ளைப்பாஷாணத்தில் பல் ரூபமாயிருப்பது குதிரைப்பற் பாஷாணமெனச் சொல்லப்படுகிறது. இந்த வெள்ளைப்பாஷாணத்தின் வாசனைபட்டபோதிலும் எலிகள் நாசமாகிப்போவதால் இதற்கு எலிப்பாஷாணமெனவும் பெயர் வழங்குகிறது. வெள்ளைப்பாஷாணமானது பெரும்பாலும் குராசான் தேசத்திலிருந்துகொண்டு வரப்படுகிறதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. சில ஆயுர்வேதகிரந்தங்களில் இது ஐந்துவகையெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வகைகளாவன:—

1. பட்கெட்ஆயா அல்லது படிகபாஷாணம். இது படிகாரத்தைப்போல பிரகாசமுள்ளதாயிருக்கும். இதனைநெருப்பில்போட்டால்புகையாது.

2. ஹல்தியா பாஷாணம். இதுவருணத்தில் மஞ்சளைப்போலிருக்கும்.

3. கௌரிப்பாஷாணம். இது மஞ்சள் சாயலான நிறமுள்ளதாயிருக்கும்.

4. தாசியாபாஷாணம். இது மாதுளஞ்சுளைகளைப்போலச் சிவப்பாயிருக்கும்.

5. சங்குப்பாஷாணம். இது, நாம் முன்சொன்னதுபோல் வெண்ணிறமாயிருக்கும்.

பாஷாணத்தின் நாமங்கள்.

இதற்கு அறபியில் ஸம்முல்பார் سم الفار என்றும், அராபுல் ஹாலிக் [illegible] என்றும் பெயர். இரூம பாஷையில் [illegible] என்றும், பார்ஸிபாஷையில் மர்க்முஷ் [illegible] என்றும், இந்துஸ்தானியில் சம்புல்கார் [illegible] என்



றும் பெயர். தமிழில்சஞ்சலம், தவளம், சாங்கம், குவடு, கோசம், கவனம், புவனம், புனிதன், வானம், அம்பரம், குண்டலம், காயம், குடிலம், புட்கரம், ஆசினி, நபம், கம், மேகயம், பூநம், கெந்தகம், குமரி, இந்து, நீலினைப் பலபெயர்களுண்டு.

பாஷாணத்தின் குணம்.

நாட்பட்ட சர்மரோகம், கரப்பான், கட்டி, கொப்பளம், குஷ்டரோகம், சீதசுரம், விஷசுரம், சளைதளி ளுள்ள வேதனை, முகசன்னி, காக்கைவலி, கக்கிருமல், பெருவியாதி முதலிய அநேக கஷ்டரோகங்கள் தீரும். விஷக்காற்றினால் உண்டாகிற வியாதிகளைத் தடுக்கவும் உபயோகமானது. இருமல், அதிஸ்தூலரோகம், குன்மம், அஜீரணம், அதிசாரம், கூத்தாடும் சன்னி, ஸ்திரீகள் பிரவிடையாகிறவபதிற்காலும் பாண்டுரோகம், இரத்தக்ஷீணரோகம், சூதகக்கட்டு, நரையிரத்தகம், காமாலைரோகம், மதுமேகம், நாள்பட்டசர்பனரோகம் ஆகிய இந்த வியாதிகள் தீரும். விம்ஜிகதாபனரோகம் ஆகிய இந்த வியாதிகள் தீரும். விப்புருதி, முகத்தில்காணுகிற ஒரு ஜாதிவிரணம், விப்புருதி, முகத்தில்காணுகிற ஒரு ஜாதிவிரணம், மருபோடகரோகம், கண்மடல்மீது காணுகிறவிரணம், மரு ஆகிய இவைகளுக்கும் உபயோகிக்கலாம். இன்னும் இது பலவகைரோகங்களில் மேலுக்கும் உபயோகப்படுத்தப்படும்.

குறிப்பு.

இது, விஷகருமமுள்ளதாகையால் ஆயுர்வேத பண்டிதர்கள் இதனை பஸ்பமாகவும் செந்தூரமாகவும் இன்னும் பலவிதமாகவும்செய்து உபயோகிக்கிறார்கள். ஆனால் இங்கிலீஷ் வைத்தியர்கள் பச்சையாக உபயோகித்து வருகின்றார்கள். பச்சையாக உபயோகிப்பனர

காட்டிலும் கீழ்க்காணும்வகைப்படி பஸ்பம் முதலியவைகளாகச்செய்து உபயோகிப்பதே சிரேஷ்டமென்பது இங்குநாம் எடுத்துச்சொல்லாமலே விளங்கும். கடவுளினதுகிருபையால் அம்முறைகளை யெல்லாம் கிரமமாக இனி எழுதுவோம். அவற்றில் சொல்லியிருக்கிறதுபோல் கைபாகப்படிசெய்து அநுபவிப்பவர்களுக்கு அவற்றின் சிறந்தகுணம் தெரியவரும். இந்த முறைகளெல்லாம் மிகவும் அநுபவமானவைகளும், துஷ்டரோகங்களைக் கண்டிப்பதற்குச் சிறந்தவைகளுமாம். ஆனால், இதை அதிக ஜாக்கிரதையுடன் வியாதிக்குத்தக்குந்தபடி உபயோகிப்பதால் எவ்விததுர்க்குணமுமில்லாமல் வெற்றிபெறலாம். ஆகையால் நமது நண்பர்கள் இதில் சொல்லப்பட்டிருக்கும் சுத்திக்கிரமம், கைபாகம், செய்பாகம் முதலியவற்றைக் கவனித்துச் செய்துகொள்வார்களாக.

## வெள்ளைப் பாஷாண சுத்தி.

சிறுகீரை சமூலத்தை இடித்துப் பிழிந்தசாறு படி-௧; இதனை ஒரு புதுமண்பாண்டத்தில்விட்டுக்கொள்ளவும். ஒருபலம் பாஷாணத்தைப் பொடித்து இரட்டித் துணித்துண்டில் வைத்துத் தாளக்கட்டி மேற்படி பாத்திரத்தில் கிழிக்கட்டித் தொங்கவிடவேண்டும். அந்த முடிச்சானது பாத்திரத்தி னடியிற்படாமல் ஒருஅங்குலம் மேலாயிருக்கும்படியாகத் தொங்கவிடவேண்டும். இதனை அடுப்பின்மீதேற்றிச் சிறுக எரித்துச்சாறெல்லாம் சுண்டினபின்பு கொஞ்சம் ஆறவிட்டுக்கழுவி ஈரமுலரவைத்து எடுத்துக்கொள்ளவும். இவ்விதமே நவபாஷாணத்தையும் சுத்திசெய்து கொள்



ளலாம். இங்கிலீஷ் முறைப்படி சுத்திசெய்யாமல் உபயோகிக்கும் பாஷாணத்தைப் பார்க்கிலும் நூறுமடங்கு இது அதிகமான குணத்தைத்தரும். இதில் எவ்விததுர்க்குணமுமிராது. இதனை அவுடதங்களோடு சேர்த்துச் செய்வதால் அதிகப்பிரயோசனத்தைத் தரும்.

## மேற்படி சுத்தி (வேறு.)

வெள்ளைப்பாஷாணம் ஒரேகட்டியாகப் பலம்-௧ ஒரு புதுமண்பாத்திரத்தில் ஒருபடி கிளிஞ்சிற்சுண்ணத்தைக்கொட்டி அதன்மீது முன்கட்டியைவைத்து அதன்மேல் ஒருபடிகிளிஞ்சிற் சுண்ணத்தைக் கொட்டி அதன்மீது ஒருபடி காடிஜலத்தைவிட்டு அடுப்பின்மீது வைத்துச் சிறுதீயாக எரித்து அந்தக்காடிசுண்டும் பக்குவத்தில் மறுபடியும் முன்போல் ஒருபடிகாடியைவிட்டுச்சுண்டவைக்கவேண்டும். இவ்விதம் நாலுபடிகாடிஜலம் சுண்டினபின்பு ஆறவிட்டுக்கட்டியை எடுத்து ஜலத்தில் அலம்பிச் சுத்திசெய்து வெயிலில் உலர்த்திக் கொள்ளவும். எண்ணெய்க்கசிச் சீமைச்சுண்ணாம்பைப் போலிருக்கும். இவ்விதமே கௌரிமுதலிய பாஷாணங்களையும் சுத்திசெய்து கொள்ளலாம்.

## மேற்படி (வேறு.)

தேவையான வெள்ளைப்பாஷாணத்தைக் கல்வத்திற் பொடித்து அந்தத்தூள் கொள்ளுகிற அளவில் எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு அரைத்துக் கெட்டியானபின்பு ஒரேவில்லையாகச்செய்து நிழலில் உலர்த்தி நன்றாயுலர்த்தியபின்பு மறுபடியும் கல்வத்திற்பொடித்து முன்போல் எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு முன்போல் அரைத்துமுன்போல் வில்லைசெய்து முன்போல் உலர்

த்தவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப்பதினொரு தடவைசெய்துகொண்டால் நல்லசுத்தியாம். இதனைப் பிரமாணப்படி தனியாகவும் உபயோகிக்கலாம்.

### மேற்படி (வேறு.)

மேற்கண்டபடியே வெள்ளாட்டுப்பாலில் மடக்கி மடக்கிப் பதினொரு தடவை செய்து கொள்வதாலும் வெள்ளைப்பாஷாணம் சுத்தியாம்.

### 882. பாஷாணக்கட்டு.

சுத்தித்த பாஷாணக்கட்டியை அப்பிரகத்தகட்டின்மேல்வைத்து வெள்ளைநிறமான பூவுள்ள நீர்முள்ளிச்சாற்றால் சிறுகச்சிறுகச் சுருக்கிடவும். இப்படியேகைபாகமாக நான்குசாமம் சுருக்கிட்டால் பாஷாணம் நெருப்பிற்புகையாமல் கட்டிப்போகும். அப்படிக்கொஞ்சம் புகைந்தால் மறுபடியும் முன்போல் இரண்டுசாமம் சுருக்கிடப்புகையடங்கிக் கட்டிப்போம். இதனைப்பொடித்து சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—அரிசியெடை-வ-உ.

அநுபானம்:—தேன்; நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை சுரங்களும் தீரும். தாதுநஷ்டம் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும். இதனைத்தேகபலத்திற்குத் தகுந்தபடி மூன்று ஐந்து ஏழு ஒன்பதுநாள் உபயோகிக்கவும். வியாதி நாட்பட்டதாயிருந்தால் இடையில் பத்துநாள் விட்டு உபயோகிக்கவும்

### குறிப்பு.

மேற்கண்ட விதமாகக்கட்டின பாஷாணத்தைப் பற்பமாக அல்லது சுண்ணமாகச்செய்து உபயோகித்தால் அதிகமேலான குணத்தைத்தரும்.



### 883. பாஷாணச்சுண்ணம்.

மேற்கண்டவிதமாகக் கட்டின ஒருபலம் பாஷாணத்திற்கு மேற்படி வெள்ளைநிறப்பூவுள்ள நீர்முள்ளியை அரைத்து ஒரு அங்குலம் கவசம்செய்து ஒருபலம் சுக்கான்கற்பொடியில் தும்பைச்சாற்றைவிட்டு இரண்டுசாமம் வெண்ணெய்போலரைத்து மூசையும் மூடியும்செய்து வெயிலிலுலர்த்தி மேற்படி கட்டியை வைத்து மேற்படி சில்லையால் மூடி ஏழுசீலைசெய்து உலர்த்திக்கஜபுடத்தின் பதினைந்து பங்குவறட்டியில்புடமிடவேண்டும். ஆறினபின் எடுத்துப்பனியில் வைக்கக் கட்டி மலர்ந்துபோகும். இதனைச்சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம் அநுபானம் உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளே.

முன் கட்டைப்பார்க்கிலும் இந்தச்சுண்ணம் அதிகமேலானதென்பதை அறிவாளிகளே தெரிந்துகொள்வார்கள். தகுந்த அநுபானத்தில் உபயோகிப்பதனால் குஷ்டம், புண், குறைநோய், புரைமுதலிய அநேக வகைநோய்கள் தீரும். இதன் சிறந்தகுணத்தை அநுபவசாலிகள் தங்கள் அநுபவத்தில் கண்டுகொள்வார்கள்.

### 884. பாஷாணக்கட்டு (வேறு.)

சுத்திசெய்த பாஷாணம் விராகனெடை—எ0, சுருக்குங்கியம் பலம்-ரு, (இதனைப்பொடித்து வைத்துக்கொள்ளவும்) புதுஓட்டில் ௪-அங்குலப்பள்ளமும் ௪-அங்குல அகலமுமுள்ள குழிசெய்து அதில் கொஞ்சம் முன் தூளைப்போட்டழுத்தி அதன்மீது முன்கட்டியை வைத்து, அதன்மீது முன் தூளைப்போட்டழுத்தி மூ

டிவேப்பெண்ணெய் ஊற்றியெல்லிய திரிப்போட்டெரிக்கும் விளக்கின்மேல் ஏற்றி எரித்துவரவேண்டியது. அதில்வீறல் கொடுத்தால் முன் தூளைத் தூவிவீறலை மூடவும். இப்படியே நான்குசாமம் எரித்து ஆறினபின் கட்டியை எடுக்கச் சிறந்தகட்டாம். இதனைப்பொடித்துச் சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—அரிசியெடை-வ, ௨.

அனுபானம்:—தேன், நெய், அசுவகெந்திச்சூரணம், கருஞ்சீரகலேகியம் முதலியவைகளாம்.

உபயோகம்:—நாட்பட்டசுரங்கள், வாயுகள் முதலியரோகங்கள் தீரும்.

## 885. மேற்படிகட்டு (வேறு.)

சுத்திசெய்த பாஷாணம் ஒரேகட்டியாகப்பலம்-ம, கலியாணப் பூசணிக்காய்-க. மேற்படி கலியாணப் பூசணிக்காயை ஒருபக்கத்தில் பில்லையாகத்தோண்டி அதற்குள் பாஷாணக்கட்டியை வைத்து அந்த பில்லையால் மூடிச்சீலைமண்செய்து ௪௦. எருவில்புடம்போடவும். இப்படியே வெவ்வேறு காயில்வைத்துப் புடம் ஒன்றுக்கு - ௧௦ - எருவீதம் அதிகப்படுத்தி ஒன்பது புடம் போட்டெடுக்கச் சண்டிக்கட்டாம். இந்த ஒன்பதாவது புடத்தில் கஜபுடமாகப் போடவேண்டும். இதனைப்பொடித்துச் சீஷாவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—அரிசியெடை-வ, ௨.

அனுபானம்:—தேன், நெய், லேகியவகைகள் முதலியவைகளாம்.



உபயோகம்:—குஷ்டம், தாதுநஷ்டம், குறைநோய், புண், புரைப்புண், பவுத்திரம் ஆகியவைகள் தீரும். இதனைப்பற்பமாகச்செய்து கொண்டால் விசேஷகுணத்தைத்தரும்.

## 886. பாஷாணச்சுண்ணம்.

மேற்கூறிய பாஷாணசண்டிக்கட்டு விராகனெடை-க௩, பாலரசம் விராகனெடை-௫, நாகம் விராகனெடை-க, பொரித்த படிக்காரம் விராகனெடை-௨, வெள்ளி அரப்பொடி விராகனெடை-க, சவ்வீரம் விராகனெடை-ஒக, முறைக்கிரமப்படிசெய்த வெடியுப்புச்சுண்ணம் விராகனெடை - ஒக, சிற்றண்ட வெண்கருவும் வெள்ளெருக்கம் பாலும் சமனெடை கலந்து கடைந்துண்டாக்கின ஜெயநீர் தேவையான அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளையெல்லாம் [illegible]டை ஜெயநீரைவிட்டு நான்குசாமம் அரைத்துப்பில்லைசெய்து ஒருவாரம்வரையில் ரவியுலர்த்தி அதன்மேல் உத்தாமணிச்சாம்பலில் மேற்கண்ட ஜெயநீரை விட்டரைத்து அதனால் பில்லைக்குப் பதின்மூன்று சீலைசெய்து நன்றாக உலர்த்தி ஒருசட்டியில் உத்தாமணிச்சாம்பல் படி-க, போட்டுமத்தியில் பில்லையைவைத்து அதன்மேலும் மேற்படிசாம்பலில் ஒருபடி போட்டுத் தீபக்கினி கமலாக்கினி காடாக்கினியாக ஒருஜாமவீதமாக நான்குசாமம் எரித்து ஆறவிட்டெடுத்துப் பார்க்கச்சுண்ணமாம். இதனைச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—இதில் ஒரு விராகனெடை சுண்ணத்தைப் பத்துப்பலம் லேகியத்தில் சேர்த்து மிலா

மித்து வேளை ஒன்றுக்கு உ, க. கிராகனெடையாகச் சாப்பிடவேண்டும். இதனைத் தனியாக உபயோகிக்கலாகாது.

உபயோகம்:—குஷ்டம், குறைநோய்; தாதுகஷ்டம், எதனாலும் தீராத சுரங்கள், பக்ஷவாத முதலிய வாதரோகங்கள், முறைவியாதிகள் ஆகியவைகள் தீரும்.

## குறிப்பு.

இது வெள்வங்கத்தை வாங்கும். தாம்பிரத்திலும் உபயோகிக்கலாம்.

## 887. பாஷாணக்கட்டு (வேறு.)

சுத்திசெய்த பாஷாணம் பலம்-க, இரசசெந்தூரம்பலம்-வ, உமிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி செந்தூரத்தை உமிநீரால் வெண்ணெய்போலரைத்து ஷைகட்டியைக் கவசித்து உலர்த்தி அதன்மீது ஐந்துசீலைமண்செய்து உலர்த்திக் கலசத்தின் பத்துப்பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கக்கட்டுப்பட்டிருக்கும். நெருப்பிற்புகையாது. அப்படிப்புகைந்தால் மறுபடியும் முன்போற்செய்து கொள்ளவும். தீ அதிகப்பட்டால் புகைக்கோடிப்போம். ஆகையால், இதனை ஞாபகத்துடன் புடம்போடவேண்டும். இவ்விதம் கட்டின பாஷாணத்தைப்பற்பமாக அல்லது பதங்கமாகச்செய்து உபயோகித்தால் உத்தமம். இதனைப் பொடித்து உபயோகிக்கவேண்டும்.

பிரமாணம்:—இருகசகசாமுதல் அரை அரிசிவரையில்.



அநுபானம்:—தேன், வெண்ணெய், நெய்முதலியவைகளாம்.

உபயோகம்:—நீட்பட்ட சுரங்கள், வாதரோகங்கள், முறைரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

## 888. மேற்படி கட்டு (வேறு.)

சுத்திசெய்த பாஷாணக்கட்டி பலம்-க, சோற்றுப்பொன்னாங்கியிலைச்சாறுபலம்-க௦.

செய்முறை:—மேற்படி சாற்றை ஒரு சிறுகலயத்தில் விடவேண்டும். இந்தச்சாறானது கலயத்தில் முக்கால்வாசியிருக்கவேண்டும். இதற்குள் மேற்படி கட்டியைப் போட்டு வாய்க்குச்சில்லிட்டுச் சீலைமண் செய்துலர்த்தி ச௦-பலம்வறட்டியில் புடமிடவேண்டும். இந்தக்கட்டியில்கொஞ்சம் நெருப்பில்போட்டுப் பரிசோதித்தால் புகையாமலிருக்கவேண்டும். புகைந்தால் புகையடங்குமுறையில் முன்போல் ஒன்றிரண்டு புடம்போட்டுச்சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைமேற்கண்டவைகளேயாம்.

## 889. மேற்படி (வேறு.)

சுத்திசெய்த பாஷாணம் பலம்-க, பிராந்திபலம்-ச, கழுதைமூத்திரம் பலம்-ச.

செய்முறை:—மேற்படி பாஷாணக்கட்டியை ஒரு செப்புக்கிண்ணியில்வைத்து ஒரு சிறு அடுப்பின்மீதேற்றித் தீபாக்கினியாக எரித்துமுன் சொன்ன இரண்டு திராவகத்தையும் ஒன்றாகக் கலந்து கட்டியின்மீது சிறு

கச்சிறுகவிட்டுச் சுறுக்கிடவேண்டும். நீரவமெல்லாம் சென்றபின்பு கீழேயிறக்கி ஆறவைத்து வைத்துக்கொள்ளவும். பற்பம், மெழுகு ஆகியவைகள் செய்ய இது ஒரு நல்லமுறை. இதனைப்பொடித்து உபயோகிக்கவேண்டியது.

பிரமாணம்:—ஒருகடுகுமுதல் அரை அரிசியெடை வரை.

அநுபானம்:—நெய், தேன், வெண்ணெய்முதலியவைகள்.

உபயோகம்:—காட்டப்பட்டசுரங்கள், முறைசுரங்கள், யானைக்கால்சுரம், அண்டசம்பந்தமான சுரம் ஆகியவைகள் தீரும்.

## 890. மேற்படி (வேறு.)

சுத்திசெய்த பாஷாணக்கட்டிபலம்-க, எருமைச்சாணிபலம்-௰.

செய்முறை:—மேற்படிசாணியை இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தை ஒருமண்சட்டிக்குள்வைத்து அதன்மீது கட்டியைவைத்து, அதன்மீது மறுபாதிச்சாணத்தைவைத்து அழுத்தி மேற்சட்டிமூடி சந்துசீலைமண்செய்து அடுப்பின்மீதேற்றித் தீபாக்கினியாக இரண்டுமணிநேரம் எரித்துக் கீழிறக்கி வைத்துக்குளிர ஆறினபின்பு கவசத்தைப்பிரித்துக் கட்டியை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஆறுதடவைகள் செய்துகொண்டால் நெருப்பில் புகையாமல் கட்டிபட்டுப்போம். ஒருநாளையில் ஏழெட்டுத்தடவைசெய்யலாம். ஆறுதடவையென்று மயங்கவேண்டாம். சாணி



ஈரமில்லாமல் நன்றாக உலர்ந்துபோயிருக்க வேண்டியது. அதுதான் எரிப்பின்பதம். தீ அதிகமானால், சாணி எரிந்து கருகித்தீப்பிடித்துப்பாஷாணம் ஓடிப்போகநேரிடும். ஆகையால் இதனை ஜாக்கிரதையுடன் செய்து பற்பம், மெழுகுமுதலிய பலபாகங்களில் உபயோகிக்கலாம். இதனைப்பொடித்துத் தனியாகவும் உபயோகிக்கலாம்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் முன்கண்டவைகளேயாம்.

## 891. மேற்படிகட்டு (வேறு.)

சுத்திசெய்த பாஷாணம் பலம்-க, வெண்காரம் பலம்-சஉ, வெடியுப்புபலம்-கஉ, நவச்சாரம் பலம்-க, எலுமிச்சம்பழச்சாறு பலம்-அஉ.

செய்முறை:—பாஷாணத்தைத்தவிர மற்றமூன்று சரக்குகளையும் பொடித்துக்கல்வத்திற்போட்டு எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு இரண்டுமணிநேரம் வெயிலில்வைத்துப்பிறகு அரைத்தாரம்வறண்டபின்பு மறுபடியும் வெயிலில் வைத்துக்கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்த்திச்சீஷாவில் வைத்துக்கொள்ளவும். இந்தத்தூள் விராகனெடை-சு, இதனை இரண்டுபாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு அகலில்பரப்பி அதன்மீது மேற்படி பாஷாணக்கட்டியை வைத்து அதன்மீது மறுபாதித்தூளைப்போட்டுச் சீலைமண் செய்துலர்த்தி இரு[illegible] வறட்டியில் புடமிட்டு ஆறினபின்பு எடுத்து [illegible] முன்போல் சு, விராகனெடை [illegible] மேற்படி [illegible] ண்டுபாகமாக்கி முன்போல்கட்டிக்கு [illegible] சீலைமண்செய்து முன்போல் இரு[illegible]

புடமிடவும். இவ்விதம் மடங்கி மடங்கி ஐந்து புடமிடவும். பாஷாணம் கட்டுப்பட்டுப்போகும். இதைப் பற்ப முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். இதனைப்பொடித்துத்தனியாகவும் உபயோகிக்கலாம்.

பிரமாணம், அனுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

892. மேற்படி கட்டு (வேறு.)

சுத்திசெய்த பாஷாணம் பலம்-க௰, இதனை ஒரு அப்ரேகத்தகட்டின்மீது அல்லது மண்தாலத்தின்மீது வைத்தடியில் நெருப்பிட்டெரித்து எலுமிச்சம் பழச்சாற்றை அதின்மீது விட்டுவரவேண்டும். புகை யெழும்பும். புகை கண்ணிற்படாமல் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். புகை அடங்குகிறவரையில் மேற்படி சாற்றை விட்டுக்கொண்டேயிருக்கவேண்டும். புகை நின்றவுடன் சாற்றைவிடாமல் இறுத்திக்கொள்ளவும். பின்பு கீழே யிறக்கிவைத்து ஆறினபின்பு எடுத்துக்கொள்ளவும். இது ஒருவகை கல்லகட்டு. இதனைப்பொடித்துத்தனியாகவும் உபயோகிக்கலாம்.

பிரமாணம், அனுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் முன் சொன்னவைகளேயாம்.

893. மேற்படிகட்டு (வேறு.)

சுத்திசெய்த பாஷாணக்கட்டி விராகனெடை-க, வெடியுப்பு விராகனெடை-உ, எருக்கம்பால் விராகனெடை-கஉ.

செய்முறை:—மேற்படி வெடியுப்பைப்பொடித்து இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை ஒரு சிறுகலயத்திற்



போட்டு அதன்மீது கட்டியைவைத்து அதன்மீது வெடியுப்பு மறுபாகத்தைப்போட்டு எருக்கம்பாலை விட்டு வாய்க்குச்சில்லிட்டு ஐந்து சீலைமண்செய்துலர்த்தி உச பலம் எருவில் புடமிடவேண்டும். குளிர்ந்து ஆறினபின்பு கட்டியை எடுத்துக்கொள்ளவும். பிறகு முன்போல்வெடியுப்பு விராகனெடை-உ, எருக்கம்பால் விராகனெடை-உச. ஆகியவைகளை முன்செய்ததுபோல் கலயத்தில் வைத்துப்புடமிடவேண்டும். இவ்விதம் மூன்றுதடவையும் செய்துகொள்ளவும். கட்டுப்பட்டுப்போம். பற்பம், மெழுக்கு, மருந்நிறை ஆகியவைகளுக்கு இதனை உபயோகித்தால் மிகவுஞ்சிறந்ததாம். இதனைத்தனியாகவும் உபயோகிக்கலாம்.

பிரமாணம், அனுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் முன் சொன்னவைகளேயாம்.

894. பாஷாணபற்பம்.

சுத்திசெய்து கட்டின பாஷாணம் பலம்-க, கண்டங்கத்திரிச்சாம்பல் படி-உ.

செய்முறை:—இரண்டுபடி கொள்ளும்படியான ஒரு மண்பானையில் ஒருபடி மேற்படி சாம்பலைப்போட்டழுத்தி அதனடியில் மேற்படி கட்டியை வைத்து அதன்மேல் மேற்படி சாம்பலைப்போட்டழுத்திப் பானை வாயை மண்தாலத்தால் மூடிச் சீலைமண்செய்து அடுப்பேற்றி மூன்று சாமநேரம் எரித்து ஆறவிட்டு எடுக்கப் பாஷாணமானது கட்டியாய்மலர்ந்துபோயிருக்கும். அதை ஜாக்கிரதையுடன் எடுத்து சீஷாவில் வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—அரிசியெடை-க.

அநுபானம்:—வெண்ணெய், வெந்நீர், நெய், முலைப்பால், முதலியவைகளாம்.

உபயோகம்:—தாதுபுஷ்டியுண்டாகும்; இந்திரிய பிரமேகரோகம் தீரும்; தம்பன சக்தியுண்டாகும்; அன்னாப்பசியுண்டாகும்.

குறிப்பு.

இதனை அடுப்பில்லைத் தெரிப்பதைப்பார்க்கிலும் கரியை நெருப்பாக்கி அதன்மீது கவசத்தைவைத்து நெருப்பு ஆறாமல் மென்மேலும் கரியைப்போட்டு விசிறிக்கொண்டேயிருந்தால் அதிக நல்லவிதமான பற்பமாகும். அவரவர்கள் இஷ்டப்படி செய்து கொள்ளவும்.

### 895. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் பலம்-க, வேப்பிலைச்சாறு செல்லத்தக்க அளவு, சோடாமா விராக்னெடை-க.

செய்முறை:—பாஷாணத்தைக் கல்வத்திற்பொடித்து மேற்படி வேப்பிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குமணி நேரமரைத்துப் பின்பு சோடாவைச்சேர்த்து இரண்டுமணி நேரமரைத்துப் பில்லைசெய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்துசீலைசெய்துலர்த்தி ஒருவீசை காட்டெருவில் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—ஒரு கசகசாமுதல் ஒரு அரிசியெடைவரையில்.

அநுபானம்:—ஒன்றரைப்பலம் வெண்ணெயுடன்கலந்து வெறும்வயிற்றில் சாப்பிடவும். பாலேடு, பா



ல், கொழுப்பசையுள்ள ஆகாரங்கள், நெய் ஆகியவைகளை அதிகமாகச்சேர்க்கவும்.

உபயோகம்:— நரம்புகளைப்பற்றின வியாதிகள் தீரும். தாதுநஷ்டம் தீர்ந்து தேகசக்தியுண்டாகும். இரைப்பைபலப்படும். கைகால் நடுக்கல்தீரும்.

### 896. பாஷாணபற்பம் (வேறு.)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் விராகனெடை-ஐ, வெள்ளைச் சீமைமுள்ளங்கி (டர்னிப்) இதனைக்கீழ்ப்பக்கம் கொஞ்சம் அறுத்து, ஒரு அங்குல சதுரம் பள்ளம் தோண்டி அதற்குள் மேற்படி பாஷாணத்தைவைத்து முன் எடுத்த சதையையே அதிற்போட்டு அழுத்திக்கெட்டியாக மூன்று சீலைமண்செய்யவேண்டும். இதற்காக மண்ணையும் பஞ்சையும் சேர்த்தரைத்துச் சித்தப்படுத்திச் சீலைசெய்யவேண்டியது. ஈரம் உலர்த்தி மூன்றுவீசை வறட்டியில் காற்றில்லாவிடத்தில் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப் பற்பமாகியிருக்கும். இது அதிர்ஷ்டசாலிகளுக்குக் கைவல்யமாகுமேதவிர மற்றவர்களுக்குக் கிடைப்பது துர்லபம். கைபாகமாக அதிகஜாக்கிரதையுடன் செய்யவேண்டியது. இப்பற்பம் அருமையானவைகளுளொன்று. இதன்குணம் அநுபவத்தில் தெரியவரும்.

பிரமாணம்:—ஒரு கசகசாமுதல் ஒரு அரிசியெடைவரையில்.

அநுபானம்:—ஒருபலம் வெண்ணெய் முதல் ஒன்றரைப்பலம் வெண்ணெய்வரையில் எடுத்து அதற்குள் வைத்துச்சாப்பிடலாம். கொழுப்பான பதார்த்தங்

கள், நெய்ப்பசையான பதார்த்தங்கள் ஆகிய புஷ்டியான ஆகாரங்களைச் சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—நரம்புகளுக்கு முறுக்கேற்றிப் புருஷத்தன்மையை உண்டாக்கும்; தாதுபுஷ்டியுண்டாகும்; ஆகாரங்களை ஜீரணிக்கச்செய்து இரைப்பையைப்பலப்படுத்தும். நடுக்கம் முதலிய நரம்புத் துர்ப்பலத்தைப் போக்கும்.

## 897. பாஷாணபற்பம் (வேறு)

மேலே சொல்லியிருக்கிறபடி கண்டங்கத்திரிச் சாம்பலில் வைத்தெரித்துப் பற்பம் செய்வதுபோலவே அரசம்பழுப்புச் சாம்பல், முள் முருக்கம்பழுப்புச் சாம்பல் முதலியவைகளிலும் வைத்தெரித்துப் பற்பம் செய்துகொள்ளலாம்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேலே சொல்லியிருப்பவைகளேயாம்.

## 898. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் விராகனெடை-௫, ஒருவிசை மருதோன்றியிலையை அரைத்தகவிழுக்குள் நடுவில் வைத்து ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி மூன்றுவிசை எருவில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௨. முதல்-௧.

அநுபானம்:—பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:—விரணமேகங்கள், மேகரோகங்கள், கிரந்திகள், புண்கள், கண்டமாலை, குஷ்டரோகம் முதலியவைகள் தீரும்.



### குறிப்பு.

கூடுமானால், மூன்றுவிசை மருதோன்றியிலையை அரைத்து அதற்குள் வைத்தும் செய்யலாம்.

## 899. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் விராகனெடை-௨, வெடியுப்பு விராகனெடை-௧. பருமனான வெங்காயம் ஒன்று.

செய்முறை:—வெங்காயத்தை அரையங்குலங்குடைந்து வெடியுப்பைப்பொடித்து இரண்டு பங்காக்கி ஒருபங்கை அடியிற்போட்டு அதன்மீது பாஷாணக்கட்டியைவைத்து அதன்மீது மறுபங்கு வெடியுப்புத் தூளைப்போட்டு அதன்மீது முன் எடுத்தவெங்காயத் தூளைப்போட்டழுத்தி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி ௨௬-பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—ஒரு கசகசாமுதல் ஒரு அரிசியெடைவரையில்.

அநுபானம்:—வெண்ணெய் ஒருபலம் முதல் மூன்றரைப்பலம்வரையில். பாலேடு, நெய்ப்பசையான ஆகாரங்கள் முதலியவைகளை அதிகமாக உபயோகிக்கவேண்டியது.

உபயோகம்:—நரம்பைப்பற்றின வியாதிகள்தீரும். தாதுபுஷ்டியுண்டாகும்; பசிதீபனத்தை அதிகப்படுத்தும். இரைப்பையைப் பலப்படுத்தும்.

## 900. பாஷாணபற்பம் (வேறு.)

முள்ளெருக்கம் பழுப்புச்சாம்பல் பலம்-௬, வெடியுப்பு பலம்-௮, சுத்திசெய்து கட்டின பாஷாணம் பலம்-௧.

செய்முறை:—ஒரு சிறுபானையில் மேற்படி அரைவாசி சாம்பலைப்பரப்பி, வெடியுப்பைப் பொடித்து இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தை அதன்மீது பரப்பி அதனடுவில் பாஷாணக்கட்டியைவைத்து அதன்மீது மறுபாதி வெடியுப்புத்தூளைப்போட்டு அதன்மீது மிஞ்சு சாம்பலைப்போட்டுப் பக்குவமாக அழுத்தி மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி ஐந்துவீசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—ஒருகசகசாமுதல் ஒரு அரிசியெடைவரையில்.

அநுபானம்:—வெண்ணெய் ஒருபலமுதல் ஒன்றரைப்பலம் வரையில் அநுபானித்துச் சாப்பிடலாம். அல்லது ஜலத்தில் அநுபானித்துச் சாப்பிடலாம்.

உபயோகம்:-போகசக்தியுண்டாகும். இந்திரியஸ்ராவகரோகம் தீரும். தம்பனசக்தியுண்டாகும். அடங்காப்பசியுண்டாகும். நரம்பைப்பற்றின வியாதிகள் தீரும். இரைப்பையைப் பலப்படுத்தும். நடுக்கம், உதறல ஆகியவைகளைப்போக்கும்.

## 901. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டினபாஷாணம் விராகனெடை-௬, இதன்மீது ௧௨-பலம் நூலைச்சுற்றிக் காற்றில்லாத



விடத்தில் வைத்துக்கொளுத்திவிட்டு எரிந்தாறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧.

அநுபானம்:—பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:—குளிர்ச்சியான எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கலாம். கிரந்திப்புண், மேகரோகங்கள் ஆகியவைகளும் தீரும்.

## 902. பாஷாணபற்பம் (வேறு.)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் விராகனெடை-௧, எருக்கின்வேர்ப்பட்டை பலம்-௨.

செய்முறை:—எருக்கின்வேர்ப்பட்டையை அரைத்து அதற்குள்பாஷாணத்தைவைத்து மேலேமூன்று சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் நான்குபங்கெடை வறட்டியில் புடமிடவேண்டும். ஆறினபின்பு பாஷாணக்கட்டியையெடுத்து முன்போல் இரண்டுபலம் எருக்கின்வேர்ப்பட்டையை அரைத்து மூன்று சீலைமண்செய்துலர்த்தி முன்போற்புடமிடவும். இவ்விதம் மடக்கி மடங்கி நான்கு அல்லது ஐந்துபுடமிட்டால்பற்பமாகிவிடும்.

பிரமாணம்:—ஒரு கசகசாமுதல் ஒரு அரிசியெடைவரையில்.

அநுபானம்:—வெண்ணெய், பாலேடு முதலியவைகளாம்.

உபயோகம்:—தாது நஷ்டத்தைப் போக்குவதில் அதிகம் சிறந்தவைகளுள் இதுவும் ஒன்று.

### 903. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்துகட்டின பாஷாணம் பலம்-௨, கற்கண்டுப்பாகு செல்லத்தக்க அளவு, நாயுருவிச்சாம்பல் பலம்-௧.

செய்முறை:—பாஷாணத்தைக் கல்வத்திற்போட்டுப்பொடித்துக் கற்கண்டுப்பாகைச் சிறுகச் சிறுகவிட்டு மூன்றுநாள் அரைத்துப் பில்லைசெய்து மேற்படிசாம்பலை இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தை ஒரு அகலில் வைத்துப்பரப்பி அதன்மீது பில்லையைவைத்து அதன்மீது மறுபாதிச் சாம்பலைப்போட்டு மேற்சட்டி மூடிமூன்று சீலைமண்செய்துலர்த்தி இரண்டு வீசை எருவில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧.

அனுபானம்:—வெண்ணெய், பால்லேடு, முதலியவைகளாம்.

உபயோகம்:— கிரந்திப்புண்கள், மேகரோகங்கள், குஷ்டங்கள் ஆகியவைதீரும். இந்த வியாதிகள் நாட்பட்டவைகளாயின் விடாமல் நாற்பதுநாள் உபயோகிக்கவும்.

### 904. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் பலம்-௩, எள் செடி சமூலத்தையும் எரித்த சாம்பல் படி-௨.

செய்முறை:— இரண்டுபடி கொள்ளும்படியான ஒருபானையில் ஒருபடி சாம்பலைப்போட்டு அழுத்தி அதன்மீது பாஷாணக்கட்டியை வைத்து அதன்மீது மறு சாம்பலையும் போட்டழுத்திப் பானைவாயை மண்தா



ழ்தால் மூடிச்சீலைசெய்து அடுப்பேற்றி நான்குசாமம் எரித்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧.

அனுபானம்:—பாலேடு, வெண்ணெய், தண்ணீர் ஆகியவைகளாம்.

உபயோகம்:—கபசம்பந்தமான வியாதிகள், குளிர்ச்சி சம்பந்தமான வியாதிகள், ரெத்தரோகங்கள் ஆகியவைகள் தீரும். தாதுபுஷ்டி, போகசக்தி, தம்பனசக்தி, பசிதீபனம் ஆகியவைகளுண்டாகும்.

### 905. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்த பாஷாணக்கட்டி வீராகனெடை-௩, சேவல்கொண்டைப்பூச்செடி சமூலச்சாறு பலம்-௧௦, எள்செடிசமூலச்சாம்பல் படி-௧.

செய்முறை:—மேற்படி பாஷாணத்தைப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்தரைத்துச் சாறெல்லாம் சென்றபின்பு பில்லைசெய்துலர்த்தி ஒரு மேற்படியில் அரைப்பாகச்சாம்பலை வைத்தழுத்தி அதில் மேற்படி பில்லையைவைத்து அதன்மேலும் மறுபாதிச்சாம்பலைப்போட்டழுத்தி மேற்சட்டி மூடி ஐந்துசீலைமண்செய்துலர்த்தி அடுப்பேற்றி மூன்றுசாமம் தீபாக்கினி கமலாக்கினியாக எரித்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧.

அனுபானம்:—பாலேடு, வெண்ணெய், வெற்றிலை ஆகியவைகளாம்.

உபயோகம்:—போகசக்தியை உண்டாக்கும்; பசிதீபனத்தை அதிகப்படுத்தும்.

பத்தியம்:—புளி, பெண் ஆகியவைகளை நாற்பது நாள் வரை நீக்கிவைக்கவேண்டியது. நெய் பால்வறுத்த பதார்த்தங்களை அதிகமாக உபயோகிக்க வேண்டியது. இவ்விதம் நாற்பதுநாள் சாப்பிட்டால் கிழத்தன்மைவராமல் பாலியனைப்போலவே இருக்க ஏதுவாகும்.

## 906. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் பலம்-வ, இரண்டுபலம் கஞ்சாவிலையை அரைத்து அதற்குள் வைத்து மூன்று சீலைமண்செய்து பத்துப்பலம் வறட்டியை அடுக்கி நெருப்பிட்டு எரித்துப் புகையடங்கினவுடன் அதற்குள் மேற்படி கவசத்தைவைத்து மூடிவிடவேண்டும். ஆறினபின்பு கட்டியை எடுத்து முன்போல் இரண்டுபலம் கஞ்சாவிலையை அரைத்துக் கவித்து முன்போல் சீலைமண்செய்து முன்போற்புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி நாலைந்து தடவை புடமிட்டால் பற்பமாகிவிடும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 907. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் பலம்-௧, பிரகாய்ப்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி பாஷாணத்தைக் கல்வத்திலிட்டுப்பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்துச் சிறுவில்லைகளாகச் செய்து உலர்த்திக்கொள்ளவேண்டும். பின்பு ஐந்துப



லம் ஆமணக்கிலையை அரைத்தவில்லைக்குள் வைத்து மூன்று சீலைமண்செய்து ஒருவீசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின்னெடுக்கப்பற்பமாம்.

பிரமாணம்:—அரிசியெடை-௪.

அநுபானம்:—தேன், நெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:—பக்ஷவாதம், முகவாதம், முடக்குவாதம் முதலிய வாதரோகங்கள் தீரும்.

## 908. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் வராகனெடை-௧, மருதோன்றியிலை வீசை-௭.

செய்முறை:—மேற்படி இலையை உரலிலிட்டிடித்துப்பிறகு அம்மியில் வைத்தரைத்து வெண்ணெய்போலானபின்பு இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தை ஒரு சட்டியில்வைத்துத் தட்டையாகச்செய்து அதனடுவில் மேற்படி பாஷாணத்தைவைத்து மறுபாதி விழுதையும் அதன்மேல் வைத்துச் சமமாக அழுத்திவிட்டு மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி ௧௮-வீசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்து முன்போலவே இரண்டாந்தடவையும் ஒருபுடமிட்டெடுக்கப்பற்பமாயிருக்கும். எடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—ஒரு அரிசியெடை முதல் இரண்டு அரிசியெடைவரையில்.

அநுபானமும், உபயோகமும்:—பனப்ஷா கஷாயம் பலம்-௨, தேன் பலம்-வ. இவ்விரண்டையும் மிஸ்ரித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி அநு

பானித்துண்ண இரத்தத்திலுள்ளதோஷம் நீங்கி நல்ல இரத்தம், இரத்தசுத்தி ஆகியவைகளுண்டாம்.

கடுக்காய்ப் பிஞ்சுச்சூரணம் குன்றிமணியெடை-க, அரசம்பட்டைச்சாம்பல் குன்றிமணியெடை-க, தேன் விராகனெடை-க. இவை யெல்லாவற்றையும் மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணக் கபம் வெளிப்படும்; இருமல்ரோகம் தீரும்.

காவுஜபான் கஷாயம் விராகனெடை-க, மூங்கில் அப்புச்சூரணம் விராகனெடை-அ, ஏலரிசிச்சூரணம் விராகனெடை-அ, இவற்றை மிஸ்ரமித்து அநுபானித்துண்ண வறட்டிருமல் தீரும்.

வெற்றிலைச்சாறு விராகனெடை-கஉ, தேன் விராகனெடை-க. இவற்றை மிஸ்ரமித்து அநுபானித்துக் கொள்ளக் கபசம்பந்தமான எல்லாவியாதிகளும் தீரும்.

நான்கு இராசைப்பழத்தை அரைத்து அதில் வைத்து நாற்பதுநாள் உட்கொள்ளக் கிரந்திரோகங்கள், கைகால் முடக்கு, மேகசரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

இளநீச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து அநுபானித்துக்கொள்ள நீர்க்குசுரம், மூன்று முறைசுரம், நான்காமுறைசுரம் ஆகியவைகள் தீரும்.

வெண்ணெய் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து அநுபானித்துக்கொள்ளச் சுவாசகாசம், மூச்சு, இருமல் முதலியவைகள் தீரும்.



ஓமச்சூரணம் விராகனெடை-கஉ, தேன் விராகனெடை-க, இவ்விரண்டையுமிஸ்ரமித்து அநுபானித்துண்ண அர்த்தாங்கவாயு தீரும்.

## 909. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்த கட்டின பாஷாணக்கட்டி ஒருபங்கு, இதற்கு எட்டுபங்கெடையுள்ள பருமனான வெங்காயம்-க, மேற்படி பாஷாண எடை கம்பிவெடியுப்பு.

செய்முறை:—வெங்காயத்தைக்குடைந்து வெடியுப்பைப் பொடிசெய்து இரண்டு பங்காக்கி ஒருபங்கை வெங்காயத்திற்குட்பரப்பி அதன்மேல் பாஷாணக்கட்டியைவைத்து அதன்மீது மறுபங்கு வெடியுப்புத்தூளைப்போட்டு முன் வெங்காயத்தூளையே போட்டு மூத்தி மூன்றுசீலைமண்செய்துலர்த்தி ஒருவிசை வறட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும். அநுபவத்தால் இதன் புடத்திட்டத்தை நிதானித்தறிந்து கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—ஒரு அரிசியெடைமுதல் இரண்டு அரிசியெடைவரையில்.

அநுபானமும், உபயோகமும்:— சுத்திசெய்த நவாசாரச்சூரணம் குன்றிமணியெடை நான்கு, நற்சீரகரசம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவை யெல்லாவற்றையும் மிஸ்ரமித்து மேற்படி பற்பத்தைப்பிரமாணப்படி அநுபானித்துண்ண சந்நிவாதங்கள், கணுவாதம், சந்துவாதம் முதலிய எல்லாவகை வாயுரோகங்களும் தீரும்.

சிந்திற்கொடிச்சாறு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து அநுபானித்துண்ணப் பலவகைக்கபரோகங்கள், சுவாசகாசம், மேன்மூச்சு ஆகியவைகள் தீரும்.

ஓமச்சூரணம் விராகனெடை-௨, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையுமிஸ்ரமித்து அநுபானித்துண்ண மந்தாக்கினிரோகம் தீரும்; பசிதீபனம் அதிகப்படும்.

பாலேடு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து அநுபானித்துண்ண போகசக்தி, தம்பனசக்தி, தேகசக்தி, முகவசீகரம் ஆகியவைகளுண்டாகும்.

வெற்றிலைச்சாறு விராகனெடை மூன்று, தேன் விராகனெடை-௬, இவற்றை மிஸ்ரமித்து அநுபானித்துண்ணச் சுவாசகாசரோகம் தீரும். போகசக்தி, தம்பனசக்தி ஆகியவைகளு முண்டாகும்.

வேப்பிலைச்சாறு விராகனெடை மூன்று, மிளகுச்சூரணம் குன்றிமணியெடை-௪, இவற்றை மிஸ்ரமித்து அநுபானித்துண்ண எதினாலும் தீராத நான்கா முறைசுரம் தீரும்.

ஆற்றுத்தும்மட்டி வேர்ப்பட்டைச்சாறு, சிந்திற்கொடிச்சாறு, தேன் இவை வகை-க-க்கு விராகனெடை மூன்று. இவற்றை மிஸ்ரமித்து அநுபானித்துண்ண, கிரந்திரோகங்கள், பறங்கிப்புண், சூலைரோகம், எல்லாவகை வாதரோகங்கள், எல்லாவகைக் கபரோகங்கள் ஆகியவை தீரும்.



திரிபலைச்சூரணம், கருஞ்சீரகச்சூரணம், இவைவறுப்பாக வறுத்திடித்த வெந்தயச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-௩, தேன் விராகனெடை-௬. இவற்றை மிஸ்ரமித்து அநுபானித்துண்ணச் சந்துவாதம், இடுப்புவலி, மார்புவலி ஆகியவைகள் தீரும்.

கொத்துமல்லிக்கீரைச்சாறு விராகனெடை-௯, மூங்கிலுப்புச்சூரணம் குன்றிமணியெடை-௪, கெந்தகச்சூரணம் விராகனெடை-௨, தேன் விராகனெடை மூன்று. இவைகளை மிஸ்ரமித்து அநுபானித்துக் கொள்ளக் குளிர்ச்சியினாலுண்டான தலைநோய், பீனிசரோகம், கிறுகிறுப்பு, மந்தாக்கினிரோகம் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

மேற்கண்ட அநுபானவகைகள் பெரும்பான்மையும் எல்லாவகைப் பாஷாண பற்பங்களுக்கும் ஏற்கும். ஆனால், தேகசுபாவம், தேகபலம், வியாதிபலம் ஆகியவைகளையும் கவனித்துச்சமயோசிதம்போலச்செய்வது சிகிச்சகர்களின் கடமையாம்.

## 910. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்து கட்டின பாஷாணம் விராகனெடை மூன்று, வட்டக்கிலுகிலுப்பைச்சாறு செல்லத்தக்க அளவு, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:— பாஷாணத்தைப்பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமமே ரமரைத்து உருண்டையாகச்செய்து காயவைத்து எருக்கம்பாலை அதில்விட்டுப் புரட்டிவரப் பின்போல் மேலே பிடித்துக்கொள்ளும். சுமார் ஓலைக்கனம் ஒட்டி

க்கொண்டபின்பு அகலில்வைத்து மேலகல்மூடி எழுசீலைமண்செய்துலர்த்தி இருபத்து நான்குபலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-உ-க.

அநுபானம்:—தேன், வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—ஜலோதரம், சூலை, இரத்தி ஆகியவை தீரும்.

## 911. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்துகட்டின பாஷாணம் விராகனெடை-உ, சுத்திசெய்த இரசம் விராகனெடை-உ. கருநாபி, வங்கம், அரிசித்திப்பிலி, ஜாதிப்பத்திரி இவை வகைக்கு விராகனெடை-உ, ஜாதிக்காய் விராகனெடை-க0.

செய்முறை:—பழஞ்செங்கல் இரண்டை ஒன்றோடொன்றைத் தேய்த்துச் சந்தில்லாமல் பொருந்தும்படியாகச்செய்து ஒருகல்லின் நடுவில் அரையங்குல ஆழமும் ஒருஅங்குல சதுரமுமுள்ள குழிதோண்டிச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும். பாஷாணத்தையும் இரசத்தையும் சேர்த்தரைத்து இரசம் ஜரிக்காமல் மடிந்துபோனபின்பு தனியே எடுத்துவைத்துக்கொள்ளவேண்டும். மற்றச்சரக்குகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்திடித்து இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிறசெங்கல் குழியில் போட்டுப்பரப்பி அதன்மீது பாஷாணம்இரசம் ஆகியவைகளை அரைத்த தூளைப்போட்டு அதன்மீது மறுபாதிசூரணத்தையும் போட்டு மறுசெங்கல்லை வைத்துமூடி எ



ழுசீலைமண்செய்து உலர்த்தி அடுப்பின்மீது வைத்து தீபாக்கினி கமலாக்கினியாக நான்குசாமம் எரித்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாகியிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-அரை.

அநுபானம்:—தேன், பாலேடு, வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுவாசகாசரோகம், மேன்மூச்சு ஆகியவைகள் தீரும். எல்லாவகை பலஹீனத்தையும் நீக்கி தேக சக்தியை விருத்திசெய்யும்.

## 912. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்த பாஷாணம் பலம்-க, எலுமிச்சம்பழச்சாறு தேவையான அளவு, ஊமத்தம் இலைச்சாறு தேவையான அளவு, முள்பசரிலையெரித்தசாம்பல் படி-உ.

செய்முறை:—மேற்படி எலுமிச்சம் பழச்சாற்றில் மேற்படி கட்டியைப்போட்டு ஐந்துநாள் ஊறவைக்கவேண்டும். ஆனால், கட்டியானது மேற்படிசாற்றில் ஒரு அங்குலம் ஆழ்ந்து கிடக்கவேண்டும். ஆறும்நாள் எடுத்து அதை நீக்கிவிட்டு ஊமத்தஞ்சாற்றில் மேற்கண்டவாறே ஐந்துநாள் ஊறவைக்கவேண்டும். பிறகு ஒருபடிசாம்பலை ஒருமண்சிறுபானையில் போட்டழுத்தி அதன்மீது பக்குவப்படுத்தின பாஷாணக்கட்டியை வைத்து மற்றொருபடி மேற்படி சாம்பலை அதன்மீது போட்டழுத்திப் பானைவாயை மூடிச்சீலைமண்செய்து அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினி கமலாக்கினியாக நான்கு சாமமெரித்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாகியிருக்கும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகள் மேற்சொன்னவைகளேயாம்.

## 913. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்த பாஷாணம் பலம்-க, இதனை மேற்கண்டபடி பக்குவப்படுத்தி கருவிலிப்பட்டைச் சாம்பலில் வைத்து முன்போல் எரித்து எடுத்துக்கொள்க. பற்பமாயிருக்கும்.

பிரமாணம், அனுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 914. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்த பாஷாணம் விராகனெடை மூன்று, நிறமான பிரண்டை பலம்-ரு.

செய்முறை:—பாஷாணத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பிரண்டையைச் சிறுகச் சிறுகவார்த்துப் பிரண்டையெல்லாம் சென்றபின்பு சிறுபில்லையாகச் செய்து அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்து சீலம் ண்செய்து கவசத்தின் பத்துப்பங்கெடை வறட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-உ.க.

அனுபானம்:—வெண்ணெய், பாலேடு ஆகியவைகளாம்.

உபயோகம்:—கிரந்திரோகத்திற்கு எழுநாள் உபயோகிக்கத்தீரும்; குஷ்டத்திற்கு இருபத்தொருநாள் உபயோகிக்கத்தீரும்.

## 915. பாஷாணபற்பம் (வேறு.)

யானைக்குந்தத்தூள், வெண்சந்தனத்தூள், கம்பிவெடியுப்புத்தூள், மாதுளம்பட்டைத்தூள் இவை வ



கை-ரு-க்குப்பலம்-ரு, சேராங்கொட்டை-டு, இவற்றுள் சேராங்கொட்டையை ஒருசட்டியில்வைத்து மற்றசரக்குகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்திடித்து அதன்மீது வைத்து அடுப்பேற்றி எரிக்கவேண்டும். இதிலிருந்து புகையெழும்பும். தன்தேகம், முகம் ஆகியவைகளிற்படாமல் ஜாக்கிரதையாகத் தூரத்தில் ஒதுங்கியிருக்கவேண்டும். எல்லாம் எரிந்துசாம்பலானபின்பு எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். இந்தச் சாம்பலில் ரு-விராகனெடை பாஷாணத்துக்கு கடு-விராகனெடை சாம்பல்போதுமானது. இந்தக்கணக்கின்படி கூ-விராகனெடை பாஷாணமானால் ரு0-விராகனெடை சாம்பலை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மேற்கண்டகணக்கின்படி தேவையான சுத்திசெய்த பாஷாணத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். மேற்கண்ட கணக்கின்படி இதற்குத்தகுந்தசாம்பலையுமெடுத்து இதை இரண்டுபாகமாக்கிஒருபாகத்தை ஒருஅகலிலிட்டு அதன் மீதுபாஷாணத்தைவைத்து, அதன்மீது மறுபங்குச்சாம்பலைபோட்டு மேலகல்மூடி ஐந்துசீலைமண்செய்து உலர்த்தி அரைமுதல் ஒருபடிவரையில் உள்ளஉமியில்புடமிடவேண்டும். பாஷாணம் விராகனெடை-ரு, ஆனால் அரைப்படி உமிபோதுமானது. பாஷாணம் ஆறு விராகனெடையானால் முக்காற்படி உமிபோதுமானது. இவ்விதம் பாஷாணத்திற்குத்தகுந்தபடி கால்படி உமியை அதிகப்படுத்திக்கொள்ளவும். புடம் எரிந்து ஆறினபின்பு எடுக்கப்பற்பமாகியிருக்கும்.

பிரமாணம்:—கசகசாவெடை.க.

அனுபானம்:—பாலேடு, வெண்ணெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுவாசகாசம், மந்தாரகாசம் ஆகியவைகள் தீரும்; தேகசந்து போகசக்தி ஆகியவைகளுண்டாகும்.

### 916. பாஷாணபற்பம் (வேறு.)

சுத்திசெய்த பாஷாணம் விராகனெடை-ரு, எண்ணெய்ப்பசையுள்ள வெண்காரம் விராகனெடை-ள.

செய்முறை:—இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு இரண்டுசாமநேரமரைத்து அப்புதாழிட்டில் வைத்து அடுப்பின்மீதேற்றிச்சிறுதீயாக எரித்துவரவும். அப்படி எரிக்கும்போது அதில் சிடுசிடுப்பும் புகையும் உண்டாகும். இந்தச்சிடுசிடுப்பும் புகையும் அடங்கிவிடுகிறவரையில் எரிக்கவேண்டியது. அப்படி இவை அடங்கிவிடுவதே அது பற்பமானதற்கு அறிகுறியாம். இதனையெடுத்துப் பொடித்துச்சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—அரிசியெடை-ரு-க.

அநுபானம்:—பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:—போகசக்தியுண்டாகும். குடல்முளைக்குநோய், இல்வாயு, எல்லாவகை வாயுரோகங்கள், இரணங்கள் ஆகியவைதீரும்.

### 917. பாஷாணபற்பம்-(வேறு)

சுத்திசெய்த சங்குப்பாஷாணம் பலம்-க, திருமாணபூநீறுபடி-உ.

செய்முறை:-பூநீற்றை இடித்துத்தூள் செய்து இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை ஒருபானையிற்போட்டுத் தேக்கி அதன்மீது முன்பாஷாணக்கட்டியை வைத்து அதன்மீது மறுபாதிப்பூநீற்றைப்போட்டமுத்திப் பானை



வாயை மூடிச்சீலைமண் செய்து அடுப்பின்மீதேற்றி நான்குசாமம் எரிக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—ஒருகசகசா எடைமுதல் அரை அரிசியெடை வரையில்.

அநுபானமும், உபயோகமும்:—ஆமருகன்றிமணியெடைமூங்கிலுப்புச்சூரணம், ஆமருகன்றிமணியெடை ஏலரிசிச்சூரணம் இவ்விரண்டையும்கலந்து மேற்படி பற்பத்தைப் பிரமாணப்படி அநுபானித் துட்கொண்டு, பனிரண்டுபலம் பாலைக்குடிக்கவேண்டும். அரை அல்லது ஒருமணிநேரம் சென்றபின்பு பசியைப்போன்ற உணர்ச்சியுண்டானால் காற்படி அல்லது காலேயரைக்காற்படி பாலைக்குடிப்பாட்ட வேண்டும். அதிக உஷ்ணமாகத்தெரிந்தால் கஸ்தூரிப் பிரம்புத்திராவகம் விராகனெடை-ள, தாழம்பூத்திராவகம் விராகனெடை-ள, சந்தனஷர்பத் பலம்-ரு. எல்லாவற்றிற்கும் சரிபங்கெடை ஜலத்தைச்சேர்த்துப்பானம் செய்யவேண்டும். இவ்வாறுசெய்வதனால் எல்லாவகைசுரங்களும் தீரும்.

சீமைத்தண்ணீர் விட்டான் கிழங்குச்சூரணம் விராகனெடை-க, இதில் மேற்படி பற்பத்தை அநுபானித்துட்கொண்டு அதன்மீது காய்ச்சிக்கற்கட்டிட்ட பசுவின்பாலை ஜீரணசக்திக்குத்தகுந்தபடி ஒன்றிரண்டு ஆழாக்குபானம் செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால் தாதுபுஷ்டியுண்டாகும்.

இன்னும் கபசம்பந்தரோகங்கள், வாதரோகங்கள் ஆகியவைகளுக்கு வெற்றிலையில் அநுபானித்துக்கொடுக்கத்தீரும்.

இதனை இன்னும் அநேகம் வியாதிகளில் உபயோகிக்கலாம். ஆகையால் சமயோசிதம்போல் தகுந்த அநுபானங்களில் உபயோகிக்க அவ்வியாதிகள் தீரும்.

## 918. பாஷாணபற்பம் (வேறு.)

சுத்திசெய்த பாஷாணம் பலம்-௧, கழுதைமூத்திரம் செல்லத்தக்கஅளவு, எள்செடிசமூலத்தை எரித்த சாம்பல்படி-௧.

செய்முறை:—மேற்படி பாஷாணத்தைக் கழுதைமூத்திரத்தில் மூன்றுநாள் ஊறவைத்து எடுத்துக்கொள்ளவும். மேற்படி சாம்பலில் கழுதைமூத்திரம் புகட்டுவிட்டுப் பிசைந்து இரண்டு அடையாகச்செய்து, ஒருஅடையின் நடுவில்முன் சுத்தப்படுத்தின பாஷாணக்கட்டியைவைத்து மறுஅடையால் மூடிச்சமனாக்கி அழுத்தி ஒருமண்தாலத்தில் வைத்து மறுமண்தாலத்தால் மூடி எழுசீலைமண்செய்துலர்த்தி-௫௦, பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧-௨.

அநுபானம்:— பாலேடு, வெண்ணெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:— இரத்தரோகங்கள், வாயுரோகங்கள், முறைசுரங்கள், காசங்கள் ஆகியவைதீரும்.

## 919. பாஷாணக்கட்டு பற்பம் (வேறு.)

பாஷாணம் பலம்-௧, இதனை ஒரு துணியில் முடிந்துகொள்ளவும். ஒருபெரிய பானையில் ஒருபடி தெளிநீரை விட்டு அதில்வெந்தசுண்ணாம்புக் கல்லைப்போட்டு அதில் முன்முடிந்து வைத்திருக்கிற பாஷாணமுடிச்சையும் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துநீரும் சுண்டினபின்பு முடிச்சையெடுத்து வெந்நீர்விட்டுக்கழுவி வைத்துக்கொள்ளவும்.



நாயுருவிச்சாம்பல்படி-௨, இரண்டுபடி கொள்ளும்படியான மண்பானையின் அடியில் கால்பங்குசாம்பலைப்பரப்பிமுன் சுத்திசெய்த பாஷாணத்தை அதன்மேல் வைத்துமீதிச்சாம்பலைப்பானை வாய்மட்டம்போட்டுப்பானைவாயை மண்தாலத்தால்மூடி மூன்றுசீலைசெய்துவைத்துவிரல்கனமுள்ள மூன்றுவிறகால் நான்குசாமம் எரித்து ஆறவிட்டு எடுக்கப்பாஷாணம் பற்பமாகிக்கட்டியாகவேயிருக்கும். இதனைப் பொடித்து உபயோகிக்கவேண்டும்.

பிரமாணம்:—கசகசாஎடை-௧-௨.

அநுபானம்:—பாலேடு, வெண்ணெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:— எல்லாவகை மேகரோகங்களும் தீரும்.

## 920. பாஷாணபற்பம் (வேறு)

பாஷாணம் பலம்-௧, இதனைவண்ணான்வெள்ளாவியில் ஐந்துதரம்வைத்துச் சுத்திசெய்துகொள்ளவேண்டியது. அல்லது உழமண்ணைக்கரைத்து அதில் வஸ்திரமாகக் கட்டிமூன்றுதரம் மடக்கி மடக்கி எரித்துச் சுத்திசெய்து கொள்ளவேண்டியது. அல்லது, முன்சொல்லியிருக்கிற சுத்திவகைகளில் இஷ்டமான ஒருவகையாகவும் செய்துகொள்ளலாம்.

சுத்திசெய்த பாஷாணக்கட்டி பலம்-௧, இதனை மண்தோலைசக்கல்லினடுவில் வைத்து அதன்மேற்மண்

கலயத்தால் மூடிச்சாணத்தால் சந்துபந்தனஞ்செய்து ஓலையால் அல்லது இலந்தைவிறகால் தீயெரிக்கவேண்டும். காற்படி பிரமதண்டின்சாற்றை ஒருபாத்திரத்தில் வைத்துக்கொண்டு தெறித்துண்டால் நனைத்துமேற்படி கலயத்தின்மீது சுண்டச் சுண்டப்பூசி வரவேண்டும். சாறெல்லாம் சுண்டினபின்பு தீயை நிறுத்திவிடவும். இந்தச்சாறு சுண்டச் சுமார் நான்குசாமம் செல்லும். குளிரஆறின பின்பு எடுக்கக் கட்டிமலர்ந்து பற்பமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧.

அனுபானம்:—பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:— சுரரோகங்கள், மேகரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

### 921. பாஷாணபற்பம் (வேறு)

சுத்திசெய்த பாஷாணம் பலம்-௧, பேரண்டத்தைப் பட்டம்போட்டுப் பொடித்ததூள் பலம்-௫, வெள்ளெருக்கம்பால் பலம்-௧.

* செய்முறை:— பேரண்டத் தூளைக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலைச் சிறுகவிட்டு வெண்ணெய்போலரைத்து மேற்படி கட்டிக்குக் கவசம் செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி மூன்று சீலைமண்செய்துலர்த்தி ௫௦-பலம் வறட்டியில் புடமிட்டு அகலைப்பிரித்து உள்ளிருக்கிற பேரண்டக்கவசத்தைப் பிரித்துத்தனியே வைத்துக் கொள்ளவும். பாஷாணப்பற்பத்தைத் தனியே வைத்துக்கொள்ளவும்.



பிரமாணம்:—அரிசியெடை-௧.

அனுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

### குறிப்பு.

மேற்படி பேரண்டக் கவசத்தைப் பொடித்து கல் வெண்ணெயிற்குழைத்துப் படர்தாமரையின்மீது பூசிவர அது உதிர்ந்துபோகும்.

### 922. பாஷாணப் பிரங்கம்.

பாஷாணம் பலம்-௧, இதனைச்சுமார் கட்டைப்பிரமாணம் துண்டுகள்செய்து உத்த சீலைத்துண்டில் தளரமுடிந்து வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு குறுகிய மண்பாண்டத்தில் பாகலிலைச்சாறுபடி-௧, மை அதன் உதவ்வரையில் இருக்கும்படியாகவிட்டு அதில் ஒருபல ம்பிளகுத் தூளைப்போட்டுக் கரைத்து முன்சொல்லிய [illegible] த்தி வைத்திருக்கிற முடிச்சைக் கயிறுகட்டித் தொங்க விடவேண்டும். இந்த முடிச்சானது பானையின் அடியிற் படாமல் இரண்டொரு அங்குலம் உயரமாகத் தொங்க [illegible] வேண்டியது. பின்பு அடுப்பின்மேலேற்றி [illegible] ரித்துச்சாறெல்லாம் சுண்டினபின்பு [illegible] முடிச்சை அவிழ்த்து [illegible] டுத்துக்கொள்ள [illegible]யாம்.

இரண்டிலை [illegible] பொருத்தும்படி [illegible] [illegible] த்தின் உட்புறம் [illegible] [illegible] பிறகு [illegible] கலயத்தில் [illegible] [illegible] பாஷாணத்துண்டுகளைப் பாவலாக [illegible]

பரப்பி அதன்மேல் சமமாயிருக்கும்படி எருக்கம்பாலைவிட்டு முன்சித்தப்படுத்தின மேல்கவசத்தை மூடி ஏழு சீலைமண்செய்துலர்த்தி அடுப்பின் மீதேற்றி மெதுவாயெரிக்கவேண்டும். கவசத்தினடி வெளுத்துப்போனால் அதை வேபதமென எரிப்பை நிறுத்தி மெதுவாக இறக்கித் தாரமாகப் பந்தாட்டி வைக்கவேண்டும். குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்துப் பதங்கத்தைச் சுரண்டிச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:--அரிசியெடை-உ-க.

அனுபானம்:--தேன், இஞ்சிச்சாறு, தயிர். மோர் ஆகியவைகளாம்.

உபயோகம்:--மாறல் சுரங்கள், முறைசுரங்கள், சுரங்கள், சூலைரோகம், வாயுரோகம் ஆகியவைகள் தீரும்.

### 923. பாஷாண செந்தூரம்.

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் பலம்-க, ஐந்தாங்காய்ச்சல் வெடியுப்பு பலம்-க.

செய்முறை:--மேற்படி இரண்டையும் தூள்செய்து ஏழுசீலைமண் செய்துலர்த்தின காசிக்குப்பியில் போட்டு வாய்க்குமாக்கல்லடைத்துச் சீலைமண்செய்து உலர்த்தியெடுத்துக்கொண்டு, ஒரு வட்டோட்டில் நாலங்குலம் மணலிட்டு நடுவில் மேற்படி குப்பியை வைத்து அக்குப்பிக்கு அரைவாசி மட்டம் மணலிட்டு உலையில் வைத்து ஓடு சிவக்கும்வரை ஊதியெடுத்து மேற்படி மருந்தைப் பொடித்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு பொடித்ததை முன்போல வேறு காசிக்குப்பியிலிட்டு ஊதியெடுக்கச்செந்தூரமாம்.



பிரமாணம்:--அரிசியெடை உ-முதல்-க-வரை.

அனுபானம்:--இஞ்சிச்சாறு, தேன், சுக்குக்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:--எல்லாவகைமுறை சுரங்கள், காசங்கள், சன்னிகள், வாயுரோகம் ஆகியவைதீரும்.

### 924. பாஷாண சூத செந்தூரம்.

சுத்திசெய்த பாஷாணம் விராகனெடை-உ, சுத்திசெய்த இரச செந்தூரம் விராகனெடை-உ, கருப்பூரவல்லி இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:--மேற்படி இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டுப் பொடித்து இரசம் மடிந்தபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமமரைத்து வில்லைசெய்து சிறு அகலிலிட்டு மேலகல் மூடி மூன்று சீலைமண்செய்துலர்த்திச் சமமானபூமியில் நாலங்குல ஆழமும், ஒருசாண் சதுரமுமுள்ள குழிதோண்டி அதில் ஒரு அங்குலம் மணல் பரப்பி அதன்மீது முன்சித்தப்படுத்தின கவசத்தை வைத்துக் குழிநிறையமணலைப்பரப்பி அதன்மீது இருபத்தைந்துபலம் வறட்டியை அடுக்கி நெருப்பிட்டு நன்றாகக்குளிர ஆறினபின்பு கவசத்தைப்பிரித்தால் செந்தூரமாகியிருக்கும். அப்படி யாகாதிருந்தால் அதிலிருக்கிற மருந்துக்குச் சமனெடை இரசத்தைச்சேர்த்து முன்போலரைத்து முன்போற்புடமிடச் செந்தூரமாகிவிடும்.

பிரமாணம்:--அரிசியெடை-உ; க.

அனுபானம்:--இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், வெல்லம்; இலேகியங்கள் ஆகியவைகளாம்.

உபயோகம்:—தாதுநஷ்டம் தீரும்; தாய்ப்புகள்பலப்படும்; சுரங்கள், முறைசுரங்கள், வாதரோகங்கள், சூலைரோகங்கள் ஆகியவை தீரும்.

925. பஞ்சபாஷாண செந்தூரம்.

சுத்திசெய்த பாஷாணம், சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த கெந்தகம், சுத்திசெய்த இரசகற்பூரம் இவை வகை-க-க்குப் பலம்-க. வெற்றிலைச்சாறு, பருத்தியிலைச்சாறு, வெள்ளறுகு சமூலச்சாறு, துளசிசமூலச்சாறு, வேலிப்பருத்தி சமூலச்சாறு, பொடுதலை சமூலச்சாறு இவை வகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி ஐந்து சரக்குகளையும் தனித்தனி அஞ்சனம்போல் பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து மறுபடியும் ஒருசாமநேரம் அரைத்து மேற்படி சாறுகளில் முறையே ஒவ்வொன்றாகச் சிறுகச் சிறுகவிட்டு நவ்வாறுசாமமரைத்து ஈரமில்லையாகச்செய்து நான்குநாள் வெயிலில் உலர்த்தி இரண்டுசட்டியை வாய்பொருந்தத்தேய்த்து கீழ்ச்சட்டியில் வெற்றிலையைப்பரப்பி அதன்மீது வெற்றிலையைப்போட்டுமூடி மேற்சட்டிமூடி ஏழுசீலைமண்செய்துலர்த்தி அடுப்பின்மீதேற்றித் தீபாக்கினியாக நான்குசாமநேரம் எரித்துக் குளிர ஆறினபின்பு கவசத்தைப்பிரித்து மேற்சட்டியில் இருப்பதைச் சுரண்டியெடுத்துக் கொள்ளவும். இதுசிவந்த செந்தூரமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-க, உ.

அநுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, நெய், விளக்கெண்ணெய், லேகியங்கள் முதலியவைகளாம்.



உபயோகம்:—ஜன்னி, சுரம், வெண்குஷ்டம், சூலை, வாயு, வாதம், மேகம், குன்மம், கிராணி, கைகால்முடக்கு, பிளவை, கண்டமாலை, அரிகரிப்பான், பெருவியாதி, தேமல், வண்டுகடி, கழல்வாதம், அண்டவாதம், குழிவாதம், வலிப்பு, கன்னப்புற்று, கபாலகுஷ்டம், பவுத்திரம், மூலைமூலம், மேகரணங்கள், கிரந்தி, அரையாப்பு, கபாலசூலை முதலியவைதீரும்.

குறிப்பு.

இது சிலசமயம் வெண்ணிறமான பதங்கமாகவும் இருக்கும். வருணம் எப்படியிருந்தபோதிலும் குணம் செய்வதில் சந்தேகமில்லை.

926. பாஷாண மெழுகு.

பாஷாணம் பலம்-க0, பசுவின்பால் படி-கூ, பருத்திக்கொட்டை பலம்-க, ஆமணக்குக்கொட்டை பலம்-க, நல்லெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—சயம்பூசின பாத்திரத்தில் பாலைவிட்டுப்பாஷாணக்கட்டியை அதிற்போட்டு அடுப்பின்மீதேற்றிப் பாலைத்துழாவிக்கொண்டிருக்கவேண்டும். பால் சுண்டிக்கெட்டியானவுடன் பாஷாணக்கட்டியை எடுத்து மெல்லிய வஸ்திரத்தினால் துடைத்துச் சுத்தி செய்து கொள்ளவேண்டும். கெட்டியான பால்கல்வாவை பூமியில் புதைத்துவிடவேண்டும். இது நஞ்சின்சுபாவமுடையதாகையால் ஒருவரும் சாப்பிடாமல் ஜாக்கிரதையாய்ப் புதைத்துவிட வேண்டியது.

மேற்கண்ட இரண்டு கொட்டைகளையும் இடித்து தூளாக்கி ஒருவஸ்திரத்தில் வைத்துப்பரப்பி மேற்

படி கட்டியை நடுவில்வைத்துப் பந்தைப்போல் சுருட்டி ஏழுசீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெடை குதிரைலத்தியில் புடமிடவேண்டும். புடம்குளிர ஆறினபின்பு கட்டியை எடுத்து முன்போல் ஒன்பதுபலம் பருத்திக்கொட்டையையும், ஒன்பதுபலம் ஆமணக்குக் கொட்டையையும் சேர்த்திடித்து முன்போல் துணியில்வைத்துப் பந்தைபோல்சுருட்டி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி முன்போல் ஆறுபங்கெடை குதிரைலத்தியில் புடமிட்டு எடுத்துக்கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்துதடவைகள் செய்துகொள்ளவேண்டியது. ஒவ்வொருதடவையும் பருத்திக்கொட்டையையும் ஆமணக்குக்கொட்டையையும் மேற்கண்ட அளவே சேர்த்துக்கொள்ளவேண்டியது. பிறகு கட்டியை எடுத்து இந்தக்கட்டி அமிழ்ந்திருக்கும்படியாக ஒருமண்பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டுக் கட்டியைப்போட்டு அடுப்பேற்றித் தீயைமெதுவாயெரித்துவரவேண்டியது. ஒருசாமம் சென்றபின்பு கட்டியை ஊசியால் குத்திப்பார்த்துக் கொண்டுவரவேண்டியது. கட்டியில் ஊசி ஊடுருவிச்சென்றால் கட்டிமெழுகாகிவிட்டதென இறக்கி எடுத்துக்கொள்ள வேண்டியது.

பிரமாணம்:—கசகசா எடை-க-உ.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, தேன், வெல்லம், சர்க்கரை ஆகியவைகளாம்.

உபயோகம்:—சுரம், சன்னி, மாறல்சுரம், முறைசுரம் ஆகியவைகள் தீரும்.



## 927. பாஷாணமெழுகு (வேறு).

முன்னேகட்டு வகைகளில் சொல்லியிருக்கிறபடி புடத்தில் கட்டின பாஷாணத்தை ஒரு துணித்துண்டில் தளரமுடிந்து ஒருகயிற்றில் கட்டிக்கொள்ளவேண்டும். ஒரு மண்பானையில் சுமார் ஒருபடி ஒன்றேகால்படி சோற்றுக்கற்றாழைச்சாற்றை விட்டு மண்தாலத்தின் நடுவில் ஐந்தாறு சன்னத்துவாரங்கள்செய்து முன் சித்தப்படுத்தின முடிச்சைச் சோற்றுக்கற்றாழைச்சாற்றின் நடுவில் தொங்கவிட்டு அந்த முடிச்சுக்கயிற்றின் நுனியை மண்தாலத்தின் நடுவிலுள்ள துவாரத்தின் உட்பக்கத்திலிருந்து மேற்பக்கம்வாங்கி ஒரு சிறுகுச்சியில் முடிந்து விடவேண்டும். பொட்டணமானது பானையின் அடியிற்படாமல் தொங்கவிடவேண்டும். இந்தத்தாலத்தால் மூடிச்சந்தில்லாமல் ஏழுசீலைமண்செய்து அடுப்பின்மேலேற்றித் தீபாக்கினியாக எரித்துவரவேண்டியது. இந்தத்துவாரங்களின் மூலமாகப்புகைவந்துகொண்டிருக்கும். புகை நின்றுவிட்டால் எரிப்பை நிறுத்திக் குளிர ஆறினபின்பு கட்டியை எடுத்தால் அது பிருதுவாக மெழுகைப்போலிருக்கும். இதனைப் பீங்கான் டப்பியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—ஒரு கசகசாமுதல் இரண்டு கசகசாவரையில்.

அநுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, லேகியம் முதலியவைகளாம்.

உபயோகம்:— முறைசுரங்கள், மாறல்சுரங்கள், சூலைரோகம், வாயுரோகம் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

இது நெருப்புக்கு ஓடாமல் இருக்கின்றபடியால் பிரியமானவர்கள் இரசவாதமுறைகளில் உபயோகித்துப் பார்க்கலாம்.

## 928. பாஷாண மாத்திரை.

பாஷாணம் பலம்-க. இதனை ஒரு சீலைத்துண்டில் கட்டி ஒருபடி பசுவின்பாலில் கிழிக்கட்டித் தொங்கவிட்டுப்பால் சுண்டினவுடன் எடுத்து அதிலுள்ள மண்டிகளை நீக்கி மறு துணித்துண்டில் முடிந்து முன்போல் ஒருபடி பசுவின்பாலில் கிழிக்கட்டித்தொங்கவிட்டு முன்போல் எரித்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப்பசுவின்பாலில் ஐந்துதடவையும், சிறுகீரைச்சாற்றில் ஒருதடவையும், பொன்னாங்காணிச்சாற்றில் ஒருதடவையும், முன்போல் கிழிக்கட்டித்தொங்கவிட்டு எரித்து எடுத்துக்கொள்ள நல்லசுத்தியாம்.

மேற்படி சுத்திசெய்த பாஷாணம் பலம்-உ, காய்ச்சுக்கட்டி பலம்-உ. இவ்விரண்டையும் தனித்தனி கல்வத்திலிட்டுப் பொடித்துப்பிறகு இரண்டையும் சேர்த்துக் கண்ணீரைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துச் சிறு உழுந்துப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை-க.

அனுபானம்:—தேன்; இஞ்சிச்சாறு; சுக்குக்கஷாயம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—மேகசூலை; மேகவாயு; இரத்தவகை, சூலைவகை பதினெட்டும் தீரும். எப்பேர்ப்பட்ட சூலையும் தீரும்.



## 929. பாஷாண மாத்திரை (வேறு)

பாஷாணம் பலம்-க; கொம்புப்பாகற்காய்-க; சிலாசத்து பலம்-க.

செய்முறை:— கொம்புப்பாகற்காயை நடுவிற்பிளந்து அதற்குள் பாஷாணத்தைச்செலுத்தி நாலினால் கட்டி அதன்மீது ஏழுசீலைமண்செய்து குழியிலிட்டு வைத்துக்கொண்டு கரிக்குப்பில் புடம்போட்டு வாட்டவேண்டும். பாகற்காயானது கருகினபதத்தில் விறுத்திக்குளிர ஆறினபின்பு கட்டியை எடுத்துப்பொடித்துக்கொள்ளவும்.

சிலாசத்தைப்பொடித்து இரண்டுபாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சிறியசட்டியிலிட்டு வைத்துப்பரத்தி அதன்மீது முன்சொன்னதுபோல் பத்திய பாஷாணத்தூளைக் கொட்டி அதன்மீது மறுபாதிச் சிலாசத்துத் தூளைக் கொட்டி மேற்சட்டி மூடி சீலைமண் செய்துலர்த்தி ஐம்பதுபலம் எருவில் புடமிட்டு ஆறினபின் இரண்டையும் எடுத்து பிரகுக்கஷாயத்தைச் சிறுகச் சிறுகவிட்டு ஒருசாமநேரமரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை, க.

அனுபானம்:—இஞ்சிச்சாறு, தேன்; பிரகுக்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சல்லிவகை காசங்கள்; புண்கள்; விரந்திகள் ஆகியவைகள் தீரும்.

## 930. கௌரிமாத்திரை.

கௌரிதேவையான அளவு. இதனைச்சிறு துண்டுகளாகச்செய்து முலைப்பாலில் ஊறவைக்க வேண்டும்.

இருபத்துநான்குமணிநேரம் சென்றபின்பு அந்தப்பாலை இறுத்துவிட்டு மறுபடியும் முன்போல் முலைப்பாலை விடவேண்டும். இருபத்துநான்குமணிநேரம் சென்றபின்பு இதனையும் இறுத்துவிடவேண்டும். இவ்விதம் இருபத்துநான்கு மணிக்கொருதடவை புதியபாலை விடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுதடவைகள் செய்யின் கௌரிசுத்தியாம்.

இவ்விதமே லிங்கத்தையும் முலைப்பாலில் ஏழுதடவை ஊறவைத்துச் சுத்திசெய்துகொள்ளவேண்டும்.

ஷை சுத்திசெய்த கௌரி விராகனெடை-௧௦, ஷை சுத்திசெய்த லிங்கம் விராகனெடை-௫. இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுப்பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரம் அரைத்து மறுநாள் முலைப்பாலைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துக் கேழ்வரகுப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-௧. ௨, ௩.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், எலுமிச்சம்பழச்சாறு ஆகியவைகளாம்.

உபயோகம்:—மலைச்சுரம், கடப்பைசுரம், முறைசுரம்முதலிய எல்லாசுரங்களும் தீரும்.

குறிப்பு.

இந்தமாத்திரையை மூன்றுநாளைக்கு உபயோகித்து நாலாம்நாள் அவுரிவேர், மிளகு, சிறுபீளை வேர் ஆகியவற்றைக்கஷாயம் செய்து இரண்டு மூன்றுநாள் சாப்பிடவும்.



## 931. சுரராஜாங்கம்.

மிளகுச்சூரணம் பங்கு-௮, சுத்திசெய்த லிங்கம் பங்கு-௮, சுத்திசெய்த பாஷாணம் அல்லது பாஷாணப்பதங்கம் பங்கு-௧.

செய்முறை:—மேற்கண்டவற்றை முலைப்பாலைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துச்சிறுபயறளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், எலுமிச்சம்பழச்சாறு ஆகியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை சுரங்களும் தீரும். முக்கியமாய் வாதசுரம், குளிர்சுரம், சளை ஆகியவை தீரும்.

## 932. பாஷாண மெழுகு.

சுத்திசெய்த பாஷாணம் விராகனெடை-௧௦, சுத்திசெய்த இரசகற்பூரம் விராகனெடை-௪, குங்குமப்பூ விராகனெடை-௨, பனங்கற்கண்டு பலம்-௨, கருஞ்செ[illegible]ன்இலைச்சாறு அல்லது சங்கன்குப்பிச்சாறு செல்லத்தக்கஅளவு.

செய்முறை:—முன்னர் எல்லாவற்றையும் தனித்தனிபொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து மேற்படிசாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் வழித்துப் பீங்கான்சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-[illegible].

அநுபானம்:—சர்க்கரை, இஞ்சிச்சாறு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:— கரப்பான்கிரந்தி, கண்டமாலை, புண்கள், கிரந்திப்புண்கட்டி ஆகியவைகள் தீரும்.

933. பாஷாண மேகப்பூச்சு மாத்திரை.

சுத்திசெய்தபாஷாணம் பலம்-௨, கற்கரடுகீக்கினற்சுண்ணாம்பு பலம்-௫, காசுக்கட்டித்தூள் பலம்-௩, இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—சுண்ணாம்பில் ஜலந்தெளித்துவிட்டு வெண்ணெய்போலானபின்பு வழித்து மேற்படி பாஷாணக்கட்டியின்மேல் எங்கும் சமமாகப்பூசி உலர்த்தி அவிபுடம் போட்டெடுத்துப் பொடித்துக்கொள்ளவும். இந்தத்தூளையும் காசுக்கட்டித் தூளையும்சேர்த்துக்கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—இதில் ஒன்றிரண்டு மாத்திரைகளை ஜலத்தில் இழைத்து அழிரணம் முதலியவற்றிற்குமேலே தடவித் துணிபோட்டுக் கட்டிவைக்கவிஷநீர்வடிந்து புண் அசடுநீங்கிவிடும். பின்புமெழுகுத்திரி போட்டால் ஆறிவிடும்.

934. பாஷாண குலாந்தகன்.

பாஷாணம் விராகனெடை-௨, பொன்னாங்காணிச்சாறுபடி-வ, பாஷாணத்தை ஒரு துணியில் கிழிக்கட்டி மேற்படி சாற்றை ஒருசிறுகலயத்திலிட்டு மேற்படி முடி-



ச்சை அதில் தொங்கவிட்டு அடுப்பேற்றி எரித்துக்கட்டியைக்கழுவி எடுத்துக்கொள்ளவேண்டும். மறுபடியும் முன்போல் மேற்படிசாற்றில் கிழிக்கட்டிச்சாறு சுண்ட எரித்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதமே இன்னும் மடக்கி மடக்கி மூன்றுதடவைசெய்து கொள்ளவும். ஆகக்கூடிய ஐந்துதடவையும் செய்தால் பாஷாணம் சுத்தியாம். மேற்கண்டபடி சுத்திசெய்த பாஷாணம் விராகனெடை-௧.

மேற்கண்டவாறே சுத்திசெய்த கௌரி விராகனெடை-௧.

மேற்கண்டவாறே சுத்திசெய்த லிங்கம் விராகனெடை-௧.

மேற்கண்டவாறே சுத்திசெய்த காந்தம் விராகனெடை-௧.

கீழ்க்கண்டபடி சுத்திசெய்த இரசம் விராகனெடை-௧.

செய்முறை:—இரசத்தையும் பாஷாணத்தையும் சேர்த்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றசரக்குகளையும் சேர்த்துப் பொன்னாங்காணிச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்து வில்லைசெய்துலர்த்தி ஒருசீலைத்துண்டைக் கையாந்தகரைச்சாற்றில் நனைத்து முன்செய்துவைத்த வில்லையின்மீது சுற்றி ஒன்றரைப்படி கொள்ளும்படியான ஒரு சட்டியில் அரைப்படி உப்பைக் கொட்டி அதன்மீது முன்கவசத்தைவைத்து, அதன்மீது ஒருபடி உப்பைக் கொட்டி மேற்சட்டிமூடிச் சீலைமண்செய்து காய்ந்தபின்பு அடு

ட்டுப்பேற்றி ௨-சாமமெரித்துக் குளிர ஆறினபின்பு மருந்தைத் தனியே எடுத்துக்கொள்ளவும். உப்பையும் தனியே யெடுத்துப்பொடித்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—மருந்தாயிருந்தால் அரிசியெடை-௧, உப்பாயிருந்தால் குன்றிமணியெடை-௧-௪.

அநுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, மோர், வெண்ணெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:—கிரந்தி, குழியானை, வாயுசூலை, வெடிசூலை, புண், விப்புருதி, கண்டமாலை, காப்பான், சிரங்கு, சர்வாங்கவாதம் இவைதீரும்.

### இதில் சேர்க்கவேண்டிய இரசசுத்தியாவது.

தேவையான இரசத்தைக் கல்வத்திற்போட்டு முழுகும்படியாகப் பொன்னாங்காணிச் சாற்றைவிட்டு அரைக்கவேண்டியது. சாறுள்ள காய்ந்துபோய்விட்டால் அதனைவாயால் அல்லது ஊதுகுழாயால் ஊதிநீக்கிவிட்டு முன்போல் பொன்னாங்காணிச்சாற்றைவிட்டு அரைக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி இருபத்தொருதடவை செய்தால் சுத்தியாம். இவ்விதம் சுத்திசெய்த இரசத்தையேமேற்கண்ட முறையில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

### 935. பாஷாண எண்ணெய்.

சுத்திசெய்த பாஷாணம் விராகனெடை-௯, கோழிமுட்டை மஞ்சட்கருபலம்-௧௮, இவ்விரண்டையும் சேர்த்து ஒருசாமமரைத்து ஒருசட்டியில் வைத்



து அடுப்பேற்றி எரித்துவந்து நீர்சுண்டி எண்ணெய்க்கும் பக்குவத்தில் சட்டியைக்கொஞ்சம் சாய்த்துவைத்தால் எண்ணெயெல்லாம் சட்டியில் கீழ்மூலைக்கு வடியும். அதனைவழித்து வேறே சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

உபயோகம்:—இதனை மேலுக்குப்பூசுவதினால் காட்பட்ட மேகவாயு, கீல்வாயு, எலும்புக்குள் சேர்ந்த வாயு ஆகியவைகள் தீரும்.

### 936 பாஷாண எண்ணெய் (வேறு)

கட்டின பாஷாணத்தைப் பீங்கானில் வைத்துப் பனியில் வைத்துவர அது தானே எண்ணெயாகி விடும்.

உபயோகம்:—இதனை மேலுக்குப் பூசுவதினால் மேற்கண்ட ரோகங்கள் தீரும். இதனை நல்லெண்ணெய், (ஆலிவ் ஆயில்) ஜய்த்தூன் எண்ணெய் ஆகியவைகளினும் கலந்து பூசலாம்.

### 937. பாஷாண எண்ணெய் (வேறு)

சுத்திசெய்த பாஷாணக்கட்டி பலம்-௧, இதனை ஒரு சிறு இரும்புச்சட்டியில் வைத்துச் சிறுதீயாக எரித்துப் பூநீற்றுத்தெளிவைச் சிறுகச்சிறுகவிட்டுச் சுருக்குக்கொடுத்துக்கொண்டுவந்தால் அது இளகி மெழுகாகிப்போம். இந்த மெழுகை முன்போல் பனியில்வைத்துவர எண்ணெயாகிவிடும்.

உபயோகம்:—இதனை மேற்பூச்சாகுவதினால் மேற்கண்டரோகங்கள் தீரும்.

## 938. பாஷாண எண்ணெய் (வேறு)

மேற்சொல்லியிருக்கிற பூநீற்றுத் தெளிநீருக்குப் பதிலாகக் கண்டங்கத்திரிச் சாம்பலின் தெளிநீரை உபயோகிப்பதனாலும் மெழுகாகிப்போம். இதனைப்பனியில் வைத்துவருவதனால் எண்ணெயாகிவிடும்.

உபயோகம்:—மேற்பூசிவர மேற்கண்டரோகங்கள் தீரும்.

## 939. பாஷாணப் பிரயோகம்.
### குஷ்டத்துக்கு.

வெள்ளைப்பாஷாணம் பலம்-க, (இது கட்டியாயிருக்கவேண்டும்.) கற்சுண்ணம் படி-உ. இந்தக்கற்சுண்ணத்தை ஐந்து பங்கு செய்துகொண்டு ஒருபங்கை இரண்டாக்கி அவ்விரண்டு பங்கில் ஒருபங்கைக் கீழே போட்டு மேற்படி பாஷாணக்கட்டியை மேலே வைத்து அதன்மேல் மறுபங்குச் சுண்ணாம்பைக்கொட்டி அதன்மேல் நன்றாகக் குமிழியெழுந்து கொதிக்கின்ற வெந்நீரை ஊற்றி ஆறினபின் பாஷாணக்கட்டியை எடுத்துக்கொள்ளவும். இப்படியே மற்ற நான்குபாகச் சுண்ணாம்பிலும் செய்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

பின்பு ஒருசேர் அப்ளாகாரத்தை ஒருபடி வெந்நீர் விட்டுக்கரைத்து ஒருபானையில் விட்டு அதன்மேல் மேற்படி பாஷாணக்கட்டியை டோலாந்தரமாகக்கட்டி அதில் கட்டி அமிழும்படி தொங்கவிட்டு மேற்படி நீர் சுண்டக்காய்ச்சி ஆறவிட்டு எடுத்துக்கழுவித் துடைத்து வைத்துக்கொள்ளவும். இவ்வாறு செய்யின் நல்ல சுத்தியாம்.



இந்தப்படி சுத்திசெய்த பாஷாணக்கட்டி ஒருபங்கும், மிளகுத்தூள் பன்னிரண்டு பங்கும்சேர்த்து நன்றாக அரைத்தெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-உ

அநுபானம்:—வெண்ணெய், நெய் முதலியவைகளாம். இவற்றில் அநுபானித்துண்டு உடனே இச்சடிச்சாதத்தில் நெய் அதிகமாகவிட்டுப் பிசைந்து மூன்று கவளம் சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—மேற்கண்டபடி இதனை ஏழுநாள் காலை மாலை இரண்டுவேளையும், அல்லது ஒருவேளை சாப்பிட்டால் குஷ்டம் முதலியவற்றின் ரணம் ஆறி அவயவம் குறைவதின்றி தோலுரிந்து சுத்தமாகிவிடும். சகல குறைநோய்களும் தீரும்.

## 940. பாஷாணப் பிரயோகம் (வேறு)

பன்னீர்விட்டு இழைத்துலர்த்தின வெண்சந்தனம் வராகனெடை-க0, சுத்திசெய்த பாஷாணம் வராகனெடை-க-உ, வெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டு இரண்டுசாமநேரமரைத்துச் சீஷாவில்பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—இந்தச்சூரணம் வராகனெடை-க, வெண்ணெய் பலம் உ-முதல்-க. இவ்விரண்டையும் கலந்து மேற்பூசி வருவதினால் படர்தாமரை, பேய்ச்சொறி, வறட்டுத்தேமல், அழுக்குத்தேமல், துர்நாற்றம்முதலியவைதீரும்.

## 941. கௌரிக்கட்டுச் சுண்ணம்.

கௌரிபலம்-க, இதனை மண்பாத்திரத்தில்வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் காற்படி துத்தியிலைச்சாற்றைச் சுறுக்கிடக்கட்டும், துத்தியிலையை அரைத்தவிழுதுபலம்-உ, மேற்படிகட்டியை இதனடுவில் வைத்துக்கவசித்துச் சுக்கான்கல்லை அரைத்து இந்தக் கவசம் கொள்ளும்படியாக மூசையும் மூடியும் செய்து வர்த்தி அதற்குள்முன் சித்தப்படுத்தின கவசத்தைவைத்து எழுசீலைமண்செய்து கவசத்தின் பத்துப்பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச்சுண்ணமாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-வ-ஐ-க-

அநுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, சுக்குக்ஷாயம், லேகியங்கள் ஆகியவைகளாம்.

உபயோகம்:— கிரந்திப்புண்கள், புண்கள், சுரரோகங்கள், முறைரோகங்கள் ஆகியவைகள்தீரும்.

## 942. கௌரி மெழுகு

கௌரித்தூள் ஒருபங்கு, நல்லபுனுகு இரண்டுபங்கு. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து அரைத்துக் கல்கார்க்குள்ள சீஷாவில் சிறுமாத்திரைகளாகச் செய்து போட்டுவைத்துக்கொண்டு அவசியமானபோது இதனைக்கால்கிமிஷநேரம் இரண்டு நாசித் துவாரத்திலும்முகரச்செய்யவேண்டும். இவ்விதம் மூன்று அல்லது இரண்டுவேளைக்கொருதடவை செய்ய நாட்பட்டசுரம், முறைசுரம், மேகசுரம் ஆகியவைகள்தீரும்.



[library stamp]

## வெள்ளைப்பாஷாணம் விஷமித்த இலட்சணம்.

வெள்ளைப்பாஷாணம் விஷமித்தால் இரத்தமூலிக்கு,கொப்புளம் சிரங்கு முதலியவைகாணும்; வேதனை அதிகரிக்கும்; கைகால் வலிக்கும்; விரல்களெல்லாம் நோங்கின் விரல்களைப்போலவும், பிசாசின் விரல்களைப்போலவும் விகாரப்பட்டிருக்கும்; முகத்தில் நானாவர்த்தியில் வீக்கம்காணும்; வாயில் எந்தவஸ்துவைப்போட்டாலும் கைப்பாயிருக்கும்; மூக்கந்தண்டு தடிப்பாயிருக்கும்; மேலுதட்டில் புண்ணுண்டாய்ப்பிக்க உபத்திரவம் சேரும்.

## கௌரிப்பாஷாணம் விஷமித்த இலட்சணம்.

கௌரிவிஷமித்தால் கெண்டைக்கால் சதையில் பருவைப்போன்ற கட்டிகள் எழும்பி அதிக உபத்திரவமுண்டாகும்; உள்ளங்காலிலும், மார்பின்பள்ளத்திலும் வீக்கங்கண்டிருந்த நோவுண்டாகும்; கடிவயிற்றில் கனத்தகட்டிகண்டு உபத்திரவமுண்டாகும்; உள்ளங்கைத்தோல்உரியும்; கண்சிவந்திருக்கும்; பெருவியாதிகுஷ்டம் முதலியவை உண்டாயிருக்கும்போது தடிப்பதுபோலத்தேகம் தடித்துத் திமிருண்டாகும்; பல்லிடையில் இரத்தம் வெளிப்படும்; இருமல், உப்பிசம், வெண்ணோக்காளம், வெளுப்பு முதலியவை யுண்டாகும்.

## 943. வெள்ளைப்பாஷாணம் விஷமித்த தற்குச்சிகிச்சை.

சலம் விராகனெடை-க, முசுமுசுக்கைவேர் விராகனெடை-க, வெள்ளைச்சர்க்கரை விராகனெடை-க,

படிக்காரம் விராகனெடை-க. இந்நான்கையும் குடிநீராகக்காய்ச்சிக் காலை மாலை இரண்டுவேளையும் தவறாமல் ஒருமண்டலம் குடித்துவரக்குணமுண்டாகும்.

### 944. கௌரிப்பாஷாணம் விஷமித்ததற்குச்சிகிச்சை.

முன்னைவேர்பலம்-வ, கறியுப்புபலம்-வ, பணங்கற்கண்டுபலம்-வ, அக்கராகாரம்பலம்-வ, இந்நான்கையும் குடிநீராகக்காய்ச்சிக் காலை மாலை இரண்டுவேளையும் தவறாமல் ஒருமண்டலம் குடித்துவரக் குணமுண்டாகும்.

### 945. பாஷாணவேகம்முரிய சிகிச்சை.

கடுக்காய்-ஒ, கொட்டைப்பாக்கு-ஒ, வேப்பஞ்சார்க்கு ஒருபிடி, கருவேப்பிலை ஒருபிடி. இவற்றில் இரண்டுபடி தண்ணீர்விட்டு அரைப்படியாகச் சுண்டக்காய்ச்சி இறுத்துக்கொடுக்கப் பாஷாணவேகம்முரியும்.

### 946 மேற்படி (வேறு)

முருங்கை சர்க்கோடு மிளகு, பூண்டு, புளி இவற்றைச்சேர்த்து மிளகுநீர்செய்து நிதம்கால்படி குடித்துச் சாதத்திலும் விட்டுச் சாப்பிட்டுவரவும். இவ்வாறு நிதம்செய்துவரச் சகலபாஷாண வீக்கமும் தீரும்.

### 947. மேற்படி (வேறு)

அருகம்வேர், அவுரிவேர், மிதிபாகல்வேர், சிறுகீரைவேர், பூவரசம்பட்டை, மிளகு இவை ஆறும் சமஞ்சேர்த்துக் கஷாயம்செய்துகொடுக்கஎட்டுவகைப்பாஷாணவேகமுந்தீரும்.



### 948. மேற்படி (வேறு.)

அவுரிவேர், சிறுகீரைவேர், மிளகு இவைவகைக்குப்பலம்-வ. இவற்றைச்சிதைத்து ஒன்றரை ஆழாக்குஜலம்வார்த்து மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி இளஞ்சூடாயிருக்கும்போது பிசைந்து வடிகட்டிப்பானம்செய்யவேண்டும். இப்படித் தினம் இரண்டு மூன்றுவேளைகள் செய்துவரின் பதினெட்டுவகைப்பாஷாணவேகமும் முரியும்.

### 949. மேற்படி (வேறு)

முட்டையின் வெள்ளைக்கருவை உள்ளுக்குக்கொடுக்கலாம்.

கடுக்காய், கறியுப்பு, அவுரிவேர் ஆகியவைகளையும் கஷாயம் செய்து குடிப்பாட்டலாம்.

### 950. பாஷாணத்தை உபயோகிக்கப் பொதுவிதி.

1. பேதிக்குக்கொடுத்து வயிற்றிலிருக்கும் மலத்தைப்போக்கிப்பிறகு பாஷாணத்தைப்பிரயோகிக்கவேண்டியது.

2. வெறும்வயிற்றில் பாஷாணம் சாப்பிடலாகாது; போஜனம்செய்து ஒன்றிரண்டுமணிநேரம் சென்றபிறகு சாப்பிடவேண்டியது.

3. முதலில் பாஷாணத்தைக் குறைந்த அளவாகக் கொடுக்கவேண்டியது.

4. பாஷாணம் சாப்பிடுகிற ரோகாளியினுடைய கண்களை நாடோறும் பரிசோதித்து வரவேண்டியது.

கண் சிவந்து தினவெடுத்தாலும், அல்லது கண்ணிமைகள் தடித்துக்கெட்டியாயிருந்தாலும் அவுஷதத்தை நிறுத்திவிட வேண்டும்.

5. பாஷாணத்தைக் கொடுத்துக்கொண்டு வரும்போது மூத்திரம் குறைந்து சிவந்திருக்குமாகில் அவுஷதத்தை நிறுத்திவிட வேண்டியது

6. இருமல் கண்டால் பாஷாணம் கொடுக்கலாகாது.

7. கண்ணிமைகள் தடித்திருப்பது போலிருந்து அவைகளில் சூடு, தினவு ஆகியவைகள் கண்டால் இந்த மருந்து உடம்பில் பற்றினதற்கு அடையாளமாம்.

8. பாஷாணத்தைக் கொடுத்துக்கொண்டு வருகிறபோது இரண்டு அல்லது மூன்றுவாரத்துக் கொருமுறை மருந்தை நிறுத்திப்பேதிக்குக்கொடுப்பது உத்தமம். இப்படிச்செய்வதில் இந்தஅவுஷதம் உடம்பில் தங்காது.

9. இந்தமருந்து குமட்டலையாவது வாந்தியையாவது உண்டுபண்ணினால் அபினிபாவன திரவத்தைச் சேர்த்துக்கொடுத்தால் மேற்படி துர்க்குணங்கள் நீங்கும்.

10. பெரியதாய் அகன்றிருக்கிறவிரணங்களுக்கு பாஷாணத்தைப்போடலாகாது.

## விண்ணப்பம்.

கடவுளினது கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் நமது நண்பர்களின் அனுக்கிரகத்தி



னாலும் அயமுதல் பாஷாணம் ஈறாகவுள்ள பலஉலோகங்கள், பலசரக்குகள் ஆகியவைகளின் பற்பல்பற்பங்கள், செந்தூரங்கள், அவைசம்பந்தமான நானாவிததைலம், சூரணம்முதலிய அநேகபாகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப்பாகங்கள் மிகவும் அருமையானவைகளென இவற்றைச்செய்து அநுபவித்துவரும் அறிவாளிகள் நேராகவும், கடிதமூலமாகவும் வேறுவகையாகவும் அடியேனைப்புகழ்ந்து களிப்படுத்திப் பெருமையாகவும் கௌரவமாகவும் ஆதரித்து வருகின்றார்கள். இக்கனவான்களின் விடாமுயற்சியே எமக்கு மேன்மேலும் ஊக்கத்தை உண்டாக்கிவருகிறபடியால் உலோகோபகாரமாகவும், ஜீவகாருண்யமாகவும் அடியேனது பரம்பரையிலும், உண்மைச் சிநேகிதரின் பரம்பரையிலும் அநுபோகசித்திபெற்றுவரும் அபூர்வமுறைகளை இந்நூலெழுதுவதினால் வைத்தியர்களுக்கும் வைத்தியரல்லாதவர்களுக்கும் சுருங்கிச்சொல்லில் உலகத்தாரெல்லோருக்கும் பெரும்பிரயோசனமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இம்முறைகளெல்லாம் அதிக இரகசியமாய்வைக்கப்பட்டுவந்தபோதிலும் அதிக ஜீவகாருண்யத்துடன் இவைவெளிப்படுத்தப்பட்டிருக்கிறன வென்பது அநுபவசாலிகளான அறிவாளிகளுக்கு நன்குவிளங்கும். அநுபோகமில்லாத சிலர் தங்கள்மனதில்தோற்றும் ஏதேனும் குறைகுற்றங்களைச் சொல்லலாம். அத்தகையினர்களும் நமது நூற்களை ஆதியோடந்தம் வரையில் கவனித்துப்பார்த்து அதன்படிசெய்வார்களாயின் அதிக சந்தோஷமடைந்து நம்மை ஆதரிப்பார்களென்பது சத்தியம்.

## 951. பஞ்சபூத செந்தூரம்.

சுத்திசெய்த லிங்கம் விராகனெடை-அ, சுத்திசெய்த இரசகர்ப்பூரம் விராகனெடை-ச, சுத்திசெய்தவீரம் விராகனெடை-உ, சுத்திசெய்த இரசசெந்தூரம் விராகனெடை-உ, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் விராகனெடை-ரு, முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளைத் தனித்தனி பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்தரைத்து முலைப்பாலைச் சிறுகச்சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துக் கல்வத்தோடு காயவைத்து ஈரமில்லாமற் காய்ந்தபின்பு பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ந-க.

அநுபானம்:—பனைவெல்லம், லேகியங்கள், விளக்கெண்ணெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:—அஷ்டகுன்மம், அண்டவாயு, குலைக்கட்டு, மேகவாயு, மகோதரம், பிலிகை, வாதம், வாயு, சுரம், சன்னி, தோஷம் ஆகிய சகல ரோகங்களும் தீரும்.

### குறிப்பு.

வைத்தியபீடத்தில் இருக்கவேண்டிய அவுஷதங்களில் இதுவுமொன்று. இதனால், அநேகம் ரோகங்கள் தீருகின்றன, ஆனால், சில சுகுமாரதேகிகளுக்குத்தொடர்ச்சியாக ஐந்துநாள் ஏழுநாள் உபயோகித்தால் கொஞ்சம் வாய்பிடிப்பதுண்டு. அத்தகையோர்கள் தினம் இரண்டுமூன்றுதடவை தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தால் வாய்பிடிக்காது; வாய்வெந்திருந்தாலும்வேக



ந்தணிந்துபோம். இம்மருந்தைக்கெண்ணெய்,தேக்கிருந்தபடி காற்பலத்தில் அல்லது அரைப்பலத்தில் இதனை அநுபானித்து உட்கொண்டுவந்தால் வாய்பிடிக்காது. இது வைத்திய இரகசியமுறைகளுள் ஒன்று. அநுபோகசாலிகள் தம் தம் யுக்திபுத்திகளினால் தகுந்த அநுபானத்தில் உபயோகித்து ஜெயம் பெறுமக்கீர்த்தி அடைவார்களென நம்புகிறோம்.

## 952. மேற்படி (வேறு.)

சுத்திசெய்த இரசம் பலம்-க, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-க, சுத்திசெய்தலிங்கம் பலம்-உ, சுத்திசெய்த மனோசிலை பலம்-உ, சுத்திசெய்த கருவங்கம்பலம்-உ, வெண்காரம்பலம்-உ, சுத்திசெய்த சவ்வெருப்பு பலம்-உ, பூநீறுபலம்-உ, பொற்றலைக்கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—வங்கத்தை உருக்கி இரசத்தில் கொட்டித்துக்கொள்ளவேண்டும். இதனை கல்வத்திலிட்டுக் கெந்தகத்தைச்சேர்த்து அரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்து இதில்சேர்த்துப்பொற்றலைக்கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து ஒரே வில்லையாகச்செய்து வெயிலில் இரண்டு மூன்றுநாள் காயவைத்து அகலில்வைத்து மேலகல்மூடி மூன்றுசீலைமண்செய்துலர்த்தி அ-அங்குலம் ஆழமும், அ-அங்குலம் சதுரமுமான ஒரு குழிதோண்டி அந்தக்குழியில் இரண்டங்குலம் மணல்போட்டு அதன்மீது கவசத்தை வைத்துக் குழிநிறைய மணலைக்கொட்டி அதன்மீது

ஐம்பதுபலம் வறட்டியை ஒடித்தடுக்கி நெருப்பிட்டு எரித்து ஆறினபின் எடுத்துக் கவசத்தைப்பிரித்து மருந்தை எடுத்துக்கல்வத்திலிட்டுப்பொடித்துப் பொற்றலைக்கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து முன்போல் வில்லைசெய்துலர்த்தி முன்போற் கவசஞ்செய்துலர்த்தி முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஒவ்வொரு சாமமரைத்து இன்னும் நான்கு புடமிட்டெடுக்கச்செந்தூரம் கருஞ்சிவப்பாயிருக்கும். சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை—௨, ௧.

அநுபானம்:—நெய், தேன், வெண்ணெய் ஆகியவைகளாம்.

உபயோகம்:—மேகநீர், பவுத்திரம், மேகவாயு, மேகஊறல், கண்ணைப்புற்று, இளைப்பு, இருமல், காசம் ஆகியவைதீரும்.

## 953. அயவீர செந்தூரம்.

சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், * கட்டின நவச்சாரம், சுத்திசெய்த அரப்பொடி இவை வகை-௧-க்குச் சமனெடை, நாயுருவிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—அயத்தைக் கல்வத்திலிட்டு வீரத்தைச் சேர்த்தரைக்க அயம் மாண்டு மடிந்துபோகும். பிறகு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்து இதி

* இதன் சுத்திமுறை நவநீதம் மூன்றாம்பாகத்தில் பார்க்க.



ற்சேர்த்தரைத்து எல்லாம் மெழுகுபதமானபின்பு நாயுருவிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து நிழலில் வைத்துக் கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்த்திப் புதுஓட்டை அடுப்பில்வைத்துச் சிறுதீயாக எரித்து இந்தமருந்தை ஓட்டில் கொட்டி இரும்புத்துடுப்பால் துழாவிக்கொண்டிருக்கவேண்டும். இதிலிருந்து புகையெழும்பும். அந்தப்புகை கண்ணிற்படாமல் ஒதுங்கியிருந்துகொண்டு வறுக்கவேண்டும். இந்த மருந்து சிவந்து வருந்தருணத்தில் அதுதான் பக்குவமென எரிப்பை நிறுத்தி அடுப்புடன் ஐந்து நிமிஷநேரம் வைத்துப்பிறகு இறக்கிக் குளிர ஆறினபின்பு எடுத்துக் கல்வத்திற்போட்டுப் பொடித்துச் சீஷாவில்வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை—௨-௧.

அநுபானம்:—பனைவெல்லம், வெண்ணெய், சக்கை அவாரக்கவிழுது, பஞ்சதீபாக்கினி லேகியம், வில்வாதி லேகியம், பறங்கிப்பட்டை லேகியம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—மேகசூலை, மேகவாயு, உதிரவாயு, வாயுக்கட்டி, சூலைக்கட்டி, அஷ்டகுன்மம், வாதம், வாயு ஆகிய எல்லா வியாதிகளும் தீரும். கபரோகங்களும் தீரும்.

## 954. ஐவகைச் செந்தூரம்.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த கௌரிப்பாஷாணம் இவை வகை-௧-க்கு வராகனெடை-௧, சிவலிங்கநாயச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:-இரசத்தையும் கெந்தகத்தையும் தோர்ந்தித்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு தனியேஎடுத்து வைத்துக்கொள்ளவும். மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து முன்மருந்தைச்சேர்த்து எல்லாம் மிஸ்ரமிக்கும்படி ஒருமணிநேரம் அரைத்துப் பிறகு மேற்படி கஷாயத்தைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து ஒரேவில்லையாகச்செய்து நன்றாயுலர்ந்தபின்பு மேலகல்மூடி எழுசீலைமண்செய்துலர்த்தி ஆறங்குல ஆழமும் சாண் சதுரமுமான ஒரு குழிதோண்டி இரண்டு விரற்கனம் மணலைப்பரப்பி அதன்மீது கவசத்தை வைத்துக்குழிநிறைய மணலைக்கொட்டிப்பரப்பி ஐம்பதுபலம் வறட்டித்தூள்களை அடுக்கிப்புடமிட்டு ஆறினபின் எடுத்துப்பொடித்து முன் கஷாயத்தைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து முன்போல் வில்லைசெய்து மணல் மன்றில் முன்போல் புடமிடவும். இவ்விதம் மூன்று புடமிட்டுப்பொடித்துக் கஷாயத்தைவிட்டு முன்போல் இரண்டுசாமமரைத்துப் வில்லைசெய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி எழுசீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் ஐம்பதுகெஜ வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாகியிருக்கும். ஆனால், கொஞ்சம் இடைகுறைந்திருக்கும். செந்தூரம் கருப்பாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧-௨.

அனுபானம்:—பனைவெல்லம், வெண்ணெய், சக்கரை அரைத்தவிழுது, இலேகியங்கள் ஆகியவைகளாம்.

உபயோகம்:—மேகசூலை, சூலை, மேகவாயு, உதிரவாயு, கட்டிசூலை, எட்டிக்குன்மம், வாதம், வாயு, சுரம் சன்னி, ஆகிய எல்லாநோய்களும் தீரும்.



## 955. பஞ்சமுக செந்தூரம்.

சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த தாளகம் இவை வகை-௧-க்கு பலம்-௧, காட்டாமணக்குப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாச் சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருசாமநேரம் கைவிடாமல் அரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரம் அரைக்கவேண்டும். அரைக்கும்போது காரம் நெடியேறுமாகையால் வயிறு நிறைய தயிர்ச்சாதம் அல்லது பாற்சாதம் சாப்பிட்டு அரைக்கவேண்டும். நான்குசாமம் அரைத்தபின்பு கையினால் இதனை உதிர்த்துத் தூள்செய்து சாயுலர்ந்தபின்பு சிறியவுடைக்கலாம் சீஷாவில் அடைத்துச் சீஷாவாய்க்குக் கற்காரமிட்டு ஒருசட்டியில் நாலங்குலம் மணலைப்பரப்பி அதனடுவில் சீஷாவைப்படுக்கவைத்துச் சீஷாவைச் சுற்றிலும் நான்கு அங்குலம் மணலைப்போட்டு மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி நூற்றைம்பது பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கவும். செந்தூரம் கருப்பாயிருக்கும்.

பிரமாணம்:—அரிசியெடை-௧-௨.

அனுபானம்:—பனைவெல்லம், தேன், லேகியவகைகள் ஆகியவைகளாம்.

உபயோகம்:—சுரம், சன்னிகள், மேகம், காசம், இருமல், குன்மம் முதலிய அநேகரோகங்கள் தீரும்.

## 956. மகாவீரிய செந்தூரம்.

சுத்திசெய்த இரசகர்ப்பூரம், சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த நவச்சாரம், சுத்திசெய்த அயம் வகைக்குப்பலம்-க, விளக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:--வீரத்தையும் அயத்தையும் சேர்த்தரைத்து அயம்மாண்டு அரைகணவுடன் மற்றசரக்குகளையும் தனித்தனிபொடித்து இதில் சேர்த்து நான்கு சாமநேரம் கைவிடாமலரைத்து எடுத்து ஒரு புதிய அகலமான அகலில் குவியலாகக்கொட்டி அது மூழ்கும்படியாக விளக்கெண்ணெயைவிட்டு ஒரு சிறிய அடுப்பின்மேலேற்றி அகலுக்கடியில் தீபம்போல் எரித்துவக்கிமேலின் மருந்துபற்றியெரிந்து ஆறினவுடனெடுத்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:--அரிசியெடை-க-உ.

அநுபானம்:--பனைவெல்லம், லேகியம் முதலியவைகளாம்.

உபயோகம்:--எந்தவகையிலும் ஆறாதரணங்கள், குழிப்புண், புரைப்புண், அழிரணம், கிரந்திப்புண்கள் முதலிய எல்லாவகை ரணங்களும் ஆறும்.

### குறிப்பு.

இது வாய்பிடிக்கும் சுபாவமுள்ளதாகையால் தேகசக்திக்குத் தகுந்தபடி மூன்று ஐந்து ஏழுவேளைகள் கொடுத்து நிறுத்திக்கொள்ளவேண்டும். இதனால், அந்தப்புண் ஆறிவிட்டால் உத்தமம்; அப்படி ஆறாதிருந்தால் இடையில் ஒருவாரம் விட்டு மறுமுறை கொடுக்கவேண்டியது. இவ்விதம் மூன்று முறைகொடுத்தால்



போதுமானது. இந்தமருந்தினால் இரணம் ஆறாவிட்டால் மற்ற மருந்தினால் அந்த இரணம் ஆறுவது அதி கஷ்டம்.

இதனால் வாய்பிடித்தால் கெந்தகத்தைப்பொடித்து ஒருவாய்குவிந்த கலயத்திலேபோட்டு அதன்மேலே ப்பொருந்தும்படியாக ஒருகலயத்தைக் கவிழ்த்து இரண்டு சீலைசெய்து அடுப்பின்மீதேற்றி மேற்கலய முழுவதையும் ஈரத்துணியைப்போட்டு மூடி அடுப்பெரித்தால் மேலே பதங்கித்திருக்கும். அதைஜலத்தில் கரைத்து வாயீறு முதலான இடங்களில் தடவினாலுமடன் அதனை ஜலத்தில் கரைத்து வாய்கொப்பளித்து வருவதனாலும் அக்கிலேகம் முறிந்துபோகும். இப்படிச்செய்துகொள்வது எல்லோருக்கும் சாத்தியமாகாது. ஆகையால் கடையில் விற்கும் கல்லைக்கெந்தகப் புளிப்பை வாங்கி மேற்கண்டபடி உபயோகித்துக்கொள்வது உத்தமம். இந்தச்செந்தூரத்தைச்சுகுமாரதேகிகளுக்கு உபயோகிக்க வேண்டியதிருந்தால் கீழ்க்கண்டபடி செய்து உபயோகிக்கவும்.

## 957. மகாவீரிய சாந்தசெந்தூரம்.

மேற்கண்டபடி செய்த செந்தூரம் பங்கு-உ, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பங்கு-க இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஒருசாமநேரமரைத்து ஒரு கைக்குட்டிபோட்டுக் குகைவாய்க்குச் சின்னிட்டு மூன்று சீலைசெய்துலர்த்தி ஆறங்குல ஆழமும், சாணகலமுள்ள குழிதோண்டி அதில் பிரண்டை விராட்டிகளைப்பரப்பி அதன்மீது முன் சித்தப்படுத்தின குகையை வைத்துக் குழிநிறையமணலைக்கொட்டி அதன்

மீது ஐம்பது அல்லது அறுபது பலம் வறட்டியை அடுக்கி வைத்துத் தீயிட்டெரித்து ஆறினபின்பு மருந்தை எடுத்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-கஉ-ந.

அனுபானம்:—மேற்கண்டவைகளேயாம்.

உபயோகம்:—மேற்கண்டவைகளேயாம்.

## குறிப்பு.

மூட்டுத்தேகியாகவும், வியாதி கடினமுள்ளதாகவுமிருந்தால் முன்கண்ட முறையை உபயோகிக்கலாம். அப்படிக்கில்லாமல் சுகுமாரதேகிகள், ஸ்திரீகள், வயது தளர்ந்தவர்கள், துர்ப்பலப்பட்டவர்கள் ஆகிய இவர்களுக்கு வை மகா வீரிய சாந்த செந்தூரத்தை உபயோகிப்பது உத்தமம். ஆனால், இது தாமதமாக வேலைசெய்தாலும் வாய்பிடிக்கும் கெடுதியில்லாததால் மிகவும் சிறந்ததாம்.

## 958. பெரிய பட்டுக்கருப்பு.

சுத்திசெய்த ஜாதிலிங்கம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த கௌரிப்பாஷாணம், சுத்திசெய்த இரசசெந்தூரம், பூநீறு வகைக்குப் பலம்-ரு, விளக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு அதைத் தனியே எடுத்துக்கொள்ளவும். மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து விளக்கெண்ணெய் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துக் காலணாகனமுள்ள சிறுபில்லைகளாகச்செய்து அரக்குநிறமுள்ள பட்டுத்துணியை ஒவ்வொரு பில்லைமீதும் மூன்று சுற்றுச்சுற்றி ஒருவட்டோட்டில் கால்சேர் கொடிவேலி வேர்ப்பட்டைத் தூளைப்பரப்பி அதன்மீது பில்லைகளை ஒன்றின்மீது ஒன்றுபடாமல் அடுக்கி மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக்கொள்ளவும். முக்கால் முழ ஆழமும் முக்கால்முழ சதுரமுமான ஒரு குழி தோண்டி அதில் இரண்டங்குல மணலைப்பரப்பி முன் சித்தப்படுத்தின கவசத்தை வைத்து அதன்மீது நாலங்குல மணலைக்கொட்டிச் சமமாகப் பரப்பிவிட்டு மீதியாயுள்ள குழியில் வறட்டியை அடுக்கி நெருப்பிட்டு மறுநாள் ஆறினபின்பு எடுத்துப் பில்லைகளைப்பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—அரிசியெடை-உ-ச.

அனுபானம்:—பனைவெல்லம், தேன், லேகியவகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரம், மேகசுரம், யானைக்கால் வீக்கம், நெறிகட்டி வாதசுரம், வயிற்றுவலி, வலிப்பு, இசிவு, ஜன்னி, பிரசவித்த அறை ஜன்னி முதலிய பலரோகங்கள் தீரும்.

## 959. சூக்ஷ்ம பட்டுக்கருப்பு.

இரசம் பலம்-உ, இதனைக்கல்வத்திலிட்டுச் சமனெடை பச்சைமஞ்சளைச் சேர்த்தரைத்துச் சமுலர்ந்த பின்பு அதை வெதுகுழாய் முதலியவைகளினால் வடித்துவிடவேண்டியது. மறுபடியும் முன்போல் அ

னடை பச்சைமஞ்சள் தூளைச்சேர்த்தரைத்து ஈரமுலர்ந்தபின்பு முன்போல் ஊறித் தூளைப்போக்கிவிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி எழுதடவைசெய்தால் இரசம் சுத்தியாகிவிடும். இவ்விதம் சுத்திசெய்த இரசம் பலம்-௧, பசும்பாலில் சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-௧. இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாகக்கருக்கிறவரையில் அரைத்துக் கொடிவேலி வேர்ப்பட்டைக் கஷாயத்தைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துக் காலணாக்கனமுள்ள சிறு பில்லைகளாகச்செய்து கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்குபுலர்ந்தபின்பு ஒவ்வொரு பில்லைகளின்மீதும் சிவப்புப்பட்டு மூன்று துண்டுகளைச்சுற்றி ஒரு ஓட்டில் பரப்பி மேலோடுமூடி மூன்று சீலைமண்செய்துலர்த்தி ஒருசாண் ஆழமும் ஒருசாண் சதுரமுமான ஒரு குழி தோண்டி அதில் இரண்டங்குலம் மணலைப்பரப்பி அதன்மீது கவசத்தைவைத்து அதன்மேல் ஆறங்குலம் மணலைக்கொட்டிப்பரப்பி மணலின்மீது எழுபது பலம் வறட்டியை ஒடித்து அடுக்கி நெருப்பிட்டு ஆறினபின் எடுத்துப்பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௧.

அநுபானம்:—பனைவெல்லம், தேன், லேகியங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரம், சன்னி, வாயு, சூலை, கிரந்தி மேகவாயு முதலிய அநேக ரோகங்கள் தீரும்.

இது சிவசத்தி செந்தூரமாகையால் அநுபான விசேஷங்களில் எல்லா வியாதிகளிலும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு வைத்தியர் கையிலும் இது அவசியம் இருக்கவேண்டியவைகள்.



## 960. சின்னப்பட்டுக்கருப்பு.

இலிங்கத்தில் பதங்கித்தெடுத்த பாதரசம் அல்லது மேற்சொல்லியிருக்கிறபடி பச்சைமஞ்சளில் சுத்திசெய்த இரசம் பலம்-௪, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-௧, விளக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டுப்பொடித்து நன்றாக மிருதுவானபின்பு விளக்கெண்ணெயைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்து வந்தால் முதலில் இரசமும் கெந்தகமும் தொந்தப்படும். பிறகு இரசம் வேறுகெந்தகம் வேறாகப்பிரிந்துபோகும். இதனை மறுபடியும் சேர்த்தரைத்து இரண்டு பில்லைகளாகச்செய்து பில்லைகளின்மீது சிவந்த பட்டுத்துணியைச்சுற்றி ஒரு அகலில் ஒருபலம் கொடிவேலி வேர்ப்பட்டைத் தூளைத்தூவி அதன்மீது இந்த பில்லைகளைவைத்து மறு அகல்மூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி முன்போல் குழியில் அனல் மறைவில்புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துப்பொடித்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௧.

அநுபானம்:—பனைவெல்லம், தேன், லேகியங்கள், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரம், வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, சூட்டுக்காலத்திலுண்டாகும் வயிற்றுவலி, மேகம், பொத்திகடி முதலிய பலவியாதிகள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்; நெய், பால், ஆட்டுக்கறிசேர்க்கவும். மீன் கருவாடு தள்ளுபடி செய்யவும்.

### குறிப்பு.

மேற்படி முறையில் இரசம் அதிகமாகவும், கெந்தகம் குறைவாகவுமிருக்கிறது; இதில் இரசமுழுவதும் மடிந்துபோகாது. ஆனால், இதனைக்கஜபாகமாக அரைத்தால் எல்லாம் மடிந்து பில்லைசெய்யவரும். ஒருதடவைசெய்து அநுபவப்பட்டுவிட்டால் மறுதடவை தவறாமல் செய்யலாம்.

### 961. அஞ்சு கருப்பு.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சீனக்காரம், வெண்காரம், வெள்ளைக்குங்கிலியம் இவை வகைக்குச் சமன்; இஞ்சிச்சாறு செலவுக்குத்தக்க அளவு.

செய்முறை:-- இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றசரக்குகளையும் சேர்த்துப்பொடித்து மேற்படி இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து பில்லைசெய்துலர்த்திப் பொடித்துச் சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:--குன்றிமணியெடை-உ-ங.

அநுபானம்:--நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:--வெள்ளை, நீர்க்குத்தல், காரிவு, மேகம் முதலியவைதீரும்.

### 962. பஞ்சசூதப்பதங்கம்.

(a) சுத்திசெய்த ஜாதிலிங்கம், சுத்திசெய்தவீரம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த இரசகற்பூரம், இவை வகைக்குப் பலம்-க, (b) காந்தம், துத்தம், அருக, சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த குதிரைப்பல் பாஷாணம், அக்கிராகாரம், கொடிவேலிவேர்ப்பட்டை இவை வகைக்கு விராகனெடை-ம, நிறுப்பு படி-க.



செய்முறை:--(a) யிலுள்ள நான்கு சரக்குகளையும் ஒன்றாகப்பொடித்துச் சேர்த்தரைத்துத் தனியே வைத்துக்கொள்ளவும். (b) யிலுள்ள சரக்குகளைத் தனித்தனிபொடித்து எல்லாவற்றையும் சேர்த்துப் பத்தியங்காகச் செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு சட்டியில் ஒருபடி உப்பைப் பொடித்துப்போட்டு அதனடுவில் ஐந்துகுழிகள் குழித்து வைத்துக்கொள்க. ஒரு குழியில் (b) யின் ஒருபாகத்தைப்போட்டு அதன்மீது (a) யிலுள்ளதை ஐந்துபாகமாக்கி ஒருபாகத்தைப்போட்டு அதன்மீது (b) யிலுள்ள ஒருபாகத்தைப்போட்டுமூடிவிடவேண்டும். இவ்விதமே (a) யிலுள்ள நான்கு பாகங்களுக்கும் (b) யிலுள்ள எட்டுப்பாகங்களையும் கீழ்மேலிட்டு வைத்து மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி அடுப்பின்மீதேற்றிக் கமலாக்கினி, தீபாக்கினி, காடாக்கினி ஆகியமுத்தீயும் நான்கு சாமநேரம் எரித்துக்குளிர ஆறினபின்பு எடுக்கப் பதங்கம் ஏறியிருக்கும். இந்தப்பதங்கத்தை வழித்துக்கொண்டு சட்டியிலுள்ள முன் உப்பைப்பொடித்து முன் சட்டியிற்போட்டு முன் பதங்கத்தையும் அதன்மேல்போட்டு மேற்சட்டிமூடி ஐந்துசீலைமண்செய்துலர்த்தி அடுப்பேற்றி முன்போல் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினியாக முத்தீயும் நான்கு சாமநேரம்

எரித்துக்குளிர ஆறினபின்பு எடுத்துப்பதங்கத்தை வழித்துக்கொள்ளவும். பதங்கமானது தூயவெள்ளையாயிருக்கும். இதனை ஒரு சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-க. முதல் உ-வரையில்.

அநுபானம்:—பனைவெல்லம், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—சூலைக்கட்டு, மேகவாயு, அண்டவாயு, குன்மம், பீலிகை, வலிப்பு, வாதம் எண்பது, வலிப்பு, காசம் எட்டு, கபரோகம் தொண்ணூற்றாறு, புண், புரை, அரையாப்பு, கிரந்திரணம், கடிதடி, சிட்டையூறல் ஆகியவை தீரும்.

பத்தியம்:—புளி, புகை, வாயுபதார்த்தம், பழையசாதம் முதலியவை தள்ளவும்.

## குறிப்பு.

இந்தமருந்தை வாய்பிடிக்கிறமட்டும் கொடுக்கவேண்டும். வாய்பிடித்தால் நிறுத்திவிடவும். இது சற்று முரட்டுக்குணமுள்ள மருந்து. இவ்விதமருந்தும் வைத்தியர்கள் கையில் அவசியம் வேண்டியதாயிருக்கிறது. சில முரட்டுத்தேகிகளுக்கும், சில சண்டிவியாதிகளுக்கும் சுகமானமருந்துகளை உபயோகப்படுத்துவதனால் அதிகப்பிரயோசனமடையாமல் வைத்தியத்தொழிலுக்கு ஒரு இழிவை உண்டாக்க ஏதுவாகிறது. நாம் நம்முடைய அநுபவத்தில் சண்டிவியாதிகளுக்குச் சுகமானமருந்துகளை உபயோகித்து எவ்விதபிரயோசனத்தையும் அடையாமல் மேற்கண்டமருந்துகளை உ-



பயோகிக்கக்கடமைப்பட்டு அவ்விதமேஉபயோகித்துப் பூரணசுகமுண்டாயிருக்கிறது. எந்தமருந்தானாலும் தேகசுபாவத்தை நிதானித்து உபயோகப்படுத்தினால் எவ்வித துர்க்குணமுமின்றி நற்குணத்தையே காணலாம். இவைகளெல்லாம் அநுபவசாலிகளான அறிவாளிகளுக்குத் தம் தம் அநுபவத்தில் நன்கு புலப்பட்டிக்கும். ஆகையால் இதைப்பற்றி விரித்துச்சொல்லாமல் சுருக்கிச்சொன்னதே போதுமானது.

## 963. பஞ்சசூத மெழுகு.

சுத்திசெய்த இரசம் வராகனெடை-உ, சுத்திசெய்த வீரம் வராகனெடை-உ, சுத்திசெய்த இரசகற்பூரம் வராகனெடை-உ, பச்சைக்கற்பூரம் வராகனெடை-உ, சூடன் வராகனெடை-ரு.

செய்முறை:—இரசத்தையும் வீரத்தையும் தொந்தித்து இரசம் மடிந்தபின்பு மற்றசரக்குகளையும் சேர்த்தரைத்து மெழுகுபதத்தில் எடுத்துப்பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-க-உ.

அநுபானம்:—பனைவெல்லம், வெண்ணெய், சுக்கை அரைத்தவிழுது, இலேகியங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—சன்னி, சைத்தியம், விஷபேதி, விஷபேதியிற்காணும் கால்கைக்குளிர்ச்சி, தேகக்குளிர்ச்சி, விஷபேதியிற்காணும் இசிவு, சுருக்கிச்சொல்லில் விஷபேதி சம்பந்தமான எல்லா துர்க்குணங்களும் நீங்கும். தேகம் சில்லிட்டுப்போய் விட்டபோதிலும், நாடி அடங்கிவிட்டபோதிலும் இதனை உபயோகித்தால்

தேகத்தில் சூடுண்டாகி நாடிநடை உண்டாகும். இது விஷபேதிக்கு எடுத்தமருந்து. பிரசவத்திற்குப் பின்காணும் சன்னி, சைத்தியம் முதலியவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

## 964. பஞ்சசூத மெழுகு.

சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த இரசம் இவைவகைக்கு வராகனெடை-க, முருங்கைப்பட்டைச்சாறு, தேன், முலைப்பால் இம்மூன்றையும் சமனளவாகச் சேர்த்த கலவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்பசரக்குகளையும் சேர்த்தரைத்து ஒருபுதியஓட்டில் வைத்துத் தீபம்போல் எரித்து முன்கலவையைச் சிறுகச்சிறுக விட்டுவந்து மெழுகுபதத்தில் இறக்கி ஆறவைத்துப் பீங்கான்டப்பியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:— அரிசியெடை-க-உ.

அனுபானம்:— பனைவெல்லம், வெண்ணெய், முதலியவைகளாம்.

உபயோகம்:— விஷபேதி, சுரம், சன்னி, தோஷம் ஆகியவைதீரும்.

## 965. கோரோசனை மெழுகு.

சுத்திசெய்தஇலிங்கம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த வீரம், பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, காந்தசெந்தூரம், அல்லது சுத்திசெய்தகாந்



தம், பொரித்தவெண்காரம், நாளிசபத்திரி; அக்கிரகாரம் இவற்றின் சூரணம் வகைக்கு வராகனெடை-உ, இலவங்கப்பட்டைச்சூரணம் வராகனெடை-அ, முலைப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாவற்றையும் சேர்த்துப்பொடித்துச்சூரணங்களையும் சேர்த்து அரைத்து முலைப்பாலைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் எடுத்துச்சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-க.

அனுபானம்:—பனைவெல்லம், வெண்ணெய், ஆகியவைகளாம். ஆனால், கீழ்க்காணும் அனுபானலேகியத்துடன் உபயோகித்துவந்தால் வாய்பிடிக்கிறதில்லை; வியாதிகளும் செம்மையாகக் குணப்படுகின்றன. ஆகையால், மற்றஅனுபானங்களுடன் உபயோகிக்கலாமெனினும், கீழ்ச்சொல்லப்படும்அனுபானமே இதற்கு அனுகூலமானதென அனுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

உபயோகம்:—பக்ஷவாதம், குடல்வாதம், கீல்வாதம், முகவாதம், சந்துவாதம், கால்வாதம்; நரித்தலைவாதம், ஒடுவாதம் முதலிய எல்லாவகை வாதங்களும், சூலை, அஸ்திக்குடைச்சல் முதலிய அநேகரோகங்களும்தீரும். இதன்சிறந்தகுணத்தை அனுபவத்தால் நிச்சயித்துக் கொள்ளலாம்.

### அனுபான லேகியம்.

கொம்புசுக்கிக்கின சூரத்துநிலஆவாரையிலை பலம்-ரு, கொத்துமல்லிபலம்-ரு; காம்புநீக்கிய ரோஜா

ப்பூ பலம்-௫, பறங்கிச்சக்கை, சோம்பு, சீரகம் வகைக்குப்பலம்-௧, மேல்தோல்சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட்கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த்தோல், ஏலரிசி இவற்றின் சூரணம் வகைக்குப்பலம்-௩, பனைவெல்லம் பலம்-௪௰, தேன்பலம்-௨௰, நெய்பலம்-௨௰, பசுவின்பால்படி-௨.

செய்முறை:—மேற்கண்ட சூரணங்களை யெல்லாமொன்றாகக்கலந்து வைத்துக்கொள்க. வெல்லத்தை நறுக்கி அரைப்படிஜலத்தைவிட்டுக் காய்ச்சிக்கரைந்த பின்பு வஸ்திரத்தில் வடிகட்டித் திப்பியை நீக்கிவிட வேண்டும். இந்தப்பாகுடன் பாலையும் தேனையும் சேர்த்துக்காய்ச்சித்தந்து பதத்தில் மேற்படி சூரணங்களைக் கொட்டிக்கிளறி நெய்யையும்விட்டு நன்றாகக்கிளறி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—இரண்டு விராகனெடைமுதல் நான்கு விராகனெடை வரையில். பேதியாகவேண்டுமானால் ஆறுவிராகனெடைமுதல் பத்துவிராகனெடை வரையில் சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—மலபந்தம், மலச்சிக்கல், ஆகியவைகள்நீங்கும். பழமலங்களைநீக்கிவாயுக்களைக்கண்டிக்கும். மேற்சொல்லியிருக்கிற கோரோசனைமெழுக்கை உபயோகிக்கும்போது இதை அநுபானமாக உபயோகித்துவந்தால் வாய்கட்டுதல் முதலிய துர்க்குணங்கள் ஒன்றுமிரா. வியாதியைச் சீக்கிரம் குணப்படுத்தும்.

### 966. பச்சைக்கற்பூர மெழுகு.

உயர்ந்தமலாக்காய்ப்பச்சைக் கற்பூரம் விராகனெடை-௧, குங்குமப்பூ விராகனெடை-௨, சுத்திசெய்தலிங்கம் விராகனெடை-௩, சுத்திசெய்த இரசகற்பூரம் விராகனெடை-௧௮, இரசசெந்தூரம்விராகனெடை-௧௮, தேன் செல்லத்தக்க அளவு.



செய்முறை:—மேற்கண்ட ஒவ்வொரு சரக்கையும் தனித்தனிபொடித்து வைத்துக்கொள்ளவேண்டியது. குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டுக் கொஞ்சம்பாலை அல்லது வெந்நீரைவிட்டு வெண்ணெய்போலாகிறவரையிலரைத்து மற்றமருந்துகளையும் சேர்த்தரைத்துத் தேனைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து இரண்டொருநாள் வெயிலில் வைத்துப்பிறகு பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௰-௧.

அநுபானம்:—பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய், வேப்பங்கொழுந்தை அரைத்தவிழுது, சுக்கை அரைத்தவிழுது ஆகியவைகளாம்.

உபயோகம்:—சூதகக்கட்டு, சூதகவாயு, அக்கிரமசூதகம், சூதகசன்னிமுதலிய சூதக சம்பந்தமானவியாதிகளெல்லாம் தீரும். பிரசவத்திற்குப்பின்காணும் அழுக்குகட்டுப்பட்டிருத்தல், அதனாலுண்டாகும் சுரம், சன்னி முதலிய பல ரோகங்கள்தீரும்; வாயுரோகங்கள்தீரும். இது, ஸ்திரீகளின் பெரும்பான்மையான வியாதிகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறபடியால் இதற்கு ஸ்திரீசகாயன் என்று மறுபெயருமுண்டு.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

### 967. விஷமெழுகு.

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை-௨, சுத்திசெய்த இரசம் விராகனெடை-௨, சுத்தி

செய்தகெந்தகம் விராகனெடை-உ; சுத்திசெய்த மனோசிலை விராகனெடை-உ; பெருங்காயம் விராகனெடை-உ; மேல்தோல்சீவினசுக்குத்தூள் விராகனெடை-உ; வேப்பமுத்துப்பருப்பு விராகனெடை-உ, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-கஉ; வெள்ளெருக்கம்பால் அல்லது சாதா எருக்கம்பால் செல்லத்தக்கஅளவு; வேப்பெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் பாஷாணத்தையும் தொந்தித்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்றசரக்குகளையும் சேர்த்தரைத்து எல்லாம்மிஸ்ரமானபின்பு மேற்படிபாலைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துப் பிறகு வேப்பெண்ணெயைச் சிறுகச்சிறுகவிட்டு இரண்டுசாமமரைத்து மெழுகுபதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ரு.

அநுபானம்:—வெற்றிலையை அரைத்தவிழுது விராகனெடை-க; சுக்கைஅரைத்த விழுது விராகனெடை-க.

உபயோகம்:—கல்லபாம்புவிஷம்; விரியன்விஷம், கட்டுவக்காலிவிஷம், மண்டலிவிஷம், எலிகடிவிஷம்; பேய்நாய்கடி விஷம்; நாய்நரி ஆகியவற்றின்கடிவிஷம் முதலிய அநேக விஷங்கள் தீரும்.

விஷம்தலைக்கேறி மூர்க்கமாயிருந்தால் இரண்டளவு கொடுக்கவும். பேதியாகும். ஒருவேளைபேதி அதிகமானால் சாதத்தில் மோரைவிட்டுக்கரைத்து அதனைக்குடிப்பாட்டவும். இதனைமூன்றுநாள் தொடர்ச்சியாகக்கொடுத்துவரவேண்டியது. சமயோசிதம்போல் ஒவ்

வொருவேளை காலையில் மாத்திரம் கொடுத்தால்போது மானது. விஷம்கடுமையாயிருந்தால் உப்பில்லாப்பத்தியம்வைக்கவும். விஷம் காட்பட்டதாயிருந்து சிலகாலங்கொடுக்கவேண்டியிருந்தால் தேகத்திற்குத்தகுந்தபடி குறைந்த அளவாக மருந்தைக்கொடுத்து இச்சாபத்தியமாகவைக்கவேண்டியது. தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக்குத்தகுந்தபடி செய்வதோ வைத்தியர்களின் யுக்திபுத்திக்கு ஏற்றது. விஷம் தலைக்கேறி பிரக்ஞைதப்பியிருந்தால் கருப்புவிழி எந்தப்பக்கத்தில் ஒதுங்கியிருக்கிறதோ அந்தப்பக்கத்தில்உயிர்இருக்கும். அப்போது பிரம்பினால் அடித்தால் உடம்பு துடிக்கும். இவ்விதம் பரீக்ஷித்துபார்த்து உச்சியை ஒருபேனாகத்தியால் கீறி மெழுகில் ஒரு குன்றிமணியளவு நட்டி அதில்வைத்துத் தேய்த்தால் பிரக்ஞைவந்துவிடும். விரியன் முதலியவை கடித்திருந்தால் கடித்தவிடத்தைக் கீறி மெழுகைஅதில் வைத்து மேலே ஊறான் இலை அல்லது வெற்றிலையை வைத்துக்கட்டவும். உள்ளுக்கும் மூன்றுநாள்மருந்து கொடுத்து உப்பில்லாப்பத்தியம் வைக்கவும். தேள்கொட்டுக்கும் இம்மெழுகைக்கொட்டுவாயில் வைத்துத்தேய்த்தால் உடனே விஷம்தீரும்.

### 968. ஷண்முக மெழுகு.

சுத்திசெய்த வீரம் விராகனெடை-க; சுத்திசெய்த இரசகற்பூரம் விராகனெடை-க; சுத்திசெய்த இலிங்கம் விராகனெடை-க; மேல்தோல்சீவின சுக்குத்தூள் விராகனெடை-உ; இராம்புத்தூள் விராகனெடை-உ; ஏலரிசித்தூள் விராகனெடை-உ; தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட மூன்று சரக்குகளையும் தனித்தனிபொடித்து ஒன்றாகச்சேர்த்து மற்றச்சூரணங்களையும் அதிற்கலந்து ஒருமணிநேரம் கைவிடாமலரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு தேனைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் பீங்கான்சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-௨.

அநுபானம்:—பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய், சுக்கை யரைத்தவிழுது ஆகியவைகளாம்.

உபயோகம்:—சூலை, சந்நுவாதம், அங்குலிவாதம், பித்தவாதம், சர்வாங்கவாதம் முதலிய பலவகைவாதரோகங்கள்தீரும். சுரம், சன்னி முதலியவைகளும் தீரும்.

969 விஷாமிர்த மை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த கெந்தகம், சுத்திசெய்தமிர்விஷம், சுத்திசெய்தசுருகாரி, சுத்திசெய்த காட்டுவெண்காரம்; கருஞ்சீரகம், பெருங்காயம், சுத்திசெய்தயமிறுகிலை, இந்தப்புவகைக்கு விராகனெடை-கவ. சுத்திசெய்த வாளப்பருப்பு விராகனெடை-கஉ௲: உத்தாமணிச்சமூலச்சாறு செல்லத்தக்கஅளவு. தேங்காய் ஓட்டுக்கரி விராகனெடை-க௦, பனைவெல்லம் பலம்-க௦, தேங்காய்ப்பால் செல்லத்தக்கஅளவு.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு தனியேஎடுத்துவைத்துக்கொள்ளவேண்டும். பாக்கி எட்டுச்சரக்கையும் தனித்தனி பொடித்தப்பிறகு முன் அரைத்து



வைத்திருக்கிறபொடியையும், இந்தஎட்டுச்சரக்கின்பொடியையும் ஒன்றாகச்சேர்த்து இரண்டுசாமநேரம் கைவிடாமலரைக்கவேண்டும். இவ்விதம் அரைப்பதனால் பல சிறந்த குணங்கள் உண்டாகின்றன. பிறகு உத்தாமணிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரம் அரைக்கவேண்டியது. தேங்காயோட்டின் கரியைத்தனியேபொடித்து வஸ்திரகாயம் செய்ததூள் க௦—விராகனெடை நிறுத்தெடுத்துக் கல்வத்திலிருக்கிற மருந்தில் சிறுகச்சிறுகத்தாவி அரைக்கவேண்டியது. அந்தத்தூளெல்லாம் ஆனபின்பு பனைவெல்லத்தை இடித்துத்தூளாக்கிக்கொஞ்சம் ஜலத்தைவார்த்து அடுப்பேற்றிக்காய்ச்சி இரண்டொரு கொதிவந்தவுடன் துணியில்வடிகட்டித்திப்பியை நீக்கிவிட்டு அடுப்பேற்றிப்பாகைக் காய்ச்சிக்கெட்டிப்பதத்தில் இறக்கி ஆறவைத்து இந்தப்பாகைக் கல்வத்திலிருக்கிற மருந்தில் சிறுகச்சிறுகவார்த்து அரைக்கவேண்டும். இந்தப்பாகெல்லாம் சென்றபின்பு தேங்காய்த் தனிப்பால் சுமார் அரைப்படிக்குக்குறையாமல் பிழிந்தெடுத்து மேற்படி கல்வத்திலிருக்கிற மருந்தில் சிறுகச்சிறுகவார்த்து அரைக்கவேண்டும். இந்தப்பாலெல்லாம் சென்றபின்பு பீங்கான் சிமிழிலடைத்துப்பத்திரப்படுத்தவேண்டும்.

குறிப்பு.

இதற்கு [illegible] மை என்று பிரசித்தமான பெயர் உண்டு. சில [illegible] தேங்காய் ஓட்டின்கரி [illegible] பனைவெல்லம் [illegible] விராகனெடை [illegible] பெரியோர் ஒன்று எட்டும் [illegible] தேங்காய் ஓட்டின்கரி, கரியின் [illegible] எடை முதலியவைக பனைவெல்லம் [illegible]

லை எழுதியிருக்கின்றோம். பத்தியபலம் பனைவெல்லத்தைச்சேர்த்தால் தான் சாதாரணமாக எல்லோருக்கும் உபயோகித்துவரலாம். வெகுட்டல், குமட்டல் ஆகியவைகள் உண்டாகா. இது அநேக அநுபவவைத்தியர்களுக்குத் தெரிந்தேயிருக்கும். ஆயினும் நமது அநுபவப்படியும், நமது பரம்பரையார்களின் அநுபவப்படியும் எழுதியிருக்கின்றோம். அநேகம் சிறந்த மருந்துகளில் இதுவும் ஒன்று. இது எல்லாவியாதிகளிலும் உபயோகத்துக்கைகண்டமருந்து. இதன் அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் கௌசிகர் மை என்னும் ஒரு சிறிய புத்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆனால், அதில் சொல்லியிருக்கிற முறைப்படி எழுதாமல் அநுபவமுறைப்படி எழுதியிருப்பதால் இதில் எவ்வித துர்க்குணம், துர்லக்ஷணம் ஆகியவைகள் இல்லை. எவ்வித பயமுமில்லாமல் தேகசக்தி, தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்த பிரமாணப்படி உபயோகிக்கலாம்.

பிரமாணம்:—அரைக்குன்றிமணியெடை முதல் மூன்று குன்றிமணியெடைவரையில் உபயோகிக்கலாம். பேதியாகவேண்டுமானால் தேகசக்திக்குத் தகுந்தபடி நான்கு குன்றிமணிவரையில் கொடுக்கலாம்.

அநுபானம்:—பனைவெல்லம், வாழைப்பழம், வெண்ணெய், சுக்கை அரைத்தவிழுது முதலியவைகளாம். இதன் அநுபானத்தை விபரமாகத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் கௌசிகர் மை என்னும் சிறிய புத்தகத்தைப்பார்த்துத் தெரிந்துகொள்ளவும். இங்கெழுதுவதானால் இச்சிறிய கிரந்தம் மிகவிரிவெய்துமெனப்பயந்து குறிப்பாகக்காட்டியிருக்கின்றோம்.



உபயோகம்:—எண்பதுவாதம், நாற்பதுபித்தம், இருபது ஐயம் ஆகியரோகங்களும், பலவகைசுரங்களும், பதின்மூன்றுவகை சன்னியும், எழுவகைதோஷங்களும், அஷ்டகுன்மங்களும், பதினெட்டு சூலைகளும், உதிரசம்பந்தமான எல்லாவியாதிகளும் தீரும். நல்லபாம்புவிஷம், பதினெட்டுவகை எலிவிஷங்கள், பேய்நாய்கடி, ஓநாய்கடி, நரிகடி.விஷம், பூரான்கடிவிஷம் முதலிய எல்லாவிஷங்களும் தீரும். விஷங்களைத்தீர்க்கும் சக்தி இதற்கு அதிகமாக இருப்பதால் இதற்கு விஷதீர்த்தமெனப் பெயரிடப்பட்டிருக்கிறது. அநுபோகசாலிகள் இதன் சிறந்தகுணத்தைத் தெரிந்திருப்பார்களாகையால் இங்கு அதிகமாய் எழுதாது சுருக்கமாகக்காட்டியிருக்கின்றோம். அபாயகரமான நேரங்களில் இது நல்ல உதவிசெய்யக்கூடியதாகையால் சிறந்தவைத்தியர்களிடத்தில் எப்போதும் கைவசமாயிருக்கவேண்டியது.

பத்தியம்:—வியாதி, தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்தவேண்டியது.

### 970. இரசமெழுகு.

சுத்திசெய்த இரசம் விராகனெடை-க, சுத்திசெய்த [illegible] விராகனெடை-க, சுத்திசெய்த வீரம் விராகனெடை-க, சுத்திசெய்த மனோசிலை விராகனெடை-க, சுத்திசெய்த இரசகற்பூரம் விராகனெடை-க, சுத்திசெய்த இலிங்கம் விராகனெடை-க, பொரித்த [illegible] விராகனெடை-க, பொரித்த வெண்காரம் விராகனெடை-க, [illegible] விராகனெடை-க, [illegible] விராகனெடை-க, [illegible] முருங்கைப்பட்டை முலைப்பால் [illegible]

சாறு, தேன் இவ்விரண்டும் சமமாகக்கலந்து செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து கல்ருகக்கருத்தபின்பு வீரத்தைச் சேர்த்தரைக்கவேண்டும். மற்ற சரக்குகளையும் தனித்தனிபொடித்துக் கல்வத்திலிருக்கிற மருந்துடன் சேர்த்துக்கைவிடாமல் இரண்டுமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு இதனையெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு மருந்து அமிழ்ந்திருக்கும்படி முலைப்பாலை விடவேண்டும். விட்ட முலைப்பால் சுவறினபின்பு மறுபடியும் முன்போல முலைப்பாலைவிடவேண்டும். இதுவுஞ்சுவறினவுடன் மூன்றுநாட்களையும் விட்டுச் சுவறினபின்பு எடுத்துக்கல்வத்திலிட்டுமுருங்கைப்பட்டைச்சாற்றையும் தேனையும் கலந்துவைத்திருக்கிற திரவத்தைச் சிறுகச் சிறுகவார்த்து மூன்றுசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨, முதல் ௩-வரையில்.

அநுபானம்:—பனைவெல்லம் அக்கரைத்த விழுது, வெண்ணெய், சர்க்கரை, லேகியங்கள் ஆகியவைகளாம்.

உபயோகம்:—சூலை, வாயு, மேகப்புண், வயிற்றுவலி, பாரிசவாயு, முடக்குவாதம், அண்டவாதம், ஆனைக்கால் வீக்கம், ஆனைக்கால் வீக்கசுரம் ஆகியவைகள் தீரும்.



பத்தியம்:—வியாதிபலம் தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடியும் உப்புப்புளியைச் சேர்த்தும்சேர்க்காமலும் பத்தியம் வைக்கவும்.

## 971. கவசமெழுகு.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கருவங்கம், சுத்திசெய்த காரீ, சுத்திசெய்த சிருவிஷம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், பொரித்த படிக்காரம், சுத்திசெய்த தீமுருகுப்பாஷாணம், காந்தம், பொரித்த அத்தம், பொரித்த துருசு, இந்துப்பு, சுத்திசெய்த கெந்தகம், முசுறுமுட்டை, மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, வால்மிளகு, தோலுரித்த வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், பொரித்த பெருங்காயம், பொரித்த வெண்காரம் இவை வகை-௧-க்கு வராகனெடை-௧, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு பலம்-௨௰, உத்தாமணிச்சாறு செல்லத்தக்க அளவு, தேங்காய்ப்பால் செல்லத்தக்க அளவு, கொட்டைகச்சிக் கரித்தூள் பலம்-௧, பனைவெல்லம் பலம்-௧௦.

செய்முறை:—இரசத்தையும் வங்கத்தையும்தொந்தித்துக் கெந்தகத்தைச் சேர்த்தரைத்துத் தனியே எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். தூள் செய்யவேண்டிய சரக்குகளைத் தூள்செய்து மேற்சொல்லியவெடை நிறுத்தெடுத்துக்கொள்ளவேண்டும். இலிங்கம் முதலியவைகளைத் தனித்தனி பொடித்துத் தனித்தனி எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக்கல்வத்திற்போட்டு இரண்டு சாமநேரம் கைவிடாமலரைத்து விட்டுவிடவேண்டும். மறுநாள் உத்தாமணி

ச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரம் அரைத்து விட்டுவிடவேண்டும். சாறு உலர்ந்தபிறகு மறுநாட்காலையிலும் முன்போலவே உத்தாமணிச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரம் அரைக்கவேண்டும். சாறு உலர உலர மறுபடியும் இரண்டு நாட்காலையில் இரண்டு சாமநேரமரைத்து நிழலில் காற்றோட்ட வைத்து சாறுலர்ந்தபின்பு தேங்காய் ஓட்டின் கரியைச் சேர்த்துத் தேங்காய்ப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து மூன்று சாமநேரம் தொடர்ச்சியாக அரைக்கவேண்டியது. பனைவெல்லத்தை நறுக்கிக்கொஞ்சம் ஜலத்திற் போட்டுக் காய்ச்சி வடிகட்டித் திப்பியை நீக்கி மறுபடியும் காய்ச்சிக் கெட்டிப்பாகுபதத்தில் இறக்கி ஆறினபின்பு இதனைச் சிறுகச் சிறுகவிட்டு மேற்படி மருந்தை அரைக்கவேண்டும். பாகெல்லாம் சென்றபின்பு மெழுகு பதத்தில் எடுத்துப்பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

## குறிப்பு.

இந்த முறையில் சிலர் பனைவெல்லம் முதலியவைகளைக் குறைத்துச்செய்வதுண்டு. ஆனால், அநுபவத்தில் மருந்துகளின் சமனெடை பனைவெல்லத்தைச்சேர்க்கவேண்டியது சாஸ்திரக்கிரமம். இப்படிச் சேர்த்துச்செய்வதனால் அநேக நன்மைகளுக்குக் காரணமாயிருப்பதையும் அநுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இதனைப்பாலர் முதல் விருத்தர்வரையில் எல்லோருக்கும், கருமாதேகிகள், ஸ்திரீகள் ஆகியவர்களுக்கும் உபயோகிக்கலாம்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧ முதல் ௪-வரை. இன்னும்தேகபலம், வியாதிபலம் முதலியவைக



ளுக்குத் தகுந்தபடியும் பிரமாணத்தைக்கொஞ்சம் அதிகப்படுத்தியும் கொடுக்கலாம். இதன் பிரமாணத்தை அநுபவத்தில் அவரவர்கள் தாமே தெரிந்துகொள்ளக்கூடும்.

அநுபானமும், உபயோகமும்:—வெந்நீரில் காலை மாலை இரண்டுவேளையும் மூன்றுநாள் பிரமாணப்படி அநுபானித்துண்ண சன்னிபதின்மூன்றும் தீரும்.

இஞ்சிச்சாறு விராகனெடை-௧, தேன்விராகனெடை-௧, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மருந்தை அநுபானித்துட்கொள்ளவாத சுரம் தீரும்.

இஞ்சிச்சுரசம் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்துப் பிரமாணப்படி அநுபானித்துண்ண, பித்தசுரம் தீரும்.

வறுத்துச்சூரணித்த அரிசித்திப்பிலித்தூள் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, இவ்விரண்டையும்மிஸ்ரமித்துப் பிரமாணப்படி அநுபானித்துட்கொள்ள கபசுரம் தீரும்.

கழுதைப்பால் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, இவ்விரண்டையும் மிஸ்ரமித்துப் பிரமாணப்படி அநுபானித்துண்ணப்பயித்தியசன்னி தீரும்.

குமட்டிக்காய் உப்பு விராகனெடை-௧, சிற்றாமணக்கெண்ணெய் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, இம்மூன்றையும் சேர்த்தரைத்து இதில் மேற்படி மருந்தை அநுபானித்துட்கொள்ள பாண்டு, சோகை, காமாலை, பெருவயிறு ஆகியவைதீரும்.

## குறிப்பு.

குமட்டிக்காய் உப்பினால் சிலருக்கு வயிற்றுப்பிடிக்கல்; வயிற்றுவலி ஆகியவை உண்டாகும். அத்தகையினர்களுக்கு விளக்கெண்ணெயைக்கொஞ்சம் அதிகப்படுத்திக்கொடுத்தால் அவ்வித தூர்க்குணம் நீங்கிப்போகும். வியாதிபலம்; தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம்போல் மேற்படி உப்பை அதிகப்படுத்தியும் குறைத்தும் கொள்ளலாம்.

கற்பூரவெற்றிலைச்சாறு விராகனெடை-௧; தேன் விராகனெடை-௧; இவ்விரண்டையும் கலந்து பிரமாணப்படி மேற்படி மருந்தை அநுபானித்துட்கொள்ள சுரக்கட்டி, ஆமக்கட்டி, குன்மக்கட்டி, சூதகக்கட்டி ஆகியவைகள்தீரும்.

## குறிப்பு.

தேகத்தின்மீதுண்டாகும் கட்டிகளுக்கு மேற்கண்ட அநுபானத்தில் குழைத்துக்கட்டியின் மேற்பூச அதைப்பழுக்கச்செய்து உடைக்கும்.

சிறுநீர் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து அநுபானித்துண்ண, தேள்விஷம், பாம்புவிஷம், எலிவிஷம், நாய்விஷம் ஜலமண்டலிவிஷம், நரிவிஷம் முதலிய எல்லாவிஷங்களும்தீரும்.

## குறிப்பு.

விஷமானது தலைக்கேறி ஸ்மாரணையில்லாதிருக்கும்பக்ஷத்தில் இதனைக் கழஞ்சளவு எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றில்கலந்துகொடுக்கவிடலாம். ஸ்மாரணையுண்டாகும். பிறகு கண்ணில் எரிவந்திருந்தால், கற்றாழைச்சாறு



சீரகம் இவ்விரண்டையும் சேர்த்து வெண்ணெயிற்கலந்து ஒரு துணியில் பொட்டணமாகக் கட்டிக்கொண்டு கண்ணில் ஒற்றிவர அந்த எரிவந்தம்தீரும். இன்னும் இழைத்த சந்தனத்தையும் சுதிசாதத்தையும் கலந்து கொஞ்சம் வெண்ணெயிற்குழைத்து முன்போல் துணியில்முடிந்து ஒற்றிட அந்தஎரிவந்தம்தீரும்.

எலுமிச்சம்பழச்சாற்றில் இதனைக்கலந்துமேலே பூசிவர வண்டுகடி, படர்தாமரை முதலியவைகள்தீரும்.

சூதகம்நின்று மூன்றாம்நாள் ஸ்நானம் செய்து நான்காம்நாள்முதல் நான்குநாள்வரையில் தினம் ஒருவேளையிலும் வெள்ளாட்டுப்பால்பலம்-௧, தேன்பலம்-௧, இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தைப்பிரமாணப்படி அநுபானித்துண்டுவரக் கருப்பையிலுள்ள தோஷங்கள் நீங்கிக்கருத்தரிக்க ஏதுவாகும்.

பால்கவ்வா விராகனெடை-௧ல், பிரமாணப்படி அநுபானித்துட்கொண்டு அதன்மீது காய்ச்சிக்கற்கண்டிட்ட பசுவின்பாலை ஜீரணசக்திக்குத்தகுந்தபடி பானஞ்செய்துவர தாதுபுஷ்டியுண்டாம்.

பசுவின் வெண்ணெய் விராகனெடை-௫, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்துமேற்படி மருந்தைப்பிரமாணப்படி அநுபானித்துட்கொள்ள ஒன்பதுவகை மூலமும்தீரும்.

தேன் விராகனெடை-௧, இதில் மேற்படி மருந்தைப்பிரமாணப்படி அநுபானித்துண்ணக் கைகால்குடைச்சல், பிடிப்பு முதலியவைதீரும்.

பசுவின் நெய் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி

மருந்தைப் பிரமாணப்படி உட்கொள்ள இளைத்ததேகம் பருக்கும்.

காய்ச்சி நுரைநீக்கிச் சுத்திசெய்த தேன் விராகனிடை-௫-முதல்-௰. இதில்மேற்படி மருந்தைப்பிரமாணப்படி அநுபானித்து உட்கொண்டுவர பெருத்த தேகம் இளைக்கும்.

ஆனை நெருஞ்சிச்செடியைக் கொஞ்சம்நீராகாரஜலத்தில் போட்டுக்கலக்கினால் வழுவழுப்பான ஜலமாகிவிடும். அந்த ஜலம் விராகனிடை-௰, தேன் விராகனிடை-௫. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண, மேகம், காங்கை, உட்சூடு அஸ்திச்சூடு ஆகியவைதீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைச்சாறு விராகனிடை-௧, தேன் விராகனிடை-௫. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மருந்தைப்பிரமாணப்படி அநுபானித்துண்ண கடிவிஷம் தீரும்.

எலுமிச்சம் பழச்சாறு விராகனிடை-௧, விளக்கெண்ணெய் விராகனிடை-௫. இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தில் கொஞ்சம் எடுத்துக்கரைத்து இரணங்களின்மீது பூசிவர அந்தரணங்கள் ஆறிப்போம்.

தேன் விராகனிடை-௫, மேற்படி மருந்து ஒருகுன்றிமணியெடை. இவ்விரண்டையும் குழப்பிப்பல்வலியுள்ளவிடத்தில் கைவிரலால் தொட்டுத்தடவி வைக்க எச்சில் ஊறிக்கொண்டேயிருக்கும். அதனைத் துப்பிக் கொண்டேயிருந்து கால் அல்லது அரையாமநேரம்



சென்றபின்பு வெந்நீரால் வாயைக்கொப்பளித்துச் சுத்திசெய்து கொள்ளவும். இவ்விதம் இரண்டு மூன்று தினங்கள் செய்தால் பல்வலி, ஈறுவலி முதலிய தந்தரோகங்கள் தீரும்.

இதனைக்கொஞ்சமெடுத்துச் சுத்தஜலத்தில் கரைத்து மேற்பூசிவர முழங்கால்வலி, இடுப்புவலி ஆகியவை தீரும்.

மேற்படி மருந்தைக்கடுதாசியில் தடவிப் புகைபிடிக்கச் சூலைதீரும்.

எலுமிச்சம் பழச்சாறு விராகனிடை-௫, வெள்ளறுகுச்சாறு விராகனிடை-௫, நல்லெண்ணெய் விராகனிடை-௫, இம்மூன்றையும் மிஸ்ரமித்து மேற்படி மருந்தைப் பிரமாணப்படி உட்கொண்டுவர வெட்டை, அரையாப்பு முதலியவை தீரும்.

குப்பைமேனியிலை ஒருபிடி, மிளகுபலம்-௨, இவ்விரண்டையும் சட்டியிற்போட்டுக்கருக்கி அரைப்படி ஜலம்வார்த்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டி இறக்கின கஷாயத்தில் மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துட்கொண்டுவர விரைவாதம், அண்டவாயு, விரைவீக்கம் ஆகியவைகள் தீரும். விரைவீக்கம் அதிகமாயிருந்தால் குமரியிலையை வேகவைத்து ஒற்றியிட்டு வருவதினால் அதிகுணமுண்டாகும். …ம் கழுநீர்த்தியையும் தண்ணீரில் குழைத்துத் தடவ ஆணிவிழுந்த புண் தீரும்.

பறங்கிப்பட்டைச் சூரணம் விராகனிடை-௧, வெள்ளறுகு இலைச்சூரணம் விராகனிடை-௧, கொடிவே

9

விவேர்ப்பட்டைச்சூரணம் விராகனெடை-ஸ, சிற்றாமணக்கெண்ணெய் விராகனெடை-க, இவையெல்லாவற்றையும் மிஸ்ரமித்து மேற்கண்ட மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணக் கருமேகம் தீரும்.

பூவரசம்பட்டை விராகனெடை-க, சீரகம் விராகனெடை-க. இவ்விரண்டையும் சிதைத்துக் காற்படி ஜலத்திற்போட்டுக்காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டின கஷாயத்தில் மூன்று விராகனெடை தேனைவிட்டுக்கலந்து மேற்படி மருந்தையநுபானித்துண்ண வெண்மேகம் தீரும்.

கலியாணமுருங்கைவேர்ப்பட்டைச் சூரணம் விராகனெடை-கஉ, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணக் கருங்குஷ்டம் தீரும்.

மாவிலிங்கச்சாறு, கழற்சிப்பருப்புச்சூரணம், கோழிமுட்டைக்கரு, நெய் ஆகியவைகளைச் சட்டியிற்போட்டு லேகியம்போல் கிளறி அதிற்கொஞ்சமெடுத்து மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துட்கொள்ள அண்டவாதம், விரைவாதம், குடல்வாதம் தீரும்.

பிரமதண்டிச்சாறு விராகனெடை-கு, பசுவின்பால் ஆழாக்கு-உ, தேன் விராகனெடை-க. இவற்றை மிஸ்ரமித்து மேற்படி மருந்தை அநுபானித்துட்கொள்ள பிரமேகம், இரத்தமேகம் ஆகியவைகள் தீரும்.

வேப்பம்பட்டை, பூவரசம்பட்டை, ஆலம்பட்டை இவைகள் வகைக்குப்பலம்-உ, சேர்த்திடித்துக் காற்படி ஜலம் விட்டுக்காய்ச்சி மூன்றிலொருபாகமா



கச் சுண்டினபின்பு இறக்கி வடிகட்டி அதில் ஷை மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துட்கொள்ள பிலீசம், கண்டமாலை, பவித்திரம், கரப்பான்கட்டி, சூலை ஆகியவைதீரும். மோதுகட்டியிருந்தால் மேற்படி மருந்தை மேலே பூசவும்.

நல்லவேளைச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையுங்கலந்து மேற்படி மருந்தைப்பிரமாணப்படி அநுபானித்துட்கொள்ள நீராதகபாலசூலை, ஒருதலைவலி, குடைச்சல் ஆகியவை தீரும்.

முள்ளங்கிச்சாறு விராகனெடை-கு, தேன் விராகனெடை மூன்று. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துட்கொள்ள நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு ஆகியவை தீரும்.

ஆவாரை வேர்ப்பட்டை, தேற்றான்கொட்டை, தென்னங்குறும்பை, வெள்ளைக்குன்றிமணி வேர்ப்பட்டை, காட்டாத்திப்பூ இவைவகைக்குப்பலம்-க இவைகளைச் சிதைத்துக்காற்படி ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகக்காய்ச்சி இறக்கிவடிகட்டி அதில் தேவையான அளவு வெண்ணெயும் கற்கண்டும்போட்டு மேற்படி மருந்தை அநுபானித்துட்கொள்ள [illegible], நீர்பேதி, மதுமேகம் ஆகியவைதீரும். இதனால் சூடு அதிகப்பட்டால் சிரசுக்குமாயத்தில் வெண்ணெய்போட்டுக்கொடுக்கவும்.

விலப்பனைக்கிழங்கு பலம்-ரு, சக்கரைக்குமட்டி[illegible]டை பலம்-உ. இவ்விரண்டையுஞ் சிதைத்துக்காற்படி

ஜலம்விட்டு மூன்றிலொருபாகமாகக் கண்டவைத்திறக்கி வடிகட்டி மூன்று விராகனெடை தேனைச்சேர்த்து அதில் மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துக்கொள்ள யானைத்தடிப்பு தீரும்.

வெந்தயம், ஏலரிசி, லவங்கம் இவை வகை-௩-க்கு விராகனெடை மூன்று. இவற்றைச் சிதைத்துக் காற்படி ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி மூன்று விராகனெடை தேனைக்கலந்து அதில் மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துக்கொள்ள இரத்தமூலம், இரத்தபேதி முதலியவை தீரும். வெண்ணெய், தயிர் முதலியவற்றிலும் அநுபானித்துக்கொடுக்கலாம்.

முருங்கைப்பட்டைச்சாறு விராகனெடை-௩, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்கண்ட மருந்தைப்பிரமாணப்படி அநுபானித்துக்கொள்ள குன்மம், தியிர் ஆகியவை தீரும்.

இண்டிசமூலம், மேல்தோல்சீவினசுக்கு, நெற்பொரி, சீரகம் இவைவகை-௪-க்கு விராகனெடை-உ௦. இவற்றைச் சிதைத்துக்காற்படி ஜலத்தில்போட்டு மூன்றிலொருபாகமாகக் கண்டக்காய்ச்சி யிறக்கிவடிகட்டி அதில்கொஞ்சம் நெய்விட்டு, மேற்படிமருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துக்கொள்ள வெள்ளை, வெட்டை ஆகியவைதீரும்.

வெண்ணெய் விராகனெடை-௩, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மருந்தை அநுபானித்துக்கொண்டு மேற்படி மருந்தை வெண்ணெய் பூவரசம்பட்டைச்சாம்பல் ஆகியவைகளு



டன் கலந்து மேற்பூசி, பத்திராக்ஷ இலையாவது சுரையிலையாவது மேல்வைத்துக்கட்டிவரத்தொடை வாழை, பக்கப்பிளவை, இராஜபிளவை ஆகியவைதீரும்.

எலுமிச்சம்பழச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-உ, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணக் குளிர்சுரம், சன்னி ஆகியவைதீரும்.

வில்வப்பட்டை பலம்-க. இதனைச்சிதைத்துக்காற்படிஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகக் கண்டவைத்திறக்கி வடிகட்டி அதில் மூன்று விராகனெடை தேனைக்கலந்து மேற்படி மருந்தைப்பிரமாணப்படி அநுபானித்துக்கொண்டுவர வெடிமேகந்தீரும்.

சுக்கு பலம்-[illegible], வசம்பைச்சுட்டெரித்த சாம்பல், ஓமச்சாம்பல், பூநாகபஸ்பம், வெற்றிலைக்கொடிச்சாம்பல் ஆகிய இவைகள் வகை-க-க்கு விராகனெடை-[illegible] மேற்கண்டவைகளைச் சிதைத்து [illegible] முக்கு ஜலத்தில் போட்டு அரைபாகமாகக் [illegible] காய்ச்சி வடிகட்டி இறக்கி அதில் மேற்படி [illegible] விராகனெடை தேனையும் [illegible] அதில் மேற்படி மருந்தைப் [illegible] அநுபானித்துக்கொள்ள விஷபேதி [illegible] பேதிவகைகள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

972. பஞ்ச[illegible] மாத்திரை.

சுத்திசெய்த வீரம், [illegible] சுத்திசெய்த [illegible] ரசம், சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்த [illegible]

ய்த இரசம் இவை வகை-க-க்கு விராகனெடை-க, வெ
ற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் வீரத்தையும் தொ
ங்கித்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்ற மூன்று சர
க்கையும் தனித்தனி சேர்த்துப் பொடித்து வெற்றிலைச்
சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரம
ரைத்துக்கசகசாப்பிரமாணம்மாத்திரைகளாகச்செய்து
நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

அனுபானம்:—பனைவெல்லம், சர்க்கரை, சுக்கை
யரைத்தவிழுது ஆகியவைகளாம்.

உபயோகம்:—சுரம், சன்னி, சைத்தியம் ஆகிய
வை தீரும்.

## 973. பஞ்சசூதமாத்திரை (வேறு)

கல்வெண்ணெயில் டோலாந்திரகட்டி எரித்தெ
டுத்துப்பிறகு எருமைச்சாணியில் ஊறவைத்துக்கழுவி
யுலர்த்திச் சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் விரா
கனெடை மூன்று, [illegible] சின்கோமியத்தில் இருநாழி
காழிகை ஊறவை[illegible]த்திச் சுத்திசெய்த கருநாபி
விராகனெடை மூ[illegible] உப்பிலிக்கொடிச்சாற்றில் அ
ரைத்துப்பிழிந்து [illegible]செய்த இரசம் விராகனெ
டை மூன்று, எருமைச்சாணியில் ஊறவைத்தெடுத்து
முளைபோக்கிப் பசுவின்பாலில் வேகவைத்துலர்த்திச்
சுத்திசெய்த வாளம் விராகனெடை-உச, ஒருபடி கல்
சுண்ணத்தைத் தீழ்மேலுமிட்டு நடுவே கட்டியவை
த்து வெள்ளைப்பொங்கக்காய்ச்சி அதன்மேல் விட்டு
நீற்றி எடுத்துக்கழுவியுலர்த்திச் சுத்திசெய்த பொன்
னரிதாரம்விராகனெடை-கஅ, முந்திரியுப்புதுலா-க,



ருமைச்சாணியில் பிசறிக்கழுவியுலர்த்திச் சுத்திசெய்த
நாட்டு வெண்காரம் விராகனெடை-கூ, கருநாபியைப்
போல் சுத்திசெய்தசேர்விஷம் அல்லது வெண்நாபி வி
ராகனெடை-கூ, நல்லபெருங்காயம்விராகனெடை-கூ,
திறமான கஸ்தூரி விராகனெடை ஒன்றரை, தேங்காய்
ஓடு சுட்டகரித்தூள் விராகனெடை-கு, இளநீர்படி-வ
உத்தாமணிச்சாறு படி-வ.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும்
தொங்கித்தரைத்து ஒன்றாகக்கருத்தபின்பு மற்றசரக்கு
களையும் தனித்தனி பொடித்துச்சேர்த்து இரண்டு சா
மநேரம் கைவிடாமலரைத்துப் பிறகு உத்தாமணிச்சா
ற்றைச் சிறுகச் சிறுகவார்த்தரைத்து பிறகு இளநீரைச்
சிறுகச் சிறுகவார்த்தரைத்துப் பயறளவுமாத்திரைகள்
செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை க-உ.

அனுபானம்:—பனைவெல்லம், தேன், வெண்ணெ
ய், சுக்கரைத்தவிழுது முதலியவைகளாம்.

உபயோகம்:—சன்னி, சயித்தியம், குளிர்சுரம்,
வாதம், வாயு, கபரோகங்கள், [illegible], குன்ம
வலி, பாரிசவாயு, பக்ஷிகாவாதம், மூலவாதம், வாய்கோ
ணல், சர்வவிஷங்கள், குதிரைவியாதி, வாயு வியாதி
கள் சகலமும் தீரும்.

## 974. காக்குடோரி.

சுத்திசெய்தபாஷாணம், சுத்திசெய்தலிங்கம், சுத்
திசெய்த இரசம், சுத்திசெய்த அரிதாரம், [illegible]
சிலைக்காரம், நவச்சாரம், [illegible] இவைகளைக்கு வி

ராகனெடை-கவ, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனெடை-கஉ; கொய்யாப்பாக்கிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும், பாஷாணத்தையும் கொந்தித்தரைத்து மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து ஒருசாமநேரம் நன்றாகக்கலக்கும்படி அரைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்துச் சிறு பயறளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨.

அனுபானமும், உபயோகமும்:—இஞ்சிச்சாற்றில் அனுபானித்துக்கொடுக்க எல்லாவகை சன்னிகள், சுரங்கள் ஆகியவை தீரும். முலைப்பாலில் அனுபானித்துக்கொடுக்க எழுவகை தோஷங்களும் தீரும்.

## 975. சுரக்குடோரி (வேறு)

சுத்திசெய்த பாஷாணம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த கருகாபி, பொரித்த படிக்காரம், இவை வகை-க-க்கு விராகனெடை-கவ; எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனி பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒருசாமநேரம் கைவிடாமலரைத்துப் பிறகு எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துப் பயறளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை, ஒன்று.



அனுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், பனைவெல்லம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகைசுரங்கள், சன்னிகள், தோஷங்கள், வாயுகள், சூலைகள் ஆகியவை தீரும்.

## 976. சண்டமாருதக் குழம்பு.

சுத்திசெய்த இரசகர்ப்பூரம், சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்த இரசம், அதிமதூரம், கோஷ்டம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி இவை வகைக்கு விராகனெடை-உ, பருமனான எலுமிச்சம்பழம் ஐம்பதைப்பிழிந்த சாறு.

செய்முறை:—மேற்படி சரக்குகளையெல்லாம் தனித்தனியே பொடித்துக் கல்வத்திலிட்டு ஒன்றாகச் சேர்த்து ஒருசாமநேரமரைத்து ஒரு அகலப்பீங்கானில்போட்டு எலுமிச்சம்பழச்சாற்றை அதில்விட்டு வெயிலில்வைத்துச் சுண்டினபின்பு எடுத்து வேறுபீங்கானில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியளவு அரை முதல் க-வரை.

அனுபானம்:—பனைவெல்லம், சீனிசர்க்கரை, இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—சன்னி, சயித்தியம், [illegible] ஷபேதி, விஷபேதியினுண்டாகும் [illegible] விஷபேதியிலுண்டாகும் [illegible]க்குணங்கள் ஆகியவை தீரும்.

சுத்திசெய்த நெல்லிக்காய்கெந்தகம், சுட்டவெ[illegible] ணகாரம்; சுத்திசெய்த இரசம், மிளகு, பேய்தோல்சி[illegible]

விளாசக்கு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், தேசாவாரம், செவியம், ஜாதி இவைவகை-க-க்குப்பலம்-ஐ.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து மற்றசரக்குகளையும் தனித்தனி தூள்செய்தும் சூரணித்தும் சேர்த்து எல்லாம் மிஸ்ரமாகும்படி இரண்டுசாமநேரமரைத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-ஐ-ல.

அநுபானம்:—தேன், சர்க்கரை, நெய்.

உபயோகம்:—அஜீரணபேதி, விஷபேதி, கிராணி, அதிசாரம், வாயு, கபம், சூலை, சுரம், சன்னி முதலிய ரோகங்கள்தீரும்.

## 977. புஜண்டர் ராமபாண மாத்திரை.

(a) சுத்திசெய்த அரிதாரம் விராகனெடை-க, (இதனைத் தான்செய்துகொள்ளவும்.) கொள்ளுடன்சேர்த்து வேகவைத்துக்கொள்ளு வெந்தபதத்தில் எடுத்து சாரத்தை உலர்த்திச் சுத்திசெய்த காந்தம் விராகனெடை-க, (இதனையும் தனியே தான் செய்துகொள்க.) சுத்திசெய்த இரசம் விராகனெடை-க, சுத்திசெய்தகெந்தகம் விராகனெடை-க (இவ்விரண்டையும் தொந்தித்து நன்றாகக்கருக்கிறவரையில் அரைத்து எடுத்துக்கொள்ளவேண்டும்.) இந்துப்பு, பொரித்தநுருசு, பால்துத்தம், இவற்றைத்தனித்தனி பொடித்ததூள் வகைக்கு விராகனெடை-க.

(b) மேல்தோல்போக்கின எள்ளு, நாய்ப்பூனாள் பசும்பாலில் ஊறவைத்தெடுத்துக் காழவியுலர்த்தி யிடித்த எட்டிக்கொட்டைச்சூரணம், சாணிப்பாலில்மூழ்க்



குவெட்டிப்போட்டுக் காய்ச்சியெடுத்து உலர்த்தி யிடித்த சேராங்கொட்டைச் சூரணம், கொடிவேலிவேர்ப்பட்டைச்சூரணம், மஞ்சள்சூரணம், ஓமச்சூரணம், மாசிக்காய்ச்சூரணம், ஜாதிக்காய்ச்சூரணம், வசம்புச்சூரணம், தோலுரித்த வெள்ளைப் பூண்டு; கொன்றுமார், கோஷ்டச்சூரணம், கார்போகரிசிச்சூரணம் இவைவகைக-க்கு விராகனெடை-க.

(c) தக்கோலம் பலம்-உ ல, அக்கிரகாரம் பலம்-உ ஐ, இவ்விரண்டையும் சிதைத்து ஒருபடிஜலத்திற்போட்டு நாலிலொருபாகமாகக் காய்ச்சிக் கண்டவைத்து இறக்கிவடிகட்டித் திப்பி நீக்கினைத்துக் கொள்ளவும்.

(d) கோழிமுட்டை வெள்ளையம்புலி செல்லத்தக்க அளவு.

செய்முறை:—(a) யிலுள்ள சூரணங்களையும், (b) யிலுள்ள சூரணங்களையும், எள்ளையும், பூண்டையும் ஒன்றாகக்கலந்து கல்லுரலில் இட்டு இருப்புக்கட்டப்பாரையால் இரண்டுசாமநேரம் கைவிடாமல் இடித்து நிறுத்திவிடவேண்டும். மறுநாள் (c) யிலுள்ள கஷாயத்தைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரம் இடித்து நிறுத்திவிடவேண்டும். மூன்றுநாள் (d) யில் சொல்லியிருக்கிற கோழிமுட்டை வெள்ளை [illegible] சிறுகவிட்டு நான்குசாமநேரம் இடித்து [illegible] செய்து [illegible] மணியெடையுள்ள மாத்திரைகளா உலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவேண்டும்.

குறிப்பு.

இந்தமருந்தைக் கல்வத்தில் அரைக்க [illegible] அரைத்தாலும் விசேஷகுணத்தைக் கொடுக்கிறதில்லை.

இதனை உடலில் இரத்தமிசிக்கத் தேய்க்கவேண்டும். எத்தனைநாள் மசிக்கிறோமோ அந்தளவு விசேஷகுணத்தைத்தரும். இப்படிச்செய்யும்போது சுதாயம் போதாவிடில் மீந்திருக்கிற திப்பியில் ஜலத்தைவிட்டுக் காய்ச்சிக் கொள்ளவேண்டியது.

பிரமாணம்:—மாத்திரை—அரை—க.

அநுபானம்:—தேன், நெய், வெண்ணெய், சர்க்கரை ஆகியவைகளாம்.

உபயோகம்:—யோனிப்புற்று, லிங்கப்புற்று, கண்டமாலை, அண்டப்புற்று, புண், புரை, குலை, வாயு, இடிப்புற்று, சால்புற்று, குழிப்புற்று, வெண்குஷ்டம், முழங்கால்வாதம், ஆமவாயு முதலியவைபோம்.

பத்தியம்:—மோருஞ்சோறும் சாப்பிட்டுவரவேண்டியது. தேகத்துக்கு ஒத்துக் கொள்ளாவிட்டாலும் மோருஞ்சோறும் ஒருவேளையாவது சாப்பிட்டுவரவேண்டும். மருந்தைநாற்பதுநாள்வரை சாப்பிடவேண்டும். ஸ்திரீகளும் சாப்பிடலாம். மூன்றுமாதம்வரையில் சம்போகம்கூடாது. வேறுபத்தியமில்லை.

## 978. மேகசஞ்சீவி மாத்திரை

சுத்திசெய்தவீரம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த இரசசெந்தூரம், சுத்திசெய்த இலிங்கம், இவைவகை—க—க்கு விராகனெடை இரண்டரை, மஞ்சட்கடுக்காய்த்தோற்சூரணம் விராகனெடை—௧0, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட நான்குசரக்குகளையும் தனித்தனிபொடித்து ஒன்றாகச்சேர்த்து மேற்படி கடுக்காய்த்தூளையும் சேர்த்து ஒன்றுமணிநேரம் கைவிடா



மலரைத்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து அரைக்குன்றியளவெடை மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧-௨-௩.

அநுபானம்:—சர்க்கரை, வெண்ணெய், சக்கரைத்தவிழுது, இலேகியவகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—பிரமேகம், சீழ்மேகம், சுக்கிலமேகம், கசிவுமேகம், நீர்ப்பைரணம், நீர்ப்பைஅழலை, ஆண்குறிஅழலை, ஆண்குறிரணம், கிரந்திப்புண்கள் ஆகியவைகள்தீரும்.

பத்தியம்:—சமயோசிதம்போல் உப்பு, புளி ஆகியவைகளைச்சேர்த்தும் சேர்க்காமலும் பத்தியம் வைக்கவேண்டியது. பெண் பத்தியம் மிக அவசியம்.

### குறிப்பு.

இதனால்பெரும்பாலோர்க்குவாய்வெடிக்கிறதில்லை; ஆனால், சிலருக்குச்சில சமயங்களில் கொஞ்சம் வாய்வெடிக்கிறதாகத்தெரிகிறது. அப்படி வாய்வெடித்தால் கொஞ்சப்புளியைக்கொஞ்சம் ஜலத்திற்போட்டு வாயிலிட்டுக் கொப்பளித்து வருவதனால் இந்தவேகம் தணிந்துபோகும். மருந்து சாப்பிடும்போது தினம் இரண்டொருதடவை தாம்பூலம் தரித்துக்கொண்டுவந்தாலும் வாய்வெடிக்காது. தேகசுபாவத்திற்குத் தகுந்தபடி எத்தனைநாள்வேண்டுமோ அத்தனைநாள் மேற்கண்ட விதமாக உபயோகித்துவரலாம்.

## 979. சுவாசகாசக் குடோரி.

சுத்திசெய்த இரசம் பலம்-உ, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-உ, சுத்திசெய்த அரிதாரம்பலம்-க, வறுத்திடித்த அரிசித்திப்பிலிச்சூரணம் பலம்-க, வறுத்திடித்த கருஞ்சீரகச்சூரணம் பலம்-க, பொரித்த சீனக்காரம் பலம்-க.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொர்த்தித்தரைத்துக் கன்றாய்க்கருத்தபின்பு எடுத்துக்கொள்ளவேண்டும். அரிதாரத்தைத் தனியேபொடித்து வஸ்திரகாயஞ்செய்து எடுத்துக்கொள்ளவேண்டும். மற்றசரக்குகளையும் தனித்தனி யிடித்துச்சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து மேற்கண்ட நிறைப்படி நிறுத்தெடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு நான்குசாமநேரம் அரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்தவும். கசகசாகஷாயத்தை அல்லது கடுக்காய்க் கஷாயத்தைவிட்டு நான்குசாமநேரமரைத்து இரண்டு குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொள்ளவும்.

### குறிப்பு.

இங்குச்சொல்லியிருக்கிற அரிதாரத்துக்குப் பதிலாகமுறைப்படி கட்டின அரிதாரத்தை அல்லது முறைப்படிசெய்த அரிதார பற்பத்தைச்சேர்த்துச்செய்தால் அதிக சிறந்தகுணத்தைத்தரும். பற்பமானால் மேற்கண்டஎடையில் அரைவாசியைத்தான் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—சூரணமானால் குன்றிமணியெடை-க-௩-வரையில் கொடுக்கலாம். மாத்திரையானால்-க-உ வரையில் உபயோகிக்கலாம்.



அநுபானம்:—நெய், தேன், வெண்ணெய், முதலியவைகளாம்.

உபயோகம்:—சுவாசகாசம், மந்தாரகாசம், இரைப்பு, ஈளை, இருமல், நாட்பட்ட இருமல் முதலியகபசம்பந்தமானரோகங்களெல்லாந்தீரும். இந்தச் சூரணத்தை ஜலத்திற்கரைத்துக் கடுதாசியின்மீது இலேசாகத்தடவிச் சுருட்டிப் புகை பிடிப்பதனாலும் குணமுண்டாகும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத்தகுந்ததுபோல் புளியைக்குறைவாகச் சேர்த்தும் அறவேசேர்க்காமலும் பத்தியம் வைக்கவேண்டியது. பெண்பத்தியம் அவசியமென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே.

## 980. சிவகாமரசம்.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெந்தகம், சுத்திசெய்தமனோசிலை, சுத்திசெய்த வெண்காரம், சுத்திசெய்தகருநாபி இவைகளும் வகை-க-க்கு விராகனெடை இரண்டரை, மிளகுச்சூரணம் விராகனெடை பதினிரண்டரை.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளில் இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்துக் கன்றாகக்கறுத்தபின்பு மற்றதுமான சரக்குகளையும் தனித்தனி பொடித்து வஸ்திரகாயஞ்செய்து நிறுத்தெடுத்துமுன் மருந்திற்சேர்த்து இரண்டுமணிநேரமரைத்துப் பிறகு மிளகுச்சூரணத்தைச்சேர்த்து நான்கு சாமநேரமரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்தவேண்டும்.

## குறிப்பு.

சிவனாமரசமென்னும் இம்முறையில் அப்பிரகாரம், திப்பிலி, அமுக்கிரா முதலிய சரக்குகளைச் சேர்த்துச் செய்வதுமுண்டு. ஆனால் அவற்றைச் சேர்க்காமலே மேற்கண்ட முறைப்படி செய்து அதிகமேலான குணத்தைத் தருவதாக அனுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நமது பரம்பரையாரும் நாமும் இவ்விதமே செய்து அனுபவித்து வருகிறோம். ஒவ்வொரு வைத்தியர் கையிலும் இருக்கவேண்டியவைகளில் முதன்மையான மருந்து. இதனை எல்லா வியாதிகளிலும் தகுந்த அனுபானத்திலும் உபயோகிக்கலாம். இதனை ஏழுநாள் அரைக்கவேண்டுமென்னும் அவசியமில்லை. எல்லாச்சரக்குகளையும் தனித்தனி பொடித்து வஸ்திரகாயஞ்செய்துகொண்டு மேற்கண்ட கணக்கின்படி அரைத்தால் போதுமானது. ஆனால், சக்தியுள்ளவர்கள் இதன் செய்முறையில் சொல்லியிருக்கிறபடி ஏழுநாள் அரைத்துச் சித்தப்படுத்தினால் பொன்மலர் நாற்றமுடைத்து என்பதுபோல் விசேஷ குணமுண்டாகுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. நமது முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கும் கணக்கின்படி அவுடதங்களை அரைத்து முடிப்பதினால் ஆங்காங்குச் சொல்லியிருக்கிற வியாதிகள் பறந்துபோமென்பதில் சந்தேகமில்லை. சோம்பலினாலும் அஜாக்கிரதையினாலும் அரைப்புத்திட்டத்தை நாம் கவனியாதபடியால் அவுடதங்கள் பூரணமாய் முடியாமற்போக ஏதுவாகிறது. அப்படி முடித்தாலும் பூரணமான குணத்தைக் காண்பிக்காமல் அரைகுறையாகப் போவதற்கு ஏதுவாகிறது. ஆங்கில பண்டிதர்களுட் சிலர் மருந்துகளைச் சேர்த்து அதிகநேரம் அரைப்பதினால் ஒவ்வொரு மருந்தின்



[illegible]றேயொன்று தொக்கிப்பதினால் அறு அம்சங்கள் ஒன்[illegible] உண்டாகின்றன என இப்பலவித அற்புத குணங்கள் [illegible]து முன்னோர்கள் அநேகம் போது நிச்சயித்தவரினும் நம[illegible]ச்சயித்திருக்கிறார்களென் ஆயிரம்வருஷங்களுக்கு முன் [illegible]ன்பது சொல்லாமலே விளங்கும்.

பிரமாணம்:-குன்றிமணியெடை ஒன்று, ஒன்றரை நயம் சொல்கிறதாகும் குன்றிமணியெடை-கால், அரை.

அனுபானம்:—தேன், நெய், சுக்குக்கஷாயம், தி[illegible]க்கஷாயம், வெற்றிலை, வெற்றிலைச்சாறு, இஞ்சிச்சாறு, வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—எண்பது வகை வாதங்கள், நாற்பது வகைப்பித்தங்கள், இருபது வகைக்கபரோகங்கள், சுவாசகாசம், மந்தாரகாசம், குஷ்டம், குறைநோய், குன்மம், சூலை, சன்னி, மூலரோகம், க்ஷயம், மகோதரம், அ[illegible]பத்தேழு உஷ்ணரோகங்கள் ஆகியவைகளுக்கும் குமாரகண்டன்வலி, காக்கைவலி முதலிய வலிப்புரோகங்களுக்கும் [illegible]ம். இன்னும் கபமுதலிய அநேகரோகங்களுக்கும் [illegible] அனுபவசாலிகளான அநேகருக்குந் தெரிந்தமருந்து [illegible] இருப்பினும் இதனை அவ்வளவு மகத்துவமாகக் [illegible] வர்களும் அநேகருண்டு. நமது மருந்துகளில் நம்பிக்கையில்லாமற் போவதால் [illegible] மருந்துகளும் நம்மை மோசப்படுத்துகின்றன. [illegible] ருந்தின் குணத்தை நிச்சயித்து [illegible] யுடன் உபயோகித்தால் [illegible] மாகக் குணம் செய்வதில் சந்தேகமேயில்லை.

### 981. [illegible] மெழுகு.

சுத்திசெய்தலிங்கம், சுத்திசெய்தவீரம், சுத்திசெய்த இரசசெந்தூரம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த [illegible]

த்திசெய்தகாரந்தம், ரூடம், சாதி ... பாஷாணம், சுத்திசெய்தவெள்ளைப்பாஷாணம், பொரித்த ... துருசு, பால்துத்தம், சுத்திசெய்த மிருதார்சிங்கி; ... சுத்திசெய்த செவ்வியக்காரக்கெந்தகம், சுத்திசெய் ... த அரிதாரம், இவைவகை-௧-க்கு விராகனெடை-௧, சுத்திசெய்த வாளம் விராகனெடை-௧-முதல்-௩-வரை, தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாச்சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக்கலந்து இரண்டுசாமநேரம் கைவிடாமலரைத்து எடுத்து இரண்டுபாகமாக்கித் தனித்தனியேவைத்துக்கொள்ளவேண்டும். பிறகு கல்வத்தில் ஒரு விராகனெடை சுத்திசெய்த வாளத்தைப்போட்டுப்பொடித்துத்தேனைச் சிறுகச்சிறுகவார்த்து வெண்ணெய்போலரைத்து முன் இரண்டுபாகமாக்கி வைத்திருக்கிறமருந்தில் ஒருபாகத்தைக் கல்வத்திலிருக்கிறமருந்தில் சிறுகச்சிறுகத்தூவித்தேனையும் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் வழித்துப்பிங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும். இதன் மேல்நம்பர் ஒன்று எனக்குறிப்பிட்டு வைக்கவேண்டியது. பின்புமூன்றுவிராகனெடைவாளத்தைக்கல்வத்திலிட்டுப்பொடித்துத்தேனைச்சிறுகச்சிறுகவார்த்து மெழுகுபோலாகிறவரையிலரைத்து முன்வடித்து வைத்திருக்கிறமறுபாதி மருந்தைச் சிறுகச்சிறுகத்தூவித் தேனைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து மெழுகுபதத்தில் பிங்கான் சிமிழில் வழித்து வைத்து இதன்மீது நம்பர் இரண்டெனக்குறித்து வைக்கவேண்டியது.

### குறிப்பு.

மலம்போகாமல் இருக்கவேண்டியபோது முதல் நம்பரையும், மலத்தை வெளிப்படுத்தவேண்டியபோது நம்பர் இரண்டையும் உபயோகிக்கவேண்டியது.



பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௰.

அநுபானம்:—பனைவெல்லம், சுக்கு வெண்ணெய், இலேகியவகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரம், சன்னி, மேகரோகங்கள், இரத்தரோகங்கள், புண்கள், குழிப்புண், சிலைப்புண், அஜீரணம், கண்டமாலை, பவுத்திரம், சூலை, புற்றுரோகங்கள் முதலிய எல்லாவியாதிகளிலும் அநுபான விசேஷங்களில் உபயோகிக்கலாம். பெரும்பான்மையான கஷ்டவியாதிகளில் இதனை உபயோகித்துக் குணங்கண்டிருப்பதால் இதற்குசஞ்சீவி மெழுகெனப்பெயரிடப்பட்டிருக்கிறது.

பத்தியம்:—இதற்கு விசேஷபத்தியம் ஒன்றுமில்லையாயினும் தேகபலம், வியாதிபலம் ஆகியவைகளுக்குத்தகுந்தபடி உப்பு, புளி, பெண், சாப்பாண் பதார்த்தம் ஆகியவைகளை நீக்கிப் பத்தியம் வைக்கவேண்டியது.

## 932. நவலோக மெழுகு.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்தலிங்கம், சுத்திசெய்தவீரம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த இரசசெந்தூரம் வகைக்கு விராகனெடை-௩; சுத்திசெய்த கெந்தகம்; பொரித்த துருசு; நவச்சாரம்; பொரித்தவெண்காரம் இவைவகை-௧-க்கு விராகனெடை-௰, முருங்கைப்பட்டைச்சாறு பலம்-௨௧.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து இரசம் மடிந்தபின்பு வீரத்தையும் ... மற்றசரக்குகளையும் தனித்தனிபொடித்துக் கல்வத்திலிருக்கிறமருந்துடன் சேர்த்து ஒன்றுமணிநேரம் கை

விடாமலரைத்து ஒருசிறிய குண்டுசட்டியில் மேற்படி பொடியைப்போட்டுமேற்படி முருங்கைப்பட்டைச்சாற்றையும்விட்டு அடுப்பேற்றிச்சிறுதீயாக எரித்துவரவும். அடுப்பிலிருக்கிற மருந்தை இரும்புச் சலாகையினால் கிண்டிக்கொண்டே யிருக்கவேண்டியது. சாறெல்லாம் சுண்டி மெழுகு பதமாகும் சமயத்தில் கொஞ்சம் சிற்றாமணக்கெண்ணெயைவிட்டுக் கிளறிக்கொடுத்து ஆறின பின்பு எடுத்துப்பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை—அரை.

அநுபானம்:—பனைவெல்லம், சுக்கையரைத்தவிழுது; சீனிசர்க்கரை முதலியவைகளாம்.

உபயோகம்:—சுரம்; சன்னி; மேகரோகம்; சூலைரோகம், இரத்தரோகம்; புண்கள் முதலிய அநேகரோகங்கள் தீரும்.

பத்தியம்:—இச்சாபத்தியம்.

## 983. பேய்ச்சொறிச் சிகிச்சை.

சுத்திசெய்த இரசம்; மிர்தார்சிங்கி; சூடன்; சுத்திசெய்த இரசகற்பூரம்; சுத்திசெய்த இலிங்கம்; சயவெள்ளை; சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் இவைவகை-க-க்கு சமவெடை; துளசிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனிசேர்த்துப் பொடித்து மூன்றுமணிநேரம் கைவிடாமலரைத்து எல்லாம் மிருதுவானபின்பு துளசிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமமரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம், கழற்சிக்



காய்ப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—இதனைத் [illegible] து ஆமணக்கிலைச்சாற்றில் இழைத்து மேற்பூசவேண்டும். பேய்ச்சொறி, காய்ச்சொறி, கரிவுச்சொறி, [illegible]சொறி, படர்தாமரை, வண்டுகடி, எச்சிற்றழும்பு, வித்தியம் ஆகியவைகள் தீரும். வியாதி அதிகத்தடிப்பாகவும், பட்டதாகவுமிருந்தால் எலுமிச்சம்பழச்சாற்றில் இழைத்துப்போடவேண்டும்.

## 984. ஜாதிலிங்கப் புகை.

சுத்திசெய்த ஜாதிலிங்கம் விராகனெடை—உ, சுத்திசெய்த இரசகற்பூரம் விராகனெடை—க, சீனக்காரம் விராகனெடை—உ.

செய்முறை:—மேற்கண்டவற்றைப் பொடிசெய்து மெழுகுதுணியில் பரப்பித் திரிசெய்துவைத்துக்கொள்ளவேண்டும். இதனைக் கீழ்க்காணும்விதம் புகைபிடித்தால் இரந்திப்புண், அரையாப்பு, பிளவை, கிராதரணங்கள் ஆகியவை தீரும். இன்னும் அநேகரோகங்களும் தீரும்.

பத்தியம்:—பச்சைத்தண்ணீர் வாய்கொப்பளிக்கக்கொடுக்கவும்; நல்லெண்ணெய், கடுகு, தேங்காயெண்ணெய், கேழ்வரகு இவை நாற்பத்தைந்துநாள்வரை ஆகாது. வியாதிபலத்திற்குத் தகுந்தபடி ஐந்துவேளை ஏழுவேளை ஒன்பதுவேளை புகைபிடிக்கவேண்டும். அல்லது வாய்பிடிக்கிறவரையில் புகைபிடிக்கலாம்.

புகைபிடிக்கும் விதம்:—

டச்சிஸ்யாத் என்னும் பெட்டிக்குள் ஒரு பாத்திரத்தில் நெருப்பைவைத்து மேற்படி திரியைச் சிறு து

ண்டுகளாகக் கத்தரித்துக்கொஞ்சம் கொஞ்சமாகப்போ
ட்டுப் புகைபிடித்துவருவது விசேஷமான வகை.
இந்தப்பெட்டிக்குள் திரியைக்கொளுத்திவைத்தும் பு
கைபிடிக்கலாம். இப்படிக்கூடாத சமயத்தில்மூங்கில்கு
ச்சியினால், ஒருமனிதன் நாற்காலியில் உட்கார்ந்திருக்
கும்போது அவன் கழுத்துவரை பிடிக்கும்படி ஒருகூ
ண்டுசெய்து நோயாளியை ஒரு நாற்காலியில் உட்கார
வைத்துக் கூட்டின் நடுவிலுள்ள துவாரத்தின்வழியா
கக் கழுத்தில்மாட்டிக் கூட்டின்மீது துப்பட்டி அல்ல
து, இரட்டுத்துணியால் மூடிக்கூட்டுக்குள் முன்போல்
திரியைக்கொளுத்திவைத்துப் புகைப்பிடிக்கவேண்டும்.
இப்படியும் கூடாதபக்ஷத்தில் நோயாளியை நாற்காலி
யின்மீது உட்காரவைத்துக் கழுத்திலிருந்து பூமியட்ட
ம்வரையில் சந்தில்லாமல் துப்பட்டியால் அல்லது உர
த்ததுணியால்மூடித்திரியைக்கொளுத்திவைத்துப்புகை
ப்பிடிக்கவேண்டும். புகையானது நோயாளியின் கண்
டத்துக்குக் கீழ்ப்படவேண்டியதே தவிர முகத்தில் எ
ந்தப்பாகத்திலும்படாமல் ஜாக்கிரதைசெய்யவேண்டி
யது.

### 985. ஜாதிலிங்கப்புகை (வேறு)

சுத்திசெய்த ஜாதிலிங்கம் விராகனெடை-உ, சுத்
திசெய்த இரசகற்பூரம் விராகனெடை-க, சுத்திசெய்
த வீரம் விராகனெடை-ரு.

இவற்றை முன்போற்செய்து முன்போற்புகைபி
ட முன் வியாதிகள் தீரும்.

### 986. மேற்படி புகை (வேறு.)

சுத்திசெய்த ஜாதிலிங்கம் விராகனெடை-க, சுத்
திசெய்த இரசகற்பூரம் விராகனெடை-க, துருசு வி



ராகனெடை-ரு, துத்தம் விராகனெடை-ய, காந்தம்
விராகனெடை-ய.

இவற்றை மேற்கண்டபடிசெய்து மேற்கண்டபடி
புகைபிடிக்க மேற்கண்ட வியாதிகள் தீரும்.

### 987. இரசவங்கப்புகை.

சுத்திசெய்த இரசம் பலம்-க, காரீயம் பலம்-க,
சுத்தி செய்த வெள்ளைப்பாஷாணப்பதங்கம் விராகனெ
டை-க, அல்லது-உ, மடல்துத்தம் பலம்-உ, சுத்திசெய்
த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-ரு, சுத்திசெய்த ஜா
திலிங்கம் பலம்ரு, எருக்கம்பால் செல்லத்தக்க அ
ளவு.

செய்முறை:—இரசத்தையும் வங்கத்தையும் தொ
ந்தித்து மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச்
சேர்த்து இரண்டுமணிநேரம் கைவிடாமலரைத்துப்பி
றகு எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசா
மநேரமரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் மாத்தி
ரைகள்செய்து உலர்த்திவைத்துக்கொள்ளவும். புளிய
ம்புறணியை நெருப்பாக்கி அதிற்போட்டு மேற்கண்ட
வாறு அந்திசந்தி மூன்றுநாள் வாய்பிடிக்கிறவரையில்
புகைபிடிக்க புண்கள், கிரந்திகள், மேகப்புண்கள், அ
ழிரணம், குழிரணம் முதலிய அநேகரணங்கள், பிள
வைகள், கண்டமாலை, புற்றுக்கள் முதலியவை தீரும்.

### 988. பார்வைப்புகை.

சுத்திசெய்த இரசம் விராகனெடை-க, சுத்திசெ
ய்த ஜாதிலிங்கம் விராகனெடை-க, காரீயம்விராகனெ
டை-க, எருக்கன்கட்டைக்கரி விராகனெடை-உ.

செய்முறை:—இரசத்தையும் கருவங்கத்தையும் தொந்தித்து மற்ற சரக்குகளைத் தனித்தனி பொடித்துச்சேர்த்து ஒருசாமநேரமரைத்து நன்றாக மெழுகானபின்பு வெள்ளைத்துணியில் தூவித்திரிசெய்து கொண்டு வேப்பெண்ணெயில் அல்லது நெய்யில்தோய்த்து அகலிலிட்டுவிளக்கேற்றித்திரைப்போட்டுக்கொண்டு விளக்கைப்பார்க்கவேண்டும். இவ்வாறு மூன்றுநாட்கள் ஆறுவேளை செய்ய மேற்கண்ட வியாதிகள் தீரும்.

## 989. கிரந்திப்புகை.

சுத்திசெய்த இலிங்கம் விராகனெடை-௧, சுத்திசெய்த இரசம் விராகனெடை-௧, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் விராகனெடை-௧, நீரடிமுத்துப்பருப்பு விராகனெடை-௧, வெட்பாலையரிசி விராகனெடை-௧, கருஞ்சீரகம் விராகனெடை-௧, வலம்புரிக்காய் கஸ்தூரிமஞ்சள் இவை வகை-௧-க்கு விராகனெடை-௧, தீம்காய் நெல்லிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:——இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச்சேர்த்துக் கைவிடாமல் ஒருசாமநேரமரைத்து நன்றாக மெழுகானபின்பு தீம்காய் நெல்லிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் மாத்திரைகள்செய்துவைத்துக்கொள்ளவும். இதைப் புளியம்புறணிநெருப்பில் போட்டு மேற்கண்டபடி புகைபிடிக்க எல்லாவகைக் கிரந்திரோகங்களும் தீரும். புகைபிடிக்கும்போது பச்சைத்தண்ணீரில் குளித்துவரவேண்டும்.



## வானமாமெழுகு.

இதனைப்பலர் பலவிதமாகச் செய்கின்றனர்; சிலர் ௧௮-சரக்கென்றே சாதிக்கின்றார்கள். சிலர்-௧௫-சரக்கெனச்சொல்கின்றார்கள்; அவரவர்கள்தம் தம் அநுபவப்படிசெய்து அநுபவித்துவருவதால் அவரவர்கள் அநுபவப்படியும் இஷ்டப்படியும் செய்துகொள்ளட்டும். நமக்கு அதில் எவ்வித ஆக்ஷேபனையுமில்லை. இதனை நமதுபரம்பரையார் இருவகையாகச்செய்து அநுபவித்துவருகின்றார்கள். அதில் ஒருவகை சுலபமானது; மற்றொருவகை அதிக கஷ்டமானது; கஷ்டத்திற்குத்தக்க கூலியென்பதுபோல் இந்தக் கஷ்டமான முறையானது சொன்னது சொன்னதுபோல் வியாதிகளைக்கண்டித்து ஜெயம்பெறுவதாக்குகிறது. அதிகப்பிரயோசனத்தை விரும்புவோர்கள் கஷ்டத்துக்குப்பாராமல் செய்துமுடித்து உலகத்தாருக்குப் பிரயோசனப்படும்படி செய்வார்களென நம்புகின்றோம். அவ்விரண்டுமுறைகளையும் இங்கு எழுதுகின்றோம்.

## 990. இலகுவானமாமெழுகு.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த இரசசெந்தூரம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்தவீரம், சுத்திசெய்த கௌரிப்பாஷாணம், சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் சுத்திசெய்த மிர்தார்சிங்கி, சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்தபூரம், சுத்திசெய்த ஜாதிலிங்கம், அபின், சுத்திசெய்தகாந்தம், சூடன் சாம்பிராணி, சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த அராவினதங்க அரபொடி வகைக்கு விராகனெடை-௧, கோழிமுட்டை மஞ்சட் கருத்தயிலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு தனியே எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும். தங்கத்தைத்தவிர மற்றசரக்குகளைத் தனித்தனி பொடித்து முன் அரைத்து வைத்திருக்கிற இரச கெந்தித்தூளையும், மற்றதூட்களையும் ஒன்றாகச்சேர்த்து வைத்துக்கொள்ளவும். தங்கத்தூளை நன்னிக்கல் கல்வத்திலிட்டு மேற்படி அண்டத்தைலத்தைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துப்பிறகு மேற்படி தூளைச்சிறுகச்சிறுகத்தூவி மேற்படி தைலத்தையுஞ்சிறுகச்சிறுகவிட்டு அரைத்துத் தூளெல்லாஞ்சென்றபின்பு மேற்படி தைலத்தையேசிறுகச் சிறுகவிட்டு நான்குசாமநேரமரைக்கவேண்டும். இதற்கு எவ்வளவுக்கெவ்வளவு அரைப்பேறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு குணத்தைத்தரும். வழித்துப்பீங்கான்சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௩.

அனுபானம்:—பனைவெல்லம், சர்க்கரை, சுக்கரைத்தவிழுது, லேகியவகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—கபவாதசன்னி, சுரம், எட்டுவகைக்காசம், எட்டுவகைக்குஷ்டம், விரைவாதம், சூலைரணங்கள், ஏழுவகைத்தோஷம், எட்டுவகைக்குன்மம், ஐந்துவகைவலிப்பு, மாரடைப்பு, சூதகவாயு, மகோதரம், கல்லடைப்பு, குலைவலி, சொத்தி, புரைகள், கண்டமாலை, நீரழிவு, நீர்க்குத்தல், கபம், க்ஷயம், காசம், வயிற்றுப்போக்கு, பவுத்திரம் இவைதீரும்.

பத்தியம்:—நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், பழையது ஆகாது. இந்தப்படி மேற்படி மருந்தை ௩-நாள்



௫-நாள் கொடுக்கவும். வியாதி பலத்துக்குத்தகுந்தபடி இரண்டு மூன்று தடவையாகக் கொடுக்கவேண்டும்.

## விண்ணப்பம்.

அனுபவசாலிகளான அநேகம் அறிவாளிகள், மேற்கண்ட சரக்குகளைத் தம் தம் அனுபவப்படி சுத்திசெய்தே உபயோகித்துவருகின்றார்கள். சிலர் இந்த வானமாமெழுகின் பாட்டின்கருத்தை அறிந்துகொள்ளாமல் "சுத்தியாவதிலை" என்பதற்குச் சுத்தியில்லை யென அர்த்தஞ்செய்து சுத்தியில்லாமற் செய்து நற்குணத்திற்குப்பதிலாகத் துர்க்குணமுண்டாகி மோசம்போகின்றார்கள். ஆகையால், அந்தச்செய்யுட்களை இங்கெழுதியது பெரியோர்கள் நமக்குத் தெரிவித்திருக்கிற அனுபவப்படிமுறையை இங்கு எழுதுகின்றோம். அதனைக்கவனித்துச்செய்பவர்களுக்குஅநேக நற்குணங்களுண்டாகவாகும். அது பின்வருகிறவிதமாம்.

## 991. மகாவானமாமெழுகு.

சந்தவிருத்தம்.

விந்துவிந்துசிந்தூரரசமுடன்
வீரமோடுசிவகாமியும்
வெள்ளைசெங்கட்சத்திரம்புகழு
வீறுமான்குறிபெட்டியின்
சொந்தமானமுருகன்பூரணமரி
நூபதிபாமிதாரமே
"சுத்தியாவதிலை" பாருபாருபரி
சுத்தமானகுவைத்திலே
சித்தைகொண்டுபதினாறுமொன்றுபட
சேர்த்தரைத்துவிடுதூளதாச்

சிக்கிரத்தில்விடுவாணமாமதனை
சேருநாதகநதைலமாம்
முந்திவிட்டுவருசாமகான்குமரை
முற்றுமாமெழுகுமூந்ததாம்
மோசமின்றிபனைவெல்லமாகபெறு
மோங்குபத்தியமுமில்லையே.

இல்லையில்லைகபவாதஜன்னிசுர
மெட்டுகாசமொடுகுட்டமு
மேறுகின்றவிரணவாதஞ்சூலைரண
மேழுதோஷமடுகுன்மமுஞ்
சொல்லுகின்றவலிமாரடைப்புகடு
சூதகக்கெடுமகோதரஞ்
சோகைமஞ்சட்காமாலைசத்திபெரு
தொல்லைபோக்கொடுபவுத்திரங்
கல்லடைப்புகுலைகோய்கிரந்திபுலை
கண்டமாலைஜலதாரையிற்
கண்டகிரிபூவுருத்த...னமுடி
காசரோகமுதலானது
மெல்லைவிட்டெழுகடல்கடந்தபின்
னென்னபாடுபடுமேறிகிலோ
மிந்தவான்மெழுகுவெந்தகாளுமுயி
ரென்னலாகுமிதுவுண்மையே.

இப்பாட்டில்கண்ட சரக்குகளின் விபரமாவது:—

1-லிங்கு-இரசம்: 2-லிங்கு சிந்தூரம்-இரசசிந்தூரம், 3-நாதம்-நெல்லிக்காய்க்கெந்தகம், 4-வீரம்-சவ்வீரம், 5-சிவகாமி-கௌரி, 6-வெள்ளை-வெள்ளைப்பாஷாணம், 7-சிங்கி-மிர்தார்சிங்கி, 8-நட்சத்திரம்-பூ



ரம், 9-புகறு-பூநீறு, 10-ஆண்குறி-லிங்கம், 11-எட்டிபின்-அ+பின்-(அதாவது அபின்) 12-முருகன் புராணம்-காந்தம், 13-அரி-பொன், 14-தாபம்-சாம்பிராணி, 15-தீபம்-சூடன், 16-அரிதாரம்-தாளகம்.

இதன்மூலமாக-கசு-சரக்குகளின் விபரத்தையும் தெரிந்துகொள்ளலாம். இனி, இவற்றைச்சுத்திசெய்யுங் கிரமங்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். இவற்றுள் வீரம், கௌரிப்பாஷாணம், வெள்ளைப்பாஷாணம், பூரம், தாளகம் ஆகிய இவ்வைந்து சரக்குகளும் கொடிய நஞ்சின் குணமுள்ளவைகளாகையால் இவற்றை அவசியம் சுத்திசெய்ய வேண்டும்: ஆனால், செய்யுளில் "சுத்திபாவதில்லை பாரு பாரு" என்றிருப்பதை முன்னிட்டு அநேகர் இவ்வாக்கியத்தின் உட்கருத்தையறியாது சுத்திபாவது இல்லையென்று அருத்தம் பண்ணிக்கொண்டு இவற்றைச் சுத்தியில்லாமற்செய்து வருகின்றார்கள். இவ்விதம்செய்து வருவது சாஸ்திரம், யுக்தி, புத்தி, அனுபவம் முதலியவைகளுக்குச்சற்றும் பொருந்தாது. இதன் நுட்பம் அநுபவசாலிகளிடம் கேட்டுத்தெரிந்துகொள்ளாதவரையில் விளங்காது. இம்முறையின் நுட்பத்தைப் பெரியோர்களிடம் கேட்டு அடியேன் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆதலால், அதன்படியே இம்முறையின் விபரத்தைக்கீழே எழுதுகிறேன். இன்னும் இவ்விஷயத்தில் இதைக்காட்டிலும் அதிக விபரம் தெரிந்தவர்கள் தெரிவித்தால் அவ்விபரத்தையும் அடுத்த பதிப்பில் அச்சிட்டு அவர்களுக்கு நன்றி செலுத்திவருவேன்.

நான் கேட்டுக்கொண்டபடி மேற்படி பாட்டிலுள்ள, "சுத்திபாவதில்லை பாரு பாரு" என்றவாக்கியத்தொ

டருக்கு அருத்தமாவது: (சுத்தியாவது-ஷை சரக்குகள் சுத்தியாகப்பொருந்துவது; இலை-ஓர் மூலிகையாம்; பாருபாரு--அதனைத்தேடு தேடு,) என்பதாம். இந்த அருத்தத்தின்படி சுத்திக்கு ஓர் இலையுண்டு; அதனைத்தேடியறிந்து சுத்திசெய்துகொள்ள வேண்டுமென்பதாக ஏற்படுகிறது. இனி அந்த இலையாவது யாதென்றால்; ஒருவகைக்கீரையாம். இலையென்பது, இலைக்கறியாதலாலும், இலைக்கறி கீரையெனப்பொருள் படுதலாலும் இதனைக்கீரையென்றே தீர்மானிக்கவேண்டும். அவ்வகைக்கீரைகள் பலபேதங்களாயிருப்பதால், அவற்றுள் இதற்குரியது யாதென்றால்; எல்லாச்சரக்குகளுக்கும் சேர்த்து, "சுத்தியாவது இலை" என்று ஒன்றையே குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதால்; அப்படியே எல்லாவற்றையும் கட்டக்கூடிய கீரையேயாம். அவ்வாறு மேற்கண்ட எல்லாச்சரக்குகளையும் சுத்திசெய்வதுடன் நெருப்பிற்கோடுஞ்சரக்குகளை நெருப்பிற்கோடாமல் கட்டக்கூடியது முள்ளிக்கீரையே. இது இலகுவாகக் கிடைக்கக்கூடியதாயிருந்தும் இதனைச்செய்யுட்காரர் என்மறைத்து வைத்தாரென்றால்; ஆசான்கள்மூலம் கஷ்டப்பட்டுத்தெரிந்துகொள்ளவும் இதற்கு ஒருநல்லமதிப்பு உண்டாவதற்குமேயாம். இதனை வெளிப்படையாக முள்ளிக்கீரையென்று சொல்லியிருந்தால் ஒவ்வொருவரும் முள்ளிக்கீரைதானே என்று மிகவும் எளிதாக மதிப்பதால் இதற்குள்ள ஒரு மதிப்பான தத்துவம் கெட்டுவிடும். நமது பெரியோர்கள் இப்படி ஒவ்வொரு இலகுவானவஸ்துக்களையும் பெருமை ஏற்படுவதற்காக அருமைபாராட்டுவது வழக்கம். இனி மேற்படி முள்ளிக்கீரையால் மேற்கண்டசரக்குகளைச் சுத்திசெய்யும் மார்க்கத்தைக் கூறுவாம்.



முள்ளிக்கீரை சமூலத்தை வெயிலில் நன்றாயுலர்த்திப் பெரியசட்டியில் அமுக்கி அடுப்பில் வைத்து எரித்துச்சட்டியிலும் நெருப்பிட்டு நன்றாய் வெளுத்துப் பஸ்மமாகிறவரையில் எரித்து ஆறினபின் மேற்படி பற்பம் ஒருபங்கு, சுத்தஜலம் இரண்டுபங்கு. இவ்விரண்டையும் கலந்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டுமணிக்கொரு தடவை நன்றாகக்கலக்கி வரவேண்டும். இவ்விதம் மூன்றுநாட்கள்செய்து காலம்சென்ற சுத்தமாய்த்தெளிந்த தெளிவைக்காய்ச்சி எட்டிலொருபாகமாகச் சுண்டவைத்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தவேண்டும். இதற்குக் குருநீரென்று பெயர். எரிக்கும்போது தீயை மெதுவாயெரிப்பதுடன் மாக்கொம்பால் அமுக்கிவரவேண்டும்.

வீரசுத்தி:--செல்லத்தக்க அளவு வீரத்தைக் கல்வத்திலிட்டு முன் குருநீரைக் கொஞ்சமாய்விட்டு ௧-தினம் அரைத்துப் பில்லைசெய்து சிறுமண்குடுவையில் கரிநெருப்பிட்டு அதன்மீது ஓட்டைவைத்துக் கைதாங்கும்படியான சூடுகண்டவுடன் மேற்படி பில்லையைவைத்து உருகுஞ்சமயத்தில் குடாலெடுத்துச் சற்று ஆறவிட்டு முன்போலவே ஜெயநீராலரைத்துப் பில்லைசெய்து மறுபடியும் முன்போலவே ஓட்டில்வைத்து உருகுஞ்சமயத்திலெடுத்து ஆறவைக்கவேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி-௨௰-தடவைகள் செய்யின் சீக்கிரம் உருகுந்தன்மை நின்றுபோம். இன்னும் பத்துத்தடவைகள் அதிகம்செய்யின் அறவே உருகாது. இவ்விதம் செய்து உருகும்குணம் நின்றுவிட்டபின் முன்போலவேயரைத்து மேலோட்டை யெடுத்துவிட்டுப் பில்லையைக்குறட்டில் பிடித்துக்கொண்டு நெருப்பில் அப்பா

த்தைப்போல் திருப்பித்திருப்பி வாட்டவேண்டும். புகையெழும்புகிறதாயிருந்தால் பில்லையைக் கீழேவைத்து ஆறினபின் வாட்டவேண்டும். ஈரமில்லாது நன்றாகக்காய்ந்தபின் முன்போலவே குருநீர்விட்டரைத்துப் பில்லைசெய்து வாட்டவேண்டும். இவ்விதம் வாட்டிவரும்போது நெருப்பின்மீதுள்ள பில்லையானது செங்கல்லைப்போல சிவந்தவருணமாய்வரும். அதுவே பதமென்றறிந்து பில்லையை எடுத்து ஒரு ஓட்டில்வைத்து அதனை ஒரு பீங்கான்கோப்பையால்மூடிக் காற்றில்லாதவிடத்தில் வைத்து மறுநாளெடுத்துக் கல்வத்திற் பொடித்துப் பத்திரப்படுத்தவும். இதுவே வீரத்தின் சுத்தி, வீரக்கட்டு, ஜெயவீரம் என்று சொல்லப்படும். இது நெருப்பிற்புகையாது. இதனைத் தனியாகவும் அநேகம் வியாதிகளுக்கு உபயோகிக்கலாம். வாய்வேகாது. இது முதன்முதல் வெண்மையாயிருக்கும்; பிறகு சிறு சிவப்பாகும்; அதன்பிறகு கடுஞ்சிவப்பாகும்; அதன்பின்பு சிறுகறுப்பாகும்; பின் கடுங்கறுப்பாகும். முடிவில் பச்சைவருணமுள்ளதாகும்; நெருப்பிலிருக்கும்போது செங்கல்லைப்போலச் சிவந்திருக்கினும் மறுநாள் அரைக்கும்போது பச்சைவருணமுள்ளதாகவேயிருக்கும். வாயிலிட்டால் ஒருசிறிதும் துர்க்குணமேபிராது. முடிவாய்ச்சொல்லின் வீரத்துக்குள்ள துர்க்குணங்களெல்லாம் நீங்கி அநேகம் நற்குணங்களுண்டாகிவிடுமாகையாலும் இதன் சிறந்தகுணங்களை அநுபவசாலிகள்தெரிந்து இதனைத் தனியாகவே உபயோகித்து வெற்றியடைவார்களாகையாலும், இதைப்பற்றி இங்கு விரிவாயெழுதுவது அநாவசியம்.



இப்படியே கவுரிப்பாஷாணம், வெள்ளைப்பாஷாணம், மிர்தார்சிங்கி, இரசகற்பூரம், அரிதாரம் இந்த ஐந்து சரக்குகளையும் சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

பாலரசசுத்தி:—ஒரு புதுமண்சட்டியில் ஒருபடி உப்பைவறுத்துப் பொடித்துப்போட்டு அதினடுவிற் பள்ளம்செய்து அப்பள்ளத்தில் ஐந்துபலம் பாலரசத்தைவிட்டு மேற்சட்டிமூடி வலுவாய் ஏழுசீலைமண்செய்து அடுப்பின்மீதுவைத்து முன் ஒருசாமம் மெதுவாயெரித்துப் பிறகு மூன்றுசாமம் காடாக்கினியாக எரித்துக் குளிர ஆறினபின் ஜாக்கிரதையுடன் எடுக்கவேண்டும். சிலபாகம் பதங்கித்தும், ஜனித்தும், சிலபாகம் பதங்கிக்காமல் வைத்தரசமாகவுமிருக்கும். இம்மூவகையையும் ஒன்றாகச்சேர்த்து முன்போலவே சட்டியில் உப்பைவறுத்திடித்துப்போட்டுமத்தி நடுவில் பள்ளம்செய்து அதில்வைத்து முன்போலவே மேற்சட்டிமூடி வலுவாய் ஏழுசீலைமண்செய்துலர்த்தி முன்போலவே நான்குசாமம் எரித்துக் குளிர ஆறினபின் எடுக்கப்பெரும்பாகம் பதங்கித்து ஜனிக்காமலிருக்கும்; சிறுபாகம் ஜனித்தும் ஜனிக்காமலுமிருக்கும். இவையெல்லாவற்றையும் முன்போலவே ஒன்றாகக்கலந்து முன்போலவே உப்பில்வைத்தெரித்துக் குளிர ஆறினபின் எடுக்க மேலே பதங்கிக்காமல் எல்லாம் கீழேயே பிரகாசத்துடன் சிறு கம்பிகளைப்போலும், தூளாகவுமிருக்கும். இரசத்தைப் பதங்கிக்கும்முறை நமது இரசவாதசிந்தாமணியில் அநேகம் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளிலொருமுறையாகவும் செய்துகொள்ளலாம். பின் அப்பதங்கத்தை முன் முள்ளியுப்பு ஜெயநீர்விட்டரைத்து வீரத்தைச் செய்ததுபோலச் செய்துகொள்ளவே

ண்டும். இதுவே இரசகுத்தியும் கட்டுமாம். இரசத்தை நெருப்பிற்கோடாமல் கட்ட இதுவே வெகுசுலபமான மார்க்கமென்பது அநுபவசாலிகளான பெரியோர்களின் சித்தாந்தம்.

கெந்தகசுத்தி:—ஐந்துபலம் நெல்லிக்காய்க்கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப்பொடித்து முன் ஜெயநீரை விட்டு இரண்டு மூன்றுமணிநேரமரைத்து நிழலில்வைத்து ஈரமுலர்த்திக்கொள்ளவேண்டும். ஒரு வாயகன்ற சட்டியில் முக்காற்படி பசுவின்பாலைவிட்டுச் சட்டிவாய்க்குக் கெட்டியான மெல்லிய வஸ்திரத்தால் வேடுகட்டி அதன்மேல் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கெந்தகத்தைப் பரப்பிவைத்து அதன்மேல் சாணைக்கியால் மூடிச் சட்டியின் வாயானது மறையும்படியாகப் பூமியிற் புதைத்துச் சாணைக்கியின் உதடுகளைச்சுற்றிலும் மண்ணைத்தள்ளி யணைத்துச் சாணைக்கியின்மேல் இ-ஈ. வறட்டிப்புடமிடவேண்டும். இந்தச்சூடு சாணைக்கியிற்றுக்கி அதனால் கெந்தகமுருகித் துணிவழியாகப் பாலிலிறங்கி நிற்கும். அதையெடுத்து ஈரமில்லாமல் வஸ்திரத்தால் துடைத்து முன்போலவே முன்ஜெயநீரை விட்டு முன்போலரைத்து முன்போலவே புடமிடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுதடவைகள் செய்யின் கெந்தகமானது பவழம்போல சிவந்ததாகும். இங்கு இது போதுமானதாம். இதனையே மடக்கி மடக்கி நூறுதடவைகள் செய்யின் முழுக்கட்டாகி நெருப்பிற்கோடாது. இது, வைத்தியம், வாதம் என்னும் இருவகைக்குமாம். இதனைத்தனியாகவே பல வியாதிகளுக்கு உபயோகிக்கலாம். இதன்விசேஷத்தை அநுபவசாலிகள் தாமே தெரிந்துகொள்வார்கள்.



இரச சிந்தூரசுத்தி:—இரச சிந்தூரத்தை மேற்படி ஜெயநீரை விட்டரைத்துப் பில்லைசெய்து புதிய ஓட்டில் வைத்துக்கரிநெருப்பில் ரொட்டியைப்போல திருப்பித் திருப்பிவாட்டி யெடுக்கவேண்டும். ஈரமில்லாமல் நன்றாய் வறண்டபின் முன்போலவே முன் ஜெயநீரைவிட்டரைத்துப் பில்லைசெய்து முன்போலவே வாட்டியெடுக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழுதடவைகள் செய்யின் சுத்தியாம். இதனை அநுபவசாலிகள் தனியாகவே உபயோகிப்பார்களாகையால் இதைப்பற்றி இங்கு அதிகம் எழுதுவது அநாவசியமாம்.

காந்தத்தையும் இந்தப்படியே சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

தங்க சுத்தி:—தங்கத்தைத் தகடடித்துப் பூங்காவியில் காடியை விட்டரைத்துக் கவசித்துக் கரிநெருப்பில் பழுக்கக்காய்ச்சி யெடுத்து ஆறினபின்பு மேற்கவசத்தை நீக்கிவிட்டு முன்போலவே பூங்காவியை அரைத்துப்பூசிக்காய்ச்சி யெடுக்கவேண்டும். இவ்விதமாக ஏழுதடவைமடக்கிமடக்கிக்காய்ச்சி யெடுக்கத் தங்கமானது சுத்தியாகும். இதனை மெல்லிய அரத்தால் அராவித் தூளாக்கிக்கொள்ளவேண்டும்.

பூநீறு சுத்தி:—பூநீற்றை முறைப்படி தீக்ஷைசெய்துகொண்டால் உத்தமம். அப்படிச்செய்ய ஏலாதவர்கள் பூநீற்றைக்கடல் ஜலத்தில் கரைத்துத் தெளிவெடுத்துக்காய்ச்சிக்கொள்ளவும். இவ்விதம் ஏழுதடவைகள் மடக்கி மடக்கிக் காய்ச்சிக்கொண்டால் பூநீறு சுத்தியாம்.

சாம்பிராணி சுத்தி:—சாம்பிராணிப் பூவெடுத்துக் கொள்ளவேண்டும். ஆனால், நாம் கஷ்டப்பட்டுச் செய்வதைப்பார்க்கிலும் சீமையிற்செய்யப்பட்டு இங்கு விற்கப்படும் சாம்பிராணிப்பூவை இங்கிலீஷ் மருந்து ஷாப்பில் வாங்கிச் சேர்த்துக்கொள்வதே உசிதம்.

கற்பூரசுத்தி:—தீபகற்பூரம் என்னும் சூடனை நாம் சுத்திசெய்வதைப்பார்க்கிலும் சீமையிற் சுத்திசெய்யப்பட்டு வந்து பனிக்கட்டியைப்போன்ற பில்லைகளாக இங்கிலீஷ்மருந்து ஷாப்புகளில் விற்கப்படுவதை வாங்கிச் சேர்த்துக்கொள்வது உத்தமம்.

அபின் சுத்தி:—அபினைத் தண்ணீரிற்கரைத்து மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டி ஆலயந்திரத்திற் காய்ச்சி நீர் சுண்டின பக்குவத்திலெடுத்துக் கொள்வதே இதன் சுத்தியாம்.

அண்டத்தைலம்:—கருங்கோழி முட்டையிலாவது அது அகப்படாவிட்டால் சாதாரண கோழிமுட்டையிலாவது நூறுமுட்டைகளை வெந்நீரிற்போட்டு அரைமணிநேரம் வேகவைத்துப் பிறகெடுத்துத் தோலைப்போக்கி மஞ்சட்கருக்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு இரும்புவாணலியை அடுப்பில் வைத்துச் சூடுகண்டவுடன் மேற்படி மஞ்சட்கருக்களை அதில்போட்டு ஒரு இரும்பு அகப்பையால் அழாவிவரவேண்டும். இவ்விதம் செய்து வருகையில் கருக்கள் கருகித் தீய்ந்த பதமாயிருக்கும்போது சுத்திசெய்த ௨ பலம் பூநீற்றைத் தெளித்து முன் அகப்பையால் கைவிடாமல் கிண்டி வரவேண்டும். இப்படிச் செய்து வரும்போது கருக்களெல்லாம் தீய்ந்து கருகித்



தைலம்வெளிப்பட ஆரம்பமாகும். இச்சமயத்தில் தீயை மெதுவாயெரித்து வாணலியைக்கொஞ்சம் சாய்த்து வைத்து எரித்துவந்தால் தைலமெல்லாம் ஒருபக்கமாக வடிந்துசேர்ந்திருக்கும். அதனை மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டி சீஷாவில் பத்திரப்படுத்தவேண்டும். இந்தத் தைலமானது தனியாகவே அநேக வியாதிகளுக்கு உபயோகப்படுவதன்றி வாதம்வைத்தியமென்னும் இருவகைமுறைகளுக்கும் உபயோகமாகிறது. இவ்விதம் செய்யாமல் தனியாகச்செய்யப்படும் தைலமானது இதைப்போன்ற சிறந்த குணமுடையதாகாது.

செய்முறை.

இதுவரையில் இம்முறையிலுள்ள சுத்திக்கிரமங்களையும், கட்டுவகைகளையும் சொன்னோம். இனி, இதன் செய்முறை விபரத்தைப்பற்றிச் சொல்லுவாம்.

கவனிப்பு.

இம்முறையோ மிக்க அருமையானதென்பதும், இதனால் அளவிறந்த பிரயோசனமுண்டாமென்பதும் வைத்தியத்தொழிலில் அநுபவமுள்ளவர்களுக்கு நன்குவிளங்கும். இது செய்வதற்கு மிகவும்கஷ்டமுள்ளதாயினும் கஷ்டப்பட்டாவது செய்துமுடித்துக்கொண்டால் தக்க பிரயோசனமுண்டாகும். வைத்தியபுத்தகங்களில் ஒருபக்கம் பார்ப்பதற்குள்ளாகவே சோம்பிப் புத்தகங்களைக்கீழேவைத்து உயர்ந்தமுறைகளைக்கண்டால், இது செய்வதற்கு மகாகஷ்டமானது, இதனைச்செய்ய யாரால் முடியும்? முறைகளெல்லாம்கண்ணால்பார்த்தவுடனே முடிக்கக்கூடியவைகளாயிருக்கவேண்டும்; செலவோ பைசாவுக்குள் அடங்கவேண்டும் என்று சொல்லிக்கொ

ண்டிருப்போர்க்கு இத்தகைய முறைகளைச்செய்வது மிகவும் கஷ்டமாகவே முடியும். இன்னும் இத்தகையினர்க்கு அவ்வகை இலகுவான முறைகளையெழுதினாலும் அதைப்பார்க்கும்போதும் கஷ்டமென்றே தெரியும். ஆதலால், இவர்களுக்கு இருவகையாலும் பிரயோசனமில்லை. எதையும்செய்து முடிக்கக்கூடியவர்களுக்கு கஷ்டமானமுறைகளும் இலகுவாக முடியும். எதையும் செய்துமுடிப்பதற்குமனோதைரியமேபிரதானகாரணம். "மனமுண்டானால் வழியுண்டாகும்" என்ற உண்மையை அறிந்தவரே இத்தகைய முறைகளைச்செய்து முடிக்க வல்லவராவார். அப்படி முடித்தோரே இந்த ஒரு மருந்தைக்கொண்டே எல்லாவியாதிகளுக்கும் இலகுவாக வைத்தியஞ் செய்வதற்குரியவராவார்.

செய்முறை ஆரம்பம்:—முன் சுத்திசெய்து வைத்திருக்கின்ற சரக்குகள் ஒவ்வொன்றையும் சம்நிறையாக நிறுத்தெடுத்து ஒவ்வொன்றையும் தனித்தனியே தூள்செய்து கொள்ளவேண்டும். முன்னர் தங்கத்தைக் கல்வத்திலிட்டுச் சற்றுநேரம் அரைத்துப்பிறகு இரசத்தைச்சேர்த்தரைக்கவேண்டும். அதன்பின்பு கெந்தகத்தைச் சேர்த்தரைக்கவேண்டும். அதன்பின்பு தாளகம், வீரம், வெள்ளை, கவுரி, மனோசிலை, பூரம், லிங்கம், காந்தம், சாம்பிராணி, குடன், அபின், இரசசிந்தூரம், பூநீறு ஆகியவைகளை முறையே ஒன்றன்பின் ஒன்றாகச்சேர்த்துச் சற்றுநேரம் அரைக்கவேண்டும். இவ்விதம் எல்லாச்சரக்குகளையும் ஒன்றாகக்கலந்தரைத்துக்கொள்ளவேண்டும். எல்லாம் ஒன்றாக மிஸ்ரமித்தபின் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற அண்டத்தைலத்தைச் சிறுகச் சிறுகவிட்டுக் கைவிடாமல் நான்கு



சாமமரைத்து மெழுகுபதமான தருணத்தில் பீங்கான்டப்பியில் அல்லது தந்தடப்பியில் வைத்து மூடி நன்றாய்ப் பந்தனம்செய்து-உக நாள் தானியபுடம் வைத்தெடுத்துத்தம் தம் சக்திக்கேற்ற விதமாகவும், வியாதிக்காரர்களின் சக்திக்கேற்ற விதமாகவும் அன்னதானமுதலியவைகளைச்செய்து சுபமுகூர்த்தத்தில்மருந்தை ஆரம்பிக்கவேண்டும்.

பிரமாணம்:—ஒரு உழுந்துப்பிரமாணம். அதாவது: ஒரு உழுந்து நிறையுள்ள மாத்திரைகளாகச்செய்து வியாதியின் பலத்திற்குத்தகுந்த விதமாகவும் ரோகியின் தேகபலத்திற்குத் தகுந்தவிதமாகவும், ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் அந்தந்த நோய்களுக்குத்தகுந்த அனுபானங்களிற் கொடுக்கவேண்டும். சமயோசிதமாகக் காலையில் ஒருவேளை மாத்திரம், அல்லது காலை மாலையென்னும் இரண்டுவேளையும் கொடுக்கலாம்.

பத்தியம்:—இதற்கு ஒருவகைப் பத்தியமும் இல்லையெனச் செய்யுளிற் சொல்லப்படினும், அந்தந்த வியாதியையுண்டாக்குங் காரணங்கள், பதார்த்தங்கள் ஆகியவைகளைக்கட்டாயம் நீக்கவேண்டும். எல்லா வியாதிக்கும் ஏதுவான பெண்ணையும் மருந்துகளின் வேகத்தைத்தணிக்கும் புளியையும் தள்ளிவைக்கவேண்டியது மிகவும் அவசியம். இனி, அவரவர்கள் இஷ்டம்போலும் சமயத்திற்குத் தகுந்த விதமாகவும் பத்தியம் வைக்கவேண்டியது சிகிச்சகரின் கடமையாம்.

இம்மருந்தால் தீரும் வியாதிகளாவன:—வாதசுரம், கபசுரம், வாதசிலேஷ்மசுரம் முதலிய சுரங்களும்,

வாதசன்னி, கபசன்னி, சந்திகசன்னி, புக்னநேத்திரசன்னி, ஜிம்மகசன்னி, பிரதாபசன்னி, அந்தகசன்னி, சிதாங்கசன்னி, கர்ணிகசன்னி, அபந்யாசசன்னி முதலியசன்னி பாதங்களும்,

வாதகாசம், கபகாசம், இரத்தகாசம், க்ஷயகாசம், வாத சுவாசகாசம், கபசுவாசகாசம், வாதகபகாசம், வாதகபசுவாசகாசம் முதலிய காசரோகங்களும்,

விசர்ச்சிகாகுஷ்டம், விபாதிகாகுஷ்டம், ருசிய ஜிம்மிககுஷ்டம், சர்மகுஷ்டம், ஏககுஷ்டம், கிடிபகுஷ்டம், சிதமகுஷ்டம், அலசகுஷ்டம் முதலிய குஷ்டரோகங்களும்,

மகாகுஷ்டரோகங்களான அவுதும்பரம், மண்டலம், புண்டரிகம், கபாலம், காகசம் ஆகியவைகளும்,

அண்டவாயு, அண்டவீக்கம், அண்டம் வீங்கியுண்டாம் சுரம் முதலிய அண்ட சம்பந்தமான வாதரோகங்களும்,

வாதசூலை, கபசூலை, வாதகபசூலை, ஆமசூலை, சர்க்கராசூலை, குன்மசூலை, மேகசூலை, முறிச்சூலை, நிதம்பசூலை, பக்கசூலை, கருப்பசூலை முதலிய சூலைரோகங்களும்,

வாத துஷ்டவிரணம், கபதுஷ்ட விரணம், வாதகபதுஷ்டவிரணம் முதலிய விரணரோகங்களும், வாதபகந்தரவிரணம், கபபகந்தரவிரணம், வாதகபபகந்தரவிரணம் முதலிய பகந்தரவிரண ரோகங்களும்,

சங்கடதோஷம், விஷமதோஷம், விஷம[illegible]தோஷம், பீதஜிம்மகதோஷம், ரக்தஜிம்மகதோஷம், கிலேஷ்



ணஜிம்மகதோஷம், அபத்தியதோஷம் முதலியதோஷங்களும்,

வாதகுன்மம், கபகுன்மம், வாதகபகுன்மம், வலிகுன்மம், ருதுகுன்மம், கட்டிகுன்மம் முதலிய குன்மரோகங்களும்,

மார்புவலி, மாரடைப்பு, மார்க்குத்து, வாதமார்புரோகம், சிலேஷ்ம மார்புரோகம், கிருமி மார்புரோகம் முதலியமார்பைச் சேர்ந்த ரோகங்களும்,

சூதகக்கட்டு, சூதகசன்னி, சூதகமூர்ச்சை முதலிய சூதகக்கெடுதியாலுண்டாம் வியாதிகளும்,

வாதோதரரோகம், சிலேஷ்மமகோதரம், பிலீகோதரரோகம், பகுர்மீதாதரரோகம், பந்தோதரரோகம், ஜலோதரரோகம் முதலிய மகோதரரோகங்களும்,

வாதசோபை, சிலேஷ்மசோபை, வாதசிலேஷ்மசோபை, விஷசோபை முதலிய சோபைரோகங்களும்,

வாதகாமாலை, கபகாமாலை, வாதகபகாமாலை, கும்பகாமாலை, குன்மகாமாலை, மஞ்சட்காமாலை முதலிய காமாலை ரோகங்களும்,

வாத வாந்திரோகம், கபவாந்திரோகம், வாதகபவாந்திரோகம், கிருமி வாந்திரோகம் முதலிய வாந்திரோகங்களும்,

கிரகணிரோகம், அதிசாரரோகம் முதலிய பலமலப்போக்கு ரோகங்களும்,

நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு முதலிய நீர்க்கட்டு ரோகங்களும்,

நால்வலி, நால்குத்து, நால்வீக்கம் முதலிய நால் சம்பந்தமான பலரோகங்களும்,

அரிகிரந்தி, கள்ளிப்பூக்கிரந்தி, நுணுக்காய்க்கிரந்தி, அடிகிரந்தி, படிகிரந்தி முதலிய பல கிரந்திரோகங்களும்,

கழுத்தைச்சுற்றிலும் உண்டாகும் கட்டிகள், அக்குள்களில் உண்டாகும் கட்டிகள், துடைக்கவுட்டிகளிலுண்டாகும் கட்டிகள் முதலிய கட்டிரோகங்களும்.

நீர்பேதி, அதிமூத்திரரோகம், சொட்டுமூத்திரம், நீரழிவு முதலிய ரோகங்களும்,

கண்ணில் உண்டாகும் காசரோகமும்,

இன்னும் இங்குச்சொல்லப்படாத அநேகரோகங்களும், நல்லபாம்பு, நாய் முதலிய பல விஷங்களும் தீரும்.

இவ்வரிய அவுடதத்தால் அஷ்டமகாரோகங்களான வாதரோகம், கல்லடைப்புரோகம், குஷ்டரோகம், மேகரோகம், மகோதரரோகம், பகந்தரரோகம், கிரகணிரோகம் முதலிய அநேகரோகங்கள் தீருகின்றபடியாலும், எந்தநேரத்திலும், எந்தச் சமயத்திலும், உபயோகமாகின்றபடியாலும் இது உத்தமபண்டிதர்களுக்கு உயிருக்குச் சமானமானதாம்.

### 992. குடல்வாதச் சிகிச்சை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த காந்தம், சுத்திசெய்த வெண்காரம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த பால்துத்தம் இவை வகை-௧-க்கு



விராகனெடை-உ௫, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கெந்தகத்தையும், இரசத்தையும் தொந்திக்கரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச்சேர்த்து ஒருமணிநேரம் கைவிடாமலரைத்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்குசாமநேரமரைத்துச் சிறுபில்லைகளாகச்செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

பலகறை பலம்-உ௫, எலுமிச்சம்பழச்சாறு பலம் -௯, பலகறையை ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு மேற்படி எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு வெயிலில் வைத்துவந்தால் பலகறைகரைந்துவரும். இங்ஙனங்கரைந்த பலகறையைத் தனியே எடுத்துவைத்துக்கொள்ளவும். எல்லாப்பலகறையும் அறவேகரைந்தபின்பு எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து மேற்படி எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய்போலானபின்பு ஒரு மூசையும் மூடியும்செய்து வெயிலில்காயவைத்து நன்றாகக்காய்ந்தபின்பு முன்சித்தப்படுத்திவைத்திருக்கிற பில்லைகளை இந்த மூசையிற்போட்டு அதன் மூடியால்மூடி ஏழுசீலைமண்செய்து செம்மையாக உலரவைத்துக் கவசத்தின் ஆறுயங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கவசத்தைப்பிரித்து மூசை, மேல்மூடி ஆகியவைகளுடன் எடுத்துப் பொடித்துப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-உ.

அநுபானம்:— தேன், பனைவெல்லம், லேகியவகைகள் ஆகியவைகளாம்.

உபயோகம்:—சூடல்வாதம், மகோதரம், பொருமல், குன்மம், பலவகை வாயு ஆகியவை தீரும்.

## 993. நீர்க்கட்டுச் சிகிச்சை.

வெண்காரம், வெடியுப்பு, சீனக்காரம், இந்துப்பு இவை வகை-க-க்குப் பலம்-க, கற்பூரசிலாசத்து பலம்-ச.

செய்முறை:—எல்லாவற்றையும் தனித்தனி பொடித்து ஒன்றாகச்சேர்த்து இரண்டுசாமநேரம் கைவிடாமலரைத்து ஒரு அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துப் பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-முதல் ரு-வரையில்.

அநுபானமும், உபயோகமும்:—சீரகச்சூரணம் அதிமதுரச்சூரணம், கற்கண்டுச்சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-க, நெய் விராகனெடை-ங, இவற்றைமிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப்பிரமாணப்படி அநுபானித்து உட்கொள்ள நீரருகல், சொட்டுமூத்திரம், நீர்க்கடுப்பு, நீரெரிச்சல் ஆகியவை தீரும்.

கல்கண்டைப்பொடித்த சூரணம் விராகனெடை-உ, அல்லது பச்சைக்கற்பூரத்தைப் பொடித்தசூரணம் குன்றிமணியெடை-உ, நெய் விராகனெடை-ங, இவற்றை மிஸ்ரமித்து மேற்கண்டபற்பத்தைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண, நீர்க்கட்டு, சொட்டுமூத்திரம், சதையடைப்பு ஆகியவைகள் தீரும்.



இன்னும் இளநீர், முள்ளங்கிக்கிழங்குச்சாறு, வெள்ளரிவிதையை அரைத்துப்பிழிந்தபால் ஆகியவைகளில் சமயோசிதம்போல் அநுபானித்துக்கொடுக்க மேற்கண்ட ரோகங்கள்தீரும். இன்னும் இதனை நீர்ப்பை நீர்த்தாரை ஆகியவைகளின் வியாதிகளில் சமயோசிதம்போல் தகுந்த அநுபானங்களில் உபயோகிக்கலாம்.

## 994. கள்ளிபற்பம்.

சதுரகள்ளிப்பால் ஆழாக்கு-க, புளியிலைச்சாறு ஆழாக்கு-உ, ஆவாரையிலைச்சாறு ஆழாக்கு-உ.

செய்முறை:—இவற்றை ஒருகலயத்திற் போட்டு வாய்க்குச் சில்விட்டுச்சீலைசெய்து உலர்த்திச் சிறுதீயாக எரித்துக்கலயத்தின் அடிவெளுத்தபிறகு தீயை நிறுத்தி ஆறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும். அல்லது கவசத்தின் ஐந்து பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப்பற்பமாயிருக்கும். இதனை சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

ஒரு விராகனெடை இந்தப்பற்பத்தை ஒரு ஆழாக்கு சிற்றாமணக்கெண்ணெயில் கலக்கி சீஷாவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—இந்த எண்ணெய் சிறுவர்களுக்குக் கால் விராகனெடை முதல் ஒரு விராகனெடைவரையில் முலைப்பாலில் அநுபானித்துக்கொடுக்கலாம். பெரியவர்களுக்கு இந்த எண்ணெயில் ஒருவிராகனெடை முதல் இரண்டரை விராகனெடைவரையில் இளநீர், சோம்புத்திராவகம் ஆகியவைகளில் கலந்துகொடுக்கலாம். பற்பத்தைத் தனியாகஉபயோகிக்கலாகாது. பேதி அதிகமாகும் ஆகையால், சிற்றாமணக்கெண்ணெயிற்

கலந்து உபயோகிப்பதால் எவ்விததுர்க்குணமும் உண்டாகாது. இது சற்று கடினமானமருந்தாயினும் முரட்டு வியாதிகளைக்கண்டிப்பதில் மிகவும் சிறந்தது.

உபயோகம்:-வயிற்றிலுள்ள நாக்குப்பூச்சி, தட்டைப்பூச்சி, சிறுகிருமி ஆகிய எல்லாவகைக் கிருமிகளும் நாசமாகி வெளிப்பட்டுப்போம். கிருமி சம்பந்தமாயுண்டாகும் குன்மரோகம், வயிற்றுநோய் ஆகியவைகளும் தீரும். இரைப்பை சம்பந்தமான அநேகரோகங்கள் தீரும். வாயுக்கள், குடல் முறுக்குநோய் ஆகியவைகளும் தீரும். இதனைத் தேகசுபாவம் வியாதிபலம் ஆகியவைகளைத்தெரிந்து தக்க சமயத்தில் உபயோகித்தால் நல்ல பலனைத்தரும்.

### 995. நீலாஞ்சனயோகம்.

சுத்திசெய்த இரசம் பலம்-க, சுத்திசெய்த கெந்தகம் பலம்-க, நீலாஞ்சனம் பலம்-உ. (இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில்விட்டு இது அமிழ்ந்திருக்கும்படியாக எலுமிச்சம்பழச்சாற்றை, அல்லது புளிப்புமாதளம்பழச்சாற்றைவிட்டு வெயிலில்வைக்கவேண்டும். இந்தச்சாறு சுவறிவிட்டால் மறுபடியும் முன்போல்முன் சாற்றைவிடவேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கி ஏழுதடவை சுவறச்சுவறவிட்டு எடுக்க நீலாஞ்சனம்சுத்தியாம்.) இவ்விதம் சுத்திசெய்து மேற்படிமுறையிற் சேர்த்துக்கொண்டால் வாந்தி முதலிய துர்க்குணம் ஒன்றுமிராது.

செய்முறை:-இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு மேற்கண்டபடி சுத்திசெய்த நீலாஞ்சனத்தைப் பொடித்துச்சேர்த்து



நான்குசாமநேரமரைத்து எடுத்துச் சீஷாவில்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ச-அ.

அநுபானம்:—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—குஷ்டரோகங்கள், சிலந்திவிரணங்கள், அழிரணம், குழிரணம், ஆறாதபுண்கள் ஆகியவை தீரும்.

பத்தியம்:—நெய், பால், ஆட்டிறைச்சி ஆம்; புளி, மீன், புகையிலை கூடா.

### குறிப்பு.

இந்த மருந்தை உபயோகித்துவரும்போது சிலருக்கு வாந்தியாகும். பயப்படாமல் உபயோகித்துவரவும். மேற்கண்டபடி சுத்திசெய்து உபயோகித்தால்பெரும்பான்மையும் வாந்தியாகாது.

### 996. ஜலமஞ்சரி.

காந்தம், அயப்பொடி, வெண்காரம், கல்நார், கல்மதம்; கெந்தகம்; வளையலுப்பு; இந்துப்பு;பால்துத்தம், எவட்சாரம், சங்கு, சிலாசத்து; சாஸ்திரபேதி; நவச்சாரம்; சீனக்காரம்; கிட்டம் இவை வகை-க-க்கு விராகனெடை-கவ. நாலாங்காய்ச்சல் வெடியுப்பு அல்லது சால்புர்நீல் பலம்-உ.

செய்முறை:—அயத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்துத் தனியே எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்து இதனுடன்சேர்த்து ஒருமணிநேரமரைத்துப் பிறகு வெ

டிப்புப்பைப் பொடித்துச் சேர்த்தரைத்துப் புதுசட்டில் வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து இறங்கி வரும்பதத்தில் இறக்கிச்சூட்டுடன் கல்வத்தில் வழித்துப்போட்டு ஆறினபின்பு பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-வ-உ.

அனுபானம்:—இளநீர், முள்ளங்கிச்சாறு, சோம்புத்திராவகம், காசினித்திராவகம் முதலியவைகளாம்.

உபயோகம்:—நீர்க்கட்டு, நீராருகல், நீரெரிச்சல், சதையடைப்பு, கல்லடைப்பு முதலிய நீர்ப்பை, நீர்த்தாரை ஆகியவைகளின் ரோகம்தீரும். இதனை அனுபவப்படி உபயோகிக்கவும்.

## 997. பால்பற்பம்.

இரண்டுபடி பாலைக்காய்ச்சி அரைவாசி சுண்டினபின்பு குளிர ஆறவைத்தால் மேலே ஏடுபடிந்திருக்கும். அதனை எடுத்துவிட்டு மீதியான பாலை வடிகட்டி அடுப்பேற்றிப் பருமனான துத்திவேர்க்கட்டையினால் துழாவிவந்தால் பாலானது பற்பமாகிவிடும்.

பிரமாணம்:—விராகனெடை-உ௩, ரு.

அனுபானம்:—நெய், தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—தேகச்சூடு, அஸ்திச்சூடு ஆகியவை தணிந்து தேகக்குளிர்ச்சியுண்டாகும். பால் ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு இவ்விதம் செய்து உபயோகிக்கலாம்.



## 998. நீலகண்டபாலை.

(கரிசல் முறை)

அரிசு, கௌரி, இரசகற்பூரம், சூடன், பச்சைக்கற்பூரம், துத்தம், நாகம், வங்கம், வெடியுப்பு, படிகாரம், வெள்ளைப்பாஷாணம், மனோசிலை, பூநீறு, அரிதாரம், இரசம் இவை வகைக்குப்பலம்-வ, இவைகளையெல்லாம் சுத்திசெய்து கொள்ளவும். காற்படி முலைப்பாலில் சுருக்குக்கொடுத்த ஒரே கட்டியான உலாந்தாசிங்கம் பலம்-௪.

செய்முறை:-வங்கம், நாகம் ஆகிய இரண்டையும் உருக்கி இரசத்துடன் தொந்தித்துக் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்துச்சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்து ஒரு மூசை செய்து நிழலிலுலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். மண்ணை அரைத்துச்செய்த அடிகனத்த இரண்டு பானைவாங்கி இரண்டும் வாய்பொருந்தும் படியாகத் தேய்த்துச் சந்தில்லாமல் சரிப்படுத்தி மேற்பானைக்குச் சித்திரமூலஇலைச்சாற்றைப்பொட்டில்லாமல் தடவிக் காயவைக்கவேண்டும். மறுபடியும் முன்போல் பொட்டில்லாமல் பூசவேண்டும். இவ்விதம் உலர உலர ஏழுதடவைகள் மடக்கி மடக்கி உலரவைத்துச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும். ஐ-படி கறியுப்பையும், ஐ-படி செங்கல்லையும் சேர்த்திடித்துக்கீழ்ப்பானையில் பரப்பிப் பாதிவரை அழுத்தி அதன்மேல் சித்திரமூலவேர்த்தூள் பலம்-உ. போட்டு அதன்மேல் குகையை வைத்து மேற்படி குகையில் முன்லிங்கத்தை நொறு

க்கிவைத்துக் குகைநிறையத் தைவேளைச்சாற்றைவிட்டு மேலும் முன்போல சித்திரமூலத்தூளிட்டு அதன்மேல் முன் உப்புப்பொடியிட்டு மேல்பானைமூடிப் புற்றுமண் அரைத்து எழுசீலை செய்துலர்த்தி வட்டடுப்பில் வைத்துக் காடாக்கினியாக எட்டுச்சாமமெரித்து ஆறவிட்டு எடுத்துப்பார்க்க மேல்பானையில் பதங்கம் எறியிருக்கும். மேற்படி பதங்கத்தையெடுத்துச்சிமிழில் பத்திரப்படுத்தவும்.

பிரயாணம்:—குன்றிமணியெடை-௨-௩.

அநுபானம்:—சாணிப்பாலில் சுத்திசெய்த சேராங்கொட்டை, பறங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு இம்மூன்றும் வகை-௧-க்குப் பலம் ௧, இவற்றைத் தூள்செய்து பசுவின்நெய்யைவிட்டுக் குழம்புப்பதமாயரைத்து வைத்துக்கொள்ளவும். இந்தக்குழம்பு விராகனெடை-௧, பச்சரிசிமா விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இம்மூன்றையும் மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி அநுபானித் துண்ணவேண்டும். கீழ்க்காணும் அநுபான சூரணத்திலும் கொடுக்கலாம். இவ்விதம் ஏழுநாள் ஒன்பதுநாள் ரோகவலுவறிந்து கொடுக்கவும்.

உபயோகம்:—பதினெட்டுச்சூலைகள், மேகவாயுக்கள், நெருப்புச்சுட்ட புண்ணைப்போல் காணும் மேகரோகங்கள், கைகால் தேகம் ஆகியவைகளிற்காணும் திமிர்கள், இரணங்கள், தடிப்புகள், சொறிகள், வெண்மைபடர்ந்தமேகம், கறுப்புப்படர்ந்தமேகம், ரத்தவகைகள், பதினெட்டு குஷ்டங்கள், பத்துவகை வெடிமேகங்கள் ஆகியவைதீரும்.



பத்தியம்:—புளி உப்பு நீக்கி வெந்நீரன்னம், பசுவின்நெய், மோர், பால், அன்னப்பால் சேர்க்கவும்.

### நீலகண்டபாலை
### அநுபான சூரணம்.

இலேசான பறங்கிச்சக்கை பலம்-௧௦, இதனை மெல்லிதாகச்சீவி ஒரு புதுசட்டியில்விட்டு இஞ்சிச்சாறு, கற்பூரவள்ளிச்சாறு, கரந்தைச்சாறு, குப்பைமேனிச்சாறு, நல்லவேளைச்சாறு ஆகிய இவற்றில் ஒவ்வொன்றிலும் அரைப்படி வீதம் தனித்தனியேவிட்டு உலர்த்தவேண்டும். அதாவது: அரைப்படி இஞ்சிச்சாற்றை முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் பறங்கிச் சக்கைச்சீவலில்விட்டு நன்றாகமிஸ்ரமித்து வெயிலில்வைத்து அந்தச்சாறெல்லாம் சுவறிச்சீவல் நன்றாக உலர்ந்தபின்பு அரைப்படி கற்பூரவள்ளிச் சாற்றைவிட்டு முன்போற் கலந்து முன்போல் வெயிலில்வைத்துலர்த்தவேண்டும். இவ்விதமாக முறையே ஒன்றன்பின் ஒன்றாகச்சாறுகளையெல்லாம் விட்டு உலர்த்திக்கொள்ளவேண்டும். இதுவே பறங்கிச்சக்கைப் பக்குவமாம்.

மிளகு பலம்-௪௦, இதனை ஒரு புதுச்சட்டியில்விட்டு அதில் சிறுபிள்ளைகள் மூத்திரம், பசுவின்மூத்திரம், கையாந்தகரைச்சாறு, வெள்ளாட்டு மூத்திரம், ஆகிய நான்கையும் ஒவ்வொன்றுக்கு அரை அரைப்படி வீதம் தனித்தனி முறையேவிட்டு ஒன்று சுவறினபின்பு மற்றொன்றை விட்டுச் சுவறசெய்து சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் மேற்கண்ட நான்கு திரவங்களையும் முறையே தனித்தனி சுவறச்செய்த மிளகிற்குப் பக்குவப்படுத்தின மிளகென்று பெயர்

முன் பக்குவப்படுத்தின பறங்கிச்சக்கையையும் முன் பக்குவப்படுத்திய மிளகையும் தனித்தனி பொடித்து ஒன்றாகச்சேர்த்து ஒருமணி நேரமரைத்துத்தனியே வைத்துக்கொள்ளவும்.

கொடிவேலி வேர்ப்பட்டை, உலர்த்தின சங்கங்காய், உலர்த்தின சங்கங்குப்பிப்பட்டை, வீழிவேர்ப்பட்டை இவைகளின் சூரணம்வகை-க-க்குப்பலம்-ரு.

அதிமதுரம், கண்டத்திப்பிலி, அக்கிரகாரம், சடாமாஞ்சி, சிற்றரத்தை, சன்னலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், ஓமம், வால்மிளகு, செவியம், கற்சீரகம், பெருஞ்சீரகம், அரிசித்திப்பிலி வகைக்குப்பலம்-வ. இவையெல்லாவற்றையு மிடித்து வஸ்திரகாயஞ்செய்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கொடிவேலிவேர்ப்பட்டை முதலியவற்றின் சூரணங்கள், மிளகுச்சூரணம், பறங்கிச்சக்கைச்சூரணம் ஆகியவற்றையும் சேர்த்து ஒருசாமநேரமரைத்து எல்லாம் ஒன்றாக மிஸ்ரமானபின்பு வஸ்திரகாயஞ்செய்து புதுக்கலசத்தில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—இந்தச்சூரணம் விராகனெடை-க, நெய் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி நீலகண்டபாலை பற்பத்தைப் பிரமாணப்படி அனுபானித்துக்கொண்டு வரவும்.

உபயோகம்:—மேற்சொல்லிய வியாதிகள் நீருவுடன் குன்மம், வாயுக்குத்து, வாதத்தாலேற்படும்கைகால் பிடிப்பு, முடக்கு வாதம் முதலிய எண்பது வாத ரோகங்கள், இரத்தி, புண், கரப்பான், வண்டுகடி, சில் விஷம், நீராமை, விக்கப்புற்று, விக்கருனை, [illegible]ரிப்



புற்று, மகோதரம், பீனிசங்கள்; எட்டுவகைக்காசங்கள்; சகல விஷநீர் ஆகியவைதீரும்.

பத்தியம்:—உப்பு வேண்டியிருந்தால் பதங்கமெரித்த உப்புக்கூட்டலாம்.

### 999. மகாரசப்பதங்கம்.

சுத்திசெய்த அரிதாரம்; சுத்திசெய்த துருசு; சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம்; சுத்திசெய்த தொட்டிப்பாஷாணம்; சுத்திசெய்த இரசகற்பூரம்; சுத்திசெய்த மிர்தார்சிங்கி; சுத்திசெய்த செவ்வீரம்; சுத்திசெய்த கௌரிப்பாஷாணம்; சுத்திசெய்த கெந்தி இவைவகைக்கு விராகனெடை-க; சுத்திசெய்த இரசம் விராகனெடை-க; சங்கதிராவகம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—சரக்குகளையெல்லாம் தனித்தனி பொடித்து ஒன்றாகச்சேர்த்து வைத்துக்கொள்ளவும். இரசத்தைக்கல்வத்திலிட்டு முன்கலந்து வைத்திருக்கும் தூளில்கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப்போட்டு அரைக்கவேண்டியது. தூளெல்லாம்சென்று இரசமும் மடிந்துபோனபிறகு மேற்படி திராவகத்தைச் சிறுகச் சிறுகவார்த்துப் பனிரண்டு சாமநேரமரைத்துப் பில்லைசெய்து நான்கைந்து நாள்வரையில் உலர்த்திவைத்துக்கொள்ளவும். இதை ஒருசெப்புக்கிண்ணியில்வைத்து மேலும் செப்புக்கிண்ணிமூடி இவற்றின்மேல் வெள்ளைக்கல்; உழுந்து; வேப்பம்பிசின்; இலவம்பிசின் இவற்றை முட்டை வெண்கருவிட்டரைத்துக் கவசித்துலர்த்தி அதன்மேல் மூன்றுசீலைமண்செய்துலர்த்தி ஒரு அகலச்சட்டியில் மணலிட்டு அதனடுவே கவசத்தை

வைத்து மேற்சட்டி மூடிச்சீலைமண்செய்து ௩-சாமமெரித்து ஆறவிட்டெடுக்கப் பதங்கமாம்.

பிரமாணம்:—அரிசியெடை-க-உ.

அனுபானம்:—அந்தந்த ரோகங்களுக்குத் தகுந்தபோலும் சமயோசிதம்போலவும் அனுபானம் ஏற்படுத்தவும்.

உபயோகம்:—எல்லாவகைக் கிரந்திரோகங்கள் மேகரோகங்கள்; சூலைகள் முதலிய அநேகரோகங்கள் தீரும். இந்தமருந்தில் கிரந்திரோகம் போகாவிட்டால் எந்த மருந்திலும்போகாது. அப்படியே போகாவிட்டால் சாபத்தினால் வந்த வியாதியென அறிந்து தானதருமம்செய்தும், பெரியோர்களுக்குத் தொண்டுசெய்தும் ஏழைகளுக்கு உதவிசெய்தும் சாபநிவர்த்தி செய்து மறுபடியும் இந்தமருந்தை உபயோகித்தால் கடவுள் கிருபையும் பெரியோர்கள் ஆசீர்வாதமும் இருந்தால் தீர்ந்துபோகும்.

### 1000. அக்கினிகுமார செந்தூரம்.

சுத்திசெய்த இரசம் பலம்-உ, சுத்திசெய்த இலிங்கம் பலம்-க, இலவங்கச்சூரணம் பலம்-உ, சுத்தித்தஇரும்புலாடத்தை அராவின அரபொடி பலம்-க, சுத்திசெய்த பித்தளை அரபொடி பலம்-க, சுத்திசெய்த செம்பு அரபொடி பலம்-க, சுத்திசெய்த துத்தநாக அரபொடி பலம்-க, வெண்காரம் பலம்-ங, சவுக்காரம் பலம்-ச, கையாந்தகரைச்சாறு, வெண்ணொச்சியிலைச்சாறு, கழற்சியிலைச்சாறு, இவைவகைக்குச் செல்லத்தக்க அளவு.



செய்முறை:—உலோக அரபொடிகளைக் கல்வத்திலிட்டு ஒன்றாகச்சேர்த்தரைத்துப் பிறகு இரசத்தைச்சேர்த்தரைத்துப் பிறகு இலிங்கத்தைச்சேர்த்தரைத்துப்பிறகு மற்றசூரணங்களைச்சேர்த்து இரண்டுசாமமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படிசாறுகளில் தனித்தனி சிறுகச் சிறுகவார்த்து ஒவ்வொருசாமமரைத்துப் பிறகு ஓரே பில்லையாகச்செய்து உலர்த்தி இலுப்பை யிலையைச் சிறுநீர்விட்டரைத்துப்பில்லையின்மீது அரையங்குலகனம் கவசம் செய்துலர்த்தி தாழிச்சட்டியில் ஒருபடி உப்பைக்கொட்டி அதனடுவில் மேற்படி கவசத்தைவைத்து அதன்மீது இரண்டுபடி உப்பைக்கொட்டி மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி அடுப்பேற்றித் தீயாக்கினியாக எட்டுமணிநேரம் எரித்துக்குளிர ஆறினபின்பு எடுத்துக்கவசத்தைப்பிரித்து வில்லையைப்பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-உ-க.

அனுபானமும், உபயோகமும்:—தேனில் பிரமாணப்படி இதை அனுபானித்து-௩-நாள் கொடுக்க, சுரம், சளி, சதைபடைப்பன், உஷ்ணபித்தம், கழிச்சல், தாகம், உழலை, நீர்ச்சுருக்கு, உள்ளுருக்கி, எலும்புருக்கி, கையெரிவு, அஷ்டகுன்மம், பிரமியம் இவை தீரும்.

சர்க்கரையில் பிரமாணப்படி அனுபானித்து எழுநாள்கொடுக்க அரையாப்பு, சூலை, மேகம், மேகரணம் ஆகியவைதீரும்.

இஞ்சிச்சாற்றில் அனுபானித்துக்கொடுக்க பாண்டு, காமாலைதீரும்.

பத்தியம்:—உப்பு புளி ஆகா. தலைக்குத் தண்ணீர் வார்த்த பிறகு சேர்க்கவும்.

## 1001. குப்பிவைப்புச் செந்தூரம்.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெந்தகம், சுத்திசெய்த வச்சாரம், சுத்திசெய்த வெள்ளீயம், இவை வகைக்கு வராகனெடை-க.

செய்முறை:—வெள்ளீயத்தையும் இரசத்தையும் சேர்த்து மற்ற இரண்டு சரக்கையும் சேர்த்து இரண்டுசாமமரைத்து ஏழுசீலைசெய்துலர்த்தின சீசாவாட்டச் சீஷாவில்போட்டு, ஒருசட்டியடியில் ஷைசீஷாவின் அடி நாலங்குலம் இறங்கும்படி துளைத்து அதில்ஷை, சட்டியின்மேல் நாலங்குலம் தெரியும்படி வைத்துச் சந்துபந்தனஞ்செய்து சீஷாவின் கழுத்துமட்டும் மணல்கொட்டி அடுப்பில் வைத்து நான்குசாமம் எரிக்கவும். எரிக்கும்போது சீஷாவை வாய்திறந்துவைத்தெரிக்கவேண்டும். பின்பு ஆறவிட்டெடுத்து உடைத்துப்பார்க்க அதில் செந்தூரம், நான்குவித வருணமாயிருக்கும். அடியில் மஞ்சள் வருணத்தைத்தள்ளி மற்ற மூன்றுவருண செந்தூரங்களையும் ஒன்றாகச் சேர்த்துப்பொடித்துவைத்துக்கொண்டு உபயோகிக்கலாம்; தனித்தனியாகவும் பொடித்துவைத்துக்கொண்டு உபயோகிக்கலாம். எல்லாவற்றையும் சேர்த்துப்பொடித்தால்யில்கழுத்து வருணத்தைப்போல பளபளப்பாயிருக்கும். இதனைச்சிலர் தங்கசெந்தூரமென விற்பதுமுண்டு.

பிரமாணம்:—குன்றிமணியெடை-,௧-க-௨.



அநுபானம்:—தேன், நெய், வெண்ணெய், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

உபயோகம்:—மேற்கண்ட அநுபானங்களில் பிரமாணப்படிமூன்றுநாள்ஆறுவேளை கொடுக்கச் சுவாசகாசம், இரைப்பு, இருமல் ஆகியவைதீரும். அடியில்கருப்பாயிருப்பதை வயிற்றுவலி, வாயுவுகளுக்குக் கொடுக்கலாம். கழுத்தில் மஞ்சள் வருணமாயிருப்பதைப்புத்தகமெழுதும் இங்கியாக உபயோகிக்கலாம்.

பத்தியம்:-புளி, புகைதவிரவும்; இச்சாபத்தியம்.

## 1002. காளகண்டமேக நாராயண செந்தூரம்.

ஷைசெந்தூரத்துக்கு திராவகம்:— கறியுப்பு, வெடியுப்பு, சீனம்; காந்தம்; நெல்லிக்காய்க் கெந்தகம், வெண்காரம், கடல்நுரை இவை வகைக்குப் பலம்-அ. இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்துப்பட்டைச்சாராயம் பலம்-உ0-சிறுகச்சிறுகவிட்டரைத்து உலர்த்திப்பொடித்து மண்தோண்டியிலிட்டு அத்தோண்டியின் கழுத்தை வடித்துவிட்டு அதன்மேல் வாலையென்னும் எந்திரத்தைக் கவிழ்த்துப் புகைவெளியே போகாதபடி துணியைச்சுற்றி அத்தோண்டியை அடுப்பின்மீதுவைத்து வாலையில்தண்ணீரையூற்றிவைக்கவேண்டியது. எந்திரத்தினுடைய கீழ்க்குழாயின்கீழ் ஒரு பாத்திரத்தைவைக்கவும். அடுப்பில் தீயையிட்டு ஆரம்பத்தில் மெதுவாயெரித்துப் பிறகு மிரமேணுவாய்த் தீயை அதிகப்படுத்திக் காடாக்கினியாக எரிக்கவேண்டும். எந்திரத்தின்மீதுள்ள தண்ணீர் சுடக்கண்டவுடன் மேற்குழாயைத் திறக்க அதுவடிந்து போகும். பிறகு குளிர்ந்த ஜலத்தை அதில்விடவேண்

டும். இவ்விதம் தண்ணீர் சூடுகண்டவுடன் அதைநீக்கிவிட்டு வேறு குளிர்ந்ததண்ணீரைவிட்டு மாற்றிக்கொண்டிருக்கவேண்டும். இப்படிச்செய்யத் திராவகமிறங்கும். முதலில் இறங்கும் திராவகம் காரமில்லாமலிருக்குமாகையால் அதையெடுத்துத் தனியேவைத்துக்கொள்ளவும். பிறகு இறங்கும்திராவகம் காரமாயிருக்கும். அதனைத் தனியே ஒருசீஷாவில் பத்திரப்படுத்தவும்; இதனை மேற்படி செந்தூரத்துக்கு உபயோகிக்கவும். காரமில்லாத திராவகத்தைக் குன்மரோகம், அஜீரணரோகம், மந்தாக்கினிரோகம் ஆகியவைகளுக்குத் தேகபலம் வயது முதலியவற்றிற்குத் தகுந்தபடி இரண்டு துளிமுதல் நான்குதுளிகள்வரையில் தண்ணீர், சோம்புத்திராவகம் முதலிய அனுபான விசேஷங்களில் கொடுக்கலாம்.

செந்தூரமுறை:—சுத்திசெய்த இரசம் பலம்-௰ சுத்திசெய்த உலாந்தாலிங்கம் பலம்-௧௨, பொன்னரிதாரம் பலம்-௧, சுத்திசெய்த கெந்தகம் பலம்-௧௰, சுத்திசெய்த மனோசிலை பலம்-௨, மேற்கூறிய திராவகம்செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முதலில் இரசத்தையும் கெந்தகத்தையும் தொங்கித்தரைத்துப் பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனிபொடித்துச் சேர்த்து மேற்படி திராவகத்தைச் சிறுகச்சிறுகவார்த்து மூன்றுநாள், நாளொன்றுக்கு நான்குசாமவீதம் பனிரண்டுசாமம் அரைத்து உலர்த்திப்பொடித்து ஏழுசீலைமண்செய்துலர்த்தின காசிக்குப்பியில் அரைவாசி இருக்கும்படியாகப்போட்டு வாய்க்குச்சாக்கல்லிட்டுச் செந்தூரச்சட்டியில் நான்கு விர



ற்கிடை மணல்போட்டு அதன்மேல்வைத்துக் குப்பியின் கழுத்தளவு மணல்கொட்டி அடுப்பின்மீதேற்றித் தீபாக்கினி சாமம்-௧, கமலாக்கினி சாமம் ௨, காடாக்கினி சாமம்-௪, ஆக ஏழுசாமமும் ஒரு ஜாதிவிறகால் எரிக்கவேண்டும். இதனை எரிக்கும்போது ஒரு இரும்புச் சலாகையால் சற்றுநேரம் துழாவிக்கொண்டிருக்கவேண்டும். சலாகையிறங்காமல் கெட்டியாயிருந்தால் அதுவேபதம். குளிர ஆறினபின்பு இறக்கிச் சீஷாவைத் தண்ணீரில்நனைத்து உடைத்துச் செந்தூரத்தையெடுத்து ஜலத்தைவிட்டுச் சுத்தமாக அலம்பியெடுத்து சாத்தையுலர்த்திக் கல்வத்திற்பொடித்துச் சீஷாவிற்பத்திரப்படுத்தவேண்டும். இதன் வேகத்தைத் தணித்துக்கொள்ளவேண்டுமானால், ஒருபடி சிந்திற்கொடிக் கஷாயத்தில் டோலாந்திரமாகத் தொங்கவிட்டு எரித்துக்கஷாயம் சுண்டினபின்பு அலம்பிச் சுத்திசெய்து முன்போல் பொடித்துக்கொள்ளவும். வீறடங்கிச்சாந்தமாக வேலைசெய்யும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨ ஐ-௧.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய் வில்வாதிலேகியம், பஞ்சதீபாக்கினிலேகியம், பறங்கிச்சக்கைச்சூரணம், சிரகச்சூரணம், கக்குலேகியம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வாதசம்பந்தரோகங்கள், பித்தசம்பந்தரோகங்கள், கபசம்பந்தரோகங்கள், நரம்பைப்பற்றிய ரோகங்கள் முதலிய எல்லாரோகங்களுக்குந்தகுந்த அனுபானங்களில் உபயோகிக்க குணமுண்டாம். சுவாசகாசம், ஈளை, கபக்கட்டு, குரற்கம்மல் ஆகிய இ

த்மரோகங்களுக்குத் தாளிசபத்திரிச்சூரணம், தாளிசப் பத்திரிவடகம், ஆடாதோடைக்கிருதம், ஆகியவைகளில் கொடுத்துக் குணம் காணப்பட்டிருக்கிறது. வயிற்று நோய், அஜீரணம், குன்மம் ஆகியவைகளுக்கு எலுமிச்சம்பழ லேகியத்தில் அனுபானித்துக்கொடுத்துக் குணங்காணப்பட்டிருக்கிறது. கீல்வாயு, கணுக்கால்வாயு, சந்துவாயு முதலியவைகளுக்குக் கொடிவேலிவேர்ப்பட்டைச்சூரணத்தில் அனுபானித்துக்கொடுத்துக் குணம்காணப்பட்டிருக்கிறது. இப்படியே சமயோசிதம்போல் தகுந்த அனுபானங்களில் எல்லாவியாதிகளுக்கும் கொடுக்கலாம்.

**1003.** காளகண்ட மேகநாராயணசெந்தூரம் (வேறு.)

சுத்திசெய்த இரசம்; சுத்திசெய்த கெந்தகம்; சுத்திசெய்த அரிதாரம்; சுத்திசெய்த லிங்கம்; சுத்திசெய்த மனோசிலை; சீனக்காரம் இவை வகைக்குப்பலம்-௧; நாகப்பழச்சாறு; குப்பைமேனிச்சாறு; செம்பரத்தம்பூச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கெந்தகத்தையும் இரசத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து இரண்டுமணிநேரம் கைவிடாமலரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு முன்சாற்றைத் தனித்தனி சிறுகச் சிறுகவிட்டு மும்மூன்றுசாமம் அரைத்துக் காசுபோல் சிறுவில்லைகளாகச் செய்துலர்த்திச் சட்டியில் பரப்பிக்குகைபோல் செய்த செப்புக்கிண்ணத்தால் மூடிச் சந்துபந்தனம்செய்து குகையைச்சுற்றிலும் நான்கங்குல மணல்போட்டு மூன்றுசாமம் எரிக்கச்செந்தூரமாம்.



பிரமாணம், அனுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

**1004.** மேற்படி செந்தூரம். (புடம்)

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த அப்பிரேக நவநீதம் இவைவகை-௧-க்குப் பலம்-௧, ஆவாரையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முன் மூன்றுசரக்கையும் தனித்தனி பொடித்து அப்பிரேக நவநீதத்தையும் சேர்த்து ஒருசாமநேரம் அரைத்து நன்றாகமிஸ்ரமான பின்பு ஆவாரையிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து ஒரே வில்லையாகச் செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி ஏழுசீலைமண்செய்து உலர்த்திக்கவசத்தின் இருபது பங்கு வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச்செந்தூரமாகி யிருக்கும். தீயானது குறைவாயிருந்தால் செந்தூரம் கறுப்பாயிருக்கும். ஆனால், அதை முன்சாற்றால் இரண்டு சாமநேரமரைத்து முன்போல் வில்லைசெய்து முன்போல் புடமிடச் சிவந்து செந்தூரமாகிவிடும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௧.

அனுபானம்:—ஆவாரை விதைச்சூரணம், ஆவாரங்கொழுந்துச்சூரணம், ஆவாரம்பட்டைச்சூரணம்முதலியவைகளாம்.

உபயோகம்:—இருபத்தொருவகை நீரிழிவு தீரும். பிரமேகம், இந்திரிய ஸ்ராவகம் ஆகியவைகளும் தீரும்.

## 1005. திரிபுராதி செந்தூரம்.

சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த கௌரிப்பாஷாணம், சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த மனோசிலை, வெடியுப்பு; சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம்; நவச்சாரம்; சவுக்காரம் இவைவகை-க-க்கு விராகனெடை-க; சுத்திசெய்த லிங்கம் பலம்-க, வளையலுப்பு பலம்-கஉ; கரியுப்பு ஆழாக்கு-க; சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—முன் ஒன்பது சரக்கையும் தனித்தனிபொடித்து ஒன்றாகச்சேர்த்து ஒருமணிநேரமரைத்துப் பிறகு தண்ணீரைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுமணி நேரமரைத்து ஒரு குகைசெய்துலர்த்தி மேற்படி லிங்கத்தைப்பொடித்து அதிற்போட்டு வாய்பொருந்தும்படியான இரண்டு சட்டி சித்தப்படுத்திக் கீழ்ச்சட்டியில் வளையலுப்பைப்பொடித்து இரண்டுபாகமாகச்செய்து ஒருபாகத்தைப்போட்டு அதன்மீது முன் சித்தப்படுத்தின குகையைவைத்து மறுபாதி வளையலுப்புத்தூளினால் குகையைமூடி அதன்மீது கரியுப்பைக்கொட்டி மறுசட்டியால் மூடி ஏழுசீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றித் தீபாக்கினியாக நான்கு சாமநேரம் எரித்து ஆறவிட்டெடுக்கப் பதங்கமேறியிருக்கும். அந்தப்பதங்கத்தைச் சுறண்டியெடுத்து அதற்குச் சமனெடை கெந்தகத்தைச் சேர்த்து ஒருசாமநேரமரைத்து ஏழுசீலைமண்செய்துலர்த்தின காசிக்குப்பியில் போட்டு வாய்க்கு மாக்கல் காரக்குப்போட்டு அதற்கும் சீலைமண் செய்துலர்த்தி ஒரு குண்டுசட்டியில் நாலங்குலம் பூணலைப்பரப்பி அதன்மீது முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் குப்பிமறையும்படியாக மணலைக்கொட்டி மேற்சட்டிமூடி மூன்றுசீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றித் தீபாக்கினி சாமம்-ச; கமலாக்கினி சாமம்-ச; காடாக்கினி சாமம்-ச; ஆகச்சாமம்-கஉ ஒரு ஜாதிவிறகால் எரித்து ஆறினபின்பு எடுத்துக்குப்பியுடைத்துச் செந்தூரத்தைப்பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—அரிசியெடை-க-உ.

அனுபானம்:—பனைவெல்லம்; தேன்; சுக்கரைத்தவிழுது; லேகியவகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—மேகவாயு; சூலைக்கட்டு; வாதம்; அக்கினிமந்தம்; இருமல்; சுவாசகாசம் ஆகியவைதீரும். தாதுபுஷ்டியுண்டாம்.

பத்தியம்:—இச்சாபத்தியம்; புளி புகை ஆகா. நெய் பால்கறிகூட்டவும்.

## 1006. பூரணச்சந்திரோதய செந்தூரம்.

தங்கரேக்கு பலம்-க; பாலரசம் பலம்-அ; சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-கஈ, செம்பரத்தம்பூச்சாறு குமரிச்சாறு ஆகியவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:— கெந்தகத்தையும் இரசத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு தங்கரேக்கைச் சிறுகச் சிறுகச்சேர்த்து ஒருசாமநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி பூச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து-ங-நாளும்; குமரிச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு -எ-நாளும் அரைத்து உலர்த்திப்பொடி

த்து கெங்காஜலகுப்பிக்கு ஏழுசீலைமண் செய்துலர்த்தி அதில் மேற்படிமருந்தை அரைவாசி அடைத்துவாய்க்குமாக்கல்லடைத்து ஒரு பெரிய குண்டுசட்டியில் ஆற்றுமணலைப்பாதிவரையிலும் போட்டு நடுவே மேற்படி குப்பியைவைத்து அதன் கழுத்துவரையில் மணல் கொட்டி மேற்சட்டிமூடி நான்கு சீலைமண்செய்து வட்டடுப்பில்வைத்து தீபாக்கினி சாமம்-௨; கமலாக்கினி சாமம்-௨; காடாக்கினி சாமம்-௨௰; ஒருசாதிவிறகாலெரிக்கவும். இந்தப்படி மாற்றி மாற்றி இராப்பகல் மூன்றுநாள் கைவிடாமல் எரிக்கவும். இவ்வாறு எரிக்கும்போது தாம்பூரச் சலாகையால் மேல்சட்டியைத்திறந்து, வாயிலடைத்திருக்கும் மாக்கல்லைக் குறட்டால் பிடித்துக்குப்பிக்குச் சேதமில்லாமல் திறந்துமருந்தைக்கிண்டிக்கொடுத்துப் பழையபடி மாக்கல்லை அடைத்து எரிக்கவும். இந்தப்படி அடிக்கடி திறந்து தாம்பூரச் சலாகையால் கிண்டிக்கொடுத்துவரவேண்டும். இப்படிக்கிண்டிக்கொடுத்து வரும்போது குப்பியிலுள்ள மருந்தில் சலாகையிறங்காது. இதுவே செந்தூரப்பதமாம். இந்தப்பக்குவம்பார்த்துத்தீயை நிறுத்தி ஆறவிட்டுக்குப்பியை உடைத்துப் பார்க்கச்செந்தூரமிருக்கும். எடுத்துப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-௨-௧.

அனுபானம்:—தேன்; நெய்; லேகிய வகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:— தேகத்திலுள்ள எல்லாவியாதிகளும் நீங்கி இரத்தசுத்தியுண்டாகித் தளர்ந்த நரம்புகள் உரத்துப்பலத்து முறுக்கேறித்தேகதிடம்; ஊக்கம்; மனோற்சாகம்; தேகவசீகரம்; முகவசீகரம்; ஆண்மைவி



ருத்தி, சந்தானவிருத்தி முதலியவைகளும் புருஷபோக்கியதையும் உண்டாகும். இதன் பெருமைபலவுள. இதனை அனுபவிக்கும் அறிவாளிகளுக்கு அதுதெரிந்தேயிருக்கும். க்ஷயம்முதலிய அசாத்தியரோகங்களுக்குப் பல வேறுவகைமருந்துகளைத் தேடுவதிலும் இந்த ஒரு மருந்தே போதுமானது. ஆனால், இதனைச்செய்து முடிக்கக்கொஞ்சம் பணச்செலவும் கஷ்டமும் வேண்டியது. அதற்குப் பால்மாறாமல் செய்து முடித்தால் அநேகம் சுகிர்தங்களை அடையலாம்.

### குறிப்பு.

பூரணச்சந்திரோதய முறையைப்பலர் பலவகையாகச்செய்கின்றார்கள். அம்முறைகளிலெல்லாம் இது மிகவும் சிறந்தது. பிரதானமானமூன்று சரக்குகளால் செய்யப்படுகிறது. மற்ற முறைகளுக்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தை அனுபவசாலிகளான அறிவாளிகள் தம் தம் அனுபவத்தில் கண்டுகொள்வார்கள்.

### 1007. மகாக்ஷயமக்கினி செந்தூரம்.

சுத்திசெய்த அரப்பொடி விராகனெடை-௰௨, ஊசிக்காந்தம் விராகனெடை-௰௬; சுத்திசெய்த கெந்தகம் விராகனெடை-௮; சுத்திசெய்த மனோசிலை விராகனெடை-௪, சுத்திசெய்த இரசம் விராகனெடை-௨, சுத்திசெய்த நாபி விராகனெடை-௧; எலுமிச்சம்பழச்சாறு சோற்றுக்கற்றாழைச்சாறு, கையாந்தகரைச்சாறு, கோழியாவாரைச்சாறு, வெள்ளிண்டிச்சாறு, வெற்றிலைச்சாறு, மருதம்பட்டைச்சாறு, கிராகப்பட்டைச்சாறு, கொம்புப்பாகல் சமூலச்சாறு, சுக்குக்ஷாயம் ஆகிய

இவை வகைக்குச் செல்லத்தக்கஅளவு, புளிப்பு மாதளம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாச்சரக்குகளையும் தனித்தனி பொடித்துச்சேர்த்து இரண்டுமணிநேரம் அரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி சாறுவகைகளில் சிறுகச் சிறுகவிட்டுத் தனித்தனி ஒவ்வொரு சாமம் அரைத்துப் பிறகு புளிப்பு மாதுளம்பழச்சாற்றைவிட்டு நான்குசாமநேரமரைத்து ஒரேவில்லையாகச் செய்துலர்த்தி கிலாவல்பட்டைத்தாளை ஒருசட்டியிற்போட்டு அதன்மீது வில்லையைவைத்து அதன்மீதும் கிலாவல்பட்டைத்தாளைப்போட்டுமூடி மேற்சட்டிமூடி ஏழுசீலைமண்செய்துலர்த்தி அடுப்பேற்றிக் காடாக்கினியாகமூன்றுசாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு கவசத்தைப்பிரித்துப் பில்லையைஎடுத்துப்பொடித்துச்சோற்றுக்கற்றாழைச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டரைத்து வில்லைசெய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்துசீலைமண்செய்துலர்த்தி முழப்புடமிடவேண்டும். இவ்விதம் சோற்றுக்கற்றாழைச்சாற்றில் அரைத்தரைத்து மடக்கிமடக்கி ஏழுபுடமிடவேண்டும். பிறகு எடுத்துப்பொடித்துச் செந்தூரத்தைப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௧.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய், கையாந்தகரையையும் மிளகையும் சேர்த்தரைத்தவிழுது, சுக்கையரைத்தவிழுது முதலியவைகளாம்.

உபயோகம்:—இரத்தக்ஷீண வியாதிகளெல்லாம் தீரும். பாண்டுரோகம், சோகை, மகோதரம், ஆதகபாண்டு முதலிய ரோகங்களும்தீரும். இன்னும்மந்தாக்கினி, ஈரல் சம்பந்தரோகம், காமாலை முதலியவை தீரும்.



### 1008. சுயமக்கினி செந்தூரம் (வேறு.)

சுத்திசெய்த இரசம் விராகனெடை-௧, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் விராகனெடை-௨, சுத்திசெய்த அயஅரப்பொடி விராகனெடை-௩; சோற்றுக்கற்றாழைப்பால் அல்லது சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு; எருக்கம்பால் பலம்-௧.

செய்முறை:— கெந்தகத்தையும் இரசத்தையும் தொந்திக்கரைத்தப்பிறகு அயப்பொடியைச் சேர்த்து ஒருமணிநேரமரைத்து மேற்படிபாலை அல்லது சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்து உருட்டி ஒரு சிறு கலயத்திற்போட்டு மேற்படி பாலை விட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண்செய்து பதினைந்துநாள் வைத்திருந்து பதினாறாம்நாள் எடுத்து வெயிலில்வைத்துலர்த்திக்கல்வத்திற்பொடித்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௨-௧.

அனுபானம் உபயோகமும்:—மேல்தோல்நீக்கின சுக்கு; மிளகு; அரிசித்திப்பிலி இம்மூன்றையும் சமவெடையாகநிறுத்தெடுத்து இளவறுப்பாகவறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் விராகனெடை-௧; தேன் விராகனெடை-௧, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி அனுபானித்துட்கொள்ளவும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இப்படிச்செய்யின் குன்மரோகம் அக்கினிமந்தரோகம் ஆகியவைகள் தீரும்.

இந்தரசம் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧ இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி செ

சுரத்தைப் பிரமாணப்படி அனுபானித்துப் பத்து நாட் உட்கொள்ள அஜீரணத்தால் காண்கின்ற சுரங்களும் தீரும்.

பத்தியம்:— சிக்கரத்திற்குப் புளிக்கூட்டவும்; சீதசுரத்திற்குப் புளியை நீக்கவும்.

### 1009. சுயமக்கினி (வேறு)

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கருநாபி, சுத்திசெய்த மனோசிலை, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த தாளகம், காந்தம், மிளகுச்சூரணம் இவை வகைக்கு விராகனெடை-௧, சுத்திசெய்த அயஅரப்பொடி விராகனெடை-௮, முள்ளங்கிச்சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொக்கித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்தும், அயத்தூளையும் அதனுடன் சேர்த்தும் ஒருமணி நேரமரைத்து முள்ளங்கிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமநேரமரைத்துப்பிறகு சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாம நேரமரைத்துப்பில்லைதட்டி வெயிலிலுலர்த்தி நன்றாயுலர்ந்தபின்புபொடித்துச் சீசாவிற்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:— குன்றிமணியெடை-௨-௧.

அனுபானம்:— இஞ்சிச்சாறு, தேன், நெய்முதலியவைகளாம்.

உபயோகம்:— சுரம், சன்னி, அக்கினிமந்தம், பாண்டுரோகம், சோகை, காமாலை ஆகியவைகள் தீரும்.



### 1010. சுயமக்கினி (வேறு)

சுத்திசெய்த இரசம் விராகனெடை-௪, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் விராகனெடை-௧௦, சுத்திசெய்த நாபி விராகனெடை-௪, சுத்திசெய்த மனோசிலை விராகனெடை-௪, சுத்திசெய்த அயஅரப்பொடி பலம்-௧, காந்தம் பலம்-௧, கிட்டம் பலம்-௧, சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் தொக்கித்தரைத்து மற்றசரக்குகளையும் பொடித்துச் சேர்த்து அயத்தையும்சேர்த்து இரண்டுமணி நேரமரைத்து எல்லாம் மெழுகானபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்துஎட்டுச்சாமநேரமரைத்துப் புளியங்கொட்டைப்பிரமாணம் வில்லைகள்செய்து வெண்கலக்கிண்ணியில் வைத்துக்கடுவெயிலில் வைக்கப்புகைந்து செந்தூரமாகிவிடும். அதனைக்கல்வத்திலிட்டுப் பொடித்து வஸ்திரகாயம் செய்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:— குன்றிமணியெடை-௨-௧.

அனுபானமும் உபயோகமும் மேற்கண்டவைகளேயாம். பிரசவ அறையிற்காணும் சுரங்களும் தீரும்.

### 1011. சுயமக்கினி (வேறு)

சுத்திசெய்த அயஅரப்பொடி, காந்தம், சுத்திசெய்த கிட்டம், சங்கு, கடல்நுரை, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த கல்நார், வெண்காரம், நவச்சாரம் இவை வகைக்குப் பலம்-௧, சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:— எல்லாச்சரக்குகளையும் தனித்தனி பொடித்து அயத்துடன்சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒருமணிநேரம் அரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு சோற்றுக்கற்றாழைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமமரைத்து வெண்கலக்கிண்ணியில் வைத்துச் சூரியபுடம் வைக்கப்புகைந்து செந்தூரமாகும். இதனைப்பொடித்து வஸ்திரகாயம்செய்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-உ.

அநுபானம்:—தேன், நெய், இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், சோம்புக்கஷாயம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—அக்கினிமந்தம், பலவகைவாயுக்கள், பலவகைப்பாண்டுரோகங்கள், சோகை முதலிய வியாதிகள் தீரும்.

பத்தியம்:—பெண் தவிர மற்றவை ஆகும்.

குறிப்பு.

இதற்கு முன்னும் சுயமக்கினிமுறைகள் எழுதப்பட்டிருக்கின்றன. மேற்சொன்ன பாகங்களும் நமது அரிய நண்பர்களில் ஒருவருக்குப் பலதடவை அநுபோகப்பட்டவைகளானபடியால் அவைகளை ஜனோபகாரமாகவும், ஜீவகாருண்யமாகவும் இங்கு எழுதநேர்ந்தன. நமக்குக்கிடைக்கும் அரியமுறைகளைக் கரவடமின்றி எழுதிவருகின்றோம். இம்முறைகளின் அருமை தெரிந்த அறிவாளிகள் மேற்கண்ட மூல புருஷர்களுக்கு நன்றியறிதலாயிருக்கும்படி மிகவும் கேட்டுக்கொள்கிறோம்.





1012. கௌரிசிந்தாமணி ரசசெந்தூரம்.

சுத்திசெய்த இரசசெந்தூரம், சுத்திசெய்த அபிரகப் பொடி இவை வகைக்குப்பலம்-கஉ, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-க, சுத்திசெய்த வெண்காரம் பலம்-அ, சுத்திசெய்த காந்தம் பலம்-எ, சுத்திசெய்த மனோசிலை பலம்-ச, சுத்திசெய்த இரசம் பலம்-ஈ, இந்துப்பு பலம்-ச, குமரிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளைத் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு மூன்றுமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து ஒரே பில்லையாகச்செய்து கலீலென சப்தம் கேட்கும்படி உலர்த்தி ஒருசட்டியில்வைத்து அதன்மீது ஒன்றேகால்படி சோற்றுக்கற்றாழைச் சாற்றைவிட்டு மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்து சாறுலர்ந்தபின்பு அடுப்பேற்றிக் கமலாக்கினியாக நான்குநாள் எரித்து ஒருநாள் ஆறவிட்டு எடுத்துப்பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-ஹ-க.

அநுபானம்:—மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி ஆகிய மூன்றையும் இடித்து வஸ்திரகாயம்செய்த சூரணம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க, நெய் விராகனெடை-க. இம்மூன்றையும் மிஸ்ரமித்து மேற்படி செந்தூரத்தைப் பிரமாணப்படி அநுபானித்து உட்கொள்ளவேண்டும்.

இன்னும் இஞ்சிச்சாறு விராகனெடை-க, தேன் விராகனெடை-க, நெய் விராகனெடை-க. இம்மூன்றையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அனுபானித்தும் உட்கொள்ளலாம்.

உபயோகம்:—குன்மம்-அ, வாதம்-அ௦, பித்தம்-௪௦, ஐயம்-௨௦, சளி இருமல்-௬, எலிகடி, இரைப்பு, சுவாசகாசம், திகைப்பு, தூக்கமின்மை, காமாலை, சோகை; பாண்டு, விஷபாகம், நீர்க்காமாலை, வாட்காமாலை, கிரந்தி, அதிவேர்வைரோகம், சோபம், கரப்பான், கடிப்பு ஆகியவைதீரும்.

## 1013 இலகுசுயமக்கினி செந்தூரம்.

சுத்திசெய்தமனோசிலை விராகனெடை-௨, சுத்திசெய்த இரசம் விராகனெடை-௪, சுத்திசெய்த கெந்தகம் விராகனெடை-அ, சுத்திசெய்த காந்தம் விராகனெடை-க, சுத்திசெய்த அப்பிரகபொடி விராகனெடை-க௨, குமரிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாச்சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒருமணிநேரம் கைவிடாமலரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு சோற்றுக்கற்றாழைச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துச் செப்புத்தாலத்தில் வைத்துக்கட்டுவெயிலில் வைக்க ஈரம் உலர உலரப்புகை எழும்பும். ஈரமுலர்ந்தபின்பு பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௧-௩.

அனுபானம்:—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.



உபயோகம்:—அஜீரணபேதகம், அக்கினிமந்தம், குன்மம், பாண்டு, சோகை, காமாலை முதலிய பலரோகங்கள்தீரும்.

## 1014. பஞ்சபாணரசம்.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம், சுத்திசெய்த காசிக்குரணம், பசும்பாலிற்சுத்திசெய்த ஊமத்தம் விதைச்சூரணம், இவைவகை-க-க்குப் பலம்-க; நல்லெண்ணெய், ஆட்டுமூத்திரம், குதிரைமூத்திரம், பசுவின்மூத்திரம், கழுதைமூத்திரம் இவைவகை-க-க்குப் படி-க.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும்சேர்த்தரைத்து நன்றாகக்கருக்கியபின்பு மற்ற இரண்டு சூரணங்களையும்சேர்த்து இரண்டுமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மெல்லிய துணியில் வைத்துக்கொஞ்சம் தளரக்கட்டி மேற்படி நல்லெண்ணெய் ஒரு பாத்திரத்தில் விட்டு இம்முடிச்சைக்கிழிக்கட்டித் தொங்கவிடவேண்டும். முடிச்சானது அடிப்பாத்திரத்திற்படாமல் பானை அடிக்கும் முடிச்சிற்கும் இடையில் ஒருவிரல் சந்திருக்கவேண்டும். அடுப்பின்மேலேற்றிச் சிறுதீயாக எரித்து எண்ணெயெல்லாம் சுண்டினபின்பு முடிச்சையெடுத்து மூத்திரவகை ஒவ்வொன்றிலும் முன்போல் கிழிக்கட்டித்தொங்கவிட்டுத் தனித்தனி சுண்டவைத்து எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து நல்லெண்ணெய் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துக் கடுகுப்பிரமாணம் மாத்திரைகள்செய்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-௨.

அநுபானமும் உபயோகமும்:— பிரமாணப்படி வெற்றிலையில் வைத்துக்கொடுத்துக் கடுகுப்பிரமாணம் சிரசிலும் கால் பெருவிரலிலும் தடவச்சகலவாதமும் தீரும்; வயிற்றுவலியாதி சகலமும் தீரும்.

எருமைப்பாலில் மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துக்கொடுக்க பாண்டுவகை எல்லாம் தீரும்.

எலுமிச்சம்பழச்சாறு, பால், சர்க்கரை ஆகிய இவற்றிலொன்றில் மேற்படி மருந்தைப் பிரமாணப்படி அநுபானித்துக்கொடுக்க வீரியவிருத்தி யுண்டாகும்.

## 1015 பூபதி மாத்திரை.

(a) சுத்திசெய்தகிளிஞ்சில், சுத்திசெய்த தாளகம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த வெண்காரம் இவைவகை-க-க்குப்பலம்-உ, ...செருப்படிச்சாறு செல்லத்தக்க அளவு.

(b) சுத்திசெய்தகாய்ச்சூரணம் வராகனெடை-அ, சுத்திசெய்த மிளகுச்சூரணம் வராகனெடை-அ, இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—(a) யிலுள்ள சரக்குகளில் இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு மற்ற மூன்று சரக்குகளையும் இதில்சேர்த்து இரண்டுமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி செருப்படிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமநேரமரைத்து உலர்த்திப் பொடித்து ...செய்த காசிக்குப்பியிலடைத்து வாய்க்கு



மாக்கல் ...க்கட்டி அதற்குமேல் சீலைசெய்து ...த்திச்செங்கல்...ச்சட்டியில் நான்கு விரற்கடை மண்விட்டு அதன்மீது குப்பியைவைத்துக் குப்பிமறையும்படியாக மணலைக்கொட்டி மேற்சட்டிமூடிச் சீலைசெய்து அடுப்பேற்றித் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒருசாமம், காடாக்கினி இரண்டுசாமம் ஆக நான்குசாமமும் எரித்து ஒருநாள் ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு சீசாவிலிருக்கிற மருந்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இதில் கட்டைப்பட்ட மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு (b) யிலுள்ள சூரணங்களையும் சேர்த்து ஒரு மணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமநேரமரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அநுபானம்:—இஞ்சிச்சாறு, இஞ்சிக்கஷாயம், சிற்றரத்தைக்கஷாயம், அதிமதுரக்கஷாயம், நீர்முள்ளிக்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சீதளம், கல்லீரல்கட்டி, கவுசை, வயிற்றுவலி, சுரம், சன்னி, தோஷம், விக்கல் சகலமுந்தீரும்.

## 1016. அமிர்த சஞ்சீவிக்குளிகை.

சுத்திசெய்த சேர்விஷம், சுத்திசெய்த நாபி, சுத்திசெய்த அரிதாரம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த வெண்காரம்; மேல்தோல்சீவின சுக்குச்சூரணம்; மிளகுச்சூரணம்; அரிசித்திப்பிலிச்சூரணம், தான்றிக்காய்த்தோல் சூரண

ம் இவைவகைக்கு விராகனெடை-கவ; சுத்திசெய்தவா ளம் விராகனெடை-அவ, கையாந்தகரைச்சாறு செல லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளைத் தனித்தனி யாய்ச்செய்து சிறுத்தெடுத்துக்கொள்ளவேண்டும். இர சத்தையும் கெந்தகத்தையும் தொட்டித்தரைத்து எடுத் துக்கொள்ளவும். வாளத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சரக்குகளையெல்லாம் ஒன்றாகக்கலந்து சிறுகச் சிறுக எல்லாவற்றையும்போட்டு இரண்டுயாமநேரம் அரைத்து எல்லாம் மெழுகுமானபின்பு கையாந்தகரைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரமரைத்துக் குன் றிமணிப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலில் உல ர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அநுபானமும் உபயோகமும்:—ஜாதிக்காய்க் க ஷாயத்தில் பிரமாணப்படி மேற்படி மாத்திரையை அ நுபானித்துக்கொடுக்க கௌழலமும் தீரும்.

வெந்நீரில் அநுபானித்துக்கொடுக்கப் பலவகை வாயு தீரும்.

எலுமிச்சம்பழச்சாற்றில் அநுபானித்துக்கொடு க்கப் பாம்புவிஷம் தீரும்.

முருங்கைப் பட்டைச்சாற்றில் அநுபானித்துக் கொடுக்கச் சூலைக்கட்டு தீரும்.

மருதம்பட்டைச்சாற்றில் அநுபானித்துக்கொடு க்கப்பிரமியம் தீரும்.



நெல்லிமுள்ளிக் கஷாயத்தில் அநுபானித்துக் கொடுக்கக்குளிர் சுரம் தீரும்.

வெந்நீரில் அநுபானித்துக் கொடுக்க மலக்கட்டு தீரும்.

சிற்றாமணக்கெண்ணெயில் அநுபானித்துக்கொ டுக்கப் பேதியாகும்.

வெள்ளாட்டுப்பாலில் அநுபானித்துக் கொடுக்க க்ஷயங்கள் தீரும்.

## 1017. குப்பிவைப்பு செந்தூரம்.

பாலரசம் பலம்-ஐ, சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்-உ; சுத்திசெய்த மனோசிலை பலம்-க.

செய்முறை:—இம்மூன்றையும் தொட்டித்து ஒரு சாமநேரமரைத்து எழுசீலைமண்செய்துலர்த்தின காசி க்குப்பியில் அல்லது எழுசீலைமண் செய்துலர்த்தின சோடாவாட்டர் புட்டியில் அரைவாசிபோட்டு வாய்க் குப்பலப்பக்கல் காரத்திட்டு அதற்கும் எழுசீலைமண்செ ய்துலர்த்தி ஒருமண்பானையில் நான்கு விரற்கனம் ம ணலிட்டு அதன்மேல் முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் கழுத்தளவாயில் மணல்போட்டு மேற்சட்டி மூடி உழுந்துமாவால் ஒன்பது சீலைசெய்துலர்த்திச் செ ங்நார அடுப்பில்வைத்து எட்டுச்சாமம் ஒரு ஜாதி நால் தீபாக்கினி ஒருசாமம் கமலாக்கினி ஒருசாமம் காடாக்கினி ஒருசாமம் எரித்து ஆறவிட்டுக்குளிர ஆ றியபின் எடுத்துக்குப்பியைத் தண்ணீரில் நனைத்து உ டைத்தெடுக்கச் செந்தூரமாயிருக்கும். அப்படிக்கில்

வாமல் கறுத்திருந்தால் இதனைப்பொடித்து முன்போல் குப்பியில்போட்டு முன்போல் எரித்தெடுக்கச் செந்தூரமாகும். இதனைப்பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-௩-க.

அநுபானம்:—தேன், நெய், அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்தலேகியங்கள் முதலியவைகளாம்.

உபயோகம்:—எண்பதுவகை வாதரோகங்கள், நாற்பதுவகைப் பித்தரோகங்கள்; இருபத்தொரு வகைக் கபரோகங்கள் ஆகியவைகளுக்கு அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த அநுபான விசேஷங்களிற் கொடுக்கவும்.

பத்தியம்:—பழையது; செம்மறியாட்டிறைச்சி, மீன், கருவாடு, பாகற்காய், அகத்திக்கீரை ஆகியவைகளை நீக்கிவைக்கவும். ஸ்திரீபோகம் கூடவே கூடாது. இன்னும் அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்தபடியும், தேக சுபாவத்திற்கு ஏற்காதவைகளையும் நீக்க வேண்டியது.

## 1018. பஞ்சாக்கினி செந்தூரம்.

அரப்பொடி பலம்-க, ஊசிக்காந்தம் பலம்-க, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-க, சங்குச் சுண்ணாம்பு பலம்-க, நவச்சாரம் பலம்-க.

செய்முறை:—மேற்கண்ட ஐந்தையும் கல்வத்திலிட்டரைக்க ஜெயநீராகிவிடும். இந்த ஜெயநீரைத் தனியே சீஷாவில் எடுத்து வைத்துக்கொள்ளவும். மேற்படி திப்பியை மேற்படி கல்வத்திலிட்டு மேற்படி ஜெயநீரைச் சிறுகச் சிறுகவிட்டு அரைக்க



வேண்டியது. அந்த ஜெயநீரெல்லாம் சென்றபின்பு அந்த மருந்தையெல்லாம் ஒரு புதுமண்கலயத்திற்போட்டு வாய்க்கு அகலிட்டு ஐந்து சீலைமண்செய்து கெல்லிற்குள் அல்லது கேழ்வரகுக்குள் வைத்து நாற்பதுநாள் சென்றபின்பு எடுக்க நீலவர்ணமான செந்தூரமாயிருக்கும். இதனை எடுத்து மறுபடியும் கல்வத்திற்பொடித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-க-உ. சரீரபலத்திற்குத் தகுந்தபடி குறைத்தும் அநுபானித்து உபயோகிக்கலாம்.

அநுபானம்:—தேன், நெய், வெண்ணெய், லேகியவகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை அக்கினி மந்தரோகங்கள், ஆதவாயு, சூலக்கிராணி, சூலக்கடுப்பு, சூலவாயு, பெரும்பாடு, பித்தவெட்டை, பாண்டு, காமாலை, சோகை, சொறை, வயிற்றுவலி, மார்புவலி, வெகுமூத்திரரோகம் ஆகியரோகங்கள் தீரும்.

பத்தியம்:—புளி, புகை, பெண், காப்பான் வஸ்துக்கள், இன்னும் அந்தந்த வியாதிகளுக்கு ஆகாதவஸ்துக்கள் ஆகியவைகளையும் நீக்கவும்.

## 1019. இலகு சந்திரோதய செந்தூரம்.

சுத்திசெய்த தங்கரேக்கு வராகனெடை-க, சுத்திசெய்த இரசம் வராகனெடை-அ, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் வராகனெடை-கசு, செம்பரத்தம்பூச்சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு இவை வகை-க-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்துடன் தங்கத்தைத் தொந்தித்தரைத்துப் பின்பு அதனுடன் கெந்தகத்தைச்சேர்த்து ஒருசாமநேரமரைத்துப் பிறகு செம்பரத்தம்பூச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து உலர்ந்தபின்பு சோற்றுக்கற்றாழை வேர்ச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து எட்டுச்சாமநேரமரைத்து உலர்த்திப்பொடித்து ஏழுசீலைமண் செய்துலர்த்தின காசிக்குப்பியிற்போட்டு அதன்வாய்க்குப் பலப்பக்கல் காரக்கட்டி அதற்கும் ஏழுசீலைமண் செய்துலர்த்திச் செந்தூரப் பாத்திரத்தில் நான்கு விரற்கடை மணலிட்டு அதன்மீது முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் குப்பிமறையும்படி மணலைக்கொட்டி மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திச் செந்தூர அடுப்பின்மீது வைத்துத் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒருசாமம், காடாக்கினி இருபத்திரண்டு சாமம் எரித்து ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் எடுத்துக்குப்பியைத் தண்ணீரில் நனைத்துக் காரக்கட்டைத் திறந்து செந்தூரத்தை எடுத்துக்கொள்ளவும். செந்தூரம் கட்டியாயிருந்தால் சீசாவை உடைத்து ஜாக்கிரதையுடன் வெள்ளைக்கல்வத்திற் பொடித்துச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை—உ-க.

அநுபானம்:—வாதுமைப்பருப்பையும் கற்கண்டையும் சமனாக அரைத்தவிழுது, வெண்ணெய், நெய், தேன், கண்டிப்பற்பம், பவளப்பற்பம், ஆவாரை சமூலச்சூரணம் முதலியவைகளாம்.



உபயோகம்:—நீரிழிவு, க்ஷயரோகம் முதலியபல ரோகங்கள் தீரும்.

## குறிப்பு.

இதற்குமுன் பூரணசந்திரோதயமென்னும் ஒரு பாகம் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பாகப்படிசெய்து கொள்ள இயலாதவர்கள் இதன்படி செய்துகொள்ளலாம்.

## 1020. இரணபைரவி செந்தூரம்.

மிருதார்சிங்கி பலம்-வ, சீமைப்பால் துத்தம் பலம்-வ, சுத்திசெய்த இரசகற்பூரம் பலம்-வ, சுத்திசெய்த ஜாதிலிங்கம் பலம்-வ, மயில்துத்தம் பலம்-உ, காய்ச்சுக்கட்டி பலம்-வ; வெட்டைப்பாக்கு பலம்-வ, மாசிக்காய் பலம்-வ, கடுக்காய்த்தோல் பலம்-வ; தான்றிக்காய்த்தோல் பலம்-வ.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளில் பொடிக்கவேண்டியவைகளைப் பொடித்தும், சூரணிக்கவேண்டியவைகளைச் சூரணித்தும் மேற்கண்ட எடைப்படி நிறுத்தெடுத்து ஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு இரண்டு சாமநேரமரைத்துக் கோபிவருணையத்தில் எடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—எந்தரணமாயினும் அதன்மேலே கல்லெண்ணெய்தடவி இந்தச் செந்தூரத்தைத் தூவி மெதுவாயழுத்திவிடவும். இவ்விதம் மூன்று அல்லது நான்குவேளை செய்யின் எவ்விதரணமும் ஆறும்.

நெருப்பினாலுண்டான ரணம், வெந்நீர்ப்பட்டுத் தோலுரிந்த ரணம் ஆகியவற்றிற்கு வெண்ணெய்ச்

கீழேமேலேபோட்டு எடுத்துவிட்டு மேற்படி செந்தூரத்தைத் தூவி அழுத்தினால் பக்குக்கட்டிப்புண் ஆறிவிடும். இதனை உள்ளுக்கு உபயோகிக்கலாகாது.

## 1021. உப்புக்குரு.

பருங்கட்டிகளான கறியுப்பு; காலாங்காப்புச்சவ்வெளுப்பு; சீனக்காரம், இந்துப்பு, வளையலுப்பு, பாறையுப்பு, மூங்கிலுப்பு, நவச்சாரம், பாகப்படுத்தின பூநீறு அல்லது வாஷிங்சோடா, ஆகிய இவைகளைக் குப்பலம்-௧; கடல்ஜலம் அல்லது உவர்ப்பான கிணற்று ஜலம்படி-௨.

செய்முறை:—மேற்படி உப்புகளைத் தனித்தனி பொடித்து ஒரு மண்பாண்டத்திற்போட்டு மேற்படி ஜலத்தைவிட்டு நன்றாகக்கலக்கி மூடிவைக்கவேண்டும். பிரதிதினமும் மூன்று அல்லது நான்கு தடவைகள் கலக்கியும் வரவேண்டும். இவ்விதம் மூன்றுநாள்வைத்து நாலாநாள் தெளிவைவடித்துக்காய்ச்சி உப்பாக்கி அதை அரைத்து அதற்கிரண்டுபங்கு ஜலத்தைவிட்டுக்கரைத்து முன்போல் பிரதிதினமும் மூன்று தடவைகலக்கி மூன்றுநாள்வைத்துநான்காம்நாள்தெளிவிறுத்துக் காய்ச்சவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத்தடவைகள் காய்ச்சி உப்பாக்கிச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மேற்படி உப்பு பலம்-௧; வீரம் விராகனெடை-௧, இரசகற்பூரம் விராகனெடை-௧, சூடன் விராகனெடை-௧, இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு உமிநீரால் இரண்டுசாமநேரமரைத்து ஒரேவில்லையாகச்செய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி ஐந்துசீலைமண்செய்துலர்த்திக் கலசத்தின் மூன்றுபங்கெடை வர



ட்டியின்புடமிட்டாறின பின்னெடுத்து கல்வத்திலரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

உபயோகம்:—கட்டவேண்டிய சரக்குகளின்மீது மேற்படி குருஉப்பில் கொஞ்சமெடுத்து உமிழ்நீரினாலரைத்து மேற்படி சரக்கின்மீது தடவி புலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடிச் சீலைமண்செய்து இலகுபுடமிடவேண்டும். இவ்விதம் இரண்டுமூன்று புடமிட்டால் அந்தச்சரக்குகட்டுப்பட்டுப்போகும்.

எந்தலேகியமாயினும் சரியே, எந்தமாத்திரைகளாயினும் சரியே அவைகளில் இதனைக்கொஞ்சம் பொடித்துப்போட்டு நன்றாக மிஸ்ரமித்து உபயோகித்தால் அதிகம் சிறந்த குணத்தைத்தரும்.

செந்தூரம் பற்பம் ஆகியவைகளிலும் கொஞ்சம் மேற்படி குருவுப்பைச் சேர்த்துச் செய்வதினால் அதிகம்சிறந்தகுணத்தைத்தருமென்பதில் சந்தேகமில்லை.

## 1022. பாலரசப் பதங்கம்.

இதற்குப்பாலரசம் எடுக்கும்விதம்:—மிக்கபளபளப்புள்ளதும் தொட்டால் உதிரக்கூடியதுமான இலிங்கம் பலம்-௧, ஒன்றேகால்பலம் கொடிவேலி வேர்ப்பட்டையை அரைக்காய்ச்சலாகக் காயவைத்து நசுக்குபதத்தில் தூள்செய்ததூள் ஆகிய இரண்டையும் சேகரித்துவைத்துக்கொண்டு; கற்பதுபடிகொள்ளும்படியான இரண்டுபெரிய மண்பானைகள் சேகரித்து அவற்றைவாய்பொருந்தும்படி தேய்த்துச் சித்தப்படுத்தி அதன்மேல் அவ்விரண்டு பானைக்குள்ளும் முள் முருக்கையிலைச் சாற்றையாவது, கொடிவேலியிலைச்சாற்றையாவது வெள்ளைத்தைவேளையிலைச்சாற்றையாவது மூன்றுமுறை பூசிக்காயவை

த்துக்காயவைத்து எடுத்துக்கொள்ளவேண்டும். பின்பு ஒருபானையில் கொடிவேலிவேர்ப்பட்டைத்தூளில் பாதியைப் பரவலாகத்தூவி அதன்மேல் இலிங்கத்தைப் பொடிசெய்து தூவி, அதன்மேல் மற்றபாதிக்கொடிவேலிவேர்ப்பட்டைத்தூளைத் தூவிமற்றொருபானையால் மேல்மூடிப் பற்றுமண்ணரைத்து அதனால் ஏழுசீலைமண்செய்துலர்த்தி வாலைப்படுப்பில்வைத்து, பூவரசு, கருவேல், காசா இந்தமூன்றில் ஒருஜாதிவிறகால் நான்கு சாமமெரித்துப்பிறகு பானையை மெதுவாயிறக்கிச் சுத்தமானவிடத்தில் பக்கையாக வைத்துவிடவேண்டும். மறுநாட்காலையில் மேற்படி பானையைப்பிரித்து உள்ளேபடிந்திருப்பதை புருவினலாவது பழந்துணியினுலாவது சுத்தமாகத்துடைத்தெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில்போட்டுக் கையினுல் மர்த்தனிக்க இரசமாகிவிடும். இந்த இரசத்தை ஒரு இரட்டைத் துணியில் வைத்துப்பிழிந்து கல்காரக்குள்ள சீசாவில் பத்திரப்படுத்தவும். இவ்விதம் செய்தெடுப்பதே பாலரசமாம். இதுகடையில்விற்கும் இரசத்தைக்காட்டிலும் தோஷமற்றதாயிருக்கும். இவ்விதமாக நன்னாரிவேரிலும் செய்துகொள்ளலாம்.

செய்முறை:—அடிகனத்தவைகளும், இரண்டுவீசைகொள்ளும்படியானவைகளுமான சட்டி - உ- இவற்றைவாய்பொருந்தும்படியாகத் தேய்த்து இரண்டுவாயையும் சேர்த்தால் சந்தில்லாதிருக்கும்படி சித்தப்படுத்தி மேலே சொல்லியிருக்கிறபடி மேற்சட்டிக்கு முன்முருங்கையிலைச்சாறு, கொடிவேலியிலைச்சாறு, ஊமத்தையிலைச்சாறு ஆகிய மூன்றில் ஒன்றைமூன்றுமுறை பூசிக்காயவைத்துக்கொள்ளவேண்டியது.



இலிங்கம், நாபிச்சூரணம், கெந்தகத்தூள், மிளகுச்சூரணம், இரசம், அரிசித்திப்பிலிச்சூரணம், நேர்வாளப்பருப்புத்தூள், வசம்புச்சூரணம் ஆகிய இவைவகைக்கு விராகனெடை-கவ. இவற்றுள் இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்ருகக்கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் ஒவ்வொன்ருகச்சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு ஊமத்தையிலைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்து இதனுல் ஒரு மூசையும் மேல்மூடியும்செய்து மேல்மூடியின்மீது ஐந்தாறு சிறு துவாரங்கள்செய்து இரண்டையும் வெயிலிலுலர்த்திச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும்.

பின்பு முன் சித்தப்படுத்தின சட்டிகளில் கீழ்ச்சட்டியில் ஒருவீசை உப்பையும் ஒருவீசை செங்கல்தூளையும் சேர்த்திடித்து அத்தூளைப்போட்டமுக்கி அதனடுவில், ஒரு குழிசெய்துகொள்ளவும். பிறகு முன் சித்தப்படுத்தின குகையில ஒன்றரைப்பலம் முன் எடுத்தபாலரசத்தைவிட்டு மேல்மூடியால்மூடி மேற்படி குழியில் சரியாகவைத்து மேற்சட்டியைமூடி ஏழுசீலைமண்செய்துலர்த்தி அடுப்பின்மீது வைத்து ஒரு ஜாதிவிறகால் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒரு சாமம்; காடாக்கினி பதினென்று சாமமாக எரித்து மெதுவாயிறக்கி ஒருக்கணித்துச்சாய்த்து வைக்கவேண்டியது. அப்படி வைக்காவிட்டால் மேற்சட்டியிலிருக்கிற பதங்கம் கீழ்ச்சட்டியில் உதிர்ந்து உப்பில்விழுந்துவிடும். மேற்கண்டபடி ஒருநாள் வைத்துக்குளிர ஆறவிட்டு மெதுவாய்ச் சீலையைக்கத்தியால் அறுத்தெடுத்

து மேற்சட்டிக்குள் இருக்கும் பதங்கத்தைச் சுத்தமான புருஷிறகால் தடைத்தெடுத்து வெளுப்பானதை ஒரு சீஷாவிலும், மிகுந்த கருஞ்சாயலானதை வேறொரு சீஷாவிலும் பத்திரப்படுத்தவேண்டியது. இவற்றுள் வெண்மையானதைச் சுகுமாரதேகிகளுக்கும், மங்கலானதை முரட்டுத்தேகிகளுக்கும் உபயோகிக்கவேண்டியது.

பிரமாணம்:—அரிசியெடை-க-ரு.

அநுபானம்:—பனைவெல்லம்,சர்க்கரைத்தவிழுது, பறங்கிப்பட்டை லேகியம், பஞ்சதீபாக்கினி லேகியம் முதலியவைகளாம். எழுநாள் அந்திசந்தி இரண்டுவேளையும் சாப்பிடவேண்டியது.

உபயோகம்:—வெண்குஷ்டம், படர்தாமரை, மகோதரம், பாரிசவாயு, குடல்வாதம், கருங்குஷ்டம், மேகரணம், சூலை, குன்மம் ஆகியவை தீரும்.

பத்தியம்:—தேகபலம், வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தக்கபடி பத்தியம் ஏற்படுத்தவேண்டியது.

## 1023 வேறு (வேறு.)

முன் முறையிற்சொன்னபடியே இரண்டு சட்டிகளை வாய்பொருந்தும்படி தேய்த்து மேற்சட்டிக்குக் குப்பைமேனிச்சாறு தடவிக்காயவைத்துக் கொள்ளவேண்டும்.

கறியுப்பு பலம்-க, கோடிவேலிவேர் பலம்-க. இவ்விரண்டையும் அரைத்து முன் முறையிற்சொல்லியபடியே குகையும் மூடியுஞ்செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும்.



பின்பு முன்கூறினசட்டிகளில் அடிச்சட்டியில் முப்பதுபலம் உப்பை இடித்துக்கொட்டியழுத்தி அதனடியில் ஒருகுழிசெய்து அக்குழியில் மேற்படி குகையை வைத்து அக்குகையில் ஒருபலம் பாலரசத்தைவிட்டு மேல்மூடியால் மூடி அதன்மேல் பத்துப்பலம் உப்பைக் கோபுரம்போல் கொட்டி மேல்சட்டிமூடி எழுசீலைமண் செய்து வாலையடுப்பிலேற்றி ஒரு ஜாதிவிறகால் ஐந்து சாமம் எரித்து மெதுவாகத்தாக்கி முன்முறையிற்சொல்லியபடியே சுத்தமான விடத்தில் ஒருக்கணித்துச்சாய்த்து வைக்கவேண்டும். நான்குசாமநேரம் ஆறவிட்டபின்பு சட்டி அசையாமல் சீலையைப்பிரித்து உள்ளிருக்கும் பதங்கத்தைப் புருஷ, அல்லது பன்றிமுடியால் சுரண்டியெடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

## 1024. குருபதங்கம்.

சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த இலிங்கம், நவச்சாரம், பூரம் இவை வகை-க-க்குப் பலம்-க, இரண்டு குண்டுசட்டிவாய்வரை பொருந்தத்தேய்த்து மேற்சட்டிக்குப் பசுவின்பாலை உலர உலரப்பூசவேண்டும். இவ்விதம் மூன்றுதடவை பூசியுலர்த்திக்கொள்ளவேண்டும்; கறியுப்பு பலம்-ரு0.

செய்முறை:—முன் ஐந்து சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகக்கலந்து ஒரு சாமநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு கீழ்ச்சட்டியிற் பரவலா

கத்தாவி அதன்மீது மேற்படி உப்பைக்கொட்டி மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி வட்டடுப்பின் மீதிலேற்றித் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒருசாமம், காடாக்கினி ஆறுசாமம் ஆக எட்டுச்சாமமும் எரித்து ஆறவிட்டுக்குளிர்ந்த பின்பு சட்டியைப்பிரித்துப் பதங்கத்தை புருஷோல் துடைத்து எடுத்துப்புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

மேற்படி பதங்கம் பலம்-௧, வெள்ளிக்காடிக்காரம் விராகனெடை-௧ இவ்விரண்டையும் கல்வத்தில் சேர்த்து ஒருசாம நேரமரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-௨-௩.

அநுபானம்:—பனைவெல்லம், சுக்கைபரைத்த விழுது, லேகியவகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவித வாயுகள், சிரசைப்பற்றினரோகங்கள், சூதகவாயு, மேகவாயு, பலவகைப்புண்கள், கண்டமாலை, கண்ணக்கிரந்தி, கண்ணப்புற்று, சூலைரோகங்கள், பக்ஷவாதம் ஆகிய பலரோகங்கள் தீரும்.

சிலேஷ்மம் இறுத்துக்கொண்டிருக்கும்போது இதில் இரண்டு மூன்று அரிசியெடை தேன் அல்லது முலைப்பாலில் கலந்துகொடுக்க அந்தக்கபம் கரைந்து வெளிப்பட்டு எழுந்து பேசச்சக்தியுண்டாகும்.

பத்தியம்:—வியாதி அதிகபலமாகவும், கட்டுப்பட்டதாகவுமிருந்தால் உப்பு புளி ஆகியவற்றை நீக்கிக்கடின பத்தியம் வைக்கவேண்டியது. வியாதி இலேசானதாகவும் சுகுமாரதேகிகளாகவுமிருந்தால் பத்தியமில்லாமலே கொடுக்கலாம். புளிக்குப்பதிலாக அவசியமானால்



எலுமிச்சம்பழச்சாற்றைச் சேர்த்துக்கொள்ளலாம். காரப்பான வஸ்துக்கள், கசப்பானவஸ்துக்கள் ஆகியவைகளையும் நீக்கவேண்டியது. இந்தமருந்தை மூன்றுநாள் ஆறுவேளை வியாதிபலத்துக்குத் தகுந்தபடி கொடுக்கவேண்டியது.

## 1025. இலிங்கப்பதங்கம்.

(a) சுத்திசெய்த தாளகம், மனோசிலை இவைவகைக்குப் பலம்-வ.

(b) சுத்திசெய்த நாகம், சுத்திசெய்தகருவங்கம், வகைக்குப்பலம்-வ.

(c) சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்தநெல்லிக்காய்க்கெந்தகம், சீமைஅலாத்திக்கற்பூரம், மயில்துத்தம், பால்துத்தம், சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சீனக்காரம், வெடியுப்பு, பூநீறு இவை வகை-௧-க்குப் பலம்-வ.

(d) சுத்திசெய்த இலிங்கம் பலம்-ச.

(e) கறியுப்பு பலம்-௧௨, செங்கல்பொடி பலம்-௧௧, சித்திரமூலவேர்ப்பட்டைத்தூள் பலம்-௨.

இரண்டுகுண்டு சட்டிவாங்கி வாய்பொருந்தத் தேய்த்து மேற்சட்டிக்குச் சித்திரமூல இலைச்சாற்றைப்பூசி யுலர்த்திக்கொள்ளவும்; மறுபடியும் மேற்படி சாற்றை முன்போற் பூசியுலர்த்தவும்; இவ்விதம் மூன்றுதடவையும் பூசி உலர்த்திக்கொள்ளவேண்டும்.

செய்முறை:—(b) யிலுள்ள நாகத்தையும் வங்கத்தையும் உருக்கித்தொந்தித்துக்கொள்ளவும். (a) யிலு

னமான பல வியாதிகளைக்கண்டித்து நீக்கி ஜெயமடையலாம்.

## 1026. இலகு இரசப்பதக்கம்.

(a) மயில்துத்தம், பால்துத்தம், தாளகம், வெள்ளைப்பாஷாணம், மனோசிலை, நெல்லிக்காய்க்கெந்தகம், வீரம், நவச்சாரம், கௌரிப்பாஷாணம், ஜாதிலிங்கம் இவை வகை-க-க்குப் பலம்-௫, ஊமத்தையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

(b) கறியுப்பு பலம்-௧௦.

(c) சுத்திசெய்த இரசம் பலம்-௧.

(d) இரண்டு குண்டுசட்டிகளை வாய்பொருந்தும்படியாகத்தேய்த்து மேற்சட்டிக்கு ஊமத்தையிலைச்சாற்றைச் சுவறச் சுவறப்பூசிக்காயவைத்துச் சித்தப்படுத்திக்கொள்ளவும்.

செய்முறை:—(a) யிலுள்ள சரக்குகளைத் தனித்தனி பொடித்துப்பிறகு ஒன்றாகச்சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்மான பின்பு ஊமத்தையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரமரைத்து ஒருமூசையும் மூடியும்செய்து கிழவிவைத்திக்கொள்ளவும். பின்பு (b) யிலுள்ள உப்பைப (d) யிலுள்ள சட்டிகளில் கீழ்ச்சட்டியிற்கொட்டிப் பரப்பி நடுவில் ஒருகுழிசெய்து அதில் முன் சித்தப்படுத்தின மூசையைவைத்து (c) யிலுள்ள இரசத்தை அதில் விட்டு முன் சித்தப்படுத்தின மூடியால் மூடிவிடவேண்டும். இந்த மூசையின் வாயானது உப்பின் மட்டத்திற்குச் சமமாயிருக்கவேண்டும். பிறகு மேற்சட்டியை மூடி ஏழுசீலைமண்செய்து உலர்த்தி வட்டடுப்பிலேற்றி



த் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒருசாமம், காடாக்கினி ஒருசாமம் ஆக எட்டுச்சாமம் எரித்து இளஞ்சூடாயிருக்கும்போதே மேற்சட்டி கீழ்ப்படிந்திருக்கும்படி சாய்த்து வைத்துவிடவேண்டும். இப்படிச்செய்யாவிட்டால் பதங்கமெல்லாம் உதிர்ந்து உப்பில்கலந்துவிடும். அதைப்பிரித்தெடுப்பது கஷ்டமாயிருக்கும். இவ்வாறு வைத்துக்குளிர ஆறினபின்பு சீலைமண்ணைப் பிரித்தெடுத்துப் பதங்கத்தைப் புருஷால் துடைத்தெடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:— அரிசியெடை-௨-௧.

அநுபானம்:—பனைவெல்லம், வெண்ணெய், பசுவெண்ணெய், கலப்பி, இராசைப்பழத்தை அரைத்துவிழுது, சுக்கையரைத்தவிழுது முதலியவைகளாம்.

உபயோகம்:—எண்பதுவகை வாதங்கள், எட்டுவகைக்குன்மரோகங்கள், அறுபத்து நான்குவகை சுரங்கள், பதின்மூன்றுவகை சன்னிகள், சூலைகள், மேகப்புண்கள், பலவகைப்புண்கள் முதலிய அநேகரோகங்கள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம், தேக சுபாவம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவேண்டியது. நல்லெண்ணெய், கடுகு, என்சேர்ந்த பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

## 1027. காப்பதங்கம்.

(a) வெள்ளையாயிருக்கிற பாஷாணம் பிராணி பலம்-௫, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் விராகனெடை-௫, சுத்திசெய்த வீரம் விராகனெடை-௨.

(b) இரண்டு குண்டுசட்டியை வாய் பொருந்தும்படியாகத்தேய்த்து மேற்சட்டிக்குக் கையாந்தகரைச்சாற்றைப்பூசி உலர்த்தவேண்டும். அது நன்றாயுலர்ந்தபின்பு மறுபடியும் முன்போல் மேற்படி சாற்றைப் பூசியுலர்த்தவேண்டும்; மூன்றுந்தடவையும் இவ்விதமே பூசியுலர்த்திக்கொள்ளவேண்டும்.

செய்முறை:—(a) யிலுள்ள மூன்று சரக்குகளையும் தனித்தனிபொடித்துப்பிறகு ஒன்றாகச்சேர்த்து ஒருசாமநேரமரைத்து அஞ்சனம்போலான பின்பு (b) யிலுள்ள சட்டிகளில் கீழ்ச்சட்டியில் போட்டுப்பரப்பிக் கூடுமானால் கண்டிலவிலை ஜலத்தைக்கொஞ்சம் தெளித்து மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி அடுப்பேற்றித் தென்னை ஓலையால் இரண்டுசாமநேரமெரித்து ஆறினபின் எடுக்க மேற்சட்டியில் பதங்கமேறியிருக்கும். இதனைச் சுரண்டியெடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-க-கஉ.

அனுபானம்:—பனைவெல்லம், பாலேடு, வெண்ணெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—எல்லாவகை சுரங்களும் தீரும். ஆகாரம் நன்றாக ஏற்றுக்கொள்ளும். ஆகையால் நன்றாகச் சாப்பிடவேண்டும். பத்தியம் ஒன்றுமில்லை. இதனை ஒன்று அல்லது இரண்டுவேளை உபயோகித்தால் போதும். வாதுசொல்லி நோய்களை வெல்லலாம்.



## 1028. சுத்த பூரப்பதங்கம்.

இரசகற்பூரம் பலம்-கஉ, சீனக்காரம் பலம்-ரு.

செய்முறை:—பூரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து ஜலம்விட்டு இரண்டுமணி நேரமரைத்துக் கல்வம் நிறைய ஜலத்தைவிட்டுக்கலக்கி இரண்டுமணி நேரம் தெளியவைத்து அந்தத்தெளிவையிறுத்து நீக்கிவிடவேண்டும். மறுபடியும் அதில் ஜலத்தைவிட்டுச் சற்று நேரமரைத்து முன்போல் கல்வம் நிறையஜலத்தை விட்டுக்கலக்கி ஒருமணிநேரம் வைத்துத்தெளிவையிறுத்து விடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்துத்தடவைகள்செய்து வெயிலில் வைத்து நன்றாக ஈரமில்லாமல் உலர்த்தியெடுத்துக்கொள்ளவும். (இப்படிச் செய்யக்கூடாத காலங்களில் இங்கிலீஷ்மருந்துக்கடைகளில் விற்கும் கெலோமெல் என்னும் பூரபற்பத்தை வாங்கி உபயோகித்துக்கொள்ளலாம்.)

பின்பு சீனத்தைப்பொடித்து கரு-பலம் ஜலத்தைவிட்டுக்கரைத்துத் தெளிவை யிறுத்துக்காய்ச்சி உப்பாக்கிக்கொள்ளவும்.

முன் சுத்தப்படுத்தின பூரம் பலம்-க, இப்போது சுத்தப்படுத்தின சீனக்காரம் பலம்-உ, இவ்விரண்டையும் கல்வத்தில் சேர்த்து இரண்டுமணி நேரமரைத்து இரண்டு சிறுசட்டிகளை வாய்பொருந்தத்தேய்த்து அவற்றுள் ஒருசட்டியில் வைத்து மறுசட்டியால் மூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி அடுப்பேற்றி நான்குசாமநேரம்எரித்து ஆறவிட்டுக்குளிர ஆறினபின்பு கவசத்தைப்

பிரித்துமேற்சட்டியிலுள்ள பதங்கத்தைச் சுரண்டியெடுத்துப்புட்டியிற்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-க-உ.

அநுபானம்:—பனைவெல்லம், பாலேடு, வெண்ணெய், திராக்ஷைப்பழத்தை யரைத்தவிழுது முதலியவைகளாம்.

உபயோகம்:—இருபத்தொரு மேகங்கள், சூலைகள், கிரந்திகள், புண்கள், வெட்டை, பிரமேகங்கள் முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—சமயோசிதம்போல் வியாதிபலம் தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 1029. நவதாம்பிரபற்பம்.

(a) தாம்பிர அரப்பொடி பலம்-க, நவச்சாரம் விராகனெடை-உ, காரகம் விராகனெடை-க, கெல்லிக்காய்க்கெந்தகம் விராகனெடை-க. இவற்றைக்கல்வத்திலிட்டு உமிநீரால் நான்கு சாமநேரமரைத்துப் பில்லைதட்டிப் பில்லைகாய்ந்தபிறகு ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்திக் கொல்லுலையில் வைத்தூதி ஓடுசிவந்தபதத்தில் எடுத்து ஆறவிட்டுச் சீலையைப்பிரித்துப் பில்லையைப்பொடித்து வைத்துக் கொள்ளவும். இதுவே இங்குவேண்டிய தாம்பிரசுத்தியாம்.

(b) சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த காரகம் சுத்திசெய்த இலிங்கம், சுத்திசெய்த இரசசெந்தூரம் சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த இரசகற்பூரம், சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த கெல்லிக்காய்க்கெந்தகம் இவை வகை-க-க்குப் பலம்-க.



செய்முறை:—(b) யிலுள்ள கெந்தகத்தையும் இரசத்தையும் தொட்டித்தரைத்து நன்றாகக் கருத்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்து இதில் சேர்த்தும் (a) யிற் சொல்லியபடி சித்தப்படுத்திய தாம்பிரத்தைச்சேர்த்தும் ஒருமணிநேரம் கைவிடாமலரைத்து எல்லாம் நன்றாகக் கலந்தபின் * எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமமரைத்து மூன்று பில்லைசெய்து உலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்ளவும். ஒவ்வொன்றும் நான்குபடிகொள்ளும்படியானவைகளும் கெட்டியானவைகளுமான இரண்டு சட்டிகளைத் தயாரித்துச் சந்தில்லாமல் வாய்பொருந்தும்படியாகத் தேய்த்துச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும். அதன்மேல் கறியுப்பு படி-௩, செங்கல்மா படி-௩, இவ்விரண்டையும் உரலில் சேர்த்திடித்து ஒரு சட்டியில் சமபாகமாக அழுத்தி அதன்மீது முன்சித்தப்படுத்தின மூன்று பில்லைகளையும் ஒன்றோடொன்றுபடாமல் உள்ளே கொஞ்சம் குழித்து அழுத்திவைத்து மேற்சட்டியை மூடி ஏழுசீலைமண்செய்துலர்த்தி வட்டடுப்பில்வைத்து தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒருசாமம்,

* எலுமிச்சம்பழச்சாற்றிற்குப் பதிலாகக் கடையில் விற்கும் கெந்தகதிராவகத்தைவிட்டு அரைப்பது சிலர் அநுபவம். சுயமான கடலைப் புளிப்பைவிட்டு அரைப்பது வேறுசிலர் அநுபவம். அவரவர்களுக்கு இஷ்டமானபடி எந்தச்சமயத்தில் எது கிடைக்கிறதோ அதைவிட்டு அரைத்துக்கொள்ளலாம். [illegible] எல்லாம் ஒரு குணத்தையே [illegible] வித்தியாசமில்லை.

காடாக்கினி எழுசாமம் ஆக ஒன்பதுசாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர்ந்தபின்பு சீலைமண்ணைப்பிரித்து மேற்சட்டியிலிருக்கும் பதங்கத்தைச் சுரண்டிச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை-ரு-க.

அனுபானமும், உபயோகமும்:— இஞ்சியில் தேனைவிட்டு அரைத்து அதில் அனுபானித்துக்கொடுக்கச் சுரம் தீரும்.

சுக்குச்சூரணத்திற் கொடுக்க வாயுவகைகள் தீரும்.

கொடிவேலிப்பட்டைச் சூரணத்தில் அனுபானித்துக்கொடுக்க வயிற்றுவலி, குன்மம் ஆகியவை தீரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றையும் சமமாக இடித்தெடுத்த சூரணம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க, நெய் விராகனெடை-க. இம்மூன்றையும் மிஸ்ரமித்து இதில் பிரமாணப்படி அனுபானித்துக் கொடுக்க ஈழை, காசம், இருமல் ஆகியவை தீரும்.

இன்னும் தகுந்த அனுபானங்களில்கொடுக்க அநேக ரோகங்கள் தீரும்.

பத்தியம்:-பால், நெய், இறைச்சி முதலியவைகளை அதிகமாகச் சேர்க்கவேண்டியது. கடுகு, உளுந்து, பறங்கிக்காய், பூசணிக்காய், பாகற்காய், தேங்காய், அகத்திக்கீரை இவை ஆகா.

சில தேகிகளுக்கு இதனால் வாந்தியாகுமாகையால் மூன்றாநாளைக்கதிகம் கொடுக்கலாகாது.



## குறிப்பு.

" மேற்கண்ட எலுமிச்சம்பழச்சாற்றிற்குப் பதிலாக கெந்தகத்திராவகத்தை அல்லது கெந்தகப்புளிப்பைவிட்டு அரைத்துப் பதங்கித்தால் எல்லாத்தேகிகளுக்கும் பொருந்தும். ஒருவருக்கும் வாந்தியாகிறதில்லை. பயமில்லாமல் உபயோகிக்கலாம்.

## 1030. குருமுறைப்பதங்கம்.

(a) சுத்திசெய்த வீரம் பலம்-க, சுத்திசெய்த இரசகற்பூரம் பலம்-க, சுத்திசெய்த இரசம் பலம்-க, சுத்திசெய்த கௌரிப்பாஷாணம் பலம்-க, மொந்தன் வாழைப்பழச்சதை பலம்-க.

(b) ஐந்து விராகனெடை வெள்ளியைச் சமமாகத் தகடடித்து ஒரு சிறிய கிண்ணம் செய்துகொள்ளவும்.

செய்முறை:——இரசத்தையும் வீரத்தையும்சேர்த்துக் கித்தரைத்து இரசம் மடிந்தபின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச்சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு வாழைப்பழத்தைச் சேர்த்தரைத்து நன்றாக மசிந்தபின்பு ஒரு சிறுவில்லையாகச்செய்து சித்தப்படுத்திக்கொள்ளவும். வாயகன்ற இரண்டிரட்டிவாய்களைச் சந்தில்லாமல் பொருந்தும்படியாகத் தேய்த்து மேற்சட்டிக்குக் கொடிவேலிச்சாற்றைச் சுவறச் சுவறப் பூசியுலர்த்திக்கொள்ளவும். முன் சித்தப்படுத்தின வில்லையைக் கீழ்ச்சட்டியில் வைத்து அதன்மீது (b) யிலுள்ள வெள்ளிக்கிண்ணத்தைக் கவிழ்த்துவைத்து மேற்சட்டிமூடி ஏழுசீலைமண்செய்து

ர்த்தி வட்டலிப் பின் மேற்கே ஒருமணிநேரம் தீபாக்கினியாகவும் ஒருமணிநேரம் கமலாக்கினியாகவும் ஏழுமணிநேரம் காடாக்கினியாகவும் ஆக மூன்றுசாமமும் எரித்து எரிப்பை நிறுத்திக் ஆறின பின்பு சீலைமண்ணைப்பிரித்து மேற்சட்டியிலிருக்கிற பதங்கத்தைச் சுரண்டியெடுத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

மேற்படி வெள்ளிக்கிண்ணத்தையெடுத்து உருக்கி அதில் மேற்படி பதங்கத்தைக்கொடுக்க அவரவர்கள் அதிஷ்டம்போற் காணலாம்.

பிரமாணம்:—அரிசியெடை-உ-க.

அநுபானம்:—பனைவெல்லம், வெண்ணெய், பாலேடு, திராக்ஷைப்பழத்தைப்பரைத்தவிழுது, இலேகிய வகைகள் முதலியவைகளாம்.

உபயோகம்:—கிரந்திவகைகள், சூலைவகைகள், பக்ஷவாதம், கைகால்முடக்கு, சந்துவாதம், நரம்புவாதம், கணுக்கால்வாதம், குன்மரோகம் முதலிய அநேக ரோகங்கள் தீரும். இன்னும் அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்தபடி இலேகியம் சூரணம் முதலியவைகளில் அநுபானித்துக்கொடுக்க அநேகரோகங்கள் தீரும்.

குறிப்பு.

மேற்படி பதங்கங்கள் சில சருமரோகிகளுக்கு வாய்வெடிப்புண்டாவதுமுண்டு; அந்தவகையினர்களுக்கு அந்தந் தருணங்களில் சொல்லப்பட்டிருக்கிற [illegible] அல்லது அக்கு [illegible] இப்பெல் கடுக்காய்த்தோல் கடுக்காய்த்தால் நெல்லிமுள்ளி [illegible] சமபாகமாக எடுத்துச் சூரணித்து அந்தச் சூரணம் [illegible]



ரூபங்கிற்கு ஒருபங்கு மேற்படி பதங்கத்தைக்கலந்து வெருகடிப்பிரமாணம் அந்தந்த அநுபானத்தில் சேர்த்துக்கொடுத்துவந்தால் அந்தந்த நோய்கள் தீர்ந்துபோவதுடன் எவ்வித துர்க்குணமுமுண்டாகாது. அந்தந்த வியாதிகளும் தீர்ந்துபோகும். இந்த விஷயங்களெல்லாம் அநுபவசாலிகளுக்குத் தெரிந்தேயிருக்கும். ஆயினும் ஞாபகச்சின்னமாக இங்கு எழுதியிருக்கின்றோம்.

## 1031. சிரோமணி பூபதிக்குளிகை.

சுத்திசெய்த லிங்கம் பலம்-உ, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் பலம்-க, சுண்ணாம்பு நீக்கின இஞ்சிச்சாறு பலம்-ரு, கீழ்ச்சொல்லியிருக்கிறபடி செய்தப்படுத்தின சந்தனக்கஷாயம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இலிங்கத்தையும் கெந்தகத்தையும் தனித்தனி பொடித்துச்சேர்த்து அரைமணி நேரம் அரைத்து நன்றாக மிஸ்ரமான பின்பு இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரம் அரைத்துக்கொள்ளவும். ஒரு இரும்புக்கரண்டியை வெள்ளியைப்போல் அலம்பி அதில் முன் மருந்தை வழித்துப்போட்டு மிஞ்சியிருக்கிற இஞ்சிச்சாறு பழச்சாற்றையும் அதில் விட்டுக் கரிநெருப்பின்மீது வைத்து இரும்புச்சலாகையால் துழாவிப்புகையாமல் ஒரு சாமம் சுண்டினபதத்தில் கல்வத்திற்போட்டுச் சந்தனக்கஷாயத்தால் மூன்றுசாமநேரம் அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி அவரவர்கள் வழிபடுகடவுளைத் துதித்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ-க.

அனுபானம்:—தேன், இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம், இஞ்சிச்சுரசம் முதலியவைகளாம்.

உபயோகம்:—சன்னிகள், சுரங்கள், குளிர்சுரங்கள், மாரடைப்பு, மூர்ச்சை, வாயுரோகங்கள், வயிற்றுவலி ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

மேற்கூறுஞ் சிவனார்குளிகைக்கு, அரிசித்திப்பிலி இவை வகை-க-க்குச் சமனெடை. இவற்றையிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் விராகனெடை-க, தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ணலாம். இன்னும் சமயோசிதம்போல் அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்த அனுபானங்களிலிட அந்தந்த வியாதிகள் தீரும்.

சந்தனக்கஷாயம்.

சந்தனத்தூள் பலம்-க, இலவங்கம் பலம்-க, சண்பகப்பூ பலம்-ரு, இவைகளையிடித்து முக்காற்படி ஜலத்திற்போட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். இதுவே மேற்படி முறையிற்சொல்லப்பட்டிருக்கிற சந்தனக்கஷாயம். இந்தக்கஷாயம் போதாவிட்டால் முன் சக்கையில் கொஞ்சம் ஜலத்தைவிட்டு மறுபடியும் காய்ச்சி உபயோகித்துக்கொள்ளலாம்.

1032. பாண்டு வீக்கமாத்திரை.

சுத்திசெய்த வீரம் விராகனெடை-க, பொரித்த சிறுவெங்காரம் விராகனெடை-[illegible], முலைப்பால் செல்லத்தக்க அளவு.



செய்முறை:—மேற்படி இரண்டு சரக்கையும் கல்வத்தில் தனித்தனி பொடித்து ஒன்றாகச்சேர்த்து அரைமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு முலைப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரமரைத்து உளுந்துப்பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க-உ.

அனுபானம்:—பனைவேர், தென்னைவேர், நீர்முள்ளிவேர், சுரைக்கொடி, நெருஞ்சிமூலம் இவை வகை-க-க்குப் பலம்-ரு, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி இவை வகை-க-க்குப்பலம்-உ, இரும்புக்கிட்டம் பலம்-ரு. இவைகளையெல்லாம் இடித்து ஒரு பானையிற்போட்டு எட்டுப்படி ஜலம்வார்த்து இரண்டுபடியாகச் சுண்டவைத்து அரை அல்லது ஒரு ஆழாக்குக்கஷாயத்தில் மேற்படி மாத்திரையை அனுபானித்துக் கொடுக்கவேண்டும்.

உபயோகம்:—எல்லாவகைப் பாண்டுரோகங்களும் தீரும்.

பத்தியம்:—பாலன்னமே சாப்பிடவேண்டியது. வேறொன்றுமாகாது. பாலுடன் கற்கண்டு சேர்த்துக் கொள்ளலாம்.

1033. கபக்குடோரி.

சுத்திசெய்த அரிதாரம் பலம்-க, சுத்திசெய்த இரசம் பலம்-உ, சுத்திசெய்த வீரம் பலம்-ங, சுத்திசெய்த இலிங்கம் பலம்-ங, சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் வீரத்தையுஞ் சேர்த்தரைத்து மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து ஒருநாழிகைநேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேரமரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை, க, உ.

அநுபானம்:—சன்னராஷ்டம், அரிசித்திப்பிலி, மேற்றோல் சீவினசுக்கு இவை வகை-க-க்கு விராகனெடை-க, இவற்றைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்தைவிட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கிவடிகட்டி அதில் ஒருவிராகனெடை தேனைவிட்டுமேற்படி மாத்திரையை அதில் இழைத்துப் பானம்செய்யவேண்டும். இவ்விதங் காலை மாலை இரண்டுவேளையும் பானம் செய்யவும்.

உபயோகம்:—கபக்கட்டு, கோழைக்கட்டு, இருமல், சுவாசகாசம் முதலிய கபசம்பந்தமான எல்லாரோகங்களும் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தக்கதபடி பத்தியமேற்படுத்தவும்.

1034. சரபராஜமாத்திரை.

(a) சுத்திசெய்த வீரம், சுத்திசெய்த கௌரிப்பாஷாணம், சுத்திசெய்த குதிரைப்பற்பாஷாணம், சுத்திசெய்த அயத்தொட்டிப்பாஷாணம், சுத்திசெய்த செப்புத்தொட்டிப்பாஷாணம், சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த எலிப்பாஷாணம், சுத்திசெய்த



நீமுருகல் பாஷாணம், சுத்திசெய்த கார்முகில் பாஷாணம், சுத்திசெய்த மூங்கிற்பாஷாணம், சுத்திசெய்தவெண்ணாபி, சுத்திசெய்த கருநாபி, சுத்திசெய்த சேரிவிஷம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த லிங்கம், சுத்திசெய்த தாளகம்; ஊசிக்காந்தம்; தாம்பிர அரப்பொடி; அய அரப்பொடி; சுத்திசெய்த மனோசிலை; சுத்திசெய்த மிர்தார்சிங்கி; சூடன்; சுத்திசெய்த இரசகற்பூரம்; பால்துத்தம்; மயில்துத்தம்; நவச்சாரம்; அன்னபேதி; சுத்திசெய்த இரசம்; சுத்திசெய்த வாளம்; சுத்திசெய்த எட்டிக்கொட்டை; மூக்குவெட்டிச் சுத்திசெய்த சேராங்கொட்டை; வெண்காரம்; படிக்காரம்; கல்லுப்பு; இந்துப்பு; வளையலுப்பு; கறியுப்பு; வெடியுப்பு; எவட்சாரம்; சத்திச்சாரம்; சவுக்காரம்; பூநீறு இவை வகை-க-க்கு விராகனெடை-கவ.

(b) மேற்றோல் சீவினசுக்கு; அரிசித்திப்பிலி; மிளகு; மஞ்சட்கடுக்காய்த்தோல்; தான்றிக்காய்த்தோல்; நெல்லிமுள்ளி; அபின்; பெருங்காயம்; வால்மிளகு; சன்னராஷ்டம்; ஏலரிசி; கருஞ்சீரகம்; கார்போகரிசி; அக்கிராகாரம்; கோஷ்டம்; குங்குமப்பூ; மகரப்பூ; அதிமதுரம்; இலவங்கம்; ஜாதிக்காய்; ஜாதிப்பத்திரி; வெட்டிவேர்; விலாமிச்சம்வேர்; சந்தனம்; தேவதாரம்; அகில், சிறுநாகப்பூ; திராக்ஷைப்பழம்; குராசாணி ஓமம்; தாளிசப்பத்திரி; அதிவிடயம்; கல்நார், வசம்பு; மஞ்சிஷ்டி; வெட்பாலரிசி; கோரைக்கிழங்கு; அவுரிவிதை; கத்தைச்சூரிவிதை; வாலுளுவை; வாகைவிதை; கொல்லங்கோவைவித்து; சீந்தில்வித்து; கஸ்தூரி; கோரோசனை; சமுத்திராப்பழம்; சிறுதேக்கு; செவியம்; கடற்பாசி; கடல்நுரை; கல்மதம்; கடலழிஞ்சி; மரமஞ்சள்;

கஸ்தூரிமஞ்சள்; சலஞ்சிரபேதி; வாய்விளங்கம், வலம்புரிக்காய்; கற்சிரகம்; பேரீச்சம்பழம், கார்த்திகைக்கிழங்கு; சன்னிவேர்; கொடிவேலிவேர்ப்பட்டை; சகாமூலிவேர்ப்பட்டை ஆகியவைவகைக்கு விராகனெடை-க.

(c) பருத்திவிதைச்சாறு; துளசியிலைச்சாறு, சதகுப்பையிலைச்சாறு; தும்பைவேர்ச்சாறு; நீர்ப்பிரமெலிச்சாறு; வெள்ளருக்குச்சாறு; இஞ்சிச்சாறு; வலாக்காய்சந்தனக்கஷாயம்; திரிகடுகக்ஷாயம் ஆகிய இவை வகைக்குச் செலவுக்குத்தக்க அளவு.

செய்முறை:—(a) யிலுள்ள சரக்குகளில் முதலில் இரசத்தையும் கெந்தகத்தையும் தொக்கித்தனித்தப்பின்பு மற்றசரக்குகளையும் தனித்தனி பொடித்து அதனுடன் சேர்த்துக்கலந்து வைத்துக்கொள்ளவும். பின்பு (b) யிலுள்ளவைகளில் இடிக்கவேண்டியவைகளை யிடித்துப்பொடித்தும் அரைக்கவேண்டியவைகளை அரைத்துச்சேர்த்தும் ஒன்றாகக்கலந்து வைத்துக்கொள்ளவும். அதன்மேல் மேற்கண்ட இரண்டுவகைகளையும் ஒன்றாகக்கலந்து ஒருசாமநேரமரைத்து எல்லாம் மென்மையானபின்பு (c) யிலுள்ள ஒவ்வொருவகைச் சாற்றையும் சிறுகச் சிறுகவார்த்து ஒவ்வொன்றுக்கும் ஐந்துஐந்துநாள் கைவிடாமலரைக்கவேண்டும். இவ்விதம் எல்லாவகைச்சாற்றினாலும் ஐந்து ஐந்துநாள் அரைத்து முடிந்தபின்பு சிறுபயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க.

குறிப்பு.

இதை மகாவியாதிகளிலெல்லாமுபயோகிக்கலாம்; மகாவியாதியுள்ளவர்களுக்குக்கொடுத்தால் ஒரு



முகூர்த்தம் வரையில் அந்த அவஸ்தை நீங்கி நன்றாகப்பேசக்கூடும். இந்தப்பாகத்தைச் செய்துமுடிக்க இடம்பொருளேவல்வேண்டும். இதனை உபயோகிக்க அனுபவமும்வேண்டும். இதனைச்செய்யவும் இதனைஉபயோகிக்கவும் புதுவைத்தியர்களினால் முடியாது. இதன் அனுபானம்; இதனால் தீரும் வியாதிகள் ஆகியவைகளை அளவிட்டு எழுதுதல் முடியாது. ஆயினும் இதைப்பார்வையிடும் நமது நண்பர்களுக்கு உபயோகமாகும்படி அவற்றுள் நமக்கனுபவமான சிலவற்றை இங்கெழுதுகின்றோம்.

அனுபானமும் உபயோகமும்:—இஞ்சிச்சாறு விராகனெடை-க; தேன் விராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துக்கொள்ள அறுபத்துநான்குவகைச் சுரங்களும் தீரும். இன்னும் வாயுக்கள், சூலைகள்; கைகால்பிடிப்பு; கைகால்முடக்கு ஆகியவைகளும் தீரும்.

இதில் மூன்று மாத்திரைகளைப் பொடித்துப் புதிய புறணிநெருப்பில் போட்டுப் புகைத்துப் புகைவெளியிற்போகாதபடி துப்பட்டியால் போர்த்திக்கொள்ளவேண்டும். ஆனால்; இந்தப்புகையானது கண் மூக்கு வாய் ஆகியவைகளிற் செல்லாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இவ்விதம் மூன்று அல்லது ஐந்துவேளைகள் செய்யின் சருமரோகங்கள்; சூலைகள்; வாயுக்கள்; முடக்குவியாதிகள்; உளைச்சல்; கடுப்பு; வலிகள்; வீக்கங்கள்; சன்னிகள்; தோஷங்கள்; ஆகியவைகள் தீரும். இன்னும் சுரங்களுக்கும் மேற்கண்டபடி புகை

பிடிக்கலாம். அப்படிச்செய்வதனாலும் சுரங்கள் தீரும்.

பறங்கிப்பட்டைச்சூரணம் விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண மேகவகைகளெல்லாம் தீரும்.

பொன்முசுட்டைச்சாறு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண மதுமேகம், நீர்மேகம், நீர்ப்பெய், வெகுமூத்திரரோகம் முதலிய நீரைப்பற்றின எல்லாரோகங்களுந்தீர்ந்து தேகதிடம், தேகபலம் ஆகியவைகளுண்டாகும்.

தாழம்பூச்சாறு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண எல்லாவகைப் பிரமேகரோகங்களும் தீரும்.

கத்தைச்சூரிவேர்ப்பட்டை விராகனெடை இரண்டரை. இதனைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்தைவிட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் ஒன்றரை விராகனெடை தேனையுங் கலந்துமேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணச் சதையடைப்பு, நீர்த்தாரையிலுண்டாம் துர்மாமிசங்கள், கல்லடைப்பு, ஆகியவைகள் தீரும்.

பருத்திக்காயை இடித்துப் பிழிந்தசாறு விராகனெடை இரண்டரை, தேன் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண இரத்தமேகம், சீழ்மேகம், தந்துமேகம் ஆகியவைதீரும்.



குப்பைமேனிச்சாறு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௧, நெய் விராகனெடை-௧. இம்மூன்றை மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண எல்லாவகைக் காசரோகங்களும் தீரும்.

தூதுவளம்பழத்தை உலர்த்தியிடித்த சூரணம் விராகனெடை-௧, நெய் விராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண எல்லாவகை க்ஷயரோகங்களும் தீரும்.

கையாந்தகரைச்சாறு விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண, எல்லாவகைப் பீனிசரோகங்களும் தீரும்.

விழுதிச்சாறு விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, நெய் விராகனெடை ஒன்றரை, இம்மூன்றையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண சோகை, காமாலை, பாண்டு, மகோதரம், கவுசை கிராம்பல் முதலியரோகங்கள் தீரும்.

நல்லவேளை சமூலச்சாறு விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, நெய்விராகனெடை ஒன்றரை, இம்மூன்றையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, கவுசைக்கட்டி, கிராம்பல்கட்டி, மகோதரக்கட்டி ஆகியவைகள் தீரும்.

நாகமல்லியிலைச்சாற்றில் கொஞ்சம் முலைப்பாலைச் சேர்த்து மேற்படி மாத்திரையை அதிற்கரைத்து இரண்டு நாசித்துவாரங்களில் இரண்டொரு துளி நசியஞ் செய்யப் பலவகை விஷங்கள், பூதபைசாசசேஷ்டைகள் பைத்தியரோகங்கள், உன்மத்தரோகங்கள் ஆகிய எல்லாம் தீரும்.

பறங்கிபட்டை வராகனெடை-ந, இதனைச் சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் ஒன்றரை வராகனெடை தேனையும் கலந்து மேற்படி மாத்திரையைப்பிரமாணப்படி அநுபானித்துண்ண, பிளவை, மார்பாணி, நெற்றியாணி முதலிய ஆணிவகைகள், கண்டமாலை, மூலரோகங்கள், பவுத்திரங்கள் ஆகியவை தீரும்.

மேனிச்சாறு ஒருபங்கு, முலைப்பால் ஒருபங்கு. மேற்படி இரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையையிழைத்து மூக்கில் நசியம்செய்ய நாசிரோகம், சிரசுரோகம், ஆகியவைகள் தீரும்.

கருங்காலியிலைச்சாறு வராகனெடை-கஉ, தேன் வராகனெடை-கஉ. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண, செங்கழலை, கருங்கழலை, சற்கழலை, நொங்குக்கழலை முதலிய பலவகைக்கழலைரோகங்கள் தீரும்.

வெண்ணொச்சிச்சாறு வராகனெடை-கஉ, தேன் வராகனெடை-கஉ, இவ்விரண்டையும்மிஸ்ரமித்துமேற்படிமாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணை அரையாப்பு, கக்குள் ஆப்பு, நாசியாப்பு, செவியாப்பு முதலிய பலவகை ரோகங்கள்தீரும்.



முசுமுசுக்கை யிலைச்சாறு வராகனெடை-கஉ, தேன் வராகனெடை-கஉ. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படிமாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண பித்தமூர்ச்சை, காக்கைமூர்ச்சை முதலியபலவகைமூர்ச்சை ரோகங்கள்தீரும்.

திப்பிலியை வறுத்திடித்த சூரணம் வராகனெடை-க, தேன் வராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படிமாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ணக் கபக்கட்டு, கோழைக்கட்டு, கபசம்பந்தமான ரோகங்கள் ஆகியவைகள்தீரும்.

சித்திரமூலவேர்ப்பட்டை வராகனெடை-கவ, இதனைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்துக்காய்ச்சி வடிகட்டி அதில் ஒரு வராகனெடை தேனையும்கலந்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துண்ண அஷ்டகுன்மம், பிலிகை ஆகியவைகள் தீரும்.

வெட்டிவேர்ப்பட்டை வராகனெடை-ய, சுக்கு வராகனெடை-உ. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்துக்காய்ச்சி வடிகட்டி ஒருவராகனெடை தேனையும்கலந்து மேற்படி மாத்திரையை அநுபானித்துண்ண குஷ்டரோகங்கள், குறைரோகங்கள் ஆகியவை தீரும்.

முற்றின பூவரசம்பட்டைச்சாறு வராகனெடை-க, தேன்வராகனெடை-க. இவ்விரண்டையும் மிஸ்ர

மித்து மேற்படிமாத்திரையை அனுபானித்துண்ண எல்லாவகைக்கரப்பான் ரோகங்களும் தீரும்.

சிறுதேக்கு விராகனெடை-௨, இதனைச் சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் ஒரு விராகனெடை தேனையும்சேர்த்து மேற்படி மாத்திரையை அனுபானித்துண்ண எல்லாவகை விக்கல்களும்தீரும்.

நல்லெண்ணெய் பலம்-௫. இதில் ஐந்துமாத்திரைகளைப் பொடித்துப்போட்டு இளஞ்சூடாகக் காய்ச்சி வடிகட்டி இதில் ஒருபலம் எண்ணெயை எடுத்துச்சிரசில்தேய்த்துச் சிகைக்காயிட்டு இளவெந்நீரால் ஸ்நானம்செய்யப் பலவகைக்கண் ரோகங்கள் தீரும்.

துளசிச்சாறு விராகனெடை-௧௨, தேன் விராகனெடை-௧௨. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படிமாத்திரையை அனுபானித்துண்ண உண்ணாவிலுண்டாம் சிங்கி, உண்ணாக்கு ரணங்கள், உண்ணாவில்குழி விழுந்த ரணங்கள் ஆகியவைகள் தீரும்.

அரசிலை விராகனெடை-௫, இதனைச்சிறுக அரிந்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச்சுண்டவைத்திறக்கி வடிகட்டி ஒருவிராகனெடை தேனையும்கலந்து மேற்படிமாத்திரையை அனுபானித்துட்கொள்ள எல்லாவகைத்தாக ரோகங்களும் தீரும்.

விஷ்ணுகிராந்திவேர்விராகனெடை-இரண்டரை, இதனையச்சிதைத்து ஒருஆழாக்கு ஜலத்திற்போட்டு காலிலொருபாகமாகக்காய்ச்சி வடிகட்டி ஒரு விராகனெடை தேனையும் கலந்து மேற்படிமாத்திரையை அனுபானித்துட்கொள்ள உளைமாந்தை, ஈழை ஆகியவைகள்தீரும்.



அசுவகெந்திக்கிழங்குச்சாறு விராகனெடை-ஒன்றரை, தேன் விராகனெடை-ஒன்றரை. இவ்விரண்டையும்மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண ஆனந்தவாயு முதலிய பலவாயுவுகள்தீரும்.

குதிரைக்குளம்புச்சாறுவிராகனெடை-ஒன்றரை, தேன்விராகனெடை-ஒன்றரை, இவ்விரண்டையும்மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண பாதசக்கர ரோகம் தீரும்.

கழற்சியிலைச்சாறுவிராகனெடை-ஒன்றரை, தேன் விராகனெடை-௧௨. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ணப் பதினெட்டுவகைக் கண்ரோகமும் தீரும்.

கெந்த தாளியிலைச்சாறு விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துண்ண தெற்கத்திக்கண முதலிய கணரோகங்கள் தீரும்.

ஒரு ஆழாக்கு பசுவின்பாலில்ஒருபலம் கழிப்பிரண்டையைப்போட்டுக் காய்ச்சி நன்றாக வெந்துபோன பதத்தில் இறக்கிக் கழிப்பிரண்டையை நீக்கிவிட்டு மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் சிலதினங்கள் செய்யின் தேகதிடம், தேகபலம், ஆண்மை முதலியவைகளுண்டாகும். சந்தானத்திற்கேதுவாகும். காம்புகள் முறுக்கேறிப்பலப்படும். இதனால், தேகத்திலுள்ள வியாதிகளெல்லாம் தீர்ந்து அநேக நன்மைகளுண்டாகும்.

## குறிப்பு.

இந்த மருந்தை அநுபோகப்படிசெய்து முடித்து அநுபோகப்படி உபயோகித்துவந்தால் மனிதர்களைக் கஷ்டப்படுத்தும் பலவித நோய்கள் தீரும். வேறெந்த ஔஷதத்திற்கும் வசப்படாததாயினும் இந்த மருந்திற்கு வசப்பட்டுப்போம். இதில் எல்லாவகை விஷத்தன்மையுள்ள சரக்குகளும் சேர்ந்திருப்பதால் தேக சுபாவப்பிரகிருதிகளை நிச்சயித்து உபயோகிக்கவேண்டியது அவசியமாகையால் ஆரம்பத்தில் மிகவும் குறைந்த அளவாக உபயோகித்துத் தினை தினை கிரமேணுவாக அதிகப்படுத்திவரவேண்டும். இக்கிரமப்படி எந்த விஷச்சரக்கையும் எந்தத்தேகிகளுக்கும் ஏற்கக்கொள்ளச்செய்யலாம். இவ்விதத் தந்திரோபாயச் சிகிச்சையெல்லாம் அநுபவசாலிகளுக்குத் தெரிந்திருக்கும். மருந்துகளை உபயோகிக்க அநுபவம் பிரதானம்; ஆயினும் இந்தமருந்தில் அநுபவமில்லாதவர்கள் மயங்க நேரிடும். ஆகையால் ஆரம்பத்தில் சிலநாள் அநுபோகிகள் மூலம் உபயோகித்துத் தங்களுக்கும் அநுபவப்பட்டபின்பு பயந்து மலைக்காமல் உபயோகிக்கலாம். இந்த மருந்தைச்செய்து முடிப்பதில் இதனைக்கைவிடாமல் இரவும் பகலும் அரைக்கவேண்டுமென்பது சிலர் அபிப்பிராயம். இடையில் விட்டுவிட்டும் கணக்கின்படி அரைத்தால் போதுமானதென்பது வேறு சிலர் அபிப்பிராயம். இவ்விருதரத்தாரும் செய்த மாத்திரைகளில் விசேஷமான வித்தியாசம் ஒன்றும் காணப்படவில்லை. பெரும்பான்மையும் குணம் ஒத்தேயிருக்கிறது. ஆகையால் அவரவர்கள் சமயப்படி செய்துகொள்ளலாம்.



## 1035. சஞ்சீவி மாத்திரை.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த வெண்ணாபி, சுத்திசெய்த கருநாபி, இலவங்கம், அபின், சுத்திசெய்த மயில்துத்தம், சுத்திசெய்த பால்துத்தம், மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இந்துப்பு, சுத்திசெய்த மனோசிலை, கோஷ்டம், வசம்பு, குராசாணி ஓமம், சுத்திசெய்த ஜாதிலிங்கம், தான்றிக்காய்த்தோல், வெண்காரம், சீமைச்சவுக்காரம், பச்சைக்கற்பூரம், சந்தனம், சுத்திசெய்த கௌரிப்பாஷாணம், சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம், சுத்திசெய்த தொட்டிப்பாஷாணம், சுத்திசெய்த தாளகம், பிதரோகணி, அக்கிராகாரம், கடுரோகணி, ஜாதிக்காய், அன்னபேதி, பெருங்காயம், சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு, சித்திர மூலவேர்ப்பட்டை, இவை வகைக்கு விராகனெடை-க, கையாந்தகரைச்சாறு வெண்ணொச்சியிலைச்சாறு இவைகளுக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளில் தூள் செய்யவேண்டியவைகளைத் தூள்செய்தும், சூரணம் செய்யவேண்டியவைகளைச் சூரணம் செய்தும் எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு இரண்டு மணிநேரம் நன்றாயரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு கையாந்தகரைச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமமும் வெண்ணொச்சியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமமும் அரைத்துச் சிறுபயறளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-அரை, க.

அனுபானமும் உபயோகமும்:— துத்தியிலைச் சாறு விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படிமாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்து நாற்பது நாள் உட்கொள்ள இளைத்ததேகம் பருக்கும்.

ஆவாரையிலைச்சாறு விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் மூன்றுமண்டலம் உட்கொண்டு வர நீர்ப்பைசம்பந்தமான வியாதிகள், குண்டிக்காய் வியாதிகள், பிரமேகவகைகள், நீர்ப்பைவியாதிகள், இன்னும் இவை சம்பந்தமான தேகத்திலுள்ள வியாதிகள் ஆகியவைகள் நீங்கித்தேகபலம், மனோபலம், தேகவன்மை, தேகாரோக்கியம் முதலியவைகளுண்டாகும்.

தேன் விராகனெடை ஒன்றரை, தண்ணீர் விராகனெடை ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையுமாக இரண்டு மண்டலம் உபயோகித்துவந்தால் அதிகமாக ஸ்தூலித்திருக்கிற தேகம் இறுகிப்பலப்பட்டுச் சிறுக்கும்.

இஞ்சிச்சாறு விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையுமாக மூன்றுநாள் ஐந்துநாள் ஏழுநாள்சமயோசிதம்போல உபயோகிக்க அறுபத்து நான்குவகைச்சுரங்களுந்தீரும்.



வெண்துளசிச்சாறு விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்து உட்கொள்ளவும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையுமாக மூன்றுநாள், ஐந்துநாள், ஏழுநாள் சமயோசிதம்போலஉபயோகிக்க எல்லாவகைக்குளிர்சுரங்கள், பதின்மூன்று சன்னிவகைகள் ஆகியவை தீரும்.

நற்சீரகம் விராகனெடை ஒன்றரை இதனைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டக்காய்ச்சி இறக்கி வடிகட்டி அதில் ஒன்றரை விராகனெடை தேனைவிட்டுக்கலந்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையுமாக மூன்றுநாள் ஐந்துநாள் ஏழுநாள் சமயோசிதம்போல உபயோகித்துவர எல்லாவகைத் தாபசுரங்களும் தீரும்.

பசுவின்மோர் பலம்-உ, தேன் விராகனெடை-உ. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையுமாகமூன்றுநாள் ஐந்துநாள் ஏழுநாள் சமயோசிதம்போல உபயோகித்துவரின் எல்லாவகைச் சந்நிசுரங்களும் தீரும்.

சீமை இராகஷக்காடி, அல்லது காட்டுக்காடி விராகனெடை ஒன்றரை, தேன் விராகனெடை ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அனுபானித்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் மூன்

றுநாள் ஐந்துநாள் ஏழுநாள் உபயோகித்துவரின் எல்லாவகைப்பித்தரோகங்களும் தீரும்.

வேளைவேர், சோற்றுக்கற்றாழைவேர், கோழியாவாரைவேர் இவைவகை-க-க்கு விராகனெடை-உ. இவற்றை நையச்சிதைத்து ஒருஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி ஒரு விராகனெடை தேனைச்சேர்த்து மேற்படிமாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துக் காலைமாலை இரண்டுவேளையும் மூன்றுநாள் ஐந்துநாள் ஏழுநாள் உபயோகிக்க நாலசம்முறை சுரம்தீரும்.

மேற்றோல்சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, தான்றிக்காய்த்தோல் இவைவகைக்கு விராகனெடை-உ, பசுவின்கோமயம் ஆழாக்கு-க, மேற்படி சரக்குகளைச்சிதைத்துக் கோமயத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டக்காய்ச்சியிறக்கி வடிகட்டி அதில் தேன் விராகனெடை-ஒன்றரை, கலந்து மேற்படிமாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையுமாகமூன்றுநாள் ஐந்துநாள் ஏழுநாள் சமயோசிதமாக உபயோகிக்கவிஷபாண்டு, பித்தபாண்டு, வீக்கம், காமாலை, சோகை ஆகியவைதீரும்.

தலைசுருளி யிலைச்சாறு விராகனெடை-ஒன்றரை, தேன் விராகனெடை-ஒன்றரை, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையுமாக ஒருமண்டலம்செய்துவரின் பில்லி, சூனியம் முதலியவைகள்தீரும்.

சிறுவழுதலைவேரில் இரண்டொருமாத்திரைகளை வைத்து வெள்ளி அல்லது பொன் தாயத்திற்குள் அடக்கம்செய்து புஜத்தில் அல்லது இடுப்பில் கட்டிவைத்திருந்தால் பில்லி, சூனியம் ஆகியவைதீரும்.



இஞ்சிச்சுரசம்விராகனெடை-ஒன்றரை, தேன் விராகனெடை-ஒன்றரை, இவ்விரண்டையும்மிஸ்ரமித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி. அநுபானித்துட்கொண்டுவரச் சகல உளைமாந்தைகளும் தீரும்.

முலைப்பாலில் இதனைக்கரைத்து நாசித் துவாரத்தில் இரண்டொருதுளிவிட நாசியில் நீர்வடிதல், நீர்ப்பாய்ச்சல் ஆகியவைதீரும்.

கையாந்தகரைச்சாறு ஆழாக்கு-க, பசுவின்பால் ஆழாக்கு-க, எள்ளெண்ணெய் ஆழாக்கு-க, மேற்படி மாத்திரை விராகனெடை-அரை. முன்மூன்று திரவங்களையும் ஒன்றாகக்கலந்து மாத்திரைகளைப்பொடித்து அதிற்போட்டுக்காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கி வடிகட்டிச் சீஷாவில் பத்திரப்படுத்தவும். ஒருதுளி இந்தத் தைலத்தைக் கண்ணில்விடவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும்செய்துவரின் விரணசுக்கிரன், காசரோகங்கள் (அதாவது கண்ணில் நீர்தங்குதல்) வெள்ளெழுத்து ஆகியவைகள் தீரும்.

எலுமிச்சம்பழச்சாறு ஆழாக்கு-க, பசும்பால் ஆழாக்கு-க, எள்ளெண்ணெய் ஆழாக்கு-க, மேற்படி மாத்திரை விராகனெடை-வ. முன்மூன்று திரவங்களையும் ஒன்றாகக்கலந்து காய்ச்சிக்கடுகு திரள்பதத்தில் இறக்கிவடிகட்டிச் சீஷாவில் பத்திரப்படுத்தவும். இதில் ஒருதுளியைக் கண்ணில்விட்டுவரவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும்செய்துவரின், கண்தோஷங்கள், கண்குருடு ஆகியவைதீரும்.

## குறிப்பு.

மேற்படி இருமுறைகளையும் தைலமாகத்தேய்த்து ஸ்நானம்செய்து வருவதனாலும் அந்தந்த முறைகளிற் சொல்லிய குணங்களுண்டாகும்.

கருஊமத்தைச்சாறு ஆழாக்கு-அரை, நல்லெண்ணெய் ஆழாக்கு-அரை, மேற்படிமாத்திரை நான்குகுன்றிமணியெடை. மேற்படி இரண்டுதிரவங்களையும் ஒன்றாகக்கலந்து மேற்படி மாத்திரையைத் தூள்செய்து அதிற்போட்டுக்காய்ச்சிக் கடுகுதிரள்பதத்தில் இறக்கி வடிகட்டிச் சீஷாவில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்தத் தைலத்தை ஒவ்வொருதுளியாக இரண்டுகண்களிலும் விட்டுவர முயல்வலிதீரும்.

இந்தமாத்திரை-ஒருபங்கு, இதனை அஞ்சனம்போல் தூள்செய்து எட்டுப்பங்கு வெண்ணெயில் மிஸ்ரித்துப் பஞ்சிலூட்டி இரணங்களில் வைத்துக்கட்டிவிட வேண்டும். இவ்விதம் பிரதிதினமும் இரண்டுமூன்றுதடவைகள்செய்து [illegible]குழிப்புண், புரைப்புண், சிலந்திப்புண், [illegible]புண் ஆகியவைகள் தீரும்.

வெ[illegible]ச்சியிலைச்சாறு வராகனெடை-ஒன்றரை, தேன் வராகனெடை-ஒன்றரை. இவ்விரண்டையும் மிஸ்ரித்து மேற்படி மாத்திரையைப் பிரமாணப்படி அநுபானித்துக்கொண்டுவர சுவாசம், மேன்மூச்சு, பெருமூச்சு, மூச்சடைப்பு, தங்குமூச்சு ஆகிய ரோகங்கள்தீரும்.

இன்னும் தகுந்த அநுபானங்களில்விட அநேக வியாதிகள் தீரும்.

அநுபோக வைத்திய நவநீதம் ஏழாம்பாகம்,
முற்றுப் பெற்றது.

111836

# இரண்டணா செலவில் மனதிற்கு சம்பியமான மூன்று முறைகள் தெரிந்துகொள்ளலாம்.

நண்பர்களே!

1. உங்களுக்கு நல்லவிதமான ... முறைவேண்டுமா?

2. சுகந்தவாசனையும் விநோதமுமுள்ள பு... டி முறைவேண்டுமா?

3. இரம்மியமான வாசனையுள்ள சுகந்த ... துள் செய்யும் முறைவேண்டுமா?

இம்மூன்று முறைகளும் வேண்டியவர்கள் ... ளுகவருக்குத் தங்கள் ... விலாசத்தையும் ... எழுதிவைத்து அதனுடன் ... சேர்த்து அனுப்புவீர்களானால் மேற்கண்ட மூன்று முறைகளையும் விபரமாகத் தங்களுக்குத் தெரிவிப்பே...

முறைகளோ மிகவும் சிறந்தவைகளும் செய... ற்குச் சுலபமானவைகளுமாம்.

தங்களுக்கோ செலவு இரண்டணாதான்.

இன்னும் இம்முறைகளைத் தெரிந்துகொள்வத... பலரும் மேற்கண்ட மூன்று வஸ்துக்... யும் வாங்கிக்கொண்டிருப்பதால் ஏமாறும் ... இபாகுர்.

ஹக்கீம்-பா-முகம்மது அப்துல்லாசாகிபு அன்ஸரீ
12. அப்புமேஸ்திரி தெரு,
ஜார்ஜ்டவுன் சென்னை.